Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 10.00

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: எட்டு+36

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 05 செவ்வாய்க்கிழமை (20.12.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 01

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

## யாழ்.பரமேஸ்வராச் சந்தியில் பெரும் களேபரம்

# யாழ்.பல்கலைக்கழக பேரணி மீது

# இராணுவம் தடியடி;துப்பாக்கிச்சூடு

### விரிவுரையாளர் மாணவர் உட்பட 15 பேர் படுகாயம்

## குடாநாடெங்கும் பெரும் பதற்றம்

(திருநெல்வேலி)

(அலுவலகச் செய்தியாளர்குழு)

யாழ். பல்கலைக்கழக கல்விச் சமூகம் நேற்று நடத்திய அமைதிவழிப் பேரணி மீது இராணுவத்தினர் நடாத்திய தடியடி துப்பாக்கிப் பிரயோகத்தினால் பேரணியில் கலந்துகொண்ட 15 பேர் படுகாயமடைந்தனர்.இராணுவத்தினரின் இத்தாக்குதல் நடவடிக்கைகளினால் யாழ். பரமேஸ்வராச் சந்தி பெரும் களேபரப் பூமியாக மாறியது. இச் சம்பவத்தினால் யாழ். குடாநாடெங்கும் பெரும் பதற்றம் நிலவியது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இராணுவத்தினரால் நேற்று முன்தினம் தாக்கப்பட்ட சம்பவத்தைககண்டித்து யாழ். பல்கலைக் கழக கல்விச் சமூகத்தினர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விற்கு மகஜர் கையளிப்பதற்காக பல்கலைக்கழக முன்றலில் இருந்து ஊர்வலமாகச் சென்றனர். பேரணி இராமநாதன் வீதியூடாக பலாலி வீதி பரமேஸ்வராச்சந்தியை அண்மித்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## எம்மை வழிமறித்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

### சம்பவத்தை விபரிக்கிறார் கஜேந்திரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

இராணுவ அச்சுறுத்தல்கள் இன்றி மாணவர்கள் சுமுகமாக கல்விகற்கக் கூடிய சூழலை உருவாக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரும் மகஜர் கையளிக்க கண்காணிப்புக்குழு அலுவலகம் நோக்கிச் சென்று போது படையினர் எம்மை வழி மறித்தனர்.

படையினருக்கு நிலைமையை விளக்கி கூற நானும் யாழ்ப்பாணப் பல்கலைகழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் அவர்களும் முயன்ற போதும் எமது கருத்துக்களைப் பொருட்படுத்தாது இராணுவத் தினர் ஆகாயத்தை நோக்கியும் பின்னர் மாணவர்கள், விரிவுரையாளர்களை நோக்கியும் சுட்டனர்.

இவ்வாறு நேற்று யாழ்.பரமேஸ்வராச் சந்தியில் இடம்பெற்ற சம்பவம் குறித்து யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு அரசியல் பின்னணியிலேயே யாழில் இராணுவ நடவடிக்கைகள் !

### தாக்குதல் சம்பவம் குறித்து துணைவேந்தர் கருத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்று வரும் இராணுவத்தினரின் நடவடிக்கைகளில் கொழும்பின் அரசியல் பின்னணி இருக்கிறதென்று தான் சந்தேகிப்பதாக யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத் துணை வேந்தர் எஸ். மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தில் நேற்று மாலை 5.30 மணிக்கு நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கலட்டிச் சந்தி பரமேஸ்வரச் சந்தியில் உள்ள இராணுவத்தினரை அகற்றுவதன் மூலமே பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடிவடிக்கைகளை சுமுகமாக்கலாம் என்பதை நான் நேற்று முன்தினமிரவு யாழ். இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறியிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்தேன்.

எனினும் அதற்குப் பதிலளித்த மேஜர் ஜெனரல் சந்திரசிறி ,தாம் யாழ்.குடா (08 ஆம் பக்கம் பார்க்க)

## துணைவேந்தர்-கஜேந்திரன் எம்.பி இராணுவத்தால் தாக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கல்விச் சமூகம் நடத்திய பேரணியில் கலந்து கொண்டிருந்த யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்மற்றும்யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் ஆகியோரையும் இராணுவத்தினர் தாக்கினர்.

தங்களை யாரென இருவரும் இராணுவத்தினருக்கு அறிமுகப் படுத்திய போதும் அதனை அலட்சிப்படுத்தி இருவரையும் கழுத்தில் பிடித்து தள்ளி தாக்கியதாக கூறப் படுகின்றது.

உயர் கல்விச் சமூகத்தலைவர் ஒருவரையும் பாராளுமன்ற உறுப்பினரையும் இராணுவத்தினர் தெரிந்து கொண்டும் வேண்டுமென்று திட்டமிட்ட வகையில் தாக்கியமை பலரையும் விசனத்திற் குள்ளாக்கியுள்ளது. (இ-8,4,39)

### ஹர்த்தால் இல்லை

### க.பொ.த.சாதாரணதரப் பரீட்சை நடைபெறும்

## உயர் கல்வி நிறுவனங்கள் தமது கல்விச் செயற்பாட்டை நிறுத்த முடிவு!

### யாழ்.பல்கலைக் கூட்டத்தில் முடிவு

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரையாளர்களும் தமக்கு நீதி கிடைக்கும் வரை இன்று முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதுடன் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் அறிவித்துள்ளனர்.

தமது அகிம்சைவழிப் பேரணி மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியமையைக் கண்டித்து இம் முடிவினை எடுத்துள்ளதாக துணை வேந்தரின் தலைமையில் கூடிய பல்கலைக்கழக சமூகம் அறிவித்துள்ளது. மாநாட்டில் பாராளு மன்ற உறுப்பினர் கஜேந்திரன் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

தற்பொழுது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடைபெற்று வருவதால் பல்கலைக்கழக சமூகம் மாத்திரமே பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்றும் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சைகள் நடைபெறும் எனவும் பல்கலைக் கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் கல்விச் செயற்பாடுகளே நிறுத்தப்படுவதாகவும் அறிவிக்கப் பட்டது. இதேவேளை இன்று ஹர்த்தால் மற்றும் கடையடைப்பு என வெளியான செய்தி தவறானது எனவும் அப்படி எதுவும் இல்லையென வும் இக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டமை இங்கு குறிப்பிடத் தக்கது. (இ-4,8,12)

## பத்திரிகையாளர்கள் மீதும் படையினர் தாக்குதல்

யாழ்.பரமேஸ்வராச் சந்தியில் நேற்று இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற யாழ்.பத்திரிகையாளர்கள் நால்வர் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் யாழ்.தினக்குரல் பத்திரிகையைச் சேர்ந்த எஸ்.சபேஸ்வரன் (வயது 28) ,நமது ஈழநாடு பத்திரிகையைச் சேர்ந்த ஜெராட் (வயது 28),உதயன் பத்திரிகையைச் சேர்ந்த பிரதீபன் (வயது 24) மற்றும் தினகரன் செய்தியாளர் ஜெயன் (வயது28) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

பத்திரிகையாளர் மீது நடத்தப் பட்ட இத்தாக்குதல் சம்பவத்தை வட இலங்கை பத்திரிகையாளர் சங்கம், யாழ்.ஊடகவியலாளர் சங்கம் ,சுதந்திர ஊடக இயக்கம் ஆகியவை வன்மையாகக் கண்டித் துள்ளன. (இ-4,8,12,39,43)

### அன்பு வாசகர்களே!

உங்கள் வலம்புரிக்கு இன்று அகவை 6 நிறைவு. இதனை யொட்டி 36 பக்கங்களில் ஆவணச் சிறப்பிதழ் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. தவறாது இன்றைய வலம்புரி நாளி தழுடன் கேட்டு வாங்குங்கள்.

குறிப்பு: வலம்புரியின் ஆறாவது நினைவுபற்றிய கருத்தாடல் ஆசிரியர் தலையங்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

நிர்வாகம்

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.

எக்ஸ்போ ஏயார்

வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெளிநாடுகளில் வேலைபுரிவோரின் குடும்ப நலன்காக்கும் திட்டம்

(கொழும்பு)

தொழில் வாய்ப்புப் பெற்று வெளிநாடு சென்றுள்ளவர்களின் குடும்ப நலன்புரி விடயங்களுக்கான முறையான திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளது. தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்ன இதனைத் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் தொழில் புரிகின்றவர்களுக்கான சர்வதேச தினம் நேற்றாகும். இதனை முன்னிட்டு அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 1.5மில்லியன் இலங்கையர்கள் வெளிநாடுகளில் தொழில்புரிந்து வருவதாக இலங்கை சட்ட ஆலோசனை ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு தொழில்புரிகின்றவர்களின் குடும்ப விபரங்கள் மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சின்னகள் குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக பிரதேச செயலக ரீதியாக விசேட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனூடாக அவர்களின் குடும்ப பொருளாதார அபிவிருத்திக்கான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (த-7)

## நிவாரணம் வழங்கப்பட்டது

அண்மையில் பெய்த பெரு மழையாலும் சூறாவளியாலும் பாதிக்கப்பட்ட யாழ்.மடம் வீதி தேவரிக்குளம் அகதிகளுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அரிசி, மா, சீனி, பால்மா முதலிய உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட்டது.

இவை திருவள்ளுவர் சன சமூக நிலைய நிர்வாகிகளின் ஏற்பாட்டில் கடந்த வாரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-7)

# வழங்கிய உறுதிமொழியிலிருந்து பின்வாங்கியது அமெரிக்கா

(கொழும்பு)

தனது தீர்வையற்ற புடவைச் சந்தையில் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு இடமளிப்பதாக முன்னர் உறுதியளித்திருந்த அமெரிக்கா இப்பொழுது அவ் உறுதிமொழியிலிருந்து பின்வாங்கியுள்ளது.

இதனை வர்த்தக வாணிப அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் 38 சதவீத ஏற்றுமதிக்கான சந்தையாக விளங்கும் அமெரிக்கா ரூபா 180பில்லியனுக்கு இலங்கையின் பொருட்களை இறக்குமதி செய்கிறது. இலங்கையின் புடவை ஏற்றுமதியில் 63சதவீதம் அமெரிக்காவுக்கு அனுப்பப்படுகிறது.

கடந்த டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தை தொடர்ந்து சுங்கத்தீர்வையின்றி புடவையை இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா உடன்பட்டிருந்தது. இப்பொழுது மறுத்துவிட்டது. இது பற்றி நாம் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளோம். வோஷிங்டனிலுள்ள தூதுவரை தொடர்ந்து பேச்சுக்கள் நடத்துமாறும் கேட்டுள்ளோம்.

இலங்கை குறைவிருத்தி நாடுகள் (ஜீ-14) பட்டியலில் இணைந்து கொண்டு வர்த்தக அனுகூலங்களைப்பெற முயற்சிக்கின்றோம். இதனால் ஜீ-14 நாடுகள் குழு இப்பொழுது ஜீ-14+1 குழுவாகி விட்டது என்றார்.

ஆயினும் இலங்கை ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும் பார்க்க சுதந்திர பொருளாதார கொள்கையில் முதிர்ச்சி பெற்றது என்பதால் குறைவிருத்தி நாடுகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் கிடைப்பது சாத்தியமில்லை என்று ஹொங்கொங்கில் நடைபெற்ற உலக வர்த்தக அமைப்பு மகாநாட்டில் பங்குபற்றிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-6)

## பொது நிலையினர் தினம் கொண்டாடப்பட்டது

யாழ்.மறை மாவட்ட அனைத்துப் பங்கிலுமுள்ள பொது நிலையினரால் அண்மையில் பொது நிலையினர் தினம் கொண்டாடப்பட்டது.

''நற்செய்தியின் வழியில் ஒளியாக உப்பாக'' என்ற மையப் பொருளில் யாழ்.மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குநர் அருட்திரு றெஜி இராஜேஸ்வரன் அடிகள் தலைமையில் கொண்டாடப்பட்ட இந்நிகழ்வில் ஏராளமான பொது நிலையினர் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. (த-7)

## நியமனம்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை நிறைவடைந்து ஒரு தொகுதி பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

ஏனையவர்களின் நியமனத்திற்கான வேலைகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் 55 பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நியமனக்கடிதம் விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

# இந்தியப் பயணத்தில் பங்கேற்க மறுப்புக்கூறுகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 27ஆம் திகதி மேற்கொள்ளும் இந்தியப் பயணத்தில் பங்கேற்க ஜே.வி.பி மறுத்துவிட்டது.

இந்தியப் பயணம் மேற்கொள்ளும் தம்முடன் ஜே.வி.பி குழுவினரை அனுப்புமாறு மஹிந்த ராஜபக்ஷ கேட்டிருந்தார்.

ஆனால் வெளிவிவகாரங்களில் தமது தலையீடு இல்லாமல் மஹிந்த ராஜபக்ஷ செயல்பட தாங்கள் அனுமதிப்பதாக ஜே.வி.பி பதிலளித்துள்ளது.

ஜே.வி.பியின் நிறுவனர் றோகண விஜவீர காலத்தில் அக்கட்சி கடுமையான இந்திய எதிர்ப்பு நிலையை மேற்கொண்டிருந்தது. புதிய தலைவராக சோமவன்ச அமரசிங்க பொறுப்பேற்ற பின்பு முழுமையான இந்திய ஆதரவுக் கட்சியாக ஜே.வி.பி மாற்றம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# ஜனாதிபதி மஹிந்த மீது விவசாயிகள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்த 350 ரூபாவுக்கு உரம் வழங்கப்படும் என்ற திட்டம் மோசடியானது என்றும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை எனறும் சிங்கள விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

50கிலோ பைக்கற் உரம் 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என்று கடந்த டிசம்பர் 6ஆம் திகதி அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்தத் திட்டத்துக்காக திறைசேரியும் 100 மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடாக அளித்தது.

ஆனால் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அறிவித்தபடி விவசாயிகளுக்கு 350ரூபாவிலையில் இன்னமும் உரம் வழங்கப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

பெரும் சிரமங்களுக்கு இடையே சங்கங்களில் உறுப்பினரான நிலையிலும் கூட மானிய விலையிலான உரம் வழங்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மொத்த உர உற்பத்தியில் 25 வீதம் தான் அரசாங்க உற்பத்தி. இதர 75 வீதமானது தனியார் உற்பத்தியாக உள்ளன. பலகோடி ரூபாய் நிலுவைத் தொகையை தனியார் நிறுவனங்களுக்கு அரசாங்கம் செலுத்தவேண்டிய நிலையில் புதிய திட்டத்துக்கு அவர்கள் முன்பே எதிர்ப்புத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# இராசி பலன்

20.12.2005
(மார்கழி 05, செவ்வாய்க் கிழமை)
பஞ்சமி பின்னிரவு 5.43 மணிவரை
ஆயிலியம் முன்னிரவு 7.34 மணிவரை
இராகுகாலம் 3.24-4.54 மணிவரை
சுபநேரம் 10.54-12.24 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | தனவிரயம், கல்வியில் ஆர்வம், மனச்சஞ்சலம், எடுத்த காரியம் தாமதாகும். |
| இடபம் | நற்கீர்த்தி, மனோதைரியம், காரிய நன்மை, கூட்டு முயற்சி. |
| மிதுனம் | மனோசங்கடம், அதிக செலவு, ரோக நிலை, திடீர் நன்மை. |
| கடகம் | மாதர் நட்பு, வெகுமானம், நல்ல முயற்சி, தெய்வ சிந்தை. |
| சிங்கம் | உஷண நிலை, பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், சுபசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, சயன சுகம், தனதானிய சேர்கை, ஆனந்தம். |
| துலாம் | ஆரோக்கியம், பெரியோரால் மதிக்கப்படுதல, காரிய சித்தி, நன்கொடை. |
| விருச்சிகம் | நிலைமாற்றம், புத்திரரால் கவலை, பிரயாணம், பணவிரயம். |
| தனுசு | அபகீர்த்தி, காரிய தடங்கல், தர்மம், போசன சுகம். |
| மகரம் | நல்ல முயற்சி, தன லாபம், உறவினர் சந்திப்பு, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | காரிய அனுகூலம், கீர்த்தி, போசன சுகம், உற்சாகம். |
| மீனம் | தாழ்வு நிலை, முயற்சி தாமதம், தனவிரயம், போசன சுகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# எந்தவொரு சவாலுக்கும் முகம்கொடுக்க முப்படையினரும் தயாராக வேண்டும்

## கடற்படைத் தளபதி

(கொழும்பு)

தற்போது இருப்பது நிரந்தர சமாதானமல்ல. யுத்த நிறுத்தம் மட்டுமே என்பதால் எந்தவொரு சவாலுக்கும் அச்சுறுத்தலுக்கும் முகம்கொடுக்கக் கூடிய வகையில் முப்படையினர் தயார் நிலையில் இருக்கவேண்டும் என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னாகொட தெரிவித்துள்ளார.

தியத்தலாவ விமானப்படை முகாமில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசுகையில் அவர் இதைத் தெரிவித்தார்.

அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக தயாராகும இந்த நேரததில் அதற்குத் தேவையான பின்னணியைீ ஏற்படுத்திக் கொடுக்கும் கடமை பாதுகாப்புப் படையினருக்கு இருப்பதாகவும், எதிராளியின் எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் முகம்கொடுக்க தயார் நிலையில் இருந்து கொண்டே அதனைச் செய்யமுடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அதனால் எதிராளிக்கு பயமின்றி முகம்கொடுத்து எந்தவொரு சவாலையும் வெற்றிகொள்ள தயாராக இருப்பது அவசியமானது என்றும் வசந்த கரன்னாகொட மேலும் தெரிவித்துள்ளார். (த)

# பரீட்சை முடிவுகள் மார்ச்சில் வெளியாகும்

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுவரும் கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் மார்ச் மாதம் நடுப்பகுதியில் வெளியாகும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்கு 5 இலட்சத்திற்கும் அதிகமானோர் தோற்றுகிறார்கள். இவர்களில் ஒரு இலட்சத்திறகும் அதிகமானோர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள்.

பரீட்சை விதிகள் மீறப்பட்டதாக பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லையென்று எதிரிசிங்க குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் இந்தப் பரீட்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை, இலங்கை நிருவாக சேவைக்கான திறந்த பரீட்சை இம்மாதம் 28ஆம் திகதி 127 நிலையங்களில் நடத்தப்படும். இந்தப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் 28 ஆயிரத்திற்கும் அதிகமானவர்களுக்கு அடுத்த வாரம் அனுமதிப் பததிரங்கள் அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)



வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்திய ஐக்கிய நாடுகள் தினவிழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய பருத்தித்துறை வடமராட்சிக் கல்லூரி ஆசிரியை செல்வி கல்யாணி நமசிவாயத்திற்கு லயன்ஸ் கழகத் தலைவர் வி.சிவகுமாரன் ஞாபகார்த்தப் பரிசு ஒன்றை வழங்குகிறார். (படம்:- பரு.நிருபர்)




வடமராட்சி லயன்ஸ் கழகத்தினர் கரவெட்டி ஸ்ரீபரமானந்தா ஆச்சிரம ஏழைச்சிறுவர்களுக்கு உடுபுடவைகளை வழங்கினர். கழகச் செயலாளர் லயன்ஸ் ஏ.துரைசிங்கம் சிறுவன் ஒருவனுக்கு உடுபுடவைகளைக் கையளிக்கின்றார். (படம்:- பரு.நிருபர்)

# யாழ். பரமேஸ்வராச் சந்தியில் களேபரம்




நேற்று பரமேஸ்வராச் சந்தியில் இடம்பெற்ற கலவரத்தின்போது...




இராணுவத்தினரால் அடித்துநொருக்கப்பட்ட ஆட்டோ



யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்தவர்கள்







படங்கள்: பாலமுருகன், யதார்த்திகன்

# இராணுவப் புலனாய்வுத்துறையின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுத்துறையின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிட்ட நிலையில் இருப்பதாக இராணுவத் தரப்பில் கூறப்பட்டு வருகிறது.

இரண்டு பற்றாலியன்களைக் கொண்ட இராணுவப் புலனாய்வுத்துறை, ஆயிரம் அதிகாரிகளையும் வீரர்களையும் கொண்டு இயங்கி வருகின்றது. விடுதலைப் புலிகள் தொடர்பான தகவல் களைத் திரட்டுவது மட்டுமே ஒரு காலத்தில் இதன் பணியாக இருந்தது.

ஆனால் 1999ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆழ ஊடுருவும் படைப் பிரிவு ஒன்றை அமைத்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தாக்குதலையும் தொடங்கியது. அதன் பின்னர் வடக்கு-கிழக்குப் போர்முனையில் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நிழல் யுத்தம் ஒன்றைத் தொடங்கிய பின்னர் இராணுவம் புலனாய்வுத்துறையின் முக்கியத்துவம் மேலும் வலுப்பெற்றது. ஆழ ஊடுருவும் படையணியின் செயற்பாடுகளும் புலிகளுக்கு எதிரான நிழல் யுத்தத்தின் பிரதான பாத்திரத்தை ஏற்றுக்கொண்டதும் இராணுவத்தின் புலனாய்வுத்துறைக் கட்டமைப்பையே இப்போது ஆட்டம் காணும் நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

இராணுவத்தைப் பொறுத்தவரையில் ஆட்லறிப் பிரிவையோ அல்லது காலாட்படைப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள்தான் உயர் மட்டத்தலைமைப் பொறுப்பை இன்றுவரை வகித்துவருகின்றனர். பிற்காலத்தில் இவர்கள் வெளிநாடுகளில் புலனாய்வுத்துறை தொடர்பான கற்கைநெறிகள், பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர். ஆனால் அடிப்படையில் இவர்கள் புலனாய்வுத்துறை பிரிவை சேர்ந்தவர்களாக இருக்கவில்லை.

இராணுவப் புலனாய்வுத்துறையின் முதலாவது பணிப்பாளரான ஜெனரல் லயனல் பலகல்ல ஆட்லறி படைப்பிரிவைச் சோந்தவராவார். இதேபோலவே சுனில் தென்னக்கோன் ஆட்லறிப் படைப் பிரிவையும், சாந்தகொட்டேகொட, சூல சௌவிரட்ன, கபில ஹெந்த விதாரண, ரிஸ்வி சக்கி ஆகியோர் காலாட் படைப் பிரிவையும் சேர்ந்தவர்கள்.

1990களின் பிற்பகுதியில் தான் இராணுவப் புலனாய்வுத்துறையை, அடிப்படையில் இருந்து கட்டியமைக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனாலும் காலாட் படைப் பிரிவுகளில் இருந்தும், ஏனைய சேவைப் படைப்பிரிவுகளில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகள்தான் இப் போதும் இராணுவ புலனாய்வுத் துறைக்கு தலைமையேற்கின்றனர்.

இராணுவத்தில் தொழில்சார் புலனாய்வுத்துறை கட்டியெழுப்பப்படவில்லை என்பதே வெளிப்படையான உண்மை. ஆழ ஊடுருவும் படையணியை உருவாக்கியமை இராணுவப் புலனாய்வுத்துறையின் படைநிலை வளர்ச்சியில் ஒரு புதிய அம்சமாகக் கருதப்பட்டது. அதன்பின் புலிகளுக்கு எதிராக இப்போது நடத்தப்பட்டு வரும் நிழல் யுத்தமும் ஒரு வளர்ச்சி நிலை என்று இராணுவத்தரப்பு கருதுகிறது.

நிழல் யுத்தத்துக்காகவும் ஆழ ஊடுருவும் சட்டவிரோத பாதாள உலகக் குழுக்களைத் தொடர்பு கொள்வதும், பாதாள உலகக் குழுக்களை சிறிலங்கா புலனாய்வுத்துறையே உருவாக்குவதும் நடந்துவந்தது.

இத்தகைய செயற்பாடுகளினால் கடந்த சில ஆண்டுகளில் 12 இராணுவ புலனாய்வு அதிகாரிகள் 60க்கும் மேற்பட்ட இராணுவ புலனாய்வுத்துறையினர் மற்றும் நூற்றுக்கும் அதிகமான தகவல் வழங்குவோரை இப் பிரிவு இழந்திருக்கிறது. முக்கிய இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகள் அதிக பாதுகாப்பு மிக்க கொழும்புப் பகுதிகளிலேயே சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதன் மூலம் ஒட்டுமொத்த இராணுவத்தின் பாதுகாப்பு என்பதும் இலங்கையின் பாதுகாப்பு என்பதும் கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது.

இவர்களில் லெப்.கேணல் நிசாம் முத்தலிப் மற்றும் கேணல் ரிஸ்வி மீடின் போன்ற கீழிருந்தே புலனாய்வுத்துறை நடவடிக்கைகளுக்கென வளர்த்தெடுக்கப்பட்ட உயர் அதிகாரிகளும் இதில் அடங்குவர்.

நிசாம் முத்தலிப் கொலையில் புலனாய்வுத்துறைக்கும் பாதாள உலகக் குழுக்களுக்குமான தொடர்பு இலேசாக கசிய வந்தது. ரிஸ்வி மீடினின் கொலையில் பாதாள உலகக் குழுவினருடனான பகிரங்கத் தொடர்பு அம்பலப்பட்டது. மிலேனியம் சிற்றி மறைவிடத்தை ரணில் அம்பலப்படுத்தியதையடுத்து சகுல் ஹமீத், நிலாம் உள்ளிட்ட பல அதிகாரிகள் தலைமறைவு வாழ்க்கை நடத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள னர்.

அடுத்தடுத்து அதிகாரிகளையும் புலனாய்வாளர்களையும் இழந்து, நெருக்கடிகளின் உச்ச கட்டத்தில் சிக்கிப்போயிருக்கும் இராணுவப் புலனாய்வுத்துறைக்குப் பேரிடி புதிய இராணுவ தளபதி சரத் பொன்சேகா உருவில் வந்துவிட்டதாக கொழும்பு இராணுவ நோக்கர்கள் கருதுகின்றனர்.

சரத் பொன்சேகா போன்ற கடும்போக்கு இராணுவவாதிகள், எதையுமே நேரடியாக எதிர்கொள்ள நினைப்பவர்கள் என்பதால் இராணுவப் புலனாய்வுத்துறையின் நடவடிக்கைகளை அங்கீகரிக்க மாட்டார்கள் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இதற்கு முன்னர் இராணுவத் தளபதிகளாக இருந்த ஜெனரல் லயனல் பலகல்லவும், சாந்த கொட்டே கொடவும் இராணுவ புலனாய்வுததுறைப் பிரிவில் பணியாற்றியவர்கள் என்பதால் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர்.

சரத் பொன்சேகா ஒருபோதும் இராணுவ புலனாய்வுத்துறையுடன் தொடர்புபடவே இல்லை என்பதுடன் அவரது பாதையும் வேறாக இருப்பதால், இதற்கு முன்னர் இருந்த முக்கியத்துவம் இனிமேலும் தொடர வாய்ப்பில்லை என்பதை சில நிகழ்வுகளின் மூலம் சரத் பொன்சேகாவே தன் வாயால் தெரிவித்திருப்பதை ஆதரமாகக் காட்டி அவர்கள். சுட்டிக்காட்டுகின்றனர்.

இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்டவுடன் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஒரு கேள்வி எழுப்பப்பட்ட போது இராணுவ புலனாய்வுத்துறை திறமையாகவே செயற்படுகிறது என்றும், இதனால்தான் புலனாய்வுத்துறை அதிகாரிகள குறிவைத்துப் படுகொலை செய்யப்படுவதாகவும் கூறியிருந்தார் சரத் பொன்சேகா.

ஆனால், இராணுவத் தளபதி கடந்த வாரம் ஆங்கில வார இதழுக்கு அளித்த நேர்காணலில், இராணுவ புலனாய்வுத்துறையின் செயற்பாடுகள் திருப்திகரமாக அமையவில்லை. அது முற்றாக மறுசீரமைக்கப்படவேண்டும். புலனாய்வுத்துறைகளிடமிருந்து களமுனையில் உள்ள அதிகாரிகளுக்கு முன்கூட்டியே தகவல்கள் கிடைப்பதில்லை.

இந்த நிலையை மாற்றியமைக்கும் வகையில் புலனாய்வுத் துறைக்கு புதிய அதிகாரிகள் நியமிக்கப்படுவர் என்றும் வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு தகுதிவாய்ந்த அதிகாரிகள் நியமிக்கப்படுவர் என்றும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார்.

இராணுவத் தளபதியான போது இராணுவ புலனாய்வுத்துறையின் செயற்பாடு குறித்து திருப்தி தெரிவித்த சரத் பொனசேகா அடுத்த சில நாட்களிலேயே இராணுவ புலனாய்வுத்துறை திறமையற்ற வகையில் செயற்படுவதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

அந்த குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் இராணுவ புலனாய்வுத்துறையால் படைத்தரப்புக்கு பெரியளவிலான பின்னடைவு ஏதும் ஏற்படாத நிலையில் சரத் பொன் சேகா இத்தகைய கருத்தை வெளியிட்டுள்ளார். தான் ஏற்கனவே கூறியபடி புலனாய்வுத்துறை அதிகாரிகளை மாற்றியமைத்திருக்கிறார்.

இதுவரை இராணுவ புலனாய்வுத்துறை பணிப்பாளராக இருந்த பிரிகேடியர் றிஸ்வி சக்கியை அந்தப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக பிரிகேடியர் தம்மிக்க லியனகே நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரிகேடியர் றிஸ்வி சக்கி நீண்டகாலமாக மட்டக்களப்பில் பிரிகேட் தளபதியாக இருந்தவர் என்பதுடன், நிழல் யுத்தத்துக்கான குழுக்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவர். கேணல் மீடின் கொல்லப்பட்ட பின்னர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரணவை அரசு வெளிநாட்டுக்கு அனுப்பியதையடுத்து பிரிகேடியர் சக்கி தான் புலனாய்வுத் துறைக்குப் பொறுப்பாக இருந்தார்.

யாழ்.குடாநாட்டு நிலைமைகள் தொடர்பாக புலனாய்வுத்துறை திறமையாகச் செயற்படவில்லை என்பதுதான் சரத் பொன்சேகாவின் கருத்தாகும். புலனாய்வுத்துறையில் அனுபவம் பெற்றவரான மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனை உடனடியாகவே பதவி நீக்கிவிட்டு புதிய தளபதியை நியமித்தார். அத்துடன புலனாய்வுத்துறை பணிப்பாளர் பிரிகேடியர் றிஸ்வி சக்கியும் யாழ். படைத் தலைமையக பொது அலுவலக அதிகாரியாக மாற்றப்பட்டிருந்தார்.

இவருக்குப் பதிலாக இராணுவ புலனாய்வுத்துறை பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பவர் பிரிகேடியர் தம்மிக லியனகே. இவர் ஆட்லறிப் படைப்பிரிவைச் சேர்ந்தவர் .இதற்கு முன்னர் இராணுவ புலனாய்வுத்துறையில் இவர் அனுபவம் பெற்றவர் அல்லர். இராணுவ புலானாய்வுத்துறையை எந்த அடிப்படையில் பிரிகேடியர் தம்மிக லியனகேயைக் கொண்டு திறன்மிக்கதாக்கப் போகிறார், அதற்காக எத்தகைய திட்டங்களை அவர் வைத்திருக்கிறார்? என்பதுதான் சிறிலங்கா இராணுவத்திலும் புலனாய்வுத்துறையிலும் இப்போது முன்நிற்கின்ற பிரதான கேள்வியாக இருக்கிறது.

விசேட செயற்திட்டம் ஒன்றுக்காக தாய்லாந்துக்கு அனுப்பப்பட்ட முன்னாள் இராணுவப் புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரண கடந்த வாரம் கொழும்புக்கு வந்திருந்தார். புலனாய்வுத் துறையை எப்படி மறுசீரமைக்கலாம் என சரத் பொன்சேகா அவரிடம் ஆலோசனை நடத்தியதாகவும் கூறப்படுகிறது. ஆனால் இவரை மீளவும் இப் பதவியில் நியமிக்க சரத் பொன்சேகா விரும்பவில்லை. காரணம் இவரது காலத்தில் தான் இராணுவப் புலனாய்வுத்துறை மோசமான பின்னடைவுகளைச் சந்தித்தது என்பது அவருக்கு நன்கு தெரியும்.

ஆனாலும், மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விதாரணவின் ஆலோசனையை இராணுவத் தளபதி பெற்றுக்கொண்டிருக்கிறார். இராணுவப் புலனாய்வுத்துறைக்கு புதிய தளபதி நிய மிக்கப்பட்டிருக்கின்ற போதும், அனுபவம் மிக்க புலனாய்வு அதிகார மட்டத் தலைமையை இராணுவத் தளபதியால் வழங்க முடியாத நிலைதான் உள்ளது.

புலனாய்வுத் துறை அதிகாரிகள் என இப்போது இருப்பவர்கள் மேஜர் ஜெனரல் கபில ஹெந்த விரதாரணவும், மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனும் தான். இவர்கள் இருவருமே சரத் பொன்சேகாவுக்கு ஒத்து வராதவர்கள் எனக் கூறப்படுகிறது.

இன்னொருவர் மேஜர் ஜெனரல் சூல சௌவிரத்ன இவர் வெளிநாட்டுப் புலனாய்வுத்துறை சேவைக்குப் பொறுப்பாக இருக்கிறார். இதனால் வேறு ஏதாவது படைப் பிரிவில் இருந்து அனுபவம் இல்லாத அதிகாரிகளைத் தான் புலனாய்வுத்துறைக்குப் பொறுப்பாக நியமிக்கவேண்டிய சூழல் தொடர்கிறது.

இராணுவத்திலேயே புலனாய்வுத்துறை ஒன்றுதான், வேறு படைப் பிரிவு அதிகாரிகளால் தலைமை தாங்கப்படும் அவல நிலையில் இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (த)



வலி-தெற்கு பிரதேச சபையின் ஆதரவுடன் சுன்னாகம் பொது நூலக நிலையத்தில் வாசிப்பு வாரத்தையொட்டி நடைபெற்ற விழாவில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட நூலகர் திருமதி சிவநேசன் உரை நிகழ்த்துவதையும், நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய மேற்படி பிரதேச சபையின செயலாளர் திருமதி ச.சொக்கலிங்கம், ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம சு.துரைசிங்கம் ஆகியோர் அருகில் இருப்பதையும் படத்தில் காணலாம்.



வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சும் மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து நடாத்திய பிள்ளைநேய அபி விருத்தி நிலையங்களின் கண்காட்சி, கலைவிழாவுக்கு வருகை தந்த விருந்தினர்கள் முன்பள்ளிச் சிறுவர்களால் வரவேற்கப்பட்டு அழைத்து வரப்படும் காட்சி. (படம்:- பரு.நிருபர்)

# எமது நிலத்தை ஆக்கிரமிப்பதால் இறைமையை இழக்கமாட்டோம்

அரச இயந்திரத்தால் புறம் தள்ளப்படும் இன்றைய நிலையில் எமது இளஞ் சந்ததியினரின் அறிவும் ஆற்றலும் திறமையும் ஓரங்கட்டப்படும் என்பது மறுக்க முடியாத உண்மை. எம்மை நாமே ஆளும் நிலை உருவாகும்வரை இது தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.

இவ்வாறு கரவெட்டிப் பிரதேச செயலக புதிய கட்டடத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

எம்மை நாமே ஆளும் உரிமை உருவாகும்வரை இது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இந்த உண்மையை உணர்ந்த தந்தை செல்வா எமது மக்களை, எமது மண்ணை ஆளும் உரிமை எமக்கே உண்டு என்று கூறினார். அந்தப் பாதையில் தம்பி பிரபாகரன் வழிநடாத்தும் போராட்டத்தை வலுச்சேர்ப்பது எமது தலையாய கடமையாகும்.

எமது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டு எமது உரிமை பறிக்கப்பட்டபோதும் எமது இறைமையை நாம் இழந்துவிடவில்லை என்ற யதார்த்தம் சுடர் விடத்தொடங்கிவிட்டது அதை வளர்ப்பது எமது கடனாகும்.

பாரதி கூறியதுபோல காணி நிலம் வேண்டும் அதில் மாடி வடு கட்டவேண்டும் என்பதற்கொப்ப நிலத்தைப் பறிகொடுத்து மக்கள் பலரின் பங்களிப்புடன் புதியதோர நிலம் பெற்று புது மாடிக்கட்டடம் அமைத்து உங்கள் பிரதேசங்களுக்கு பெருமை தேடிக் கொடுத்துள்ளீர்கள்.

இதற்காக பிரதேச செயலர் உட்பட பலரும் ஆற்றிய பங்களிப்புகள், தொடர்ந்தும் மக்களுக்காக ஆற்றிவரும் சேவைகள் பாராட்டப்பட வேண்டியன. ஒவ்வொரு சாதாரண மகனும் இந்தப் பிரதேச செயலகத்தின் ஊடாக தமது தேவைகளை நிறைவுசெய்து மகிழ்சியோடு வாழவேண்டும் என்றார். (த-35)

## இன்று ஒரு தகவல்

# கர்வம்

ஒரு தீக்குச்சி தீப்பெட்டியைப் பார்த்துக் கேட்டதாம் "நாம் இரண்டு பேரும் தானே உரசிக்கொள்கிறோம்... ஆனால் நான் மட்டும் தீப்பிடித்து எரிந்து போகிறேன். நீ அப்படியே இருக்கிறாயே'' என்று. அதற்குத் தீப்பெட்டி சொன்னதாம் 'உனக்குத் தலையில் கனம் இருக்கிறது. அதனால் அழிந்து போகிறாய்'' என்று.

எப்படி இருக்கிறது இந்தப் பதில்? தலையில் கனம் உள்ளவர்கள் யாரும் சரியாக இருக்க முடியாது. எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் சரி கர்வம் என்பது கூடாது.

இதை விளக்குவதற்கு மகான் ஒருவர் ஒரு சம்பவத்தைச் சொல்கிறார். அருச்சுனன் தீர்த்த யாத்திரை சென்றபோது தென்னிந்தியாவுக்கும் வந்தானாம். ராமேஸ்வரத்திற்குப் போனபோது அங்கே இலங்கைக்கு கற்கள் அடுக்கிப் போடப்பட்டிருந்த பாலத்தைப் பார்த்தானாம். ஒரு சிறிய குரங்கு அதற்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்துவிட்டு அருச்சுனன் சிரித்திருக்கிறான். "ஏன் சிரிக்கிறாய்?" என்று என்று கேட்டது அந்தக் குரங்கு. "ராமன் மிகச் சிறந்த வில் வீரன். அப்படி இருக்கும் போது அவன் இலங்கைக்கு அம்புகளாலேயே ஒரு பாலம் கட்டியிருக்கலாமே! அதைவிட்டுவிட்டு போயும் போயும் உன்னை மாதிரி குரங்குகளைத் துணையாக வைத்துக் கொண்டு இப்படி ஒரு கருங்கல் பாலத்தைக் கட்டியிருக்கிறானே'' என்றான்.

''அம்புகளால் பாலம் கட்டமுடியுமா?'' என்று கேட்டது குரங்கு. 'ஏன் முடியாது? என்னால் முடியுமே' என்றான் அருச்சுனன். "அம்பினால் பாலம் கட்டலாம். இருந்தாலும் என்னை மாதிரி குரங்குகள் ஏறி நடந்தால்... அது தாங்குமா? அதனால் தான் ராமர் கருங்கல் பாலம் கட்டினார் போலிருக்கிறது என்றது குரங்கு. அப்படியா சொல்கிறாய்? நான் வேண்டுமானால் இப்போது அம்புகளினாலேயே ஒரு பாலம் கட்டுகிறேன். அதன் மீது நீ ஏறி நடந்து பார். பாலம் விழுந்து விட்டதென்றால் நான் தீ மூட்டி அதில் குதித்து உயிர்த்தியாகம் செய்கிறேன் என்றான் அருச்சுனன் மிகக் கோபமாக.

உடனே அந்தச் சின்னக் குரங்கு பெரிய உருவம் எடுத்து விட்டதாம். கையில் கதையுடன் அருச்சுனன் முன்னால் நிற்கிறான் அனுமன். "பார்த்தா! என்னுடைய தலைவர் ராமனையா இழிவாகப் பேசுகிறாய்? நீ இப்போது பாலம் கட்டு! நான் எனது பலத்தை காட்டுகிறேன்'' என்றான் அனுமன். அருச்சுனன் தனது காண்டிபத்தை எடுத்து சரமாரியாக அம்புகளை விடுகிறான். அதெல்லாம் ஒன்றோடு ஒன்று கோர்த்துக் கொண்டு பாலமாக அமைந்து விட்டது. அருச்சுனன் தலைநிமிர்ந்து நின்றான்.

அனுமன் உயரே கிளம்பி... அங்கிருந்து பாலத்தில் வந்திறங்கினார்ன். பாலம் நொறுங்கிவிட்டது. 'என்ன அருச்சுனா இப்போது என்ன செய்யப் போகிறாய்?' என்றான் ஏளனமாக. அருச்சுனன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். சொன்னபடி'தீ மூட்டச் சொன்னான்.அதில் குதிப்பதற்காக மூன்று முறை சுற்றிவந்தான். அப்போது அங்கே கிருஷ்ணர் தோன்றினார். என்ன அருச்சுனா என்ன நடந்தது?'' என்று கேட்டார் ஒன்றும் தெரியாத மாதிரி.

அருச்சுனன் வாயைத் திறப்பதற்கு முன்பாக அனுமன் வாயைத்திறந்து நடந்தவற்றைச் சொன்னான். அருச்சுனன் செய்த சவாலின் படி உயிர் துறந்தே ஆக வேண்டும் என்றான் அனுமன். கிருஷ்ணர் யோசித்தார். நல்லது. இங்கே சவால் விட்டதற்கும் நடந்ததற்கும் யார் சாட்சி? பெரியவர் ஒருவரை வைத்துக்கொண்டு அல்லவா இந்தப் போட்டி நடந்திருக்க வேண்டும்?'' என்றார். "அதனால் என்ன? இப்போது மறுபடியும் இந்தப் போட்டியை நடத்தினால் சரி தானே! என்னால் அம்புப் பாலத்தை நொறுக்க முடியாதா?'' என்றான் அனுமன். அருச்சுனனும் அம்புப் பாலம் அமைத்தான். அனுமன் ஏறிக்குதித்தான். பாலம் அசைந்து கொடுக்கவில்லை. இப்போது அனுமன் தலையைக் குனிந்து கொண்டான்.

அருச்சுனன் நன்றியோடு நிமிர்ந்து பார்த்தான். கிருஷ்ணனின் தோள்களிலும் முதுகிலும் இரத்தம். என்ன சுவாமி? என்ன நடந்தது?'' என்றான் பதறிப்போய். "உன் அம்புப் பாலத்தை நான் தான் முட்டுக் கொடுத்துத் தாங்கினேன். அனுமன் குதித்த போது... என்மேல் ஏற்பட்ட காயங்கள் இவை! பின்னே உனது அம்பு பலத்தினாலேயா பாலம் நின்றது என்று நினைக்கிறாய்?' என்றார். முதலில் அருச்சுனன் அதன்பின் அனுமன். இருவருக்கும் கர்வபங்கம் ஆகிவிட்டதாம்.அவர்களிடம் இருந்த கர்வம் போய்விட்டது. யாராக இருந்தாலும் கர்வம் கூடாது என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளவேண்டும். இந்தக் காலத்தில் நாமெல்லாம் எநத விடயத்திற்கும் கர்வப்பட்டுக்கொள்கிறோம்.

இரண்டு பெண்கள் தமது கணவன்மார்களைப் பற்றி மிகவும் பெருமையாகப் பேசிக்கொண்டார்களாம். அதில் ஒருவர் "என் கணவரிடம் எந்த விடயத்தைக் கொடுத்தாலும் அதைப் பற்றி அழகாக ஒரு மணிநேரம் பேசுவார் என்றாராம். உடனே அடுத்தவர் அது என்ன பிரமாதம்? என் கணவருக்கு விடயமே வேண்டாம் விடயமில்லாமல் நாள் முழுவதும் பேசிக் கொண்டிருப்பார்.'' என்றாராம்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஆயுத முனையில் அடக்க முயன்றால் விளைவுகள் பாரதூரமானதாக அமையும்

## -யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

பல்லைக்கழக மாணவர்கள் மீதான இராணுவத்தினரின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தின் முன்னால் நேற்று முன்தினம் புங்குடுதீவு செல்வதற்காக வாகனத்தில் ஏறிக் கொண்டிருந்த மாணவர்கள் மீதும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள் மீதும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் 'செல்வராஜா கஜேந்திரன் உட்பட 32பேர் இரண்டு வாகனங்களில் ஏறிக்கொண்டிருந்த போதே இராணுவத்தினர் தாக்குதலை ஆரம்பித்தனர். இதில் 20க்கும் அதிகமானோர் மிருகத்தனமாக தாக்கப்பட்டுள்ளனர்.

500க்கும் அதிகமான படையினர் குவிக்கப்பட்டு மாணவர் பேரவையும் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரனுடைய அலுவலகமும் முற்றுகையிடப்பட்டது. மாணவர்கள் மீது இராணுவம் மேற்கொண்ட இத் தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

கடந்த காலங்களில் குடாநாட்டிலுள்ள மக்களும் மாணவர்களும் படையினரின் அத்துமீறல்களுக்கெதிராகப் போராட்டங்களை நடாத்தி வரும் நிலையில் மக்களை அடக்கி ஒடுக்கி தமது இரும்புப் பிடிக்குள் வைக்க இராணுவம் முயல்கிறது.

அதன் ஒரு கட்டமாக பல்கலைக்கழக மாணவர்களை அடக்க படைத்தரப்பு முயல்கிறது. க.பொ.த.(சா/த) பரீட்சை நடைபெறும் இக்காலத்தில் மாணவர்கள் மீது தாக்குதலை நடாத்தி அதன்மூலம் குழப்பத்தினை உருவாக்கி பரீட்சையைக் குழப்பி மாணவர்களின் எதிர்காலத்தினை சீரழிக்கும் நோக்கிலேயே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

மாணவர்களது எதிர்காலத்தைச் சீரழிக்கும் வகையில் இத்தகைய மனித உரிமை மீறல்களிலும் போர்நிறுத்த மீறல்களிலும் தொடர்ச்சியாகப் படையினர் ஈடுபடுவார்களாக இருந்தால் மாணவர்கள் கல்வியை இடைநிறுத்திவிட்டு தொடர்ச்சியாக இராணுவத்தினர் வெளியேறும் வரை ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் அதேவேளை ஆயுதமேந்திப் போராடும் நிலையும் உருவாகும்.

மாணவர்களது எழுச்சியைப் படையினர் ஆயுத முனையில் அடக்கமுடியும் என பகற்கனவு கண்டால் அதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானதாகவே அமையும் என்றுள்ளது. (ற)

# ஒட்டுமொத்த இராணுவமும் மாணவர் சக்தியால் விரட்டப்படும் காலம் வெகுதொலைவில் இல்லை

## -யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தை சுற்றிவளைத்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர், அங்கிருந்த மாணவர் மீது கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இதனால் பல மாணவர்கள் காயப்பட்டதுடன் பல சொத்துக்களும் சேதமாக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் அத்துமீறிய மிலேச்சத்தனமான இச் செயற்பாட்டை தாம் வண்மையாகக் கண்டிப்பதாக யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அவ் ஒன்றியம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில்,

மாணவர்கள் மீதான உரிமை மீறல்களைக் கண்டித்து மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள இவ் வேளையில் மாணவரை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சர்வதேச மாணவர் பேரவையானது அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பது மாணவர்களுடைய பாதுகாப்பை கேள்விக்குறியாக்கி இருப்பதோடு ஒட்டுமொத்த மாணவர்களையும் கடும் கோபத்துக்குள்ளாக்கியும் இருக்கிறது.

மாணவர்கள் மீதான அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல் சம்பவங்கள் மிக மோசமான விளைவினை அரசிற்கும் சிங்கள இராணுவத்திற்கும் ஏற்படுத்தும் என கடுமையாக எச்சரிக்கிறோம்.

இன்றைய சம்பவத்தின் போது போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பல மணித்தியாலத்தின் பீன் பிரசன்னமாகி இருந்தபோதிலும் இராணுவத்தினர் அவர்களைப் பொருட்படுத்தாது மாணவர்களை மடக்கிப்பிடித்து தாக்குவதில் குறியாகஇருந்தனர்.

ஆயுதங்களோடு வன்மையான அடக்குமுறையினைப் பிரயோகித்துவரும் இராணுவத்தினருக்கு மாணவர்களுடைய கூக்குரலும் உரிமைக் கோசமும் காதில் விழாமல் இருக்கலாம். 'ஒட்டுமொத்த இராணுவமும் மாணவர்களின் சக்தியால் விரட்டியடிக்கப்படுவதற்கான காலம் வெகுதொலைவில் இல்லையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# "என்று முடியும் இந்தப் பாலியல் கொடுமை?"

## பெண்கள் பண்பாட்டு மையம் கண்டனம்

புங்குடுதீவு மடத்துவெளியில் கடற்படையின் முகாமிற்கு அண்மையில் உள்ள கிணற்றில் சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட பெண்ணிற்கு நிகழ்ந்த கோரச்சம்பவத்தை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாக பெண்கள் பண்பாட்டு மையம் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக நில ஆக்கிரமிப்பையும், கடல் ஆக்கிரமிப்பையும் ஏற்படுத்திய ஸ்ரீலங்காப் படையினர் மூலம் எமது பெண்கள் பாலியல் வன்முறைக்கும், அதைத் தொடர்ந்து கொலைகள் போன்ற பயங்கரமான சீர்கேடுகளுக்கும் உள்ளான அனுபவம் தமிழீழப் பெண்களாகிய எமக்கு திரும்பத் திரும்ப பயத்தையும் எதிர்காலத்தில் முடங்கி ஒடுங்கிப் போகின்ற அவலநிலையையும் தோற்றுவித்துள்ளது.

வடக்கு-கிழக்கு எங்கும் ஆக்கிரமிப்பின் பின்னர் நிகழ்ந்த கோர அவல சம்பவங்களை அனுபவித்த பெண்கள் எமது மண்ணில் ஏராளம்.

கிரிஷாந்தி தொடக்கம் சாரதா அம்பாளுக்கு அப்பாலும் இந்த உலகத்திற்கு வெளிக்கொணரப்பட்டவை சில. ஆனால் பெண்களின் மனதுக்குள்ளே புதைந்துள்ள அவலம் ஏராளம். எமது பண்பாட்டின் படி இந்த அவலங்களை எல்லோரும் வெளிப்படுத்துவதில்லை. இப்படியான நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி எமது வீடுகள், பள்ளிக்கூடங்கள், கோயில்கள், கடல்கள் என்று எம்மை சீரழித்து சின்னாபின்னமாக்கிக்கொண்டிருக்கும் படைகளை விலக்கி இப்படியான அவலங்கள் மேலும் தொடராமல் இருக்கவும், தமிழீழப் பெண்கள் எம்மண்ணில் சுதந்திரமாக நடமாடவும் எமது சுயத்தை சிதைக்காது கௌரவமாக வாழவும் விழிப்புற்று எழுச்சிபெறறு சாதனை படைக்கவும் பெண்குலம் விரும்புகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னரும் மக்களின் இயல்பு வாழ்க்கை முன்னுரிமைப்படுத்தப்பட்ட நிலையிலும்கூட ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் பெண்குலம் சொல்லொனா துயரை அனுபவித்தமைக்குச் சான்றுகள் பல உண்டு.

அண்மையில் தென்மராட்சிப் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சிறுமியை இராணுவச் சிப்பாய் காலால் உதைத்து விழுத்திய சம்பவம், நீர்வேலியில் வயதான பெண்மணி ஒருவரை இராணுவம் வல்லுறவுக்குட்படுத்த முயன்ற சம்பவம் போன்றன அவற்றுள் சில.

பெண்களின் முன்னேற்றம், விடுதலைக்காக உழைக்கும் அமைப்பு என்ற வகையில் பெண்களுக்கு இராணுவத்தினால் ஏற்பட்ட, ஏற்படும் கொடூரங்களினால் அவர்களின் செயல் வலிமை முடக்கப்படுகின்றமையினையும், சீர்குலைக்கப்படுகின்றமையினையும், இந்த அனுபவங்களில் இருந்து மீண்டு எவ்வாறு வாழ விரும்புகின்றார்கள் என்பதனையும் யாழில் உள்ள அரச படைகளின் தலைமைத்துவத்திற்கு சர்வதேச பெண்கள் தினமாகிய 2004 மார்ச் மாதம் 8ஆம் திகதி சுட்டிக்காட்டி "பூவுக்குள் ஓர் பூகம்ப மடல்" சமர்ப்பித்திருந்தோம். ஆனால் அதன் பின்னரும் அது நிற்பதாக இல்லை. தொடர்ந்தவண்ணம் தான் உள்ளது என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# நிரந்தர வீடுகள்

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வட்டுத்திட்டத்தின் கீழ் 1231 வீட்டில் 203 வீடுகள் முடிவுற்ற நிலையிலுள்ளது.

கற்கோவளம், புனிதநகர், தும்பளை, பருத்தித்துறை, பொலிகண்டி ஆகிய பிரதேசங்களில் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகிறது. (த-35)

# பொங்கியெழும் மக்கள் படை மீண்டும் இராணுவத்துக்கு எச்சரிக்கை

இது ஓர் எச்சரிக்கை என்ற தலைப்பில் பொங்கி எழும் மக்கள் படை துண்டு பிரசுரம் வெளியிட்டுள்ளது.

அதன் பிரதி ஒன்று பிரசுரத்துக்காக நேற்று மாலை வலம்புரிப் பத்திரிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன் விபரம் வருமாறு;

சிறிலங்காப் படையே!

உன் அட்டகாசத்தை உடன் நிறுத்து! இல்லையேல் நீ பற்றி எரியப் போகின்றாய். கடந்த சில நாட்களாக மக்களது இயல்பு வாழ்க்கையை சித றடித்து போர் நிறுத்த உடன்படிக்கையை சிறிலங்கா இன வெறிப்படைகள் அப்பட்டமாக மீறி வருகின்றன. சமாதானத் துக்கான பாதை முடங்கி விட்டது.

யாழ்.மாவட்டத்தில் இராணுவ ஆக்கிரமிப்பை தொடர்ந்தும் தக்க வைத்து போரினை தமிழ் மக்கள் மீது திணிப்பதற்கான தயாரிப்புக்களை சிறிலங்கா அரசாங்கம் தொடங்கிவிட்டது. சிறிலங்காப் படையின் சிங்கள பௌத்த பேரினவாதப் போக்கு தமிழ் மக்களை கோரமாகப் பலிவாங்கத் தொடங்கிவிட்டது என்பதற்கு கடந்த நாள் சம்பவங்கள் சான்றாகின்றன. கிருஷாந்தி, ரஜனி, சாரதாம்பாள் பாலியல் படு கொலைகள் வரிசையில் மிருசுவிலில் வல்லிபுரக் கோயில் ,தீவகம், அல்லைப்பிட்டிப் பகுதி என தொடர்ந்து நேற்று முன்தினம் புங்குடுதீவில் தர்சினி மீதான பாலியல் கோரச் சம்பவங்கள் நீளுகின்றன.

புங்குடு தீவில் தர்சினியின் நடமாட்டத்தை கவனித்தசிறிலங்கா கடற்படை ஓநாய்கள் அவளை இழுத்துச் சென்று உடலைக் குதறி கோரமாக பாலியல் வன்முறைக்குள்ளாக்கி கொடூரமாக கொலையைச் செய்து கிணற் றுக்குள் வீசிவிட்டனர். இக் கோரச் செயலுக்கு அமைதி முறையில் கண்டனம் தெரிவித்த மக்கள் மீது துப்பாக்கி கொண்டு சுட்டும் பொல்லுகள் கொண்டு தாக்கியும் தங்கள் அநாகரிகச் செயலை நிறைவேற்றிக் கொண்டனர்.

எங்கும் சுற்றி வளைப்பு, தேடுதல் என தமிழன் ஏறி மிதிக்கப்படுகின்றான். தெருத் தெருவாக சந்திக்குச் சந்தி இராணுவ அடாவடிக்கும்பல் நிலை கொண்டு விட்டது. தமிழரின் சுதந்திர நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுகின்றது. அவனது மண்ணிலேயே அவன் அவமதிக்கப்படுகின்றான்.

சொந்த வீட்டிலும் நின்மதியாக இருக்க முடியவில்லை. வேலி பிரித்து வருகின் றான். விபரம் கேட்கின்றான். அடித்து துன்புறுத்துகின்றான். கட்டிப் போட்டு இழுத்துச் செல்கின்றான்.

தமிழ் மக்கள் மீது தொடரும் அடாவடித்தனங்களை போர்நிறுத்தல் கண்காணிப்புக் குழுவிற்கு அமைதி ஊர்வலமாக யாழ்.பல்கலைக்கழக உப வேந்தர் தலைமையில் சென்றோரையும் விட்டு வைக்கவில்லை. யாழ்.பல்கலைக்கழக புத்திஜீவிகள், மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடும், தடியடியும், சப்பாத்து கால் உதையும் நடந்தேறின. புண்பட்ட விரிவுரையாளர்கள் மாணவர்கள் மருத்துவமனையில் கிடக்கின்றனர்.

எங்கும் சிறிலங்காப் படையின் வன்முறையும் அச்சுறுத்தலும் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. உயர் அறிவு ஜீவிகள் தொடக் கம் சாதாரண விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள், முதியோர், சிறுவர்கள் என எவரையும் பேரினவாத அரச பயங்கர வாதம் கடந்த காலத்தில் விட்டுவைக்க வில்லை. இனியும் நீ விட்டு வைக்கப் போவ தில்லை என்பது எமக்குத் தெரியும். அதனால் உன் அராஜகத்தை அடக்க நாம் தயாராகிவிட்டோம்.

சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் கோர முகம் வெளிப்பட்டு விட்டது. சமாதானம் என்ற முகத்திரை கிழிந்து விட்டது. சமாதானம்என்ற கோசம் வெறும் பம்மாத்து என்பது தெளிவ்ாகிவிட்டது.

எமது பெண்கள் நீ கிள்ளி எறியும் பகடக்காய்கள் அல்ல. எமது பெண்கள் புரட்சித் தீயென கனல்கொண்டு விட்டனர். தமிழர் தங்களை தாங்களே தற்காத்துக் கொள்ள தயாராகிவிட்டனர். தமிழன் நிமிர்ந்து விட்டான். இனியும் பொறுக்கப் போவதில்லை. பொங்கி எழும் மக்கள் படை தயாராகிவிட்டது! எனவே தான் சிங்களப்படைக்கு இதுஓர்எச்சரிக்கை. உன் அடாவடித்தனத்தை நிறுத்து. இல்லையெனில் யாழ்.மண் உனது புதைகுழியாகிவிடும். அழிக்கப்படுவாய்! என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-4,8)

# இராணுவ வன்முறை நிற்காத வரை அமைதிப் பேச்சுக்கள் இடம்பெறாது

## பாராளுமன்றில் மாவை சேனாதிராஜா எச்சரிக்கை

தமிழ் மக்கள் மீதான இராணுவத்தின் வன்முறைகள் நிறுத்தப்படாத வரை இலங்கையில் அமைதிப் பேச்சுக்கள் நடை பெறப்போவதில்லை என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் அவர் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்;

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு வீட்டின் முன்பாகவும் இராணுவம் நிற்பதால் மக்கள் அச்சத்துடன் வாழ்க்கை நடத்த வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின்பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரனை இராணுவம் தாக்கியுள் ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்ட கல்வியாளர்களையும் இராணுவம் தாக்கியுள்ளது.

இராணுவம் நடாத்திய துப் பாக்கிச் சூட்டில் பல மாணவர்கள் காயமடைந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் இரா ணுவ வன்முறைகளை கட்டுப்படுத்த அரசாங்கம் உடனே தலையிட வேண்டும் .

யாழ்ப்பாணத்தை இராணுவம் ஆக்கிரமித்து நிற்பதனால் மக்கள் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. புங்குடுதீவில் கடற்ப டையினர் இளம் பெண்ணை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி கொடூரமாக படுகொலை செய்துள்ளனர். இந்த அநீதி க்கு எதிராக கடற்படை முகாம் முன்பு தமிழ் மக்கள் போராட்டம் நடத்தினர். இதற்குப் பலிவாங்க, படு கொலை செய்யப்பட்ட இளம் பெண்ணின் இறுதி நிகழ்வில் பங்கேற்றவர்கள் மீது கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளது.

புங்குடு தீவின் பதற்ற நிலைமைகளைப் பார்வையிட பாராளுமன்றத்தின் உறுப்பினர் செ.கஜேந்திரனுக்கு அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது என்றும் மாவை எம்.பி . தெரிவித்தார். (இ)

# எம்மை வழிமறித்த படையினர்...

கடந்த இரண்டு வாரங்களுக் கு மேலாக பல்கலைக்கழக சூழலிலும் ஏனைய உயர்கல்வி நிறுவன சூழலிலும் மாணவர்களின் கல்வியை சீரழிக்கும்வகையில் மாணவர்களும் பொது மக்களும் காரணம் எதுவும் இன்றி சிங்கள ஆக்கிரமிப்பு படைகளினால் தாக்கப்பட்டு வருவதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுவரும்நிலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நேற்று ஏற்பாடு செய்யப் பட்டது. மாணவர்கள் மீது இராணுவத்தினர்மேற்கொள்ளும் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் பல்க லைக்கழக சூழலில் காணப்படும் இராணுவத்தினரை அப்புறப்படுத்தி மாணவர்கள் அமைதியாகவும் சுமுகமாகவும் கல்வி கற்கக்கூடிய சூழலை உருவாக்க கண் போர்நிறுத்த காணிப்புக்குழுவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரும் மகஜர் ஒன்றை கையளிப்பதற்காக போர் நிறுத்த கண்காணிப்பு அலுவலகம் நோக்கி சென்ற போது பலாலி வீதி பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் இடைமறித்த படையினருடன் நிலைமைகளை விளக்க நாடாளுமன்ற உறுப்பினராகிய நானும் பல்கலைக்கழகதுணைவேந்தர்பேராசிரியர்சுமோகனதாஸ்அவர்களும்முயன்றபோதும் எமது கருத்துக்கள் எதனையும் பொருட்படுத்தாது படையினர் ஆகாயத்தை நோக்கிச் சுடத் தொடங்கினர்.

பாதுகாப்புக்காக விரிவுரையாளரும் மாணவர்களும் தரையில் படுத்தபோது தொடர்ந்து தரையை நோக்கியும் மாணவர்கள் விரிவுரையாளர்கள் மீதும் படையினர் துப்பாக்கிப் பிரயோ கம் மேற்கொண்டனர்.

குடாநாட்டில் நடைபெறும் க.பொ.த.(ச/தா) பரீட்சையைக் குழப்ப வேண்டும் என்ற நோக்கிலேயே அமைதியாக வன்முறைகள் இன்றி ஊர்வலம் செய்த பல்கலைக்கழக மாணவர்கள் மீதும் விரிவுரைய்யாளர்கள் மீதும் இத் தாக்குதல் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மனிதாபிமானமற்ற முறையில் படையினர் காடைத்தனமாகவும் காட்டுமிராண்டித்தனமாகவும் மிலேச்சத்தனமான முறையிலும் மேற்கொண்ட இத் தாக் தாக்குதல் ஆனது அப்பட்டமா ன போர்நிறுத்த மீறலும் மனித உரிமை மீறலும் ஆகும்.


இச் சம்பவத்தினை நான் மிகவும் வன்மையாக கண்டிக்கின் றேன்.

இவ்வாறான இத்தாக் தலை நிறுத்த போர்நிறுத்த காண் காணிபுக் குழுவினரோ படைத்தலைமையோ அரசோ நடவடிக்கை எடுக்கத்தவறினால் அனைத்து மாணவர்களும் ஆயுதம் ஏந்தும் நிலை உருவாகும். அதன் விளைவுகள் விபரீதமாகவே அமையும் என்று கஜேந்திரன் எம்.பி குறிப்பிட்டார். (இ)


### தவறிவிட்டது

கு.கிரிதரன் என்பவரது தேசிய அடையாள அட்டை யாழ்ப்பாணத்துக்கும் அச்செழுவிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் போயிற்றி அச்செழு, நீர்வேலி என்ற விலாசத்தில் ஒப்படைக்கு மாறு பணிவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.
T.P.077-9221172 (113)


# செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை



வலம்புரி பத்திரிகையின் ஆறாவது அகவை பூர்த்தியாவது குறித்து வாழ்த்துவதில் ஆனந்தம் அடைகின்றேன்.

ஆன்மீகம், அரசியல், கல்வி, இலக்கியம் எனப் பலதுறை வடயங்களோடு மக்களை வளப்படுததும் வலம்புரி மேலும் சிறந்த பணியாற்றி வேண்டி நிர்வாகிகளுக்கும், பணியாளர்களுக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.


மனித நேயம் காத்திட பத்திரிகை தர்மத்தின் வழியில் நின்று பணிபுரிய இறையருளை வேண்டி அமைகின்றேன்.

*உப அதிபர்*
*ஸ்கந்தவரோதயக் கல்லூரி*
*சுன்னாகம்*

*செஞ்சொற் செல்வர்*
*ஆறு. திருமுருகன்*

# வலம்புரியின் ஆறு ஆண்டு நிறைவு பாராட்டப்பட வேண்டிய சாதனை

## பாதுகாவலன் பிரதம ஆசிரியர் புகழாரம்



வலம்புரிப் பத்திரிகையின் ஆறாவது ஆண்டு நிறைவில் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இன்று ஒரு பத்திரிகையைத் தொடங்குவது கடினமானது அல்ல. மாறாக அதனைத் தொடர்ந்து நடத்துவது மிகவும் கடினமானது.

பலருடைய கூட்டு முயற்சியாலும் அயராதஉழைப்பாலும் அர்ப்பணம்மிக்க சேவையாலுமே இது நடைபெறக்கூடியது. வலம்புரிப் பத்திரிகை கடந்த ஆறு ஆண்டுகளாகயாழ். நகரில் இருந்து வெளிவருவது என்றால் அது உண்மையில் பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

வலம்புரிப் பத்திரிகையையும் அதன் ஆசிரியரையும் நான் முதலில் சந்தித்த அனுபவம் இனிமையானதல்ல. 1999ஆம் ஆண்டு காலப் பகுதியில் வலம்புரிப் பத்திரிகையின் முதல் இதழில், ஆயரின் செய்தி ஒன்றைப் பெறும் நோக்குடன் ஆயர் இல்லத்திற்கு வந்திருந்த வலம்புரி- ஆசிரியர் திரு ந.விஜயசுந்தரம் அவர்களை, கத்தோலிக்க ஊடக தொடர்பாளராக நான்இருந்தபடியால், அப்போது ஆயரின் செயலராக இருந்த அருமைநாயகம் அடிகளாரோடு ஆயர் என்னிடம் அனுப்பிவைத்திருந்தார்.

ஒரு மதிய நேரம் பாதுகாவலன் பணிமனைக்கு அவர்கள் வந்திருந்தார்கள். முன்பின் அறிமுகம் இல்லாத நிலையிலும் ஆயருடைய செய்தியை மிக விரைவாக கேட்டுக்கொண்டபடியாலும், அவர்களிற்கு அச் செய்தியை கொடுக்க முடியவில்லை. அது ஒரு கசப்பான அனுபவமாகவே முடிந்தது.

வலம்புரிப் பத்திரிகையின் ஓராண்டு நிறைவில் அவர்களின் சிறப்பு மலரை எமது கத்தோலிக்க அச்சகத்திலேயே அச்சுச் செய்தோம். அதன் பின்னர் இப் பத்திரிகையுடனான உறவு வளரத் தொடங்கியது.

பல வகைகளிலும் கத்தோலிக்க மக்களுக்கான பணிகளை ஆற்ற இப்பத்திரிகை முன்வந்தது. ஞாயிறு தினங்களிலும், திருநாள் தினங்களிலும் விசேட காலங்களிலும் சமயக்கட்டுரைகளையும் நற்சிந்தனைகளையும் வெளியிட்டு மக்களை நெறிப்படுத்துவதில் வலம்புரி பத்திரிகை எமக்கு தொடர்ந்தும் துணை நின்றுவருகின்றது.

இதனைவிட கத்தோலிக்க செய்திகளையும் யாழ். மறை மாவட்ட செய்திகளையும் ஆயரின் அறிக்கை விடயங்களையும் முக்கியத்துவத்துடன் வெளியிட்டு கத்தோலிக்க மக்களுக்கு பணியாற்றி வருகின்றது.

ஆறாம் ஆண்டு நிறைவில் அவர்கள் ஆற்றிவரும் பணிகளை மகிழ்வோடு வாழ்த்திப் பணி தொடர இறையருள் வேண்டி நிற்கிறோம்.

***அருள் திரு ரூபன் மரியாம்பிள்ளை***
*'பயிற்சி இணைப்பாளர்' MRTC யாழ்.பல்கலைக்கழகம்*


**ஆறாம் ஆண்டு நிறைவை எய்தும் வலம்புரிக்கு எம் நல்வாழ்த்துக்கள்**

வண்ணமிகு கலண்டர்கள், டயறிகள் மற்றும் அழகிய அச்சு வேலைப்பாடுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஓரே இடம்

**சரவணா அச்சகம்**

ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
(சத்திரச்சந்திக்கு அருகாமை)

குற்றங்கள் பிறக்கும் இடங்களில் முக்கிய மானவை குடியும் அறியாமையுமே.

-ஆர்பரி

# வலம்புரி

## ஆறு ஆண்டு நிறைவில் ஆல விருட்சமாய் வலம்புரி

வலம்புரி நாளிதழ் ஆரம்பிக்கப்பட்டு இன்று ஆறு வருடங்கள் நிறைவாகி விட்டது. இன்று போல் இருக்கிறது அந்தக் கருக்கட்டல்.

கருவிலே திருவருள்பெற்றபேறாய் வலம்புரி நாளிதழ் ஆறு வருடங்களைக் கடந்துள்ளது.

இதனையோர் சாதாரண நிகழ்வாக யாருமே கருதிவிடமாட்டார்கள் என்பது எமது நம்பிக்கை. இந்த ஆறுவருடங்களில் வலம்புரி சந்தித்த சவால்கள், அபத்தமான பிரசாரங்கள் ஏராளம். எல்லாம் தெய்வத்தின் திருவருளால் தீர்ந்து போனது.

வலம்புரியின் வரவுக்காய் வாழ்த்தும் உள்ளங்களின் உயர்வுகண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றோம்.

வலம்புரிக் குடும்பத்தின் உயர்வுக்காக அர்ப்பணிப்போடு சேவையாற்றும் வலம்புரிக் குடும்ப அங்கத்தவர்களின் பணிதருதலை வேறெங்கும் கண்டுவிட முடியாது.

வலம்புரிக்குடும்பமோர் ஆலவிருட்சம். அந்த விருட்சத்தில் தங்கியிருந்த சில பட்சிகள் அக்கரையில் விருட்சம்போல் தெரிந்த மரங்களில் ஆசைப்பட்டு பறந்ததும் உண்டு.

அக்கரையில் ஆலவிருட்சமாய் தெரிந்தவை முள்ளுமரங்கள் என்பதை பின்னர் தான் உணர்ந்துகொண்டன.

என்னசெய்வது. முள்ளுக்குள் சிக்குண்ட சிறகுகள் கிழிபட்டு வேதனைப்படும் அவலம் இறைவா! அந்தப் பட்சிகளுக்கும் உன்னாசி கிடைக்கட்டுமென்று வேண்டுகின்றோம்.

துணைபிடித்து வந்த சில குஞ்சுகள் துணைக்கும் சொல்லாமல் பறந்துபோய் தனக்குப்பாலூட்டி வளர்த்தவர்களுக்கே வசைபாடி துரோகமிழைத்த செயல்.

பரம்பொருளே அவர்களின் பாவச்செயல்களை மன்னித்தருள் என்று வேண்டுவதைவிட எதைத்தான் செய்ய முடியும்.

ஆறு வருடங்கள் வலம்புரிச்சங்கு ஒலித்துக்கொண்டிருப்பதற்கு வாசகர்களும், வர்த்தகப்பெருமக்களும், பத்திரிகை விற்பனை முகவர்களும் ஆற்றிய பணி சாதாரணமானதல்ல.

அதேநேரம் பத்திரிகைகளின் வளர்ச்சிக்கு பங்காற்ற வேண்டிய அரச திணைக்களங்கள, பல்கலைக்கழகங்கள், சர்வதேச அரசசார்பற்ற அமைப்புகள் தங்களின் விளம்பரங்களை தங்களுக்கு விருப்பமானவர்களுக்கு கொடுத்து, உண்டு மகிழும் வஞ்சகமும் நடக்கத்தான் செய்கிறது.

இதில் உயரிய நோக்குடன் உலகெங்கிலும் ஆரம்பிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திலும் இயங்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் விதிவிலக்கல்ல. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் பிச்சைக்காரத்தனமாக நடக்கிறது.

செய்திக்காக பத்திரிகைகளை நாடும் அந்த அமைப்பிற்கு, தான் சார்ந்த விளம்பரங்களை பிரசுரிக்கும்போது மட்டும் சிலபத்திரிகைகளை மறந்துவிடுகின்றது.

குடித்துக்கும்மாளம் போடுவதற்காக விளமபரத்தில் சுரண்டும் இக் கொடிய நோய் ஜெனிவாவில் இருந்து வந்ததா? அல்லது யாழ்ப்பாணத்து நிர்வாகிகளிடம் இருந்து தொற்றியுள்ளதா? என்பதை ஆராய்வது தேவையாகின்றது.

எதுவாயினும் வலம்புரி தனது ஏழாவது ஆண்டில் கால்டிவைக்கும்போது அது தனது நடுவு நிலை தவறா நன்னெறியின் வழியில் நின்று யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச பொது அமைப்புக்கள் பற்றியும், அரச திணைக்களங்களின் ஊழல்கள் பற்றியும் துணிவோடு ஆராய்ந்து பகிரங்கப்படுத்தும் என்பதை ஆறாவது அகவையின் நிறைவில் எங்கள் உயிரினும் மேலான வாசகர்களுக்கு உறுதி உரையாகத் தருகின்றோம்.

# நாட்டின் சகல துறைகள் தொடர்பிலும் பட்ஜெட்டில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது

## -அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் ஆரம்பமாகிய போது உரையாற்றிய அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அடுத்த ஆண்டை உள்ளூர் உற்பததிகளை அபிவிருத்தி செய்யும் ஆண்டாக மாற்றத் தீர்மானித்திருப்பதாகக் கூறினார்.

தேசிய விவசாயக் கொள்கை ஒன்றின் அவசியம் குறித்தும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், இந்த விவசாயக் கொள்கையை தயாரிக்கும் போது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகள் மற்றும் உள்ளூர் விவசாயம் பொருளாதாரத்தில அக்கறை கொண்டுள்ள கல்விமான்களின் கருத்துக்கள், மற்றும் ஆலோசனைகள் என்பன பெற்றுக்கொள்ளப்படும்.

50கிலோ கிராம் எடையுள்ள உரமூடை ஒன்றை 350 ரூபாவிற்கு விநியோகிப்பதற்கான பரந்த அளவிலான கட்டமைப்பு தற்போது அமுல்படுத்தப்படுகிறது. இருந்த போதிலும் இந்த நடைமுறையில் குறைபாடுகள் இருப்பதாக சில அறிக்கைகள் வெளிவந்துள்ளன. இத்தகைய முறைப்பாடுகள் விரைவில் தீர்த்துவைக்கப்படும்.

நீர்ப்பாசனத் துறைக்கான நலன்கருதி துரிததிட்டம் ஒன்றும் வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறினார்.

நாணயத்தின் பெறுமதியை ஸ்திரமான நிலையில் வைத்திருப்பது அத்தியாவசியமாகும். இல்லாவிட்டால் வரவு-செலவுத் திட்ட சலுகைகளை மக்கள் பெற்றுக் கொள்ளமுடியாமல் போய்விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் டி.எம்.ஜெயரட்ண, நாட்டின் ஒவ்வொரு துறை குறித்தும் வரவு-செலவுத் திட்டத்தில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

பாராளுமன்ற உறுபபினர் ஜோசப் மைக்கல் பெரேரா அங்கு கருத்து வெளியிடுகையில், வரவு-செலவுத்திட்டதத்தில் மீனவ சமூகத்தின் நலன்கருதி போதுமான அளவு கவனஞ்செலுத்தப்பட்டுள்ளது. எனினும், மீன்பிடித் துறைக்கு மேலும் பணம் ஒதுக்கப்படவேண்டும் என்றார்.

கல்வி அமைச்சா சுசில் பிறேமஜயந்த அங்கு உரையாற்றுகையில், பத்தாம் ஆண்டு சரித்திரப்பாடப் புத்தகத்தை இடைநிறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சரித்திரத்துறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் இந்தப் புத்தகம் மறுசீரமைக்கப்படும். தேசிய கல்விக் கொள்கையைத் தயாரிப்பதற்கான தேசிய கல்வி ஆணைக்குழு பல ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் இடைக்கால அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது என்று குறிப்பிட்டார்.

மதுபான அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதை தடை செய்தமை குறித்து பாராளுமன்ற உறுப்பினர் உடவத்தே னாரத்ன தேரர் ஜனாதிபதியைப் பாராட்டினார். ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த, 1977ஆம் ஆண்டிற்குப் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட ஒவ்வொரு வரவு-செலவுத்திட்டத்தையும் இந்த வரவு செலவுத்திட்டம வென்றுவிட்டது.

தேசிய பொருளாதாரத்திற்கு அத்திபாரம் இட்டுள்ள வரவு-செலவுத் திட்டம் அதனை அமுல்படுத்துவதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்துள்ளது என்று குறிப்பிட்டார்.(ற-7)

# அனுசரணையாளர் பணிக்கு நோர்வே விதித்திருக்கும் நிபந்தனைகளால் இலங்கை அரசு பெரும் குழப்பத்தில்!

## அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களில் மீண்டும் அனுசரணையாளராகச் செயற்படுதவற்கு நோர்வே விதித்திருக்கும் நிபந்தனைகளால் இலங்கையரசு குழப்பங்களுக்குள்ளாக வேண்டியுள்ளது. அதுமட்டுமன்றி மீண்டும் எரிக்சொல்ஹெய்ம் சிறப்புத் தூதுவராகச் செயற்படப்போவது மற்றும அனுசரணையாளரும் கண்காணிப்பாளரும் வெவ்வேறு தரப்பினராக இருத்தல் வேண்டும் என்னும் இலங்கை அரசின் நிலைப்பாடு நிலைமைகளை மேலும் குழுப்பியிருக்கிறது என்று அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இரு அரசாங்கங்களினதும் உயர்மட்டப் பிரதிநிதிகள் கடந்த வியாழக்கிழமை இது தொடர்பில் உ்ரையாடியிருந்தனர். விடுதலைப் புலிகள் போர்நிறுத்த மீறல்களில் ஈடுபட்டால் அது தொடர்பில் இலங்கையரசு நோர்வே மீது குற்றம் சுமத்தமுடியாது. அது தொடர்பில் நோர்வே கருத்துக்கூற வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. அது கண்காணிப்புக்குழுவுடன் தொடர்புபட்ட விடயம் என்பதே நோர்வேயின் நிலைப்பாடாகவுள்ளது.

அத்துடன், ஜே.வி.பி.யினதும் ஜாதிக ஹெல உறுமயவினதும் விமர்சனங்கள் இருப்பதனால் இலங்கை அரசாங்கம் தனது வரவேற்புடனான ஆதரவைத் தெரிவிக்க வேண்டும் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கமும் சமாதான செயற்பாட்டிற்கு உரிமைகொண்டாட வேண்டும. விடயங்கள் ஏதேனும் பிழைத்துக்கொண்ட போது அதன் மறுபுறத்தை நோர்வே மீது சாட்டிவிடலாகாது என்ற நிலைப்பாட்டில் நோர்வே உள்ளது.

மறுபுறத்தில் நோர்வே சார்பில் ஒரு தனிநபர் (சொல்ஹெய்ம்) விடயங்களை கையாளாமல் வெளியுறவு அமைச்சு அதிகாரி எவரேனும் சமாதான செயற்பாடுகளைக் கையாளவேண்டும என்பது இலங்கையின் நிலைபபாடு.

இந்நிலையில் அடுத்தவாரம் இலங்கை வருவதற்குத் திட்டமிட்டிருந்த எரிக்சொல்ஹெய்ம் தனது வருகையை ஒத்திவைத்துள்ளார். உதவி வழங்கும் கூட்டுத்தலைமை நாடுகளில் நோர்வேயின் பிரதிநிதியாக அவர் பங்குபற்றுகிறார். இவரே நோர்வே சார்பில் பிரதான அனுசரணையாளராகப் பணியாற்றவிருப்பதை இது மறைமுகமாக வலியுறுத்துகிறது எனவும் அரசியல் அவதானிகள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (ற-6)

# கரையோரச் சூழல் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிப்பட்டறை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதிகளில் மண் அரிப்பை தடுப்பதற்கு மரங்களை நாட்டுவதற்கான திட்டமொன்றை ஆரம்பிப்பதென அண்மையில் நடைபெற்ற கரையோரச் சூழல் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிப் பட்டறையில் தீர்மானிக்கப்பட்டது.

தமிழீழ பொருண்மிய மதியுரையகமும் சுவீடன் தொழிலாளர் அமைப்பும் இணைந்து நடாத்திய தாவர வலய அமைப்பின் மூலம் கரையோர சூழலைப் பாதுகாப்பதற்கான பயிற்சிப்பட்டறை அண்மையில் நடாத்தப்பட்டது.

கலாநிதி ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்ற இப் பயிற்சிப் பட்டறையில் கரையோரத் தாவரங்கள், தாவர சூழல் தொகுதிகள், கடற்கரையோரத்தில் சமூக பொருளாதார தாவரங்கள் வளர்த்தல் ஆகிய தலைப்புகளில் யாழ்.பல்கலைக்கழக துறைசார் விரிவுரையாளர்களால் கருத்துரை வழங்கப்பட்டது. (த-35)

# தாதியர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆயுள்வேத மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புதவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும புதுக்குடியிருப்புப் போன்ற பகுதிகளில் உள்ள 4 மாவட்ட வைதத்தியசாலைகளில் தாதிமார் வெற்றிடம் அதிகமாக நிலவுகிறது. இதனால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக வட-கிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

தாதியர்களுக்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுளளதாகவும், கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றவர்கள் இதற்காக விண்ணப்பிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அனுமதியை வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ்.சி.ஸ்ரீவர்தன வழங்கியுள்ளதாகவும் மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டார்.

அத்துடன், இந்த வைத்தியசாலைகளில் நிலவும் மருந்து வழங்குநர்களுக்கான வெற்றிடங்களும் நிரப்பப்படவுள்ளதாக பணிப்புாளர் மேலும் கூறியுள்ளார். (த-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



இறைவனை நாம் போற்றிப் பாடுவோம். இதயம் நிறைந்த பக்தியுடன் அவருடைய திருநாமத்துடன் ஒன்றியிருப்போம். எப்போதும் ஜபம் செய்தபடியே இருப்போம் பிறகு நமது துயரமனைத்தும் தரும். முக்தியை நோக்கி மகிழ்ச்சியுடன் நடை போடுவோம்.

சுவாமி விவேகானந்தர்

# யாழ்.பல்கலைக்கழக பேரணி மீது

வேளை விரைந்து வந்த இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கி சுட்டதுடன் தடியடிப் பிரயோகத்தில் ஈடுபட்டதாகவும் நிலத்துக்கு சமாந்தரமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தினரின் தடியடி ,துப்பாக்கிப் பிரயோகத்தினால் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறைவிரிவுரையாளர்எஸ்.பேரின்பநாதன் (வயது 54) காலிலும்; முகாமைத்துவ வணிகபீட மாணவர் ஒன்றிய செயலாளர் இ. செந்தில் (வயது 22) முதுகுப்பகுதியிலும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இதேவேளை, இராணுவத்தினரின் தடியடித் தாக்குதலுக்கு இலக்காகிய யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். காண்டீபன்(வயது 24), கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் (வயது 55) மற்றும் ஊடகவியலாளர்கள், ஆட்டோசாரதி உட்பட 15 பேர் படு காயமடைந்த நிலையில் யாழ். போதனாவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள்தாக்கப்பட்டதுடன்அவர்களின்புகைப்படக் கருவியும் அடித்து நொறுக்கப்பட்டது.

ஆகாயத்தை நோக்கிதுப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு இராணுவத்தினர் பேரணியை நெருங்கி வந்தபோது பேரணியுடன் வந்த யாழ். பல் கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் மற்றும் யாழ். மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் எஸ். கஜேந்திரன் ஆகியோர் இராணுவத்திற்கு தம்மை அறிமுகப்படுத்தி பேரணி பற்றி விளக்கிக் கூறமுற்பட்டபோதும் அதனை செவிமடுக்காது இராணுவத்தினர் தாக்குதலில் ஈடுபட்டனர் என்று துணைவேந் தர் மற்றும் யாழ். எம்.பி. கஜேந் திரன் ஆகியோர் குறிப்பிட்டனர். இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ். குடா நாட்டின் பல்வேறு பொது அமைப்புகளும் மாணவர் அமைப்புகளும் தமது காட்டமான கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

இத் தாக்குதல் சம்பவம் குடாநாடெங்கும் காட்டுத் தீ போல் பரவி எங்கும் பெரும் பதற்றமும் பீதியும் காணப்பட்டது. நேற்று நள்ளிரவு வரை இந்நிலைமை தொடர்ந்தன. இதனால் பலாலி வீதி போக்குவரத்துக்கள் முடங்கின. கடைகள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. யாழ் நகர் உட்பட பலாலி வீதியெங்கும் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர். பெருமளவு இராணுவ வாகனங்கள் பலாலியிலிருந்து யாழ் நோக்கி பலாலி வீதியூடாக வரிசையாக வருகைதந்தன. இதனால் எங்கும் அச்சமும் பீதியும் காணப்பட்டது. (இ-08,04,12,39,43,)

## கொழும்பு......

நாட்டில்கைகள் கட்டப்பட்ட நிலையிலேயே செயற்படுவதாகவும் கொழும்பிலிருந்தே யாழ்ப்பாணம் தொடர்பான முடிபுகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவித்ததாக துணை வேந்தர் குறிப் பிட்டார்.மேலும் யாழ். குடாநாட்டு நிலைமைகள்தொடர்பில் இராணுவத்தரப்பினரோ அல்லது பல்கலைக்கழகத் தரப்பினரோ தீர்வைக் காண முடியாது எனக்குறிப்பிட்ட மேஜர் ஜெனரல் சந்திரசிறி அதனை அரசியல் பின்னணியின் மூலமே தீர்வுகாண முடியும் எனக் குறிப்பிட்டதாகவும் துணை வேந்தர் தெரிவித்தார்.

இந்நிலையில் இராணுவத் தளபதியும் ;யாழ்ப்பாணக் கட்டளைத்தளபதியும் கொழும்பு அரசியல் பின்னணியின் கீழ் இயங்கி வருவதாகதான் சந்தேகம் கொண்டுள்ளதாக துணை வேந்தர் மேலும் குறிப்பிட்டார். (இ-4,8,39)

# கல்வீசி தாக்கியதாலேயே இராணுவம் சுட்டதாம்

## பிரிகேடியர் நளின் விதானகே

(கொழும்பு)

யாழ்.பரமேஸ்வராச்சந்தியில் பேரணியாக வந்தவர்கள் இராணுவத்தினர் மீது கல் வீச்சு மேற்கொண்டதாலேயே இராணுவத்தினர் பாதுகாப்புக்காக ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்த தென்று இராணுவப் பிரிகேடியர் நளின் விதானகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இராணுவத்தினர் மீது கல் வீச்சு இடம் பெற்ற பின்னரே இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

மேலும்பத்திரிகையாளர்கள் எவரையும் இராணுவத்தினர் வேண்டும் என்று தாக்கவில்லை. யாருக்கும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் ஏற்படவில்லை என்றும் நளின் விதானகே தெரிவித்தார். (இ-8-4)


மனோகரா யாழ்.
DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்
இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடாக
சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த
ஆறு
காட்சி நேரம்: 10.30, 1.30, 4.30
7.30, 10.30 (பு.நே)

ராஜா சினிமா யாழ்ப்பாணம்
காட்சி நேர மாற்றம்:
10.30.2.00.5.15.8.15 பு.நே
ஷாம், சினேகா, வடிவேல் நடித்த
ஏபிசிடி 10.30,2.0
Super Star Hero Tom Cruise in
WAR of the World
(English)
5.15,8.15

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், சுகன்ஜா,
நெப்போலியன்,
அப்பாஸ் நடித்த
அடிதடி
கா.நே: 11.00, 2.45, 3.00 (பு.நே)

வலம்புரியின் பணிசிறக்க வாழ்த்துகின்றோம்

Patrician Institutes
பற்றீசியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
தொழில் நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
ஆரம்பம் :-05.01.2006

| I | |
|---|---|
| A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION 1 YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING | DURATION 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK TOP PUBLISHING | DURATION 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. | DURATION 3 MONTHS |
| G. INTERNET & E-MAIL | DURATION 1 MONTH |
| H. DIPLOMA IN INTERNET TECHNOLOGY | DURATION 5 MONTHS |

வாகனத் தகுதிச் சான்றிதழ் -2006
2006 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் தை மாதம் தொடக்கம் வழங்கப்படும் என்பதனை அனைத்து வாகன உரிமையாளர்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

II. CERTIFICATE COURSES
1. MS WORD -2000
2. MS EXCEL -2000
3. MS ACCESS-2000
4.MS POWER POINT
5.VISUAL BASIC VER 6.5
6. PASCAL
7. d BASE III+
8. PAGE MAKER
9.WINDOWS 95
10.COREL DRAW
11.d BASE FOR WINDOWS
12. PRINT SHOP DELUXE
13. ADOBE PHOTO SHOP
14.QUICK BOOK
EACH 3 MONTHS

| III. | |
|---|---|
| சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (ஆங்கிலம்) (PITMAN LONDON EXAM PAPER மாதிரி வழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| ஜஐ சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் (தமிழ்) | |
| ஏ மோட்டார் வாகனம் திருத்துதல் (petrol & diesel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| ஜெனரல் எலக்ரிஸன் (மின்சார இணைப்பு மோட்டார் றிவைன்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| வானொலி ,தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |
| கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி (ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 8 மாதங்கள் |
| மின்ஒட்டுநர்பயிற்சி (ARC WELDING & GAS WELDING (ON THE JOB TRAINING) வழங்கப்படும். | காலம் 3 மாதங்கள் |
| மரவேலை (with use of Machinery) (ON THE JOB TRAINING) வழங்கப்படும் | காலம் 6 மாதங்கள் |
| குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |
| Plumping | காலம் 6 மாதங்கள் |
| Masonary | காலம் 6 மாதங்கள் |
| | காலம் 6 மாதங்கள் |

Note:
1. பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2.வன்செயலால் பாதிக்கப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ்வாழும் மாணவர்கள் ஆதாரங்காட்டி பங்குக் குருவானவரின் (Parish Priest)சிபார்சின் பெயரில் பயிற்சிக்கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்
3.பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்

எமது நிறுவனத்தில் வானொலி தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும் அத்துடன் சகல விதமான இரும்புசார் உற்பத்திப் பொருட்களும் ,ஒட்டு வேலைகளும் மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவுமூலமும் ஒடருக்கு மிகவிரைவாகவும் திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு
REGISTRAR
PATRICIAN INSTITUTE
59,ST.PATRICK'S ROAD
JAFFNA
T.P.No.222 6148
FAX-6148
E-MAIL-SPitee @Sltnel.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

ஆறாம் ஆண்டு அகவை நிறைவில்

VALAMPURII

# வலம்புரி

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 05 செவ்வாய்க்கிழமை (20.12.2005) தொலைபேசி 222 3378 ஒலி 01




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005





# ஐங்கரன் கட்டிடப் பொருள் விற்பனை நிலையம்

சீமெந்து, மணல், கற்கள் கம்பிகள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளவும்
கட்டட ஒப்பந்தக்காரர்களும்,
சகலவிதமான வாகன வசதிகளையும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

## ஐங்கரன் கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையம்

மாவடிச்சந்தி வட்டுக்கோட்டை

# ஐங்கரன் ஹாட்வெயார்



கட்டடப் பொருட்கள், PVC குழாய்கள், இரும்புப் பைப்புகள், மின்சார உபகரணங்கள், சகல விதமான பெயின்ற் வகைகளையும் மற்றும் சகலவிதமான இரும்பு வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

## ஐங்கரன் ஹாட்வெயார்


வட்டு. வடக்கு
கற்பகச்சோலை சித்தங்கேணி

# வட்டு சிவன் தொலைத்தொடர்பகம்

# NET CAFE



பின்வரும் சேவைகளைப் பெற இன்றே நாடுங்கள்



- Browsing
- E-mailing
- Net - 2- phone call
- Game & Entertaiment
- Voice & Visual chatting
- Printing
- Scanning
- Laminating
- CD Writing
- Photo copy
- Telephone
- Fax

சிவன் கோவிலடி மேற்கு,
வட்டுக்கோட்டை.

தொலைபேசி: - 021-222 3734 / 060 -2-212470
E.mail: vaddu_sivan@yahoo.com.

# மதுரா மல்றி சென்ரர் & எக்ஸ்பிரஸ்

பாடசாலை உபகரணங்கள், போட்டோப் பிரதிகள், அழகு சாதனப் பொருட்கள், அன்பளிப்புப் பொருட்கள் மற்றும்




யாழ். ⇄ கொழும்பு

குளிரூட்டப்பட்ட வான்சேவை மற்றும் இலங்கை பூராகவும் சுற்றுலாசேவை, ஆட்டோசேவை.

தெல்லிப்பளை வீதி
சங்கரத்தைச் சந்தி
வட்டுக்கோட்டை

யாழ்ப்பாணம் T.P:
0773068864, 0773068994, 0712565022, 0777100629.
கொழும்பு T.P:
0112441398, 0112392129

# காலத்தின் தேவை அறிந்து ஒளிர்கின்ற வலம்புரியே! நீடுழி வாழ்க!

- கிராமிய வங்கி
- விவசாய சேவை
- சுயதொழில் கடன்
- மின் புனரமைப்பு சேவை
- இரும்பு விற்பனை நிலையம்
- கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி
- நுகர்ச்சி சேவை
- நிழற்பிரதி சேவை
- சிற்றுண்டிச்சாலை
- கட்டட ஒப்பந்தவேலை
- தொலைத்தொடர்பு சேவை
- புடவை விற்பனை நிலையம்

# தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

உள்ளூர் T.P: 222 3053, 222 3054
வெளியூர் T.P: 0094 21222 3053, 0094 21222 3054

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005

# இந்து நாகரிகச் சிறப்பும் மனித வாழ்வும்



"நாகரிகம் என்பது ஒருநாட்டின் மனிதத்தன்மையை. அந்த நாட்டின் விழுமிய கருத்துக்களை. வழிவழியாகப் போற்றி காக்கப்படும் பண்பாடுகளை அடிப்படை யாகக் கொண்டது"

டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனின் இக் கூற்று, பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு எழுச்சி பெறுவதே நாகரிகம் என்ற கொள்கைக்குச் சான்று பகிர்கின்றது. உலக நாகரிக வரிசையில் இந்துநாகரிகம் தனக்கேயுரிய சிறப்பையும் மேலான தன்மையையும் கொண்டு விளங்குகின்றது. சனாதனதர்மம் என இதற்கு வழங்கப்படும் பெயர் இதன் தொன்மையைச் சுட்டும். சமயத்தை அடித் தளமாகக் கொண்டு விளக்குவதால் எமது நாகரிகம்" இந்து நாகரிகம்" என வழங்கப்படுகின்றது.


எத்தகைய தாக்குதல்களினாலும் சின்னாபின்னப் படாமலும் காலவெள்ளத்தால் அழியாமலும் காலத்தின் தன்மைக்கேற்ப புதிய சிந்தனைகளோடு வளர்ச்சி பெற்றுவருவது இந்து நாகரிகம். நிலம், பிரதேசம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் வேறுபாடுகள் காணப்படினும் வேற்றுமையில் ஒற்றுமை கொண்டு இந்துநாகரிகம் வளர்ச்சிபெற்றமை குறிப்பிடத்தக்கது. தென்னாசியப் பிராந்தியத்தில் இந்நாகரிகம் தனக்கேயுரிய வரலாற்றுப் பெருமையும் சிறப்பும் பெற்றது. இத்தகைய சிறப்பினால் மேலைநாட்டவர்களும் பெரிதும் கவரப்பட்டனர் எனில் இதன் மேலான தன்மையை நாம் எளிதில் அளவிட்டு விட முடியாது.

அறிவின் பண்பட்ட நிலையை நாம் பண்பாடு எனக்கூறின் வாழ்க்கையின் பண்பட்ட நிலையை நாம் நாகரிகம் எனக்கூறலாம். மனிதனின் கைவண்ணத்தைக் காட்டுவது பண்பாடு எனில் மனித இனத்தின் செயல்திறனை விளக்குவது நாகரிகம் ஆகும். மண்ணும் மரமும் ஒன்றல்ல வெவ்வேறானவை எனினும் இரண்டும் இணைந்தால் ஒழிய மண்ணுக்குச் சிறப்பும் மரத்திற்கு வாழ்வுமில்லை. அது போன்றே பண்பாடும் நாகரிகமும் ஒன்றான நிலையில்தான் உள்ளத்தின் உயர்வை வாழ்வின் செம்மையை நம்மால் உணரமுடிகின்றது.

பண்பாடு பற்றி மேலைநாட்டறிஞர் குறிப்பிடும் கருத்து இங்கு மனம் கொள்ளத்தக்கது. "மக்கள் அறிந்தவற்றுள்ளே மேன்மையான வற்றாலும் சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் பண்பாட்டின் தன்மை அறியப்படுகின்றது" என அவ் அறிஞர் குறிப்பிடுகின்றார். எனவே பண்பாடு மனித வாழ்க்கையின் ஆணிவேர். அது தனி மனிதனின் உயர் குணச்சீர்மையைக் காட்டும். மனத்தியல்பாகும். ஓர் இனத்தின் பண்பாடு அந்த நாட்டின் இலக்கியம், வரலாறு, சமயம், சமுதாயம், கலை , அறிவியல் முதலியவற்றால் விளக்கமுறுகின்றது. மனிதனது உள்ளம் அவன் வாழும் சூழ்நிலை, சமூகம்ஆகியவை அவனது வாழ்வில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை சீர்மை பெறும்போது அவனது வாழ் வும் செம்மையுறுகின்றது. பண்பாடுசொல்லில் 'பண்' என்பது செம்மைப்படுத்து தல் என்ற பொருளைத்தருவதாகும். 'பண்' என்பது உள்ளச் செம்மையைக் குறித்து நிற்கின்றது.

நகரத்தை நிலைக்களனாகக்கொண்டு நாகரிகம் வளம்பெற்று மனித வாழ்வினை அகப் புறநிலைகளில் மேம்படுத்திய போக்கினை நாம் தென்னாட்டு பண்பாட்டு வரலாற்றிலே சிறப்பாகக் காணமுடிகின்றது. தென்னாட்டிலே பல்லவர் காலத்து பக்தி இயக்கத்தின் பயனாய் ஊர்தோறும் தலங்கள் எழுந்தன. சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்று முக்கிய பண் பாட்டு அம்சங்கள் இத்தலங்களை நிலைக்களனாகக் கொண்டு வளர்ச்சியுற்றன. திருக்கோயில்களினால் ஊர்கள் நாகரிக மேம்பாடடைந்தன. 'கோவில் நகரங்கள்' எமது பண்பாட்டின் உறைவிடங்களாக மிளிர்ந்தன. எனவே தென்னாட்டிலே ஊரின் பெயர்கள் 'திரு' என்ற பெயரை முதன்மையாகப் பெற்று திகழ்ந் தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். திருச்செந்தூர், திருவெண்ணாமலை, திருவையாறு, திருப்பதி, திருவாணைக்கா, திருக்கடவூர் போன்றவை ஒரு சில இவ்வூரின் கண் நடுநாயகமாய் திகழ்ந்து சிறப்புப் பொருந்திய தலங்களால் இவை சிறப்படைந்தன. தென் னாட்டிலே இவை போன்று பல உதாரணங்களைக் குறிப்பிடலாம். பல்லவர் காலத்திலே காஞ்சி ஸ்ரீகைலாசநாதர் கோவிலினால் சிறப்படைந்தது. நகரங்களுள் காஞ்சி புகழடைந்தது. காஞ்சி காமாட்சிகோவிலும் இந் நகருக்கு மேலும் புகழ்தேடித் தந்தது. தென் னகத்து பண்பாட்டு வரலாற்றில் இந் நகரம் கேந்திரமாக விளங்கியது.

மதுரை நகரம் மீனாட்சி அம்பாளின் ஆலயத்தினால் பெருமைபெற்றது. அது போன்று



வடக்கிலே விசுவநாதர் ஆலயத்தினால் காசி புனிதமடைந்தது. ராஜராஜனின் பெரியகோயிலினால் தஞ்சை புகழ் பெற்றது. திருச்செந்தூர் முருகனது ஆலயத்தினால் மேன்மையடைந்தது. இவற்றைக் கொண்டு நாம் பார்க்குமிடத்துதிருக் கோயில்களே தொடக்கத்தில் எமது நாகரிகம், பண்பாடு ஆகி யவை செழிப்படைய கேந்திரநிலையமாக விளங்கியமை தெளிவாகின்றது. மனித உள்ளம் புனிதமடைந்ததை நாயன்மார்களின் திருப்பதிகங்களும் ஆழ்வார்களின் பாசுரங்களும் எடுத்துக்கூறுகின்றன. திருக்கோயில்கள் எமது பண்பாட்டின் உறைவிடமாகத் திகழ்ந்த பெருமையை அப்பர் சுவாமிகள்,

திருக்கோவில் இல்லாத திருவிலூரும்
திருவெண்ணீர் றணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லாவூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லாவூரும்
அருப்போடும் மலர்பறித்திட் டுண்ணாவூரும
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே

என்று கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

இந்துக்கள் தாம் வாழ்ந்த இயற்கைச் சூழலையும் தமது பண்பாட்டு வளர்ச்சிக்கும் சமயவளர்ச்சிக்கும் நன்கு பயன்படுத்தினர். வடக்கில் இமயமலை இறைவனின் இருப்பிடம் என்ற நிலையில் புனிதமாகக் கருதப்பட்டது. சிந்து நதியும், கங்கை நதியும் பாய்ந்த சமவெளிகள் எமது பண்பாட்டு வரலாற்றில் முக்கியத்துவமடைந்தன. கங்கை நதி இந்துக்கள் புனித நதியாகப் போற்றப்பட்டது. சிந்து வெளியில் வாழ்ந்த மக்கள் உருவாக்கிய நாகரிகத்தில் நிலவிய சமய நம்பிக்கை 'இந்து' என்ற பெயரை பெற்றுத்தருமளவிற்கு சிறப்படைந்தது.

'ஆசெது ஹிமாசல்' என்ற தொடர் தென்முனையில் உள்ள சேதுக்கரையில் இருந்து இமாலயம் வரை இந்து நாகரிகம் பரந்திருந்த சிறப்பைச் சுட்டுவதாக அமைந்தது. பெரும்பாலான நதிகளும் கடற்கரைகளும் புனிதத் தலங்கள் எழுச்சிபெற உதவியதோடு தீர்த்தச் சிறப்புப் பெற்று விளங்கின. முருகனின் ஆறுபடைவீடுகள் எனப் போற்றப்படும் தலங்கள் இத்தகைய இயற்கை சூழ்நிலைகளின் பின்னணியிலேயே எழுச்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

திருச்சியில் உள்ள உச்சிப்பிள்ளையார் கோயில், திருப்பதி சிறி வெங்கடாசலபதியின் திருத்தலம் மலைகளில் கோயில்கள் எழுந்தமைக்கு சிறந்த உதாரணங்கள். இரு நதிகள் சங்கமமாகும் இடமும் நதிகள் கடலுடன் சங்கமமாகும் இடமும் புனிதத்துவம் வாய்ந்த இடங்களாகக் கருதப்பட்டு யாத்திரை தலங்களாக விளங்கின. இத்தகைய இயற்கை சூழலை ஞானிகள் மனித வாழ்வின் ஆத்மீக நிலையோடு தொடர்புபடுத்தினர். ஆன்மாவாகிய நதிகள் பரமான்மாவாகிய கடலோடு சங்கமமாவதாக உருவகித்தனர். (முண்டக உபநிடதம்- 3.2.8)

காடுகளும் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. அக்காலத்தில் மனித வாழ்வை மேம்படுத்தும் நிலையில் ஆச்சிரமங்களும் குருகுலங்களும் ரிசிகுலங்களும் இயற்கையான அமைதியான சூழ்நிலையிற் காணப்பட்டன இந்து சமய தத்துவ வளர்ச்சிக்கும் ஒழுக்கத்தை முதன்மையாகக் கொண்ட வாழ்க்கை நெறிக்கும் ஆச்சிரமங்கள் பெரிதும் உதவின.

'வைதீகதர்மம் என இந்து சமயம் பிறிதோர் வகையிற் சுட்டப்படுவதற்கு வேதங்கள் வகுத்த பண்பாடு காரணமாயிற்று. இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுச்சி பெற்ற உப நிடதங்கள், பிரமசூத்திரம், இதிகாசங்கள், புராணங்கள், தர்மசாத்திரங்கள் மனித வாழ்வை மேம்படுத்துவதல் பெரிதும் உதவின. திருக்கோயில் மரபுக்கு ஆகமங்கள் பெரிதும் உதவின. தென்நாட்டில் சந்தனாச்சாரியாரின் பணிகள் சைவ சித்தாந்தம் என்ற சிறந்த தத்துவ சிந்தனை மேலோங்க வழிவகுத்தன. பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் எமது முன்னோரின் தத்துவசிந்தனை தெளிவுக்கு சிறந்த மூலகங்களாகும். கச்சியப்பரின் கந்தபுராணம் சைவ சிந்தாந்த உண்மைகளை தெளிவாக படம் பிடித்துக்காட்டியதோடு கந்த புராண கலாசாரம் மேலோங்கி மனித வாழ்வை வளம்படுத்த பெரிதும் உதவியது. இலங்கையில் நாவலர் பெருமானின் சமயப்பணிகளுக்கு கந்த புராணமே மூலமாக அமைந்தது.

மக்களது வாழ்க்கையை அறம், பொருள், இன்பம், வீடு என்ற ஒழுங்கில் நெறிப்படுத்துவதில் தென்நாட்டிலே வள்ளுவரின் குறல் உதவியது போல வடக்கிலே மக்களது ஆன்மீக வாழ்க்கையை நெறிப்படுத்துவதில் கீதை பெரும்பங்கு வகித்தது. மனத்தின் பண்பாடே யோகம் எனவும் செயலிற் திறமை வாய்க்கப்பெற்றதனை யோகி எனவும் அமைந்த கீதையின் உபதேசங்கள் மனித வாழ்விற்கும் பண்பாட்டிற்கும் வழிகாட்டியாக அமைந்தன. "கடமையைச்செய் பலனை எதிர்யாராதே " என்ற தர்ம யோக உபதேசம் உலக வாழ்க்கை வாழ்ந்து ஆன்மீக நெறியில் மேன்மை பெற உதவியது. இதேபோன்று தென் நாட்டிலே அப்பர் சுவாமிகளின் வாழ்க்கை "எம் கடன்பணி செய்து கிடப்பதே " என்று தொண்டின்மேன்மையை உறுதிப்படுத்தியது. சேக்கிழாரின் பெரிய புராணம் சிவத்தொண்டின் மேன்மையையும், சிவனடியாரின் சிறப்பினையும் எடுத்தியம்பியதோடு மனித வாழ்க்கையின் கலங்கரை விளக்கமாகத்திகழ்ந்தது.

எமது நாகரிகத்தின் மேம்பட்ட நிலையை பாரெங்கனும் பரப்புவதில் ஆதி சங்கர், இராமானுஜர் போன்ற மகான்கள் கொண்டிருந்த பங்கு அளப்பெரியது. இவர்களது அடிச்சுவட்டில் ஸ்ரீராமகிருஷ்ண பரம கம்சர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் எமது பண்பாட்டு விழுமியங்களை உலகறியச் செய்து உதாரண புருஷர்களாகவும் வாழ்ந்தனர்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்தது மிந்நாடே -அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந் நாடே அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந் நாடே"

என்ற பாரதியாரின் சிந்தனைகள் எமது நாகரிகத்தின் சிறப்பை எடுத்துக் கூறுகிறது. எனவே மக்களிடையே அன்பு வளரவேண்டுமென்ற பண் பாட்டு உணர்வை வேதங்கள் அறிவுறுத்தியவாறு எமது வாழ்வை வளம்படுத்துவோமாக. ★



பேராசிரியர் கலாநிதி
**ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
யாழ். பல்கலைக்கழகம்

**நாகரிகம் ஆரம்பமாகும் இடம் வீடு தான்**

# வலம்புரியின் வேது ஆண்டு நிறைவு
# ஆவணச் சிறப்பிதழ் – 20.12.2005


வலம்புரியே! நீ நீடூழி வாழ்க!

## சொலெக்ஸ்



**பல் மூக்குக் கண்ணாடி அகம்**

- மிக நவீன றிம்லெஸ் (Rimles) கண்ணாடிகள் பிளாஸ்ரிக் லென்ஸ், போட்டோகிறே, போட்டோ பிறவுண், லென்ஸ் வகைகளையும், உங்கள் கண்களை இல வசமாகப் பரிசோதித்துக் கொள்ளவும்.
- மிதப்புப் பற்களுக்கு இலகுமுறையில் கிளிப் போடவும், சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப்பற் களைக் கட்டிக் கொள்ளவும்
- கண்ணாடி அணிய விருப்பமற்றவர்களுக்கு கண் மணிகளுடன் பொருந்தும் சென்றக் லென்ஸ் வகைகள் பவர் பவறற்ற, பல வர்ணங்களில் பெற்றுக்கொள் ளவும்
- கென்றக் லென்ஸ்களுக்கு பயன்படுத்தும் திரவ லிக்குற்றுக்களும் பெற்றுக் கொள்ளலாம்

**Solax optical**

**கிளை:** பிரதான வீதி, முதலாம் குறுக்குத்தெரு, நெல்லியடி.

516 ஆஸ்பத்திரி வீதி, (O:P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P: 7631 0777 280029

வலம்புரியின் பணி தொடர எங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!



## வேணி நகை மடம்
## Veneiy Jewellery

தங்கப் பவுண் நகை வியாபாரம்
MANUFACTURERS OF GOLD JEWELS





இல: 40, கன்னாதிட்டி வீதி, (மக்கள் வங்கிக் கிளை முன்பாக) யாழ்ப்பாணம்.

No: 40, Kannathiddy Road, (People Bank Opposite) Jaffna.

## கிருபா ரேடிங் சென்ரர்

கல்விசார் உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள் விற்பனையாளர்

இல. 02, பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி. T.P: 021 222 2104

வலம்புரியின் சேவை வளர என்றென்றும் எமது வாழ்த்துக்கள்!

**இதோ 171 ஸ்ரான்லி வீதியில்**



உங்களது நன்மதிப்புப் பெற்ற
பிறீடம் எல்.எம்.எல்.ஸ்கூட்டர்
மோட்டார் சைக்கிள், விவசாய உபகரணங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள புதிய நிறுவனம்

## S.P.N.MOTORS
## எஸ்.பீ.என்.மோட்டர்ஸ்

171, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நடு நிலை தவறா நன்னெறி காக்கும் நாளிதழே என்றென்றும் வாழ்க!

## கஜமுகன் ஹாட் வெயர்ஸ்

யாழ்.ஏகவிநியோகஸ்தர்கள்

147,149 STANLEY ROAD, JAFFNA.




வாழ்க வலம்புரியே! வளர்க உன் சேவையே!!

புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகள் T.V.,டெக் வகைகள், ரேடியோ வகைகள்
அவற்றிற்கான உதிரிப்பாகங்கள், அன்ரனா வகைகள் போன்றவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

## இ.ச.பேரம்பலம் சகி நிறுவனம்



இல: 50,52,54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:021- 222 2988,3096 Fax: 021-222 2368

## E.S.PERAMPALAM AND CO

(PEPSI, MIRINDA, 7UP போன்றவற்றிற்கான ஏகவிநியோகஸ்தர்கள்)

# பாடசாலைத் தலைமைத்துவம்



பாடசாலைகள் அறிவையும் திறன்களையும் உளப்பாங்கையும் விருத்தி செய்யும் அமைப்புக்கள் என்பதால் அவற்றை வழிநடாத்துவதில் பாடசாலைத் தலைமைத்துவம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனைய அமைப்புக்களைப் போலல்லாது பாடசாலைகள் பல்வேறு நோக்கம் கொண்டவர்களை முகாமை செய்ய வேண்டிய அவசியத்தைக் கொண்டுள்ளன. பாடசாலைத் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்ட அதிபர் ஆசிரியர்களையும், மாணவர்களையும் மட்டுமன்றி பெற்றோர்கள், பழைய மாணவர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரையும் இணைத்துக் கொண்டே பாடசாலைகளை முகாமை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தைக் கொண்டுள்ளனர். இதன் காரணமாகவே சிக்கல் நிறைந்த முகாமைத்துவப் பணியை பாடசாலை அதிபர்கள் கொண்டிருப்பதாகக் கருதப்படுகின்றது. பாடசாலைகள் தெளிவானதும் அங்கீகரிக்கப்பட்டதுமான குறிக்கோள்களைக் கொண்டிருப்பதனாலும் அவை தேசிய ரீதியில் அரசினாலும் மக்களினாலும் அங்கீகரிக்கப்பட்டிருப்பதனாலும் அக் குறிக்கோள்களை நோக்கி பாடசாலைச் சமூகத்தை அழைத்துச் செல்வது பாடசாலைத் தலைமைத்துவத்தின் குறிக்கோளாகும்.

### வரைவிலக்கணம்

தலைமைத்துவம் என்பது நிறுவனங்களின் இலக்கினை அடைவதற்கு அவற்றுடன் தொடர்புடைய உதவியாளர்களையோ அல்லது அவற்றை பின்பற்றுபவர்களையோ அழைத்துச் செல்லும் முகாமைத்துவக் கருமமாகும. பாடசாலையில் கிடைக்கும் வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தி இலக்கினை அடைவது தலைமைத்துவத்தின் நோக்கமாகும். பாடசாலைகளிலுள்ள பௌதீக வளம், மனித வளம், நிதி வளம், நேர வளம், தகவல வளம் என்கின்ற வளங்களைப் பயன்படுத்தி இலக்குகளை அடைவதற்கு முயலும் முகாமைத்துவத்தில் மனித வளத்தை இலக்குகளை நோக்கி நகர்த்திச் செல்ல தலைமைத்துவம் முக்கியமாகின்றது. பாடசாலைத் தலைமைத்துவத்தை ஏற்றிருக்கும் அதிபர் தனது உதவியாளர்களான ஆசிரியர்களையும் பின்பற்றுவோர்களான் மாணவர்களையும் இலக்கினை நோக்கி நகர்த்திச் செல்லும் பொறுப்பினைக் கொண்டிருக்கின்றார். ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இலக்கினை அடைவதற்கு பாடசாலைச் சமூகத்தினரை வழி நடாத்தும் ஒரு கருமமே பாடசாலைத் தலைமைத்துவமாகும். இதற்கென பாடசாலை அதிபருக்கு ஏனையோரை விட கூடியவலு (Power) வழங்கப்பட்டிருப்பதனால் அதனைப் பயன்படுத்தி ஏனையோர்களின்மீது செல்வாக்கினைச் (INFLUENCE) செலுத்தி அவர்களின் நடத்தையில் மாற்றத்தினை (Change In Behavior) கொண்டு வருவதாகும. எனவே தான் பாடசாலைத் தலைமைத்துவத்தினால் பாடசாலையின் இலக்கு நோக்கி ஏனையோரை அழைத்துச் செல்ல முடியும் எனக் குறிப்பிடலாம்.

### தலைமைத்துவத்தின் வகைகள்

உற்பத்திப் பொருளை அல்லது சேவைகளை வழங்குகின்ற நிறுவனங்களில் பணியாற்றுவோர்களை வழி நடாத்தி இலக்கினை அடைவதற்கென உருவாக்கப்படுவதனைக் காண முடியும். பாடசாலைத் தலைமைத்துவமும் இவ்வகைகளில் ஒன்றைக் கொண்டதாகவே அமைய முடியும்.

**1. கொடை / ஆகாஷிக்கும் தலைமைத்துவம் (Charismatic Leadership)**

இது தலைமை தாங்கும் ஆற்றல் இயற்கையாக ஒருவருக்கு கிடைத்திருப்பதாகும். இவர் பிறப்பிலேயே தலைமை தாங்குவதற்கான ஆளுமையைக் கொண்டவராகக் காணப்படுவதுடன் இவரால் இடப்படும் கட்டளைகளுக்கு கீழ்ப்படிய ஏனையோர் தயாராக இருப்பர். இதன் காரணமாகவே தலைவர்கள் உருவாக்கப்படுவதில்லை பிறக்கின்றார்கள் என்ற கொள்கை நிலைபெற்றுள்ளது. உலகில் பிரபலம் பெற்ற நெப்போலியன், மகாத்மா காந்தி போன்றவர்கள் கொடைத் தலைமைத்துவத்தைக் கொண்டவர்களேயாவர்.

**2.பாரம்பரியத் தலைமைத்துவம் (Traditional Leadership)**

இது பரம்பரையினால் கிடைக்கும் தலைமைததுவமாகும். ஒருவர் பிறந்த பரம்பரையானது அவருக்கு தலைமை தாங்குகின்ற வாய்பபைப் பெற்றுக் கொடுக்கும். பெரும்பாலும் அரசியல் தலைவர்கள் பரம் பரைத் தலைமைத்துவத்தைக் கொண் டிருப்பதைக் காணலாம். இங்கிலாந்தில் எலிசெபத மகாராணியின் குடும்பம் பாரம் பரிய தலைமைத்துவத்தைக் கொண்டதாகும்.

**3. தெரிவுத் தலைமைத்துவம் (Elected Leadership)**

இது தெரிவுசெய்யப்படுவதன் மூலம் உருவாகும் தலைமைத்துவமாகும். ஒரு குழுவினரில் இருந்து தெரிவு செய்யப்படுவதன் மூலம் அதன் அங்கத்தவர்களிலிருந்து ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்படுவார். குறிப்பாக தொழிலாளர்களில் இருந்து ஒருவரை தெரிவு செய்வதன் மூலம் உருவாகும் தொழிற்சங்கத் தலைமைத்துவத்தைக் கொண்டவரேயாவார்.

**4. நியமனத் தலைமைத்துவம்(Appointed Leadership)**

இது நியமனம் செய்யப்படுவதன் மூலம் உருவாக்கப்படும் தலைமைத்துவமாகும். பெரும்பாலும் நிறுவனங்களில் காணப்படுவது நியமனத் தலைமைத்துவமேயாகும். பாடசாலைகளிலும் இந்த வகையான தலைமைத்துவமே காணப்படுகின்றது. அதிபர் ஒருவர் கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்படும் போது அவர் பாடசாலைத் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்கின்றார்.

### தலைமைத்துவ இயல்புகள்


பாடசாலை முகாமைத்துவத்தில் தலைமைத்துவ இயல்புகள் முக்கியம் பெறுவதனை அவ்தானிக்க முடியும். தலைமைத்துவ இயல்புகள் என்பது தலைவன் தான் வைத்துக் கொள்ள விரும்பும் அதிகாரங்களையும் உதவியாளருக்கு வழங்க விரும்பும் சுதந்திரங்களையும் அடிப்படையில் கொள்வதாகும். இதன்படி தலைவன் வைத்திருக்க விரும்பும் அதிகாரங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட உதவியாளர்கள் பெற்றுக் கொள்ளும் சுதந்திரம் அதிகரித்துச் செல்லும். பாடசாலையைப் பொறுத்தவரை அதிபர் தனது கையிலுள்ள அதிகாரத்தை கையளிப்பதன் மூலம் உதவியாளர்களிடம் ஒப்படைக்க ஏனையோர் அனுபவிக்கும் சுதந்திரம் உயர்வடைந்து வரும். இதன் காரணமாகவே பாடசாலைகளில் மையப்படுத்திய நிர்வாக முறைக்குப் பதிலாக கல்வியமைச்சு பரவலாக்கிய நிர்வாக முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. முன்னரைப் போல் அல்லாமல், மாகாண, மாவட்ட, வலய, கோட்ட அடிப்படையிலான நிர்வாக முறை கல்வியமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது மட்டுமன்றி பாடசாலை அடிப்படையான முகாமைத்துவம் (School Based Management) என்பதனைக் கொண்டு வந்துள்ளது. இதன் காரணமாகவே கீழ்மட்டத்தல் வைத்தே தீர்மானமெடுத்து நடைமுறைப்படுத்தும் புதிய நிர்வாக முறையைக் காணமுடிகின்றது. இங்கு அதிபர் பலமான தலைமைத்துவத்தைக் கொண்டிருக்க முடிகின்றது.

தலைமைத்துவ இயல்புகளை இருபெரும் பிரிவுகள அடிப்படையில் காணலாம்.

1.அதிகார மயப்பட்ட இயல்பு – **Authoritatium Style**

2.ஜனநாயக இயல்பு – **Democratic Style**

அதிகாரமயப்பட்ட இயல்பு என்பது தலைவன் பெருமளவான அதிகாரங்களைத் தன்வசம் வைத்துக் கொண்டு உதவியாளருக்கு மிகக் குறைந்த சுதந்திரத்தைக் கொடுப்பதாகும். இந்த இயல்பின் தலைவனே எல்லா வகையான தீர்மானங்களை எடுத்து அவற்றை உதவியாளர்களுக்கு அறிவிப்பான். இங்கு உதவியாளர்களின் நலன்களுக்கு முக்கியத்துவம் மேலும் வழங்கப்படாமல் நிறுவனத்தின் நலனுக்கே மதிப்பளிக்கப்படும். இதன் காரணமாகவே இலகக்கு நோக்கிய தலைமைத்துவம் (Task oriented Leadership) என இது கொள்ளபபடுகின்றது. இதில் மிகக்குறைந்த



சுதந்தரத்தை உதவியாளர்கள் அனுபவிப்பதுடன் தலைமைத்துவத்திற்கு பெருமளவான ஒத்துழைப்பை வழங்காதிருப்பதுடன் வேலையில் அதிக அர்ப்பணிப்பையும் கொண்டிருக்க மாட்டார்கள். இது பாடசாலைத் தலைமைத்துவத்தில் அமையுமாயின் அதிபர் பெருமளவான ஒத்துழைப்பை ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாதது மட்டுமன்றி பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர்களின் முன்னேற்றத்திலும் ஆசிரியர்களை அர்ப்பணிப்பான சேவையை அனுபவிக்க முடியாதிருக்கும்.

ஜனநாயக தலைமைத்துவ இயல்பே தற்காலத்துக்கு பொருத்தமானது எனக் கொள்ளப்படுகின்றது. இம்முறையில் தலைவன் உதவியாளர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று சரியான தீர்மானங்களை எடுத்து நடைமுறைப்படுத்த முடியும். இதல் உதவியாளர்களின் சுதந்திரம் அதிகரித்திருப்பதுடன் அவர்களது நலனிலும் தலைமை அக்கறை காட்டும். இதன் காரணமாகவே இத்தலைமைத்துவத்தை ஆள் நோக்கிய தலைமைத்துவம் (Person Oriented Leadership) எனக் கொள்வர். இதல் உதவியாளர்களின் ஒத்துழைப்பும் அர்ப்பணப்பும் இணைந்திருக்கும். இதனால முரண்பாடுகள் இல்லாத, மாணவர் நலனில் அக்கறை கொண்ட ஆசிரியர் குழாத்தைக கொண்டிருக்கும் வல்லமை அதிபருக்கு இருப்பதுடன் பாடசாலை வளர்ச்சியும் மாணவர்களின் முன்னேறறமும் இலகுவில் அடையப்பட முடியும்.

### நலல பாடசாலைத் தலைமைத்துவத்தின் குணவியல்புகள்

பாடசாலையின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் ஒருவர் இருசாராரைத் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் இருப்பார். ஒருபுறம் கல்வித்திணைக்களத்தையும் மறுபுறம் பாடசாலைச் சமூகத்தையும் திருப்திப்படுத்தும் வகையில் பணிபுரிந்தால் மட்டுமே நல்ல பாடசாலைத் தலைமைத்துவம் இருப்பதாகக் கொள்ளப்படும். இத்தகைய நோக்கத்தை நிறைவு செய்ய பாடசாலையின் அதிபர் பின் வரும் குணவியல்புகளைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

★ தொழில் நுட்பத்திறன் (Technical Skill) என்ற வகையில் தொழில் தொடர்பான பூரண அறிவைக் கொண்டவராக இருத்தல் வேணடும். இதன்படி பாடசாலையில் இடம் பெறவேண்டிய ஒவ்வொரு செயற்பாடு தொடர்பாகவும் பூரண விளக்கத்தை கொண்டிருபபதுடன் அதனை ஏனையோர் மூலம் நிறைவேறறும் ஆற்றலையும் வைத்திருத்தல் வேண்டும்.

★ தீர்மானமெடுக்கும் திறன் (Decision Making Skill) என்ற வகையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல் கொண்டவராக இருத்தல் வேண்டும். பாடசாலையின் நன்மை கருதி சிறப்பான தீர்மானங்களை மேற்கொள்வது பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். இத்தகைய தீர்மானங்களை எடுக்கும் பொழுது ஜனநாயக முறையில் பாடசாலைச் சமூகத்தவரின் ஆலோசனையைப் பெற்று குழுத்தீர்மானமான அதனை எடுத்தால் அது தவறில்லாத தீர்மானமாக இருப்பதுடன் பலரது பங்கு பற்றலுடன் இணைந்த முகாமைத்துவத்திற்கு (Participation Management) வகைசெய்யும்.

★தொடர்பாடல் திறன் (COMMUNICATION SKILL) என்ற வகையில் செய்திகளை விரைவாகவும் சரியாகவும் வழங்கும் ஆற்றலை பாடசாலைத் தலைமைத்துவம் கொண்டிருத்தல் வேண்டும். வெவ்வேறு நோக்கங் களைக் கொண்ட பாடசாலைத் சமூகத்தவருக்கு எத்தகைய செய்திகள் எந்த நேரத்தில் வழங்கப்பட வேண்டுமோ அதனைப் பொருத்தமான நேரத்தில் எழுத்து வடிவத்திலோ அன்றி வாய்மொழி வடிவத்திலோ வழங்கியிருத்தல் வேண்டும். இத்தகைய் தகவல்களை வழங்க பொருத்தமான தொடர்பாடல் முறைகளைத் தேர்ந்தெடுப்பதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் பொறுப்புமாகும்.

★மானிடத்திறன் (Human Skill) என்ற வகையில் பாடசாலைச் சமூகத்துடன் மனிதநேயத்துடன் பழகும் நடத்தை கொண்டதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படல் வேண்டும். பாடசாலைச் சமூகத்தவரைத் திருப்திப்படுத்துவதற்கு மற்றையோர் நிலைகுள்ளாகும் (Empathy) பண்பினை பாடசாலைத் தலைமைத் துவம் கொண்டிருக்க வேண்டும். பாட சாலைச் சமூகத்தவரின் மனோநிலையை அறிந்து அவர்கள் நிலையில் நின்றும் பணியாற்றுகின்ற மனிதநேயத்துடன் கூடிய தலைமைத்துவமாக பாடசாலைச சமூகததுவம் இருந்தால் மட்டுமே முரணபாடுகளைக் குறைத்துக் கொள்ள முடியும்.

★விமர்சனங்கள் ஏற்றுக் கொள்ளும மனப்பக்குவம் உள்ளதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுதல் வேண்டும். ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழைய மாணவர் என்ற வகையில் பலரிடமிருந்தும் பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு விமர்சனங்கள் எழலாம். அவற்றை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் கொண்டதாக பாடசாலைத தலைமைத்துவம் காணப்படுவதுடன் விமர்சனங்களில் உண்மையிருந்தால் மட்டும் அவற்றைத் திருத்திக் கொள்ளும் மனப்பக்குவத்தைப் பேணி வருதல் வேண்டும்.

★பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ளும் ஆளுமை கொண்டதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுதல் வேண்டும். பாடசாலையில் எந்தவொரு புதிய விடயத்தை அறிமுகப்படுத்த வேண்டி ஏற்பட்டாலும் அது தொடர்பான புதிய பொறுப்பை (Responsibility) தட்டிக்கழிக்காது ஏற்றுக்கொள்ள முன்வருவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் கடமையாகும். இவ்வாறு ஏற்றுக்கொள்ளும் பொறுப்பை நிறைவேற்ற வசதியாக அதிகாரத்தை கையாளுகின்ற (Delegation of Authority) கடமையும் பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு உணடு. குறித்த பொறுப்பை யார் நிறைவேற்றுவார் என்பதை அறிந்து அவரிடம் அப்பொறுப்பைக் கையளித்தால் அது சுலபமாக நிறைவேற்றுவதனைக் காணலாம்.

★பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்களது வாண்மையை விருத்தி செய்ய தேவைப்படும் பயிற்சிகளை ஒழுங்கு செய்யும் ஆற்றல் கொண்டதாக பாடசாலைத் தலைமைத்துவம் காணப்படுதல் வேண்டும். சேவைக் காலப் பயிற்சி, மீள்பயிற்சி என்பவற்றில் பங்கேற்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவது மட்டுமன்றி அத்தகைய பயிற்சிகளை பாடசாலைத் தலைமைத்துவமே ஒழுங்கு செய்யவும் முடியும். பயிற்சி தொடராக மனித வள அபிவிருத்தியைக் கொண்டு வரும் என்பதனால் பயிற்சியும் அபிவிருத்தியும் இணைக்கப்பட்டிருப்பதனைப் பாடசாலைத் தலைமைத்துவம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

★பாடசாலையின் உதவியாளர்களான

(27ஆம் பக்கம் பார்க்க)

**க. தேவராஜா**
**பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகப்பீடம்**
**யாழ். பல்கலைக்கழகம்**

**தலைவர்கள்தான் ஒரு நாட்டின் முதுகெலும்பு**

## வலம்புரியின் வேது ஆண்டு நிறைவு

## ஆவணச் சிறப்பிதழ் – 20.12.2005


**இப்பொழுது!**

வலம்புரி மென்மேலும் பல நூற்றாண்டுகள் வளரவேண்டுமென வாழ்த்துகிறோம்

உங்களுக்கு நன்கு பரிச்சயமான சுவைகளில் யாழ்.நகரில் முதன்முறையாக

SLS தரத்துடன் தித்திக்கும் சுவையுடன் உதயமாகும்

# எலைற் சோடா வகைகள்



மற்றும்

தோடம்பழ சுவையிலான **எலைற் ஒரேஞ்**

திராட்சை சுவையிலான **எலைற் மெக்ரோ**

கிறீம் சுவையிலான **எலைற் கிறீம் சோடா**

**எலைற் பிளேன் சோடா**

இவையனைத்தும் கலாபா நிறுவனத்திடமிருந்து உயர்தரம் மற்றும் சுவைகளில் இப்பொழுதே அருகிலுள்ள கடைக்குச் செல்லுங்கள்

கலாபா இன்டஸ்ரீஸ்
வல்லை வீதி,
சங்கானை- யாழ்ப்பாணம்.

T.P: 021 222 9672

---

வலம்புரி 6வது அகவையை நிறைவுசெய்வதை வாழ்த்துகிறோம்

தென்மராட்சியில் உங்களுக்குத் தேவையான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றிட நாட வேண்டிய ஒரே இடம்

# சிவனருள் பல்பொருள் வாணிபம்

தபாலக வீதி அருகாமை, கண்டி வீதி சாவகச்சேரி.

உரிமையாளர் கோ.சிவறஞ்சன்

---

6வது ஆண்டைநிறைவுசெய்யும் வலம்புரியின் சேவை தொடர வாழ்த்துகிறோம்

(C/021)

## சரவணாஸ் மியூசிக் சென்ரர்

நீங்கள் விரும்பும் தமிழ், ஆங்கில திரைப்பட CD பிரதிகளை வாடகைக்கு பெற்றிடவும், திரைப்பட பாடல்கள், கர்நாடக சங்கீத பாடல்கள், இசைத்தட்டுக்கள் போன்றவற்றை ஒலிப்பதிவு செய்திடவும், ஓடியோ, வீடியோ CDகளை பெற்றுக் கொள்ளவும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**சரவணாஸ் மியூசிக் சென்ரர்**

கண்டி வீதி, T.P: 0776172666 சாவகச்சேரி.

---

6 வது ஆண்டை நிறைவு செய்யும் வலம்புரியின் சேவை தொடர வாழ்த்துகிறது

**தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கம் கைதடி**

தென்மராட்சி வாழ் மக்களின் நன்மைகருதி கைதடி ப.நோ.கூ.சங்கம் புதிதாக எரிபொருள் நிரப்பு நிலையத்தினைத் திறந்துள்ளது. இது மக்கள் சேவைக்காகக் காலை 5 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை திறந்திருக்கும் என மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

வாழ்த்துவோர்:
சங்கத்தலைவர்
திரு.சி.சுப்பிரமணியம்
முகாமையாளர், பணியாளர்கள்

(C/020)

---

7வது ஆண்டில் காலடி வைக்கும் வலம்புரியின் சேவை தொடர வாழ்த்துகிறோம்

## பிறைற்றின் கல்வி நிலையம்

**சங்கத்தானை சாவகச்சேரி**

*A/L கலை, வர்த்தகப் பிரிவு வகுப்புக்கள் நடைபெறுகின்றது.
*Spoken English வகுப்புக்கள் நடைபெறுகிறது
*தரம்3,4,5ற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகிறது

*தரம் 6–11 வரையான வகுப்புகள் நடைபெறுகின்றன .
'தென்மராட்சி மாணவர்களின் கலங்கரை விளக்கம்' – பிறைற்றின்
*மாதாந்தப் பரீட்சைகள்
*கணித, விஞ்ஞான வகுப்புக்கள் வாரத்தில் 8 மணித்தியாலம்
*அச்சடித்த பாடக்குறிப்புக்கள் வழங்கப்படும்

(C/037) – அனுமதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

நிர்வாகி

---

வலம்புரியின் பணி பல்லாண்டு காலம் தொடர வாழ்த்துகிறோம்



## கிருஸ்ணா தொலைத் தொடர்பகம்



எமது சேவைகள்:
Local, IDD, Internet Call, Kit Card, Mobital Card

யாழ் ⇄ கொழும்பு குளிரூட்டப்பட்ட பஸ் சேவைகள் பதிவுகள் என்பவற்றுடன் வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய கதிரைகளையும் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
T.P: 021-222 5890
060-221 3154
077-3086784

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005

# சித்த மருத்துவ நோக்கில் சித்தாந்த அளவைகள்

கலாநிதி பொன்.இராமநாதன்
சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்



அளவையென்று கூறுமிடத்துப் பொருட்களின் மிக நுட்பமான அறிவு எனலாம். இதனைப் பிரமாணம் எனவும் கூறுவர். கண்ணால் காணும் பொருட்களை அளத்தற்கு நீட்டல், நிறுத்தல், முகத்தல் எண்ணல் போன்ற அளவைகள் இருப்பது போல்காண முடியாத ஆன்மா இறைவன் போன்றவற்றை நிருபிப்பதற்கு ஓர் அளவு நூலாக பயன்படுவது அளவை எனலாம்.

இவை சித்த தத்துவங்களை ஆராய்ந்து அறிவதற்கும் சித்த மருத்துவ நோய் கணிப்பு முறைகளை அறிவதற்கும் அளவைகளாகவும் உதவுகின்றன.



நவீன விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளை ஆய்வு கூடத்தில் ஆய்ந்து உண்மையை அறியலாம். ஆனால் சித்த தத்துவங்களை ஆய்வதற்கு எம்மையே ஓர் ஆய்வுகூடமாகக் கொண்டு ஆய்தல் சிறந்த வழியெனலாம். இவ்வாறு சித்த மருத்துவக் கருத்துகளை ஆய்ந்து நிரூபிப்பதற்கும் இவ் அளவைகள் பயன்படுத்தப் படுகின்றன. சித்த மருத்துவக் கருத்துக்களை அவ்வாறு ஆராய்ந்து நிரூபிக்குமிடத்து சித்த மருத்துவம் வளர்ச்சி அடைகின்றது எனலாம். இதற்கு அளவை பற்றிய அறிவு சித்த மருத்துவ மாணவர்கள் பெற்றிருத்தல் மிக அவசியமாகும்.

பண்டைய சித்தர்கள் அருளிச் செய்த நூல்களில் அளவை பற்றிய கருத்துக்களை மறைமுகமாக குறிப்பிட்டிருப்பதை நாம் அறிவோம்.

அளவை பற்றிச் சிவஞான சித்தியாரில்,

"அளவை காண்டல் கருதல் உரை
அபாவம் பொருள் ஒப்பு ஆறு என்பர்
அளவை மேலும் ஒழிபு உண்மை
ஐதீகத் தோடு இயல்பு என நான்கு
அளவை காண்பர், அவையீற்றின்
மேலும் அறைவர் அவை எல்லாம்
அளவை காண்டல் கருதல் உரை
என் இம்மூன்றில் இடங்கிடுமே."
(சித்தியார் பாடல் 14)

இதேபோல் தொல்காப்பியனார் தமது நூலில் ஆகம அளவையையும், சீத்தலைச்சாத்தனார் "மணிமேகலையில்" அளவைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளமையும் பரிமேலழகர் தனது உரையில் அளவைகள் பற்றி குறிப்பிட்டுள்ளமையும் பரிமேலழகர் தனது உரையில் அளவைகள் பற்றி குறிப்பிட்டுள்ளமையும் அளவையின் தொன்மையை எடுத்துக் காட்டுகின்றன.

"காண்டல் கருதல் உவமம் ஆகமம்,
ஆண்டய அருத்தாபத்தி யோடு இயல்பு
ஐதீகம், அபாவம், மீட்சி ஒளிவு அறிவு
எய்து உண்டாநெறி என்றிவை தம்மால்
பொருளின் உண்மைபுலன் கொளல்வேண்டும்
மருளில் காட்சி ஐவகையாகும்"
(மணிமேகலை)

சிவஞான சித்தியாரில் அளவைகள் மூன்று என்றும், ஆறு என்றும் பத்தொன்பது என்றும் கூறப்பட்டுள்ளது. முதல் மூன்று அளவைகளிலும் மற்ற ஏழும் அடங்கும் எனலாம்.

**அளவைகள் பத்து**

01. காட்சி- Perception
   - அ) இந்தியக் காட்சி
   - ஆ) மானதக் காட்சி
   - இ) யோகக் காட்சி
   - ஈ) தன் வேதனைக் காட்சி
02. கருதல் - Inference
   - அ) உடன் நிகழ்வு (Inference by co-existence)
   - ஆ) பயன்-(Inference by effect)
   - இ) முதல்நிலை-(Inference by cause)
03. உரை/மேற்கோள்-Authority
04. ஒப்பு/ஒப்புமை -Comparison
05. பொருள்/அவாய்நிலை-Implication
06. இயல்பு-Propriety
07. ஐதீகம்/உலகுரை -Tradition
08. அபாவம் -Impossibility
09. ஒழிபு/மீட்சி -Exoeption
10. உண்மை/தொடர்பியய்வு-Association

மேற்கூறிய அளவைகள் பற்றிய விளக்கத்தையும், அவை சித்த மருத்துவத்தில் பிணியறி முறையிலும் நோய் தீர்க்கும் முறையிலும் எவ்வாறு உதவுகின்றன என்பதைக் கவனிப்போம்.

**01காட்சி-PERCEPTION**

இதனை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

அ) இந்திரியக் காட்சி

இதனைப் புலனறிவு எனவும் கூறலாம், ஐம்புலன்களாலும் உணரப்படுவது

1) கண்ணால் பார்த்தல்
2) செவியால் கேட்டல்
3) மூக்கால் முகர்தல்
4) நாவால் சுவைத்தல்
5) மெய்யால் ஊறு உணர்வறிதல்

சித்த மருத்துவத்தில் பிணியறி முறைமை என்ற அடிப்படைத் தத்துவத்தில் கூறப்படும் எண் வகைத் தேர்வு இந் திரியக் காட்சியில் அடங்கும்.

**எண்வகைத் தேர்வு**

1) நா 2) நிறம் 3) மொழி 4) விழி
5) ஸ்பரிசம் 6) மலம் 7) மூத்திரம் (சிறுநீர்) 8) நாடி

நோயாளியைப் பரிசோதித்துக் குறிப்பேடு எழுதும் போது ஐம்பொறி / புலன் இயல்பு நிலையிலுள்ளதா அல்லது மாறுபாடைந்துள்ளதா என்பது பற்றி குறிப்பிடுவதையும் இந்திரியக் காட்சியில் அடக்கலாம். (ஐம் பொறி-மெய்,வாய், கண், மூக்கு, செவி)

நவீன மருத்துவத்தில் நோயாளியைப் பரீட்சிக்கும் முறைபற்றி கூறுகையில் கீழ் கண்டவாறு வகுத்துள்ளனர்.


1) Inspection -கண்ணால் பார்த்து அறிதல் (தரிசனம்)
2) Palpation -தொட்டு உணர்தல் (ஸ்பரிசம்)
3) Percussion -தட்டிப்பார்த்தல்
4) Auscultation- கருவிகள் மூலம் அறிதல்.
(உதாரணம்- Stethoscope)

நோயாளியை பரிசோதிக்கும் போது நேரே உற்று நோக்கல் (Inspection) கண்கள் மூலமாகவும் நாடித்துடிப்பை பரிசத்தினாலும் (Palpation) இருதயத் துடிப்பை செவிப் புலனாலும் உணரமுடிகின்றது. பொதுவாகச் சிறந்தமருத்துவர் ஒரு நோயாளியை நேரே பார்க்கும் போது அவனது நோயை நிதானிக்கும் வல்லமையுடையவராகத் திகழ்கின்றார். இவ்வாறு கண்டுகேட்டு உணரும் தன்மைகளை காட்சியில் அடக்கலாம்.

***ஆ) மானதக் காட்சி***

மனமானது அந்தக் கரணங்களைப் பற்றி நின்று (மனம், புத்தி, சித்தம், அகங்காரம்) அவற்றின் மூலம் விடயங்களையறிதல் கண்களால் கண்டவற்றை மனதில் உள்வாங்கிக்கொள்ளுதல், முன்னர் நாம் கண்டவற்றை மனதில் வைத்து சிந்தித்து செயலாற்றல், ஒரு நோயாளியை பார்க்கும் போது அதனை மனதில் வைத்திருந்து அதனைப் ''தய வைத்து வேறு ஒரு நோயாளியை பார்க்கும் போது மாற்றமின்றி இருப்பின் அதனை இலகுவில் அறிந்து கொள்ளுதல் இது ஒரு சிறந்த மருத்துவரின் இலட்சணமாகும்.

***இ) யோகக் காட்சி***



யோக சக்தியால் அறிந்துகொள்ளுதல் யோகக்காட்சியாகும். சில யோகிகள் தங்களை நாடி வருபவர்கள் என்ன நோக்கத்துடன் வருகிறார்கள் என்பதனை ஞானசக்தியால் உணர்ந்து கொள்வார்கள். இதற்கு உதாரணமாக யாழ்ப்பாணத்து யோக சுவாமிகளை குறிப்பிடலாம். பழைய சில சித்த வைத்தியர்கள் பார்த்தவுடனேயே தங்கள் யோக சக்தியால் நோயைக் கணித்து மருத்துவம் செய்கின்ற வல்லமையுடையவர்களாக திகழ்ந்தனர். இதற்கு உதாரணமாக கொக்குவில் சித்த வைத்தியர் நடராசா முனி வரைக் கூறலாம். இதனை விட இணுவிலைச் சேர்ந்த செல்லப்பா வைத்தியர் நோயாளியின் கைநாடி பார்த்து காலைஎன்ன சாப்பிட்டு வந்துள்ளார் என்பதனை கூறுவார் என்றும் அப்பகுதி மக்கள் மூலம் அறியக்கிடக்கின்றது. இத்தகைய சித்துக் களையோகக் காட்சியில் அடக்கலாம். இத் தகைய சித்துக்களை அடைவதற்கு வைத் தியர்கள் இயமம், நியமம் ஆகிய அட்டாங்கயோகங் களை அனுசரித்து வரவேண்டியது முக்கியமாகும்.

***ஈ) தன் வேதனைக் காட்சி***

புத்திதத்துவத்தின் ஊடாக ஒருவன் தனது இன்ப துன்பங்களையும் அதற்கான காரணங்களையும் ஆராய்ந்து அறிந்து 36 தத்துவங்களையும் பகுத்து ஆராய்ந்து அறியும் அறிவே தன் வேதனைக் காட்சியாகும்.

நவீன ஆய்வுகள் மூலம் நோய்கள் வருவதற்கும், வந்த நோய்கள் தீவிரமடைவதற்கும் மானசீகக் காரணங்களே



முக்கிய இடம் பெறுகின்றன. பொதுவாக தீராத தலைவலி(Severe Headache) வயிற்றுப் புண்(Gastric ulcer) (ஒரு வகைக் குன்மம்), ஈளை (இரைப்பு) நோய் (Bronchial Asthma), அதிகுருதி அமுக்கம் (Hypertension) போன்ற நோய்களால் அவதியுறுவோரில் பெரும்பாலானோர் மனக்கவலை, மனச் சோர்வினால் பாதிக்கப்பட்டவர்களே. இதய நோய் கூட (Heart Disease) மனோ விவகாரங்களால் ஏற்படுகின்றது. இவை போன்றவற்றுக்கும் உளச்சிகிச்சைமூலம் உடல்நோய்களை நீக்கலாம். இவ்வாறான செயல் முறைகள் யாவும் இவ்வளவையில் அடங்கும்.

காட்சியில் ஒன்றை மற்றொன்றாக தவறாக அறிதல் திரிபுக் காட்சியாகும். உடம்பில் ஏற்படும் வீக்கம் (Oedema), இதய நோய்(Heart Disease), வெளுப்பு நோய்(Anaemia), கல்லீரல் நோய் (Liver disease), சிறுநீரக நோய் (Renal Disease போன்ற நோய்க் காரணங்களாலும் ஏற்படலாம். ஆனால் பிணி அறிமுறையை சரியாக கவனிக்காத விடத்து அது திரிபுக் காட்சியாகவும் அமையலாம்.

***02 கருதல் (INFERENCE)***

கண்ணால் கண்ட பொருளைக் கொண்டு காணாத ஒன்றை அறிய உதவும் உள உணர்வு முறையாகும். முன்பு அறிந்த அனுபவத்தின் துணையைக் கொண்டு நாம் காண்பதிலிருந்து பெறும் அறிவு. இதனை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

***அ) உடன்நிகழ்வு (INFERENCE BY CO-EXISTENCE)***

உதாரணம்-யானை காட்டில் பிளிரும் சத்தத்தைக் கேட்டு யானையைக் கண்ணால் காணாமலே யானை நிற்கின்றது என்பதனை அறிதல்.

***ஆ) பயன் (INFERENCE BY EFFECT)***

உதாரணம்- மழை நீர் வெள்ள மாக இருப்பதைக்கண்டு மழை பெய்வதைகாணாமலேயே மழைபெய்துள்ளது என அறிதல்.

***இ) முதல் நிலை (INFERENCE BY CAUSE)***

உதாரணம்-கருமேகத்தைக் கண்டு

(...[illegible] ஆம் பக்க தொடர்ச்சி)

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005



சிறுகதை

# யாத்திரை

பார்வதியம்மா வீட்டைப் பூட்டி திறப்பை கையில் எடுத்துக்கொண்டாள். வீரமகாகாளி அம்மன் கோயில் மணியின் ஓசை பலமாக காதுகளில் ஒலித்தன.

"அம்மாள் ஆச்சி! நல்ல சகுனம் தாயே... இண்டைக்காவது எனக்கு நல்ல வழியைக் காட்டம்மா! இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி வணங்கினாள். அவளை அறியாமல் இரு சொட்டுக் கண்ணீர் துளிகள் கன்னக் கதுப்புக்களில் உருண்டன. பின்னே இருக்காதா என்ன

ஐந்து வருடங்களாக திரிகின்றாளே. நிரப்பாத பத்திரங்களில்லை! கண்டு கதைக்காத அதிகாரிகள் இல்லை! அதிகாரிகள் என்ற பெயரில் நாடகமாடும் அரக்கர்கள் எத்தனை பேர்கள்! எல்லாமே பயனற்றுப்போன வேளைகளில் இதைப்போல எத்தனை தரம் கண்ணீர் விட்டழுதிருக்கின்றாள்.

"இப்படிக் கண்ணீரும் கம்பலையுமாய் என்னுடைய சீவியம் அமைந்துவிட்டதே!" தன்னுள் அரற்றிக் கொண்ட பார்வதியம்மா, ஒரு இடத்தில் இருந்து ஒரு பாட்டம் அழ வேண்டும் என்ற இறுகியமன ஓட்டம் எழுந்ததை தடுக்க முடியாமல் ஒருகணம் தவித்தாள். நடையில் சிறிது தள்ளாட்டத்தை உணர்ந்தாள்.

இப்பவே நேரமாய் போச்சு... அங்கை சனம் குவிஞ்சிடும்... கடவுளே இண்டைக்கெண்டாலும் அவன்கள் மனமிறங்கி உள்ளுக்கை என்னை விடவேணும்...! மனதுக்குள் ஆண்டவனை வேண்டிக்கொண்டாள்.

அது ஒரு பெரிய இராணுவ முகாம். அலுவலக கட்டடங்கள் இருநூறு யார்களுக்கு அப்பால் தள்ளி அமைந்திருந்தன. நுழை வாசலில் ஒரே சனக்கூட்டம். பனை மரங்கள், வெறும் மண்எண்ணை பீப்பா தகரங்கள் இவை யாவும் தடுப்பரண்களாய் நிற்க - ஒவ்வொரு ஆட்களாக இராணுவ வீரர்கள் உள்ளே அனுப்பிக்கொண்டிருந்தனர்.

தடுப்புக்கு அப்பால் சென்றாலே பெரிய விமோசனம் தான்.

"நல்ல காலம்! இண்டைக்கு வேளைக்கு வந்தபடியால்முன்னுக்கு நிற்கமுடிகிறது...!"

தனக்குள் கூறிக்கொண்டாள். பக்கத்து வளவில் பெரிய மாதா கோயில். அந்த வளாகத்தில் ஒரு சிறிய பாடசாலை. சிறுவர், சிறுமியரின் குரல்கள் பலமாக காற்றில் ஒலித்தன. பார்வதியம்மா கூர்ந்து கவனித்தாள்.

என்ரை பேத்தியும் இப்படித்தானே சத்தம் போடுவாள்... தனது பேத்தியின் நினைவு வந்ததும் மனம் கலங்கியது. "அவளுக்கு வயது ஏழாகிவிட்டிருக்கும்...." "ஒரு படம் அனுப்பச் சொல்லி எத்தனை கடிதம் போட்டிருப்பன்? இந்தப் பிள்ளை இப்படி சோம்பேறித்தனமாகி விட்டாளே! அட மகள் தான் அப்படி எண்டால் இந்த வந்த மருமகனும் தோதாய் அமைஞ்சு போனானே!" நான் தான் மனங்கேளாமல் ஒவ்வொரு கிழமையும் காயுதம் எழுதுகிறன். அவை கனடாவில் இருந்து ஆடிக்கொருக்கா ஆவணிக்கொருக்கா ஒரு காகிதம்... அதுவும் இரண்டு வரியோடு சரி... என்ர பிள்ளையள்... அவளுக்கு சலிப்பாய் இருந்தது. சனங்களை ஒரு ஒழுங்காக அழைத்து விசாரித்து உள்ளே அனுப்புவதில் கூட ஒரு அசமந்தப் போக்கு அங்கு நிலவியது. எல்லாமே அரைகுறை வேலைகள் தான். அதிகாரிகளுக்கு சனங்களுக்கு உதவுவதைவிட அவர்களை ஓட ஓட விரட்டுவதில் ஆவல் ஓங்கி நின்றது. யாரிடம் சொல்லி அழுவது! "ஏய் இங்கு வா!" யாராய் இருந்தாலும் இந்தக் கட்டளைத் தொனியில் தான் எல்லா அழைப்புகளும் இருந்தன.

வெய்யில் ஏறிக் கொண்டே வந்தது. பார்வதியம்மா நிற்கின்ற இடத்தில் வெய்யில் அதிகமாய் இருந்தது. பரிசோதிக்கும் இடத்தில் அலுவலர்கள் நிற்பதற்கு வசதியாக தகரக் கொட்டகை நீட்டுக்குப் போடப்பட்டிருந்தது.

பலாலி விமானத் தளத்துக்குச் செல்பவர்களை ஏற்றிக்கொண்டு பஸ்வண்டி ஒன்று வந்து நின்று அந்த இடத்திலேயே மிகச் சிரமப்பட்டு திரும்பி நிற்கும் சமயம், ஏற்கனவே குவிந்திருந்த சனக் கூட்டத்தில் ஒரு தடுமாற்றம்! முன்னுக்கு நின்றவை பின்னுக்கு நின்றவை முன்னுக்குமாக தடுமாறின போது இராணுவ வீரர்கள் சிங்களத்தில் வசைபாடினர்.

ஆனால் சனம் அதைப்பற்றி கவலைப்படவில்லை. அந்த வீரன் திட்டியது எல்லாமே கெட்ட வார்த்தைகளில் தான்.

ஆனால் ஒருவருக்கும் ஒன்றுமே உறைக்கவில்லை. அவரவர் கவலை அவரவருக்கு. ஒன்றுமே உறைக்காமல் மனம் யாவருக்கும் இறுகப்போய் விட்டன. நல்ல காலம் பார்வதியம்மா சலனப்படாமல் ஒரு மாதிரி சமாளித்து விட்டாள். வாழ்க்கையில் தனக்கு வந்த சோதனை போல் யாருக்கும் வரக்கூடாது என்று பார்வதியம்மா அடிக்கடி கூறிக்கொள்ளுவாள்.

"அவன் விடுகிற நேரம் விடட்டும்" பக்கத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மண் எண்ணை தகரத்தின் மேல் தனது கைப்பையை வைத்துவிட்டு சாய்ந்து நின்றுகொண்டாள். கடைசியில் தகரம் தான் ஆதாரம்... இதை எண்ணும் போது மனம் சலித்தது.

யாழ்ப்பாணத்து சாதாரண குடும்பத்தில் மூத்த பெண் பிள்ளையாய் பார்வதியம்மா பிறந்த போது தகப்பன் அப்பாத்துரை மகிழ்ச்சி தாங்காமல் ஊருக்கே விருந்து வைத்ததாக பார்வதியம்மாவின் தாய் வியாளாட்சி கூறும் போது, வயது வந்த பின் அதை



நினைத்து பல நாட்கள் கேலியாக பார்வதியம்மா சிரித்ததுண்டு. அடுத்தடுத்து ஆறு பெண் பிள்ளைகள் பிறந்தபோது அப்பாத்துரை துவண்டு போனார்.

சாதாரண சுருட்டுத் தொழிலாளியாக வேலை செய்த அக் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடிய போதும் பிள்ளைகள் எல்லோரும் தங்கத்தாம்பாள மாதிரி தோற்றமளித்தனர்.

அந்தக் காலத்தில் கச்சேரியில் வேலை பார்த்த வேலாயுதம், நல்லூர் திருவிழாவின் போது அகஸ்மாஸ்தாக பார்வதியம்மாவைக் கண்டபோது தன்னையறியாமல் காதல் வசப்பட்டான். ஆள்கெட்டிக்காரன். தனக்குத் தெரிஞ்ச ஆட்கள் மூலம் விசாரித்து பார்வதியம்மாவின் வீட்டைக் கண்டுபிடித்து தன் பெற்றோர் மூலம் அப்பாத்துரை குடும்பத்தினருடன் பேசிக் கலந்து பார்வதியம்மாவை கைப்பிடித்த கதைவெகு சுவாரசியமானது.

"என்னட்டை இந்த மூன்று பரப்புக் காணியைத்தவிர வேறை சீதனம் ஒண்டுமில்லை..." அப்பாத்துரை இழுத்தடித்தபொழுது எங்கடை மகன் இந்தப் பெட்டையை விரும்பிப் போட்டான். ஆனபடியால் சீதனம் எண்டு சொல்லி நாங்கள் இந்தக் கலியாணத்தை குழப்ப விரும்பவில்லை...

"நீங்கள் ஓமெண்டால் சரி..." வேலாயுதத்தின் பெற்றோர் நின்ற நிலையைக் கண்டு அப்பாத்துரையால் ஒன்றுமே மறுப்புக்கூறமுடியவில்லை. பார்வதியம்மா ஒன்றுமே பேசவில்லை.

தனது பெற்றோரின் நிலை அவளுக்கு நன்கு தெரியும். தனது விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்டவோ அதற்கு ஏற்ற பரிகாரங்களைத் தேடவோ உகந்த ஒரு சூழ்நிலையில் அவள் இல்லை. அன்றாடம் தினசரி வாழ்க்கையை ஓட்டுவதற்கே பெற்றோர் பட்டபாடு குடும்பத்தின் மூத்த பிள்ளையான அவள் நிலைமையை நன்கு தெரிந்து வைத்திருந்தாள். மிக எளிமையாக அவளின் கல்யாணம் நடந்து முடிந்தது.

இரண்டு வருட வாழ்க்கை எப்படி ஓடியது என்றே கணக்கு பார்க்க முடியாத இரண்டும் கெட்டான் வயது. அவளுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. சுவர்ணா என்று அழகான பெயர் சூட்டப்பட்டது. குழந்தையும் அழகாக இருந்தாள். ஒருமுறை கொழும்புக்குச் சென்ற வேலாயுதம் யாழ்ப்பாணம் திரும்பி வரும் போது ரயில் வண்டியில் பிரயாணம் செய்கின்ற பொழுதே மாரடைப்பினால் இறந்துபோனான்.

காங்கேசன் துறையில் ரயில்வண்டி நிறுத்தப்பட்ட போது இறங்காமலே தூக்கத்தில் ஆழ்ந்திருப்பது போல இருந்த வேலாயுதத்தின் உடலை ரயில்வே தொழிலாளி தொட்ட பொழுது தான் அவன் இறந்ததைக் கண்டுபிடித்தனர். பார்வதியம்மா திக்குத்திசை தெரியாமல்தவித்த போது குழந்தை சுவர்ணா தான் அவளின் துயர் துடைத்த சக்தியாய் நின்றாள்.

குழந்தைக்கு வயது இரண்டு.

அப்பாத்துரையும் மனைவியும் மூலைக்கொருவராய் அமர்ந்து அழத்தான் முடிந்தது. "பெட்டைக்கு உதயச் செவ்வாய்...! பெடியன் பாவம்... சாதகம் பார்க்காமல் செய்தால் இப்படித்தான்..."

ஊர் ஆக்களின் வக்கணைக் கதைகளால் குடும்பமே கூனிக் குறுகியது. கட்டிய கணவனோடு இரண்டு ஆண்டுகள்மட்டும் வாழ்ந்து ஒரு குழந்தையும் கையுமாக நின்ற பார்வதியம்மா வேலாயுதத்தின் பெற்றோரோடு ஒரேயடியாய் சென்று குடியேறிவிட்டாள். எத்தனையோ பேர் என்னென்ன கூறினாலும் அவற்றையெல்லாம் அவள் தன் காதுகளில் போட்டுக்கொள்ள வேயில்லை. "நான் வாழுவேன்... என்ர பிள்ளையை படிப்பித்து ஆளாக்குவேன்..." அவள் மனம் திடசங்கற்பம் பூண்டது.

வேலாயுதத்தின் பெற்றோரும் தங்கள் மகன் ஆசையோடு விரும்பிக் கைப்பிடித்த மருமகளையும் பேரப்பிள்ளையையும் தங்கள் கைகளை நீட்டி அவர்களைத் தாங்கிக் கொண்டனர்.

"என்ன செய்வது? என்ரை பிள்ளை கொடுத்து வைக்காதவன். போய் விட்டான்... மருமகளும் எங்கடை பிள்ளை மாதிரித்தானே... பேரப்பிள்ளை யார்...? என்னுடைய இரத்தத்தின் இரத்தம் தானே... கூழோ கஞ்சியோ... அதுகள் எங்களோடையே இருக்கட்டும்...! அது நாங்கள் பார்த்துக் கொள்ளுவோம்...!

அவர்களது ஸ்திரமான பேச்சு வக்கணை பேசியவர்களது வாய்களை அடைத்தது.

வேலாயுதத்தின் பெற்றோர்கள் கட்டிய வீடு கொஞ்சம் பெரிய வீடுதான். நாலு அறைகள், குசினி-ஹோல்- முன் விறாந்தை என இரண்டு குடும்பங்கள் மிகத் தாராளமாய் வசிக்கக் கூடிய இடமாக அமைந்திருந்தது. மொத்தம் ஆறு பரப்புக் காணி. வேம்பு, மா, பலா, தென்னை என்று கணிசமான பிரயோசனங்கள் நிறைந்த காணி. சுவர்ணாவுக்கு நாலு வயது நிரம்பிடிக்கத் தொடங்க வேலாயுதத்தின் பெற்றோர்கள் ஒவ்வொருத்தராய் இறந்து போனார்கள்.

பார்வதியம்மாதான் ஆடிப்போனாள். கணவன் இறந்தான். தன் மாமனார் மாமி இருவரும் தான் தனக்கு ஆதாரம் என்று அவர்களையே மலைபோல் நம்பி இருந்தவளாயிற்றே! எங்களுக்கு மகள் பிறக்கவில்லையம்மா வேலாயுதம் மகன் தான்... ஆனால் அவன் போனபின் நீதான் பார்வதி எங்கடை மகனும் மகளும் போலை இருக்கிறாய்...!அவளின் மாமனார் ஒருநாள் நாத்தளு தளுக்கக் கூறியபோது பார்வதியம்மா வெகு உணர்ச்சி வசப்பட்டாள். பார்வதியம்மாவுக்கு இப்பொழுதெல்லாம் ஒரு தயக்கமில்லாத மனப்பக்குவம் வந்துவிட்டது போல் தனக்குள் உணரத் தலைப்பட்டாள் பிற உலகம் சரி வரப் புரியாமல் நின்று முழித்த அவள் மெல்லமெல்ல தனது நிலையை உணர ஆரம்பித்து விட்டாள்.

தன் தாய், தகப்பன், சகோதரிகள் என்ற முதல் வட்டத்தில் இருந்து விடுபட்டு தன் கணவன் தனது மாமன், மாமி என்ற வட்டத்துக்குள் புகுந்து இப்பொழுது தானும் தனது மகள் சுவர்ணாவும் உள்ள ஒரு மிகச் சிறிய வட்டத்துக்குள் வந்துவிட்டதை உணர்ந்தாள். கணவரது பெயரால் வரும் மிகச் சிறிய ஓய்வூதியம்.

பத்து வருடங்களுக்குட்பட்ட சேவையை மட்டும் கொண்டிருந்த வேலாயுதம் இறந்த பின் விதவைகள் அனாதைகள் பென்சன் திட்டத்தின் கீழ் அவளுக்கு மிகச் சிறிய தொகையே பென்சனாகக் கிடைத்தது. கணவனின் பெயரைச் சொல்லி அச் சிறுதொகையையும் மாதாமாதம் தபால் அலுவலகத்தில் அவள் பெறும் போது அவளையறியாமல் இரு சொட்டுக் கண்ணீர் உதிரும்.

வேலாயுதத்தோடு வாழ்ந்ததின் அடையாளம் மகள் சுவர்ணாவும் இந்த சிறு பென்சன் தொகையும் தான். தாயும் மகளும் அடங்கிய சிறு குடும்பம். அவர்கள இருவரின் செலவுகளுக்கு இத்தொகை போதாது. ஆனால் அதைப் பெரும் நிதிபோல பார்வதியம்மா மதித்தாள்.

ஆறுபரப்புக் காணியிலும் உள்ள மா, வேம்பு, பலா மரங்களிலிருந்து கொட்டிடும் பழுத்த இலைகள் வளவு நிறைந்திருக்கும். தினமும் நல்லூர் முருகனின் மணியும், வீரமகாகாளி அம்மாள் கோவில் மணியும் சேர்ந்து ஊரையே நித்திரைவிட்டெழுப்பி விடும்.

அதிகாலை பார்வதியம்மாவும் எழும்பி தன் காலைக் காரியங்களை முடித்துக் கொண்டு நெற்றி நிறைய வீபூதிப் பூச்சுடன் அடுக்களைக்குள்புகுந்து விடுவாள். தினமும் நூறு இடியப்பம் அவித்து பெட்டியில் போட்டு வைத்துவிடுவாள்.

அவளின் சிறிய தகப்பன் முறையான முருகேசு ஒரு சிறிய தேநீர் கடை பட்டினத்தில் நடாத்திக்கொண்டிருந்தார். அவரின் கடைக்குத்தான் இடியப்பம்.

ஏழு மணிக்கு முன் முருகேசு சயிக்கிளில் வந்து முதல் நாளுக்கான இடியப்பக் காசை அவளிடம் கொடுத்துவிட்டு உடன் அவித்த இடியப்பங்களை கொண்டு போவார்.

அந்தப் பணத்தில் அவள் ஒரு சல்லிக் காசும் எடுக்கமாட்டாள். சுவர்ணா உயர் படிப்புப் படிக்கவேணும். அவளுக்குத்தான் இந்தக்காசு...! தனக்குள் சொல்லிக் கொள்ளுவாள்.

எட்டு மணிக்கு முன் வளவுக் குப்பை எல்லாம் கூட்டி அள்ளி வளவு மூலையில் அமைந்துள்ள பெரிய கூட்டுக்குள் கொட்டிக் குவித்து விடுவாள்.

இவள் வீட்டுக் குப்பையை விலைக்கு வேண்டி தனது வயலுக்குக் கொட்ட பக்கத்து வீட்டு ஆறுமுகம் மாஸ்ரர் எப்பவுமே காத்திருப்பார்.

குப்பை விற்பதில் வருடம் தோறும் கணிசமான பணம் பார்வதியம்மாவிற்கு சேரும். மாங்காய், தேங்காய், பலாக்காய், எலுமிச்சை என்னும் கணிசமான வருமானம் வேறு. வளவில் இருபது தென்னை மரங்கள், ஒரு சின்னப் பசுவும் கன்றும் வேண்டிக் கட்டியிருந்தான். தாய்க்கும் மகளுக்கும் பால் தாராளமாகக் கிடைத்தது. மாட்டெரு, குப்பை விற்கும் பணம் மற்றும் மரங்களால் கிடைக்கும் வருமானம் எல்லாவற்றையும் மிகவும் பத்திரமாக சேமிப்பாள் பார்வதியம்மா.

எப்பொழுதும் அவளது சிந்தனை மகள் சுவர்ணாவை பற்றியதாகவே இருக்கும்.

மாதத்தில் ஒரு நாள் மகளையும் அழைத்துக்கொண்டு தன் தாய் வீட்டுக்குப் போவாள். கந்தர்மடத்தில் இருந்து கொக்குவிலுக்கு பொடி நடையாகவே செல்வாள். ரயில் பாதை வழியே நடந்து சென்றால் விரைவாக போய் விரைவாக திரும்பி விடுவாள். இவர்களைக் கண்டவுன் முழுக் குடும்பமே ஓடி வந்து கட்டிக்கொள்ளும்.

இதற்குள் அப்பாத்துரைக்கு பக்கவாதம் வந்து அவர் படுத்தபடுக்கையாகிவிட்டார். தாய் தங்கம்மா பிள்ளைகளுடன் மிகவும் கஸ்ரப்பட்டாள்.

**து.வைத்திலிங்கம்**

பார்வதியம்மா பண உதவி செய்ய முன்வந்தால் கடைசிவரை மகளிடம் கை நீட்டி வேண்டிக்கொள்ளமாட்டாள் தங்கம்மா. "தங்கச்சி உன்னை நாங்கள் சின்ன வயதிலை கட்டிக்கொடுத்து, நீ புருஷனையும் இழந்து நிக்கிறாய். உன்னுடைய உழைப்பிலை நாங்கள் பங்கு கேட்பது நியாயமில்லை மோனை...

நீயே வச்சிரு அம்மா... எப்படி கெஞ்சிக் கொடுத்தாலும் பார்வதியம்மாவிடம் இருந்து தாய் பணம் பெறவே மாட் டாள். ஆனால் காலப்போக்கில் பார்வதியம்மாவின் தங்கைமார் ஒவ்வொருத்தரும் கடவுள் கிருபையால் கல்யாணம் ஒப்பேறி தனித்தனி குடும்பமாக வாழத் தொடங்கிவிட்டனர். தன்னால் முடிந்தளவு அவர்களது திருமணங்கள் நடந்தபோது பார்வதியம்மா உதவி செய்யத் தவறவில்லை.

சின்னனோ பொன்னனோ அவையவைக்கு ஏற்ற மாதிரி மாப்பிள்ளைமார் அமைஞ்சு போஞ்சுது...! தங்கம்மா சொல்லிக்கொள்வாள் "ஒரு பெண் கல்யாணமாகாமல் வீட்டில் இருந்து பெரு மூச்சு விட்டால் அது பெண்ணைப்பெற்ற வர்களுக்குத் தான் பெரிய பாவம் சேரும். வயது வந்தவுடன் கட்டிக்கொடுக்க தாய் தகப்பன் முயற்சி எடுக்கவேணும்..." பார்வதியம்மாவின் தாய் தங்கம்மா அடிக்கடி கூறுவாள்.

"இனி இஞ்சை எங்களுக்கென்று ஒரு காசும் நீ தரக் கூடாது! உன்ர மகளின்ர விஷயங்களைக் கவனிக்க வேணும்...

25 ஆம் பக்கம் பார்க்க)

சாவுக்கு நாம் கொடுக்கும் விருந்துதான் யுத்தம்

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005

# அறிவியலும் அறவியலும்


கலாநிதி
திருமதி கலைவாணி இராமநாதன்
இந்துநாகரிகத்துறை
யாழ். பல்கலைக்கழகம்



இன்றைய உலகம் அறிவியல் வளர்ச்சியில் துரிதமான முன்னேற்றங்களைக் கண்டுகொண்டிருக்கின்றது. எமது இளைய சந்ததியினர் இந்த அறிவியல் உலகின் சவால்கட்கு முகம் கொடுத்து வாழவேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவே அவர்களை விஞ்ஞானத்தினூடாக மெஞ்ஞான உணர்விற்கு வழி நடத்துவதும், எதிர் காலத்தில் நம்பிக்கையுடன் வாழ்வை அணுகும் தகுதி படைத்தவர்களாக மாற்றுவதும் இன்றைய காலகட்டத்தில் பல்வேறுவிதமான போராட்டங்களிலும் மனிதன் சிக்கித் தவிக்கின்றான். வறுமையுடன் போராட்டம், நோயுடன் போராட்டம், பசியுடன் போராட்டம், வேலையில்லாத் திண்டாட்டம் என மனிதனானவன் தினந்தோறும் அவதிப்பட்டு அல்லற்பட்டுத் துன்பத்தினால் அமைதியிழந்து சோர்வடையும் மனிதனுக்கு முதலாவது இன்றியமையாத தேவை- இறை நம்பிக்கையாகும். "தெய்வத்தை நம்புபவன் தன்னை நம்புவான்", தன்னிடம் நம்பிக்கையற்றவனே நாத்திகனாவான் என்கிறார் சுவாமி விவேகானந்தர். சமயம் இல்லாத விஞ்ஞானம் முடவனுக்குச் சமமானது- விஞ்ஞான்ம் இல்லாத சமயம் குருடனுக்குச் சமமானது என்றார் ஆல்பர்ட் ஈன்ஸ்ரீ என்ற விஞ்ஞானி.

மனிதன் அறிவியல் ரீதியான வாழ்வை அமைத்துக் கொள்ளும் அதே சமயம் "அறிவியல்" முறைமைகளையும் உள்ளபடி விளங்கிக் கொள்வதேயவசியமாகும். இயற்கையிடமிருந்து பௌதீகவியல், இராசனவியல், புவியியல் போன்றவற்றைக்கற்றுக்கொள்ளும் மனிதன் இயற்கையிடமிருந்து அறத்தை, அன்பை, ஒழுக்கத்தைக் கற்றுக்கொள்ளத் தவறுகிறான். அறிவியலைக் கற்றுத் தந்த இயற்கை விஞ்ஞானம் தான் அற ஒழுக்க விஞ்ஞானத்தையும் கற்றுத் தருகின்றது. நிலம் நமக்கு உணவைத் தருகிறது. நதியிடமிருந்து நீரைப் பயன்படுத்துகிறோம். சூரியனிடமிருந்து ஒளியை மரங்களிடமிருந்து கனியை பசுவிடமிருந்து பாலை என சகலவற்றையும் நமக்குப் படைத்து அழித்துக் காப்பாற்றும் இயற்கையை அன்னை எனப் போற்றி பாதுகாத்து வழிபடுவது மத விஞ்ஞானமாகும். இவை எல்லாவற்றையும் நமக்குத் தான் இயற்கை அன்னை வழங்குகின்றதே தவிர மரம் தனது பழத்தை தான் உண்பதில்லை. பசு தனதுபாலைக்தான் குடிப்பதில்லை- நதிகள் தனது நீரைத் தமது தேவைக்குச் சேமிப்பதில்லை. ஆனால் மனிதனோ இயற்கையிடமிருந்து சகல வற்றையும் பெற்றுக் கொண்டபின் அதனைச் சுய நலத்துடன் தனதுடமையாகவும் சொந்தம் கொண்டாடுகிறான். இயற்கையின் தன்னலமற்ற கொடையை அறப்பண்பை அவன் விளங்கிக்கொண்டால் இயற்கை எவ்வாறு பிறர்க்குப் பயன்படுகின்றதோ அவ்வாறே தனது வாழ்வும் பிறருக்குப் பயன்படுமாறு அமையுமாறு வாழ வேண்டும் என்பதை அவன் விளங்கிக் கொண்டவனாவான்.

இவ்வாறாக இயற்கை நம்மீது செலுத்தும் அன்பிற்கு, கொடைக்குப் பதில் நாமென்ன செய்கிறோம்? அதற்குப் பிரதியுபகாரமாக அதனைப் போற்றி பாதுகாக்க முற்படவேண்டும். அதனிடத்து அன்பு செலுத்த வேண்டும். இதுவே இயற்கை வழிபாடாக இந்து தர்மத்தில் ஆதியிலிருந்து பரிணமித்து வந்துள்ளது. மரம், நதி, மண், விலங்கினம் என ஒவ்வொன் றும் வழிபாட்டுக்குரியனவாகப் பேணப்படும் போது அன்பு பகிரப்படுகிறது. இயற்கை பாதுகாக்கப்படுகிறது. சூழல் சுகாதாரமடைகிறது. நல்ல காற்று, நல்ல தண்ணீர், நல்ல விளைநிலம் என ஒவ்வொன்றும் இவ்வழிபடுமுறையால் இயல்பாகவே நன்னிலையடையும் போது அதனைப் பயன்படுத்தும் மனிதனும் நன்மையடைகிறான். நலம் பெறுகிறான். இயற்கைச் சூழல் மாசடைதல் இயல் பாகவே தவிர்க்கப்படுகிறது. இன்றைய உலகத்தில் "சூழல் மாசடைதல்" பெரும் பிரச்சினையாகவே மாறி இயற்கையே மனித வாழ்விற்குச் சவாலாக அமையும் நிலை தோன்றியுள்ளது. இது ஏன் என்பதனைச் சிந்தித்தால் நமது



சமயச் சான்றோர்களும், ஞானிகளும், தீர்க்க தரிசிகளாக விளங்கிய சமய இலக்கிய நூல்களில் எல்லாம் இயற்கையின் அவசியத்தை வலியுறுத்தி வழிபாட்டு முறைகள் மூலமாகவே அதனுடைய சுற்றுச் சூழல் இரகசியமும் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்ததன் யதார்த்தம் புலனாகும்.

"இயற்கை ஒழுங்கு பேணுதல்" என்ற வகையில் வேத நூல்களும் "ரிதம்" என்னும் கோட்பாட்டை பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே வகுத்துக்காட்டின. இயற்கை ஒழுங்கு பே ணப்பட்டால்தான் வாழ்க்கை ஒழுங்கு நிலைக்கும் என்பதனை வருண சூக்தம் பாடல்களும் எடுத்துக்காட்டியுள்ளன. இயற்கை ஒழுங்காக இயங்குவதற்கும் பருவ ஒழுங்குகள் இயற்கை அனர்த்தங்கள் விழாதபடி பே ணவும் மனிதனும் ஒழுங்கு தவறக்கூடாது என்பதனை அவை சுட்டிக்காட்டின. மனிதனுக்குரிய ஒழுக்கம் என்னும் போது தனிமனித ஒழுங்கு, சமூக ஒழுங்கு, அறிவிலேயே ஒழுக்கம், தொழிலிலே ஒழுக்கம் என அது இன்று விஞ்ஞான ரீதியான அளவிலே பெரிதும் சிந்திக்கப்படும் ஒழுக்க நியதிகளாக வளர்ந்து விட்டன. ஆயினும் என்ன 'பகுத்தறிவு ஒன்று போதும் பணமும் இருந்துவிட்டால் வாழ்க்கையில் எல்லாம் கிடைத்துவிடும்' என்ற அளவிற்கு இன்று கல்வி சார் உலகம் கல்வி ஒழுக்கத்திற்கு முதன்மையளிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்ததாகக் கூறுவது கடினமே. இதனை மீளக் கட்டியெழுப்புவதற்கு என்ன வழி உண்டு? என சிந்தித்தால் தெய்வ நம்பிக்கையை இளைய தலைமுறையினரிடம் முதலில் உருவாக்க வேண்டும். ஒழுக்கப் படித்திறனில் எல்லையற்ற துணிவு பிறக்க வேண்டும். இது இரண்டும் இருந்துவிட்டால் நிச்சயம் மனித சமுதாயம் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவது சாத்தியமாகும். அணுகுண்டினால் அச்சமூட்டுவதும், சோதனைக் குழாய்களில் குழந்தை உருவாக்குவதும் கணனியில் வாழ்க்கையை விரைவுபடுத்துவதும் ராக்கெட்டுக்களில் விளையாட்டுக் காட்டுவதும் மட்டும் விஞ்ஞானமல்ல.

மனிதனை மனிதனாக வாழவைப்பதும் அதற்கு வழி சமைத்துக்கொடுக்கும் மதமும் விஞ்ஞானம் தான். மனிதனை அவன் ஆத்மாவை ஆராய்வதும் பிரபஞ்சமெனும் பேருலகில் ஒன்றிணையச் செய்வதும் அதனை அடைவிக்கும் பயிற்சிகளாகிய யோகமும் தியானமும், யாகமும் தியாகமும் கூட சமய விஞ்ஞானம் தான். ஏன் எப்படி எதற்காக என்று விஞ்ஞானம் புற உலகை ஆராய்வதற்கு மைக்ராஸ்கோப், ரெலஸ் கோப் முதலிய கருவிகள் பயன்படுவதுபோல் சமய விஞ்ஞானத்தை விளக்குவதற்கு அன்பும், அறமும், மனித பண்புகளும் உதவுகின்றன. நமக்கு உண்மைகள் இரண்டு வழிகளில் கிடைக்கின்றன. ஒன்று மனிதன் புற உலகை ஆராய்ச்சி செய்வதில் கிடைக்கும் உண்மைகள், மற்றது மனிதனானவன் தன்னைத் தானே உள்நோக்கிச் செய்யும் ஆய்விலே வெளிப்படும் உண்மைகள். நமக்குத் தேவை உண்மை. கடவுள் உண்மையா? இல்லையா? என்ற விவாதத்தை விட்டு "உண்மைதான் கடவுள்" என்ற காந்தி அடிகளின் விளக்கத்தை இங்கு ஏற்கலாம். நமது வேத உபநிடதங்களும் ஆகம இலக்கியங்களும் நம்மை நாம் எவ்வாறு ஆய்வு செய்யலாம். என்பதற்கான பல உபாயங்களைத் தந்திருக்கின்றன.

நமது உள்ளத்தில் சூழ்ந்திருக்கும் காமம், குரோதம், மதம், அவா, வெகுளி,



பேராசை இவை போன்ற இருளை அகற்றினால் அன்பு, சாந்தி, பிரேமை, சத்தியம், கருணை, அறிவு என்கின்ற ஒளி விளக்குப் பிரகாசிக்கும். அந்த ஞான ஒளியிலே வாழ்க்கைப் பாதை அமைதியான ஆன்மீகப் பயணமாக அமையும். சமயம் என்பது வெறும் சடங்குகளோ, தத்துவப் போதனைகளோ ஆசார அனுட்டானங்களோ, அபிஷேக, பூசை, வணக்கங்களோ மட்டுமல்ல-பரம்பொருளைத் தெய்வீகத்தைத் தெளிவாக அனுபவத்துடன் கூடிய ஆன்ம நேயத்தினால் உணர்ந்து அனுபவித்து அறிவதே சமய ஞானமாகும். மனிதனை மனிதனாக்காத மதம் - மனிதனை மனிதனாக்காத தத்துவம் - மனிதனை மனிதனாக்காத கல்வி இவைமனிதனுக்குத் தேவையற்றவை என்ற சுவாமி விவேகானந்தருக்கு சிந்தனை ஏற்புடையதே என்பது வாழ்வியலுக்கு முரண்பட்டதல்ல- முட்டுக்கட்டையானதுமல்ல என்பதனை விளங்கிக்கொள்ளுவதே பூரண ஞானம் என்பதாகும்.

"அன்புவழி சமயம்" அதுவே சமயம் கூறும் வழிபாட்டு முறை ஆகும். சமயம் என்பது (மார்க்கம்) வாழும் நெறி. ஒழுக்கம் சமயவாழ்வின் அத்திவாரம் 'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்பது வள்ளுவர் வாக்கு. சுய நலத்திற்காக எவன் வாழ்கின்றானோ அங்கு சமயம் புறக்கணிக்கப்படுகின்றது. வாழ்வும் வழிபாடும் ஒன்றாக அமையும் போதே சமய ஒழுக்கம் நடைமுறையில் மேம்பாடடைகிறது. இன்றைய நடைமுறை வாழ்விலே ஆலய வழிபாடு முதல் சமயச்சடங்குகள், நோன்புகள், விரதகாலங்கள் யாவும் கோலாகலமான விழாக்களாகக் கொண்டாட்டங்களாக அமர்க்களப்படுத்தப் படுகின்றன. எத்தனை பேரின் உழைப்பு, சேவை, தியானம் இந்தக் கொண்டாட்டங்களிற்குப் பின்னால் இருக்கின்றன என்பதனை நம்மில் எத்தனைபேர் எண்ணிப் பார்க்கின்றோம்? ஆலயப் பிரதம குரு, விழா உபயகாரர், விழாவினை அழகுபடுத்தும் அலங்கார வேலையாட்கள், அபிஷேகங்கட்கு பொருள் வழங்கும் கடைக்காரர்கள், மெல்லிசை கானம் முதலியன வழங்கும் தவில்நாதஸ்வரக்கலைஞர்கள், அருளுரை, வில்லிசை வழங்கும் அடியவர்கள், கோயிலைச் சுத்தம் செய்யும் தொண்டர்கள், வழிபடவரும்

(24 ஆம் பக்கம் பார்க்க)

உடைந்து போகாமலிருக்க வளைந்து கொடுங்கள்

# வலம்புரியின் 6வது ஆண்டு நிறைவு
# ஆவணச் சிறப்பிதழ் – 20.12.2005


வலம்புரியின் சேவை வானளவில் உயரட்டும் என வாழ்த்துகின்றோம்!

சகல விதமான பாடசாலை உபகரணங்கள் மற்றும் அப்பியாசப் புத்தகங்கள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 2573

ஆறாம் ஆண்டைப் பூர்த்தி செய்து ஏழாம் ஆண்டில் கால் பதிக்கும் வலம்புரியே!

மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம்!

**யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(C-அ)



வலம்புரி பல்லாண்டு காலம் வெளிவர வாழ்த்துகின்றோம்!

குறித்த தவணையில் ஓடர் நகைகளை தரமான 22 கரட் தங்க நகைகளில் செய்துதர யாழ்.நகரில் நம்பிக்கையான நகைமாடம்

**மைதிலி நகைமாடம்**

MAITHELY NAGAIMAADAM

89V, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே. 021 222 7902, 077 6092154

புத்தம் புது டிசைன்களில் குறித்த தவணையில் தரமாக செய்து தர

YARL MAITHILY JEWELLERS

யாழ் மைதிலி ஜுவலர்ஸ் Tel: 011 - 2396239, 077 - 6092154

157, Sea Street, Colombo -11

வலம்புரியின் சேவை என்றென்றும் தொடர எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!



**அசோகா நகை அகம்**

ASOKA JEWELLERS

Manufacturers of Gold Jewels

இல:111 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 222 6290

No.111, Kasthuriar Road, Jaffna.

ஆறாவது ஆண்டின் நிறைவிலும் வலம்புரியை கைகோர்த்து வாழ்த்துகின்றோம்!




**லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்**

**குகன் ஸ்ரோர்ஸ்**

பலாலி வீதி, திருநெல்வேலி.

வாடிக்கையாளர்களின் நலன் கருதி எமது ஸ்தாபனம் தினமும் அதிகாலை 4.00 மணி முதல் இரவு 11.00 மணிவரை சேவையை வழங்கிக்கொண்டிருக்கின்றது என்பதையும் எமது வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சகலவிதமான எரிபொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்

**லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்**

பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.


* * *

தரமான பலசரக்குப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள

**குகன் ஸ்ரோர்ஸ்**

இல 180 (380), ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 222 2767, 6935




**KUGAN STORES**

LANKA FILLING STATION
PALALY ROAD,
THIRUNELVELY.
T.P: 021 222 5968

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005

# சிறுநீரகங்களின் தொழிற்பாடும் அவை பழுதடைந்தால் செய்யப்படும் சிகிச்சைகளும்

வைத்திய கலாநிதி
த. பேரானந்தராசா
(பொது வைத்திய நிபுணர்)



எமது நாட்டில் தற்போது கூடிய எண்ணிக்கையில் சிறுநீரக செயலிழப்பு நோய் (Chronic Renal Failure) அதிகரித்து வருகின்றது. சிறுநீரகங்கள் பழுதடைவதற்குபலகாரணங்கள்உண்டு குறிப்பாக நீரிழிவு (Diabetes Mellitus) உயர் குருதி அமுக்கம் (Hyper tension) என்பன முறையாக கட்டுப்படுத்தப்படாமையாலும் மற்றும் சிறுநீரக அழற்சி (Glomerulo nephritis, nephrotic Syndrome) போன்றநோய்களுக்கு முறையான மருத்துவம் செய்யாமல் விடுவதாலும் சிறுநீரகங்களின் தொழிற்பாடு படிப்படியாகச் செய லிழக்கின்றது. அவற்றை ஆரம் பத் தில் கண்டறிந்து நிவிர்த்தி செய்தால் சிறு நீரகங்கள் முற்றாக செயலிழப்பதைத் தடுக்கலாம் அல்லது பிற்போட லாம்.

இக் கட்டுரையில் நாம் பொதுவாக சிறு நீரகங்களின் தொழிற்பாடு அவை பழு தடைவதற்கான காரணங்கள், பழு தடையும் போது ஏற்படும் குணங் குறிகள் குறிப்பிட்ட அளவிற்கு சிறு நீரகங்கள் செயலிழக்கும் போது (Chronic Renal Failure) மற்றும் முற்றாக செயலிழக்கும் போது (End Stage Renal Failure) பயன்படுத்தப்படும் மருந்துகள் உணவுமுறைகள் மற்றும் குருதி சுத்திகரிப்பு முறைகள் என்பன பற்றி சற்று நோக்கு வோம்.

***சிறுநீரகங்களின் தொழிற் பாடும் அதனைப் பாதுகாத்தலும்***

சிறுநீரகம் அவரை விதைவடிவமானது. 8-10cm நீளமும் 4-5cm அகலமும் கொண்டது. இது முதுகின் உட்புறமாகவும் உடலின் கீழ்ப்பக்கமுள்ள விலா என்புகளுக்கு உட்புறமாகவும் அமைந்துள்ளது.

உடலின் பிரதான அங்கங்களுள் ஒன்றான சிறுநீரகங்கள் ஐந்து முக்கிய தொழில்களைப் புரிகின்றன.

1. உடற்கழிவுகளை அகற்றல்
உ+ம் யூரியா, கிரியற்றினின்
2. செங்குருதி சிறுதுணிக்கைகளின் ஆக்கத்திற்கான ஓமோன்கள்ள உற்பத்தி செய்வதன்மூலம் குருதிச்சோகையில் இருந்து (Anaemia) பாதுகாத்தல்.
3. உடலில் உள்ள மேலதிக நீரை அகற்றுதல்.
4. கல்சியம், பொஸ்பேற்று சமநிலையைப் பேணுவதன் மூலம் என்புகளின் உறுதித் தன்மையைப் பேணுதல்.
5. ஓமோன்களின் மூலம் குருதிய முக் கத்தை சீராக்குதல்

உங்கள் சிறுநீரகங்கள் பல்வேறு காரணங்களால் செயல் இழக்கலாம். சிறுநீரகங்களின் தொழிற்பாடு இல்லாமல் உடலில் உருவாகும் கழிவுப்பொருட்களை வெளியேற்ற முடியாது.

**சிறுநீரகங்கள் தொழிற்பாட்டை இழப்பதற்கான காரணங்கள் என பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.**

சிறுநீரக அழற்சி (Nephritis)
நீரிழிவு (Diabetes)
உயர்குருதி அமுக்கம் (Hyper tension)
நீண்டகாலத் தொற்று (Chronic infection)
சிறுநீரகக் கல் (Kidney stone)
நச்சுப்பொருட்கள் (Toxins)
பரம்பரைக் காரணிகள் (Genetics)
மருந்துவகைகள் (Medicines)

**சிறுநீரக செயலிழப்பு இருவகைப்படும்.**

1. Acute Renal Failure (ARF) சடுதியான சிறுநீரகத் தொழிற்பாடு தடைப்படுதல். அனேகமாக மீளக்கூடியது. உ+ம்:- பாம்புக்கடி, செப்டிசீமியா, சடுதியான குருதியிழப்பு, உடலிலிருந்து அதிக நீரிழப்பு, வயிற்றோட்டம் மற்றும் கடுமையான வாந்தி என்பவற்றின் போது.

2. Chronic Renal Failure (CRF) நாட்பட்ட தொடர்ச்சியான மீளமுடியாத சிறுநீரகச் செயலிழப்பு

உ+ம்:- உயர்குருதி அமுக்கம், Diabetes, Chronic nephritis, poly cystic kidneydisease, Drugs (NSAID)


மேலதிக விபரங்களுக்கு வைத்தியரை நாடவும்.

**சிறு நீரகத்தின் தொழிற்பாடு குறைவடைவதைக் காட்டும் அறிகுறிகளாக பின் வரும் அம்சங்களை கூறலாம்.**

★ களைப்பு, சோம்பல்
★ கை, கால், முகம் வீக்கம்
★ சிறுநீருடன் குருதிவெளியேறுதல் அல்லது புரதம் (அல்புமின்) வெளியேறுதல்.
★ பசி குறைதல்
★ வாந்தி
★ ஓங்காளம்
★ நாரி நோ
★ அடிக்கடி சிறுநீர் கழித்தல்

***சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டவர்கள் பின்பற்ற வேண்டிய உணவு முறை***


சிறுநீரகங்கள் நீங்கள் அறிந்தது போல் உடலில் உள்ள நீரின் அளவைப் பேணுதல், கனியுப்புக்களின் அளவைப் பேணுதல், கழிவுகளை அகற்றுதல் முதலிய பல்வேறு தொழிற்பாடுகளை ஆற்றுகின்றன. நீண்ட காலப் பகுதிக்கூடாக சிறுநீரகம் செயலிழக்கின்ற பொழுது இச் செயன்முறை கள் படிப்படியாக பாதிப்படையும். நாம் உண்ணும் உணவுகளை மாற்றி அமைப்பதால் எவ்வாறு சிறுநீரக செயலிழப்பு நோயின் விளைவுகளை குறைக்கலாம் என்பதனை இப் பகுதியில் பார்ப்போம்.



ஒரு சுகதேகி சாதாரணமாக தாம் உண்ணும் உணவில் 50% காபோவைதிரேற்றும், 30% கொழுப்பும், 20% புரதமும் உட்கொள் வார். காபோவைதிரேற்றானது அரிசி, கோதுமை, கிழங்கு, சீனி முதலிய உணவு வகைகளில் கூடுதலாகக் காணப்படுகின்றது. கொழுப்பானது இறைச்சி, எண்ணெய்வகைகள், பால், பட்டர் முதலியவற்றில் காணப்படுகின்றது. புரதமானது மீன், பால், பருப்பு வகைகள், சோயா, இறைச்சி முதலிய உணவு வகைகளில் காணப்படுகின்றது. ஒரு சுகதேகியின் சில உணவு வகைகளில் காணப்படுகிற சில இர்சாயனங்கள் சிறுநீரகத் தால் கழிவாக அகற்றப்படும். எமது இரத் தத்தில் பல வகையான கனியுப்புக்கள் (உ+ம் - சோடியம், பொற்றாசியம்) இருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். அவை அளவுக்கு மிஞ்சினாலோ குறைந்தாலோ ஆபத்து. உணவு மூலம் பெறப்படும் கனியுப்புக்கள் இரத்தத்தில் சரியான அளவுகளில் பேணப்படுவது சிறுநீரகங்களினாலேயாகும். ஆகவே அவை செயலிழப்பின் நாம் நமது உணவுகளை மாற்றியமைப்பதனாலேயே இரத் தத்தில் அவற்றின் அளவை சரியாக பேண முடியும். மற்றும் ஏற்கனவே செயலிழந்து காணப்படுகின்ற சிறுநீரகங்களுக்கு மேலதிக வேலைப் பளுவைக் கொடுப்பின் அவை முற்றாக ஸ்தம்பிதமடையும் அபாயமும் உண்டு. ஆகையால் அவ்வகையான உணவுகளை குறைத்தல் நன்று.

**சக்தி**

எமக்குத் தேவையான சக்தியின் பெரும் பகுதியை காபோவைதிரேற்று உணவுகளிலிருந்தும் கொழுப்பு உணவுகளிலிருந்தும் பெற்றுக்கொள்கிறோம். இவ்வுணவுகளில் ஒரு குறைவு ஏற்பட்டால் மட்டுமே வேறுவழியின்றி புரதம் சக்திக்காக பயன்படுத்தப்படும். சிறுநீரக செயலிழப்பு உள்ளவர் புரத உணவை குறைக்க வேண்டும். ஏனெனில் புரதம் சமிபாடடைந்துமேலும் பல இரசாயன மாற்றங்களுக்கு உள்ளாகிற பொழுது பக்கவிளைவாக யூரியா போன்ற நைதரசன் கழிவுப் பொருட்கள் உருவாகும். இவற்றை அகற்றுவது சிறுநீரகங்களேயாகும். போதிய காபோவைதிரேற்று உணவுகளை உண்ணாத பொழுது சக்திக்காக புரதம் பயன்படுத்தப்படும். சிறுநீரக செயலிழப்பு உள்ளவர் புரத உணவையும் அதிகம் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் உடம்பில் உள்ள தசைகள் முதலியவற்றில் காணப்படும் புரதம் பயன்படுத்தப்படும். இதை தவிர்ப்பதற்கு அதிகளவு காபோவைதிரேற்று உணவை உட்கொள்ள வேண்டும்.



**புரதம்**

சிறுநீரக நோயாளி நாள் ஒன்றுக்கு 0.8g/ kg என்றவகையில் புரத உணவை அவரின் நிறைக்கேற்ப உண்ணலாம். புரதத்தை அளவாக உண்ண வேண்டும் என்று பார்த்தோம். உணவுகளில் புரதம் வெவ்வேறு அளவில் காணப்படுகிறது. உதாரணமாக பால், முட்டை, வெண்கரு முதலியன பெறுமானம் கூடிய உணவு வகைகளாகும். இத்தகைய உணவுகளையே உண்ணல் நன்று. ஒரே வகையான உணவினைத் தொடர்ந்து உள்ளெடுத்தல் கடினமாக இருக்கலாம். ஆதலால் கீழ் கொடுக்கப் பட்ட பட்டியலை மாதிரியாகக் கொண்டு உணவு வகைகளைத் தேர்ந்தெடுக் கலாம்.

| 7g புரதம் உள்ள உணவுகள் | |
|---|---|
| பால் | 200ml |
| பாற்கட்டி | 28g |
| யோக்கட் | 140g |
| சமைத்த இறைச்சி | 28g |
| மீன் | 40g |
| உழுந்து, பயறு, கௌபி | 25g |
| ஈரல் | 28g |

இதில் 7g புரதம் உள்ள உணவை ஒரு நாளிற்கு மூன்று தடவைகள் உண்ணலாம். (7x3)g இரண்டாவது பட்டியலில் சிறிய அளவுகளில் புரதம் உள்ளஉணவுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

| 2g புரதம் உள்ள உணவுகள் | |
|---|---|
| பாண் ஒரு துண்டு | 25g |
| கோதுமை | 15g |
| அரிசி | 25g |
| சோறு | 30g |
| கிறீம் கிறேக்கர் | 1 |
| சப்பாத்தி | 1 |
| பச்சைக் காய்கறிகள் | 75g |
| உருளைக்கிழங்கு | 125g |

ஒரு நாளில் அதில் குறிக்கப்பட்டுள்ள அளவுகளில் நாம் அவற்றை 6 தடவைகள் எடுத்துக்கொள்ள லாம்.

**உப்பு உணவு**

உப்பிலே சோடியம் எனும் கனியுப்பு உள்ளது. ஒரு சுகதேகியின் இரத்தத்தில் இதனது அளவு சிறுநீரகத்தால் கட்டுப்படுத்தப்படும். மிதமான சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்கள் சிறிதளவான உப்பையே தமது உணவில் சேர்க்க வேண்டும். தீவிரமானசிறுநீரகசெயலிழப்பு உள்ளவர்கள் சகலவிதமான உப்பு வகைகளையும் தவிக்கவேண்டும். பட்டர், மாஜரின் என்பவற்றில்கூட உப்பில்லாதவையே பாவிக்க வேண்டும். சோடியம் எனும் கனியுப்பு உடம் பில் அதிகளவு சேர்ந்தால் அது நீரைப் பிடித்து வைத்திருக்கும் இதனால் உடம்பு வீக்க மடையும்.

**பொற்றாசியம்**

இதுவும் சிறுநீரகங்களால் அகற்றப்பட்டு குருதியில் அளவு பேணப்படுகிற கனியுப்பாகும். சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்கள் அனைவரும் இக்கனியுப்பைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டால் மாத்திரமே கட்டுப்படுத்த வேண்டும். இது பழங்களில் அதிகளவு காணப்படுகிறது. பழவற்றல்கள் உ+ம் முந்திரிவற்றல் (பிளம்ஸ்), பழச்சாறுகள், கோப்பி, தேநீர் முதலியவற்றை தவிர்க்க வேண்டும். இக் கனியுப்பு உடலில் அதிகரிப்பின் இதயப் பிரச்சினைக்கு வழி வகுக்கலாம்.

***குறிப்பு:*** காய்கறிகளை அகன்ற பாத்திரத்தில் சமைக்கும் போது இக் கனி யுப்பு ஆவியாகி அகன்றுபோகும். காய்கறிகளை அவித்த நீரிலிருந்து அப்புறப்படுத் துவது நன்று.

**பொசுபரசு**

பொசுபரசு உள்ள உணவு வகைகள் அனேகமாக புரத உணவு வகைகளே. சிறுநீரக நோயாளிகள் புரத உண வினை குறைத்து எடுப்பதால் பொசுபரசு அதிகரிக்க வாய்ப்பில்லை.

**நீர்**

சிறுநீரகங்களால் உடலில் உள்ள நீரின் அளவு கட்டுப்படுத்தப்படுகிறது என்பது யாவரும் அறிந்ததே. அதிகம் நீர் பருகினாலோ அல்லது மழை நாட்களிலோ அதிகளவு சிறுநீர் வெளி யேறுவதை அவதானித்திருப்போம். சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்களிடம் நீர் வெளியேறுவது குறைவடையும். ஆதலால் உடலில் நீர் தேங்கி வீக்கமடைய சந்தர்ப்பம்உண்டு. எனவே நாம் வெளியேறுகின்ற சிறுநீரின் அளவுகளை குறித்து அதற்கேற்ப நீரோ அல்லது நீர் ஆகாரம் (பால், கோப்பி) அருந்தவேண்டும்.

**கொழுப்பு**

நீண்டகால சிறுநீரக செயலிழப்பு உடையவர்கள்அனேகருடைய இரத்தத்தில் (கொலஸ்ரோல்) கொழுப்பின் அளவு அதிகரித்துக் காணப்படும். குருதிக்குழாய்களில் கொழுப்புப் படிதல், இதய நோய்கள், உயர் குருதி அழுத்தம் முதலிய நோய்களுக்கு இட்டுச் செல்லலாம். விலங்குகளில் இருந்து பெறப்படுகின்ற இறைச்சி, பால், முட்டை போன்றவையே இவ்விடயத்தில் முக்கிய குற்றவாளிகளாகும். புரத உணவை குறைப்பதற்கு பின்பற்ற வேண்டிய உணவு முறைகளில் இவ்வுணவுவகை கள் கட்டுப்படுத் தப்பட்டிருப்பதை அவ தானித்திருப்பீர்கள். நாம் உள் ளெடுக் கின்ற உணவு சரியானதா என்பதை அறிவதற்கு மருத்துவ பரிசோதனை கள் மாதமொருமுறை செய்தல் நன்று.

இரத்தத்தில் புரதம் குறைதலானது (அல்புமின்) நாம் புரத உணவு சிபார்சு செய்யப்பட் அளவிலும்குறை வாகஎடுப்பதைக் குறிக்கலாம். அல்லது காபோவைதிரேற்று உணவு குறைவாக எடுப்பதால் சக்தித் தேவைக்காக புரதம் பயன்படுத்தப்

(19. ஆம் பக்கம் பார்க்க)

# வலம்புரியின் வேது ஆண்டு நிறைவு
# ஆவணிச் சிறப்பிதழ் – 20.12.2005

அசல் 22 கரட் தங்க நகைகளை எழில் மிகு வடிவில் செய்து
பெற்றிட நாட வேண்டிய இடம்



## நியூ கார்த்திகா நகைமாடம்

இல 06, மகாராஜா கட்டடம்,
சுன்னாகம் சந்தி, சுன்னாகம்.
T.P: 0777 290816

## சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்



சிறி கார்த்திகா நகைத் தொழிலகம்
இல 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 148047

---

அன்றும்!
இன்றும்!
என்றும்!



இதமான புகை இன்பத்திற்கு ஆர்.வி.ஜி பீடிகள்

## ஆர்.வி.ஜி பீடி ஸ்தாபனம்

இல.58 நல்லூர் குறுக்குவீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 6806

ஆங்கில மருந்து வகைகள் ஊட்டச்சத்து, பால்மா வகைகள் என்பவற்றை நியாய விலையில் பெற்றுக்கொள்ள

**R.V.G மெடிக்கல்ஸ்**

இல 504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2129 (C-அ-056)

---

## எரிக்கணேஷ்

- இலவசமாகக் கண்களைப் பரிசோதித்து நவீன ரகக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- இழந்த பற்களுக்கு நிகராக சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்.
- உறுதிமிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக் கொள்ளவும்.
- வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன முறையிலான கேஸ் வகைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
- விரும்பிய நிறங்களில் பிளாஸ்ரிக் லென்ஸ் போட்டோ கிறேலென்ஸ் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் நாடுங்கள்.

(கட்டுப் பற்களைச் சுத்தம் செய்யும் மாத்திரை விற்பனைக்குண்டு)


கிளை இல
91 கே.கே.எஸ். வீதி.



கிளை இல
80 கே.கே.எஸ்.வீதி சுன்னாகம்.
T.P: 222 2486

மூக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்
566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---



நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

## புதிய விதுஷன் நகைமாடம்

இல.06 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



---

நவீன வடிவமைப்புக்களில் தங்க ஆபரணங்களை
நிதானமாகப் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்



## கலைவாணி நகை மாளிகை

111B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(C-அ)

---



## சிறிமாரி நகைமாடம்

(தங்க வைர நகை வியாபாரம்)

ஓடர் நகைகள் குறித்த தவணையில் 22 கரட் தங்கத்தில் செய்து கொடுக்கப்படும்.

இல 49, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமை) T.P: 021 222 7164
(C-அ)

---


# DMI JAFFNA


## A/L - 2008

கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்

ஆரம்பம்
ஜனவரி – 05
காலை - 8 மணி

**DMI JAFFNA**





ந.சிஜெயகுமாரன்
புற்றுநோய் வைத்திய நிபுணர்
MBBS (SL), MD (SL)

# யாழில் புற்று நோயாளர்களின் நிலை என்ன?

ஒரு காலத்தில் புற்றுநோய் என்றவுடன் எல்லோரும் அலறியடித்துக் கொண்டு ஓடும் ஓர் நிலைமை இருந்தது. ஆனால் இன்று அது மாறிவிட்டது. புற்றுநோய்க்கான பல்வேறு சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் புற்றுநோய் எவ்வளவு தூரம் மக்களை தாக்குகின்றது என்பது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களின் நிலைக்கான சிகிச்சை முறை எவ்வளவு தூரம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருக்கிறது என்பது பற்றியதுமான புற்று நோய் வைத்தியநிபுணர் ந.ஜெயக்குமாருடன் ஒரு செவ்வி.

***கேள்வி:- யாழ். வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் வரலாறு பற்றி கூறுங்களேன்?***

பதில்:- 2004ஆம் ஆண்டு டிசம்பர் 14க்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் புற்றுநோயாளர்களாக இனங்காணப்பட்டவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் நிரந்தரமான புற்றுநோய் சிகிச்சை நிபுணர் இல்லாத காரணத்தால் கொழும்புக்கு (மகரகம) செல்ல சம்மதித்தவர்கள் அங்குசென்று சிகிச்சை பெற்று வந்தனர்.

யுத்த சூழ்நிலை காரணமாக இவர்கள் தமது பிரயாண நிமித்தம் பல கடினமான பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இருப்பினும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் பலஉதவிகளை இவர்களுக்கு வழங்கினர்.

2004 டிசம்பர் 14ஆம் திகதி தான் யாழ். போதனாவைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைக்கென தனிஅலகு முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இது அங்குள்ள நரம்பியல் சத்திர சிகிச்சை விடுதியின் (விடுதி இல-26) ஒரு பகுதியில் இட நெருக்கடிகளுக்கு மத்தியில் மருத்துவ ரீதியாக புற்றுநோயைக் குணமாக்கும் அல்லது கட்டுப்படுத்தும் முறையிலான சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

வடக்கு-கிழக்கு சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பலகால நெருக்குதல்களின் பலனாக உலக வங்கியின் நிதியுதவியுடன் கதிர்வீச்சு முறையிலான சிகிச்சை நிலையம் (RADIO THERAPY) தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலையின் ஒரு பகுதியாக முதல் முதலாக 2005 யூன் 9ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

***. கேள்வி:- எவ்வகையான புற்று நோயாளர்கள் யாழ்ப்பாணத்தில் இனங்காணப்படுகின்றனர்?***

பதில்:- ஆண்களில் பெரும்பாலனவர்கள் வாய் மற்றும் தொண்டைப் புற்று நோய்களுக்கு (ORAL CANCER, THROAT CANCER) ஆளாகின்றனர்.

பெண்கள் பெரும்பாலும் மார்பக புற்றுநோய்க்கு (BREAST CANCER) உள்ளாகின்றனர்.

சிறுவர்கள் பொதுவாக இரத்த புற்று நோய்க்கு (BLOOD CANCER) ஆளாகின்றனர்.

***கேள்வி:- இந்நோய் காரணமாக யாழ். போதனாவைத்திய சாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் எத்தனை பேர் சிகிச்சை பெறுகின்றனர்?***

பதில் :- இவ்வருடம் 940 பேர் கிசிக்சைக்காக இங்கு வந்தனர். இவர்களில் 280பேர்தெல்லிப்பளை மாவட்ட வைத்திய சாலையில் கதிர்வீச்சு சிகிச்சைக்கு உள்ளாகினர்.


***கேள்வி:-யாழில் புற்றுநோயினைக் கண்டறிவதற்கான வசதிகள் எவ்வாறு உள்ளன?***

பதில்:- முழுமையாக இல்லை. பொதுவாக இவர்கள் சத்திரசிகிச்சைப் பிரிவில் அல்லது பெண்நோயியல் பிரிவில் அல்லது மருத்துவப் பிரிவில் நோய் அறிகுறிகளுடன் அனுமதிக்கப்படுகின்றனர்.

பின்னர் அங்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் மற்றும் கதிரியல் (RADIOLOGY) பகுதிகளில் மேற்கொள்ளப்படும் படப்பிடிப்புக்களின் மூலம் (SCANS) இனங்காணப்படுகின்றனர்.

இதனை உறுதிப்படுத்துவதற்காக இங்கு நோய் கூற்றியலாளர் (PATHOLOGISTS) இல்லாததன் காரணமாக கொழும்புக்கு அனுப்பப்படுகின்றன.

இதேவேளை, பெண்களைப் பொதுவாகப் பாதிக்கும் மார்பகப் புற்றுநோயினை இனங்காண்பதற்கான MAMOGRAPHY இயந்திரம் வட பகுதியில் இல்லை. இதனால் எம்மால் இந்நோயை ஆரம்பத்தில் இனங்காண முடியாமல் உள்ளது.



கோபோல்ற் கதிர்வீச்சு இயந்திரம்

எமது நிலையத்தில் இவ் வருட நடுப் பகுதியில் எமது புற்றுநோய் பிரிவுடன் பல் வைத்தியர்கள் இணைந்து யாழ். பிரதி சுகாதாரப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனின் அனுசரணையுடன் பெரியளவிலான வாய்ப்புற்று நோய் இனங்காணும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் புற்றுநோய் முன்னிலையில் உள்ள (PRE CANCEROUS STAGES) பலர் இனங்காணப்பட்டனர். இவர்களுக்கு எம்மால் அறிவுரைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

***கேள்வி:-கதிர்வீச்சு சிகிச்சையினைப் பெறுவதற்காக நோயாளர்கள் எவ்வாறு தெல்லிப்பளைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றார்கள்?***

பதில்:- இச் சிகிச்சை நிலையம் அதி பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருப்பதனால் நோயாளிகள் தனித்தனியாக வீடுகளில் இருந்து செல்வதால் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இதனைத் தடுப்பதற்காக நோயாளிகள் எமது சிகிச்சை நிலையத்தின் ஊடாக அம்புலன்ஸ் வண்டிமூலம் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

***கேள்வி:- இச் சிகிச்சை நிலையம் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள தனால் அசாதாரண சூழல் ஒன்று ஏற்படுமானால் அவர்களுக்கு எவ்வாறு சிகிச்சை அளிப்பீர்கள் ?***

பதில்:-அவ்வாறான சூழல் ஒன்று ஏற்படுமானால் இந்நிலையம் இயங்குவது கேள்விக்குறியாகிவிடும். இது இயங்காவிட்டால் யாழில் உள்ள புற்று நோயாளர்கள் முன்னர் அனுபவித்த துன்பங்களை அனுபவிக்க நேரிடும்.

இதனைக் கருத்திற் கொண்டு யாழ். பிரதி சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் யாழ். அரச அதிபர் ஆகியோர் இந் நிலையத்தினை யுத்த சூனியப் பிரதேசமாக்க ஆவன செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

***கேள்வி: தங்களின் சிகிச்சை நிலையத்தில் தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்து தங்களின் கருத்து?***

பதில்:- 1. எமது நோயாளர்கள் இட நெருக்கடிக்குள்ளான ஒரு விடுதியின் ஒரு பகுதியில் ஆண்,பெண் மற்றும் சிறுவர்கள் என சிகிச்சை பெற்ற நிலையில் உள்ளனர். இது குறிப்பாக நீர்ப்பீடனம் (IMMUNITY) குறைந்த புற்று நோயாளர்கள் பல தொற்று நோய்களுக்குஆளாகும் ஆபத்தில் உள்ளனர்.

2. கதிர்வீச்சு சிகிச்சைக்கென நோயாளிகள் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் சென்று வர பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

3. விலைகூடிய மருந்துகளை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியாமை .

4. நோய் கூற்றியல் வசதிகள் பல இங்கு இல்லை.

***கேள்வி:- இப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சமூகத்திடமிருந்து என்ன உதவிகளை எதிர்பார்க்கின்றீர்கள்.***

பதில்:- எமது சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பல நிறுவனங்கள் உதவி புரிந்துள்ளன. குறிப்பாக கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளைநிலையம், CANE (UK) நிறுவனம், ஒரு சில வர்த்தகர்கள் , லயன்ஸ் கழகம், கிளிநொச்சி மருத்துவசங்கம், சத்தியசாயி சமித்தி நிறுவனம் என் பன எமக்கு பல விதத்தில் உதவிகள் புரிந் துள் ளன.

இவை எமக்குபோதாதுள்ளன. எனவே கொடையாளிகள் எமக்கு தொடர்ந்து நிதி வசதிகள் வழங்குவதன் மூலம் எமது சிகிச்சை நிலையத்தினை முன்னேற்ற மடையச் செய்தால் பெருமளவான நோயாளர்களுக்கு எம்மால் வெற்றி கரமாக சிகிச்சை அளிக்க முடியும்.

## செவ்வி கண்டவர் நோயல்

***கேள்வி: தங்களின் எதிர்கால திட்டங்கள் என்ன ?***

பதில்:-இட நெருக்கடிக்குள் இயங்கி வரும் எமது சிகிச்சை நிலையத்தினை ஒரு தனி அலகாக, தனிக்கட்டடத் தொகுதியில் அமைக்கப் பல்வேறுதரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றோம்.

ஏனைய சிகிச்சை வசதிகளான குறும் கதிர்வீச்சு (BRACHY THERAPY-ICR), அயடீன் கதிர் பதார்த்த சிகிச்சை (RADIO ACTIVE IODINE TREATMENT) போன்ற சிகிச்சைகளை நோயாளர்களுக்கு வழங்க முயற்சிமேற்கொள்கின்றோம். பெண்களின் மார்பக புற்றுநோயினை ஆரம்பத் தில் இனங்காண(MAMOGRAPHY என்ற இயந்திரத்தினையும் பெண்களின் கருப்பை கழுத்துபுற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறிய COLPOSCOPY என்றஇயந்திரத்தையும் பெறத்திட்டமிட்டுள்ளோம்.

## "வலம்புரி" நீ வாழ்க பல்லாண்டே!

தரமிகு தகவலே தருவது என அரும்
உரமிகு நெறியினில் உறுதியே திகழவே
பரவிய புகழொடு மூவிருவருடமாய்
தரணியில் தகுதியாம் இதழென உயர்ந்தனை!
நிஜமுடன் தருமமும் உனதுயர் பலமெனப்
பயமது விலகிடத் தடைபல தொடரவும்
பயனுறு பணியிலே மூவிரு வருடமாய்
ஐயமெனும் வழியினில் சகமதில் உயர்ந்தனை!
அறிவியல் அரசியல் சமநலம் சுகநலம்
நெறியொடு கலைகளும் உயர்வுடன் நிலவிடச்
செறிவுடன் தரவுகள் விரிவுடன் தருமுயர்
நிறைவுடன் கனதியாம் இதழென உயர்ந்தனை!
மக்கள் நலனை முதன்மைப் படுத்தி
பக்கம் சாராப் பெருநெறி தனிலே
தக்க இதழாய் நாதம் இசைக்கும்
மிக்க புகழுடன் வாழி பல்லாண்டே!

நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்



13

# வலம்புரியின் 6வது ஆண்டு நிறைவு
# ஆவணச் சிறப்பிதழ் – 20.12.2005


ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி ஆறாவது அகவையை
பூர்த்தி செய்யும் வலம்புரியே, வாழ்க வளமுடன்!

கட்டடப் பொருட்கள் பெயின்ற் வகைகள் என்பவற்றை
நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்



பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
Pakiyaratnam Hardware Stores
163, 165 பிராதான வீதி,
சங்கானை.
தொ.பே. 070 212713

தரன் ரேடர்ஸ்
Tharan Traders
130, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2664
021 222 7184

ஏழாம் ஆண்டில் எடுத்தடி வைக்கும் வலம்புரியே வாழ்க!




வானகம் போன் சிற்றி
கையடக்கத் தொலைபேசிகள் அனைத்திற்கும்
ஒரு வருட உத்தரவாதம்

- உதிரிப் பாகங்களுடன்
- Phone லொக் உடைத்து
- திருத்திக் கொடுக்கப்படும்

இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

வானகம் போன் சிற்றி
(அன்னை நாகா பூட் சிற்றி முன்பாக)
இல: 06, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. இல 0777 238588

ராம்கோ சீமெந்து



RAMCO CEMENT


SLS – 107 அங்கீகாரம் பெற்றது
ISO – 9002 தரம் பெற்றது
BSS – 12–1991 தரத்திற்கு அமைவானது
100 வீதம் OPC சீமெந்து

ஆசியாவின் முதல்தர (No 1) தொழிற்சாலையாக தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்றது என்பதனை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். குறைந்த விலையில் நிறைந்த பயனைப்பெற 100 வீதம் OPC சீமெந்தான ராம்கோ சீமெந்தினை உபயோகித்து முழுப்பயனைப் பெறுங்கள்!

இறக்குமதியாளர்: ஈஸ்வரபகவான் அன் கம்பனி
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. இல 021 222 2350

# அருகிவரும் நாடகக்கலை வடிவங்கள்

அரியாலையூர்
சி. சிவதாசன்



யாழ்ப்பாண மண்ணில் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலம் முதல் இயல், இசை, நாடகம் முத்தமிழில் ஒன்றான நாடக்கலை (கூத்துக் கலை) பல வடிவங்களில் ஆடப்பட்டு வந்துள்ளது. இயல் தமிழும், இசைத்தமிழும் இணைந்து செயற்படும் வடிவமே நாடகக்கலை (கூத்துக்கலை) வடிவமாகும் ஆதிகாலத்தில் வாழ்ந்த மனிதன் சிறு சிறு குழுக்களாக மிருகங்களுக்கு பயந்து வாழ்ந்த சூழலில் இரவு நேரங்களில் ஆடிப்பாடி அதன் பொழுது போக்கிலே வாழ்ந்து வந்தான் . பின்பு நாகரிகம் மேவிய போது வயல்களில் வேறு பல தொழில்களிலும் கூட்டுச் சேர்ந்த நிலையில் களைப்பைப்போக்குவதற்காக ஆடிப்பாடி வேலை செய்தான். இதன்போது இவை கூத்துக்கள் என்று அழைக்கப்படுவதில்லை. காலமாற்றத்தில் இவ்வாறான ஆடல் பாடல்களே கூத்து வடிவமாகின. எமது மண்ணை ஆக்கிரமித்த அன்னியர்கள் இக் கூத்துக் கலையின் மூலம் தமது மதத்தினை வளர்க்க முற்பட்டனர். இது அவர்களுக்கு வெற்றியாகவும் அமைந்தது. மதங்கள் வேறு பட்டாலும் எமது தமிழ்க்கலையை வளர்ப்பதற்கு அவர்களும் உந்து சக்தியாக செயற்பட்டார்கள்.


இவ்வாறாக வளர்க்கப்பட்ட கூத்துக் கலை வடிவம் காலப் போக்கில் மாற்றமடைந்து பல வடிவங்களாக காணப்பட்டு வந்தன. காலத்திற்கு காலம் நாகரிக மாற்றத்திற்கு ஏற்ப எம் மண்ணில் தெருக் கூத்து, வட்டக்களரி, நாட்டுக் கூத்து, சிந்து இசை நடைக்கூத்து, இசை நாடகக் கூத்து, நாடகங்கள், தாளலய நாடகம், அசைவினால் வெளிப்படுத்தும் நாடகங்கள் என பல ஆடப்பட்டுவந்துள்ளன. இவை வெறும் கூத்துக்களாக இல்லாமல் அதனையாடிய கலைஞர் களையும் பிற்காலத்தில் வாழவைத்தது. கூத்துக்கலையை விரும்பும் மக்களால் பல கலை ஞர்கள் தொழில் ரீதியாக இக்கலையை வளர்க்க வேண்டியவர்கள் ஆனார்கள். இவ்வாறு பல வழிகளிலும் மேன்மையுற்று வந்த இக்கூத்துக் கலையானது 1925ஆம் ஆண்டுகளுக்குப் பின் எமது மண்ணில் மிகவும் ஆணித்தரமாக வேரூன்றி வளர்ந்தது. வெறும் பொழுது போக்கு நிகழ்வாக கருதப்பட்டு வளர்ச்சி கண்ட நாடகக் கலையானது (கூத்துக் கலையானது) இன்று "நாடகமும் அரங்கியலும்" என்னும் பாடமாக உயர் வகுப்புக்களில் போதிக்கப்படு வதோடு மட்டுமல்லாது பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்பட்டு பட்டம் பெறுவதற்குரிய பாடமாகவும் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறாக வளர்ந்து வந்த கூத்துக்கலையானது எம் மண்ணில் எவ்வாறு ஆடப்பட்டது என்பதை அறிந்து கொள்வதோடு, அதன் இன்றைய நிலைப்பாடு என்ன? என் பதை தெளிவுறக்கூறுவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

### தெருக்கூத்து

இக் கூத்து முறையானது சமூக் அமைப்பு தோன்றிய காலத்தில் ஆடப்பட்ட கலைவடிவமாகும் . பெரும்பாலும் புராண, இதிகாச, சரித்திரக் கதைகளைமையமாகக் கொண்டே இவை ஆடப்பட்டன. பாடல்கள் இசைத்து இடையிடையே ஓரிரு வசனங்களைப் பேசி தாளம், சதங்கை கட்டி மக்கள் கூடும் இடங்களில் ஆடப்பட்டதாக அறிய முடிகின்றது. மக்களிடையே நல்லொழுக்கத்தை வளர்ப்பதற்கான அறத்தை வலியுறுத்தும் கதைகளையே கூத்து ஆடுபவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். சொல்லப்பட வேண்டிய விடயத்தை மிக இலகுவாக மக்கள் மனதில் பதியக்கூடியதாக இக் கூத்துக்கள் அமைந்திருந்தன. மேடை இன்றி மக்கள் கூடும் இடங்களில் இக் கூத்துக் கலை வடிவம் முன்னெடுத்துச் செல்லப் பட்டது. இம் மாதிரியான தெருக்கூத்து,வீதி நாடகம் என்ற பெயரில் தமிழீழப்போராட்டக் காலங்களில் அண்மையில் முன்னெடுத்துச் செல்லப்பட்டமையை நாம் கண்டுள்ளோம். இருந்தபோதும் அண்மைக்கால வீதி நாடகங்கள் குறுகிய நேரத்துள் ஆடி முடிக்கக் கூடியதாக அமைந்திருந்தன. ஆனால் தெருக்கூத்தானது அக்காலத்தில் நீண்ட நேரம் இருவர் திரைச்சேலை பிடிக்க காட்சி மாற்றங்கள் செய்யப்பட்டு அவ்வேளை களில் கிடைக்கப்பெற்றமூலப்பொருட்களைக் கொண்டு கலைஞர்களுக்கு ஒப்பனை செய்து மக்களை கவரக்கூடிய வகையில் ஆடப் பட்டது.

### வட்டக்களரி

இதில் இருபது அடி விட்டம் கொண்ட வட்டத்தை அமைத்து சுற்றி வர தடிகள் நடப் பட்டு கயிறு கட் டப்படும். நான்கு வழிகளில் கலைஞர்கள் உட்செல் லலாம். காட்சிக்குரிய கலைஞர்கள் மட்டும் வட்டத் துள் நின்று கூத்தினை ஆடுவார்கள். அவர்கள் மஞ்சள், கரி , கறுப்பு நிறம் பூசப்பட்ட தென்னந்தும்பு ஆகியவற்றை ஒப்பனைக்காக உபயோகித்தும், கரப்பு வடிவலான கீழ் அங்கியும் மேலங்கியாக பாரமான கவசமும் மேலே தலையில் கீரிடங்களும் அணிவர். பெண் என்பதை காட்டுவதற்காக மயில் சடை தலையில் கட்டுவர். உடுக்கு, தாளம், மத் தளம் ஆகிய இசைக் கருவிகளை பின்னிசைக்காக பயன்படுத்தினர். பார்வையாளர்கள் வட்டக்களரியின் வெளியே சுற்றி வர இருந்து கூத்தினை கண்டு களிப்பார்கள். இவ்வட்டக்களரிக் கூத்துக்கள் யாழ்ப் பாணம், அரியாலை மேற்குப்பகுதி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் ஆடப்பட்டதாக அறியப்படுகிறது. அண்ணாவி முறையிலான நட்டுவாங்கம் இக் கூத்து முறையி



லேயே முதன் முதலாக வெளிப்படை யாக அறிமுகமானது.

### நாட்டுக்கூத்து

இவ்வகைக் கூத்துக்களை ஆரம்பத்தில் ஆட்ட நாட்டுக்கூத்தெனவேமக்கள் அழைத்தார்கள். இவை இரு வகையாகக்கொள்ளப் பட்டன. தென் மோடி, வடமோடி என்பவையே அவையாகும். தென்மோடி முறையிலான நாட்டுக்கூத்தே எம் யாழ்ப்பாண மண் ணில் ஆடப்பட்ட நாட்டுக்கூத்தாகும். பனை ,தென்னங் குற்றிகளை நிமிர்த்தி நட்டு, நடுவில் மணல் போட்டு ஆட்டம் செய்யக்கூடிய முறையில் மேடை அமைக்கப்பட்டு சுற்றி வர பார்வையாளர்கள் இருந்து பார்க்க வகை செய்யும் நிலையில் இவை இருந் தன. கலைஞர்கள் ஒவ்வொரு வரும் இக் கூத்து முறையில் மேடையில் ஆடி வந்து தம்மை அறிமுகப்படுத்திக்கொள்வார்கள். அவ்வாறு மிக உச் சஸ்த்தானத் தொனியில் பாடும் கலைஞர்களை திரும்பவும் பாடிய அதே பாடலை பாடி ஆடுமாறு பார்வையாளர்கள் அன்புக்கட்டளை இடுவார்கள். புராண இதிகாச கதைகளை அநேகமாக இறைவனோடு தொடர்புபடுத்தி பக்தி நிலையையும் அதன் வலியுறுத்தலையும் கருவாகக்கொண்டு சைவ மதத்தை சார்ந்த தமிழர்களால் இம் மண்ணில் நாட்டுக்கூத்தானது முன்னெடுத்துச் செல்லப்பட்டது. போர்த்துக்கீசரின் வருகையின் பின் கிறிஸ்தவ மதத்தை மக்களிடையே வளர்ப்பதற்கான நடவடிக்கை இம் மண்ணில் மேற்கொள்ளப்பட்ட போது கிறிஸ்தவக் கதைகளை கருவாகக்கொண்டு பல ஆட்ட நாட்டுக்கூத்துக்கள் எமது மண்ணில் ஆடப் பட்டது. விருத்தங்கள், வெண்பாக்கள், கீர்த்தனை கள், பாடல்கள் அப்போதைய மக்களால் புரிந்து கொள்ளக்கூடியனவாக இல்லாதிருந்த போதும் கூத்து ஆடுபவர்களின் தன்மை, அசைவுகள், நிலத்தில் உதைத்து அவர்கள் வெளிப்படுத்தும் பாவனைகள் மூலம் வெளிப்படும் வீரம், சோகம், நகைச்சுவை போன்ற ரசங்கள் புலப்படுத்தும் வெளிப் பாடுகளால் கூத்தின் கருத்தை மக்கள் புரிந்துகொள் ளக்கூடியதாக இருந்தது. அன்னிய ஏகாதிபத்தியம் தலைதூக்கி நின்ற அக்காலமே நாட்டுக்கூத்தின் பெருவளர்ச்சிக்கு வித்திட்ட காலமாகவும் அமைந் தது. கிரேக்க, உரோமானிய நாடகமேடை வடிவங்கள் இங்கு வரவழைக்கப்பட்டதற்கு அவர் கள் காரண கர்த்தாக்களாக இருந்தார்கள்.

### சிந்து இசை நடைக் கூத்து

இது முற்றிலும் வேறுபட்ட கூத்துவடிவமாகும். நாட்டுக்கூத்து, வட்டக்களரி ஆகிய கூத்துக்களில் மிகையான ஆட்டம் இருந்தது. சிந்து இசை நடைக் கூத்தானது இசைகேற்ப நடைவடிவம் கொண்ட தோடு கூத்துக் கலைஞர் ஒரு முறை பாட்டிசைக்க பிற் பாட்டுக்காரர் அதனை மீளவும் இசைக்க மேடையில் கலைஞர்கள் அங்குமிங்குமாக இசைக்கேற்றவாறு நடப்பார்கள். இவ் வகைக்கூத்துக்கு உடுக்கை, தாளம் முக்கிய பின்னிசைக்கருவிகளாக உப யோகிக்கப்பட்டது. கலைஞர்களுக்கு மனனம் செய்வதில் இடையூறு இல்லாமல் பின்னணி இசைப்பாட கர்கள் உதவும் வகையில் இக் கூத்து வடிவம் அமைந்திருந்தது. "காத்தவராயன்" என்னும் புராணக் கதையே பெரும்பாலும் இம் மண்ணில் சிந்து இசை நடைக்கூத்தாக ஆடப்பட்டது. மிகப் பயபக்தியோடு அம்மனுக்கு கும்பம் வைத்து பூசித்து இக் கூத்து முன்னெடுத்துச் செல்லப் பட்டது. இவ் வகைக்கூத்து வடிவத்தில் "கணித உடை" என்னும் உடையே கலைஞர்கள் அணியும் உடையாக இருந்தது. கணித உடை என்றால் என்ன? தில்லானாமோகனாம்பாள் என்னும் திரைப்படத்தில் நகைச் சுவை நடிகை மனோரமா நாடகம் ஒன்றில் அணிந்து வரும் உடலோடு நெருங்கி முழங்கை, முழங்கால் வரை அணிந்து வரும் உடையே அதுவாகும்.

### இசை நாடகம்

நாட்டுக்கூத்தின் பாணியில் பாடல்கள் அமைந் திருந்தாலும் மிகையான ஆட்டம் இன்றி கீர்த்தனை, வெண்பாக்கள், விருத்தம், வசனம் என புது வடிவம் கொண்டது இந் நாடகப் பாணியாகும். சங்கரதாஸ் சுவாமிக் ளின் நாடகப்பாடல்களை மையமாகக் கொண்டு வெளிவந்த தென்னிந்திய திரைப்படங்கள் வழியாக இம் மண்ணில் வளர்ச்சி கண்டதே இந் நாடக முறையாகும். தென்னிந்திய இசைப் பாடல்க ளோடு வசனமும் இணைந்து வந்த திரைப் படங்களை விட மேடையில் இவ் இசை நாடகத்திற்கு நல்ல வரவேற்பிருந்தது. முதலில் இவ் வகைக் கூத்தினை சங்கீத இசைக் கூத்தென்றே மக்கள் முதலில் அழைத்த போதும் காலமாற்றத்தில் இசை நாடகம் என்றே அழைத்தார்கள். ஒலி பெருக்கி வந்த காலப் பகுதியில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம் பதுகளிற்கு பின் இவ் இசை நாடக வடிவமானது மிக உன்னத நிலையை அடைந்தது.

புராண, இதிகாசக்கதைகளை முழுமையாக ஒரு இரவு பூராகவும் நடத்தி வந்த கலைஞர்கள் கதைகளை காலத்திற்கு ஏற்றவாறு சுருக்கி ஓரிரு மணித்தியாலங்களில் முடிக்கக் கூடியதாக மாற்றி அமைத்தார்கள். பின்னிசையாக ஆர்மோனியம், மிருதங்கம், தாளம் ஆகியன இந்நாடக வடிவத்திற்கு உபயோகப் படுத்தப்பட்டது. ஒப்பனைக்காக நவீன ஒப் பனை சாதனங்கள் பயன்படுத்தப்பட்டன. எமது மண்ணின் பண்பாடு,கலாசாரம் ஆகியவை முன்னிறுத்தி செயற்பட்ட இந்நாடக வடிவம் தென்னிந் திய சினிமாக்கள் பரவலாக எம் மண்ணில் ஓடிய காலத்திலும் அதன் தாக்கம் இவ்விசை நாடகக் கலையில் வீழ்ச் சியை ஏற்படுத்தவில்லை. மாறாக பெரும் உயர்ச்சியினை ஏற்படுத்தியது. ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது, அறுவது, எழுவதுகளில் மிக உயர் வளர்ச்சியை இந்நாடக வடிவம் பெற்றி ருந்தது.

### நாடகங்கள்

முழுமையான வசனங்கள் இடம்பெறும் இக் கலை வடிவம் "நாடகம்" என அழைக்கப்பட் டது. தென்னிந்திய சினிமாவில் வருவதுபோல் பாடல் காட்சிகள், காதல், சோகம், நகைச் சுவை போன்ற கட்டங்கள் இடையிடையே இடம் பெற் றது. புராணம்,இதிகாசம், சரித்திரம், சமூகம் ஆகியவற்றை கருவாக்க கொண்டு இவ் வகை நாடகங்கள் எம் மண்ணில் ஆடப்பட்டது. பாடத் தெரியாதவர்களுக்கும் இந்நாடக வடிவத்தில் நடிக் கக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்தன. முழு நீள நகைச்சுவை நாட கங்களுக்கு இந்நாடக வடிவில் நல்ல வரவேற்பு இருந்தது. இந்நாடகங்கள் ஓரங்கம், முழுநீளம், குறுகிய நேரம் எனப் பல செயற்பாட்டுவடிவங்களைக்கொண்டிருந்தன. இராசா, ராணிக் கதைகள் , சமூ கக் கதைகள் ,மக்களின் வாழ்வியலை மிகத் தெளிவாக ஏற்படுத்தி இயம்பக்கூடிய வகையில் இந் நாடக வடிவம் பெரிதும் உதவின. திரைப்படங்களுக்கு ஒப்பான நவீன உத்திகள், காட்சியமைப்புக்கள், பின்புல திரைச் சீலை ஆகியவற்றில் அதிக கவனம் செலுத் தப்பட்டு இந்நாடக வடிவம் எம்மண்ணில் பல் வேறு இடங்களிலும் மேடையேற்றப் பட்டது.

### தாள லயம், அசைவுவழி நாடகங்கள்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண் பது களுக்குப் பின் எம் மண்ணில் உருப் பெற்ற இந் நாடக வடிவங்களுக்கு நல்ல வரவேற்பு இருந்த போதும் இவை பெரும் வளர்ச்சியை அடைய வில்லை. தாள லயம் நாடகத்தில் மிருதங்க, ஆர் மோனிய, தாள பின்னிசையில் கவிதை நடையில் பார்வையாளர்கள் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் கிராமியப் பாணியில் பேச்சு வார்த்தை கள் அமைந்திருக்கும். நளினம் நிறைந்தும் நகைச்சுவை நிறைந்தும் முக பாவத்தினால் கலைஞர்கள் தாம் ஏற்கும் பாத்திரப் படைப் பினை மக்களிடையே புரிய வைப்பார்கள். பாடசாலைகள், பல் கலைக்கழகங்கள் ஆகியவற்றில் மட்டுமல்லாது கிராமங்களிலும் இந்நாடக வடிவம் மேடையேற்றப்பட்டது.

அசைவுகள் மூலம் வெளிப்படுத்தும் வகை யிலான இந்நாடக வடிவம் இந்த மண்ணில் மிகவும் புதுவடிவமாக மேடை ஏறியது. தேவைக் கேற்ப வசனங்கள் முன் தொகுப்புக்கள் கூறப் பட்ட போது அசைவுகள் மூலமே இந்நாடக வடிவம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. பல்கலைக் கழக மாணவர்களால் பெரும்பாலும் மேடையேற்றம் செய்யப்பட்ட இந்நாடக வடிவமும் நீண்ட காலம் இம் மண்ணில் கால் ஊன்ற வில்லை. பின்னி சையின் முழுமையான செயற்பாட்டில் கால் களை உயர்த்தியும் நிலத்தில் பதித்தும் சமூகச் செயற்பாடு களை, நடைஉடை பாவனைகளை நன்கு வெளிப்படுத்தி மக்கள் மனதில் பசுமையான கருத்துக்களை பதிய வைத்த இந் நாடக வடிவம் ஏன் நிலையான இடத்தை பிடிக்க வில்லை என்பது தெரியவில்லை.

எவை எப்படி இருந்த போதும் கிராமங்களில் வாழ்ந்த பாமரமக்களால் கட்டியெழுப்பப்பட்ட இக் கூத்துக்கலை வடிவங்கள் இன்று எம் மண்ணில் அருகி வருவது கவலைக்குரியதே. கல்விமான்க ளாலும் கலை ஆர்வலர்களாலும் ஆய்வுக்குட் படுத்தப்பட்டு உயர் கல்விக்கு ஒரு பாடமாய் ஆகிவிட்ட இக் கூத்துக்கலை வடிவம் சகல வசதிகள் இருந்தும் வளர்ச்சி அடைய முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருப்பது தமிழ் மக்களாகிய எம்மவர் உள்ளங்களை ஆதங்கப்படவைத்துள்ளது . இம் மண் ணில் இக்கூத்துக்கலையை எப்படியாவது வளர்த்து விடுவோம் என கங்கணங்கட்டி பல அமைப்புக்கள் செயற்பட்ட போதும் விளைவு பூச்சியமாகவே உள்ளது.

இக்கூத்து கலை வடிவத்தை வெறும் பல் கலைக்கழக பட்டம் பெறுவதற்கான பாடமாகக் கரு தாமல் அதனை பயிற்சி வடிவிலும் முன்னெ டுத்துச்செல்ல பாடசாலைமட்டத்தில் முயற்சிக்க வேண் டும். நாடக (கூத்து) வடிவங்களை சின்னத்திரை மூலம் நம்மவர்கள் எடுத்துச்செல்ல வேண்டும். எல்லோரிடமும் திறமை இருக்கிறது. அந்த திற மையை ஆற்றல்வாய்ந்த கலைஞர்கள் இனங் கண்டு செயற்படுத்த வேண்டும்.அன்று வாழ்ந்த கூத்துக் கலைஞர்கள் தமது பொருளா தாரத்தை செலவு செய்து தமது பரம்பரையை மட்டுமல்லாது தகுதி வாய்ந்த வர்களைத் தட்டிக்கொடுத்து ஊக் குவித்தமைபோல் இன்றுள்ள கலை ஆர்வலர் களும்செயற்பட முன்வரவேண்டும். அப்பொழுது அருகிவரும் கூத்துக்கலை வடிவத்தை வளர்ச்சியடையச் செய்ய வழி பிறக்கலாம்.

# தாய்மொழி மூலக்கல்வியும் அதன் முக்கியத்துவமும்

திருமதி அனுஷ்யா சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் – II
கல்வியியற்துறை யாழ். பல்கலைக்கழகம்

இன்று உலகளாவிய ரீதியில் தாய்மொழியே கல்விமொழியாகப் பொருத்தமானது என்பது உணரப்பட்டுள்ளது. வெறுமனே சிந்தனை வழியிலன்றி விஞ்ஞான ரீதியிலான ஆய்வுகளும் இதனை நிரூபித்துள்ளன. கல்வியின் அடிப்படை நோக்கங்கள் நிறைவேற கற்றல், கற்பித்தல் வினைத்திறன் உள்ளதாக்கப்பட, முழுமையானதாக்கப்பட தாய்மொழிப் போதனையே உகந்தது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தாய்மொழிக்கல்வியின் அவசியம் உணரப்பட்டுள்ளபோதிலும் அதனை உரியமுறையில் நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுவதும் சகஜமாகவே உள்ளன.

விசேடமாக முன்னர் மேற்கத்தைய ஆதிக்கவாளர்களின் குடியேற்றங்களாகவிருந்த பன்மொழித்துவ ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சிலவற்றில் இந்நிலைமை தொடர்வதனைக் காண்கின்றோம். அதிலும் பிரதானமாக ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளில் (இலங்கை, இந்தியா சிறந்த உதாரணங்கள்) தாய்மொழிக் கொள்கைகளிலான குறிப்பிடத்தக்கதான புறக்கணிப்பை அல்லது தடுமாற்றத்தை அவ்வப்போது இனங்காணமுடிகிறது.

## மொழியின் முக்கியத்துவம்

கல்வி ஊடகமாகவும், கல்வியில் முக்கியத்துவம் பெறும் பாடத்துறையாகவும் மொழி விளங்குகின்றது. கல்வியை ஆழமாகவும், அகலமாகவும் எடுத்துச்செல்வதற்கு மொழி மிகவும் இன்றியமையாததாகும். மொழி இரண்டு விதமாக வகைப்படுத்தப்படுகின்றது.

1. தாய்மொழி
   **(Mother Language)**
2. அந்நியமொழி
   **(Foreign Language)**

## தாய்மொழி பற்றிய வரைவிலக்கணம்

தாய்மொழி என்றால் என்ன என்பதற்கு பல்வேறு விளக்கங்கள் காலத்திற்குக் காலம் கொடுக்கப்பட்டன. முதலில் அறியப்படும் மொழி தாய்மொழி என்றும் பின்னர் அறியப்படும் மொழிகள் இரண்டாவது, மூன்றாவது மொழி அல்லது அந்நியமொழி என்றும் குறிப்பிடப்பட்டன. சிலர் எந்தவகையான பயிற்சிகளுமின்றி கற்றுக்கொள்ளப்படும் மொழி தாய்மொழி என்று குறிப்பிட்டனர்.

இந்திய குடிசன மதிப்பீட்டறிக்கைகள் காலத்திற்குக்காலம் தாய்மொழிக்கான விளக்கத்தை அளித்தன. 1881 இன் அறிக்கையின்படி 'தொட்டிலின் தொடக்கத்திலிருந்து அறியப்படும் மொழி' என்றும் 1901 அறிக்கையின்படி வீட்டில் பேசப்படும் மொழி என்றும் 1961 குடிசன மதிப்பீட்டின் அறிக்கையின்படி குழந்தைப் பராயத்திலிருந்து குழந்தையின் பெற்றோரால் பேசப்படும்மொழி என்றும் விளக்கமளிக்கப்பட்டது.

ஐரோப்பிய மொழியியலாளர் சிலரின் விளக்கப்படி 'சிந்தனைமொழி' (1923) என்றும், 'தினசரி வீட்டில் பாவிக்கப்படும் மொழி' (1951) என்றும் வரைவிலக்கணப்படுத்தப்பட்டது.

எவ்வாறு இருப்பினும் சுருக்கமாக குறிப்பிடுவதாயின் ஒரு பிள்ளை தன்னுடைய சுகதுக்கங்களை, கஷ்ட நஷ்டங்களை தன்னுடைய உணர்ச்சியினை எந்த மொழியில் முதலில் வெளிப்படுத்துகின்றதோ/எந்தமொழி அவற்றை இலகுவாக வெளிப்படுத்த உதவுகின்றதோ அதுவே தாய்மொழி என்று வரையறை செய்தல் பொருத்தமானது.

## தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவம்

கல்வியியலாளர்கள், சமூகவியலாளர்கள், மொழியியலாளர்கள் எனப் பல தரப்பினரும் வெறும் சிந்தனைகளின் வழியிலன்றி ஆய்வுகளின் வழியும் தாய்மொழிக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்/வலியுறுத்துகின்றனர்.




கல்வியானது பிள்ளையிடமான சிந்தனைத் தூண்டல், தெளிவு, விருத்தி வெளிப்பாடு, ஆளுமை விருத்தி, பண்பாட்டு விருத்தி மனிதநேயம், புரிந்துணர்வு அதாவது பிள்ளையினது ஒட்டுமொத்த விருத்தி. அதன்வழி சமூக விருத்தி, நாட்டு அபிவிருத்தி என ஒன்றுடன் ஒன்று பிணைந்து விரிவுபட்டு வளரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இன்றைய சூழ்நிலையில் இவற்றுக்கு அப்பால் உலகமயமாக்கலுக்கு முகம்கொடுத்தல் என்பதும் கல்வியின் பால் அடக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டனவற்றுள் உலக மயமாக்கல் தவிர்ந்த ஏனையவைகள் கல்வியின் அடிப்படை நோக்கங்களாக ஒருபிள்ளையை முடிந்த வரையில் மேம்படுத்துவனவாக கொள்ளப்படத்தக்கன.

மேற்குறிப்பிட்டவை கல்வியினூடாகச் சாத்தியமாக்கப்படவேண்டுமானால் அதற்கு அக்கல்வி புரிந்துகொள்ளத்தக்கதாக வினைத்திறன் மிக்கதாக, பிழையின்றித் தெளியத் தக்கதாக, சுமையற்றதாக, சரியான எண்ணக்கருக்களை ஏற்படுத்துவதாக ஆசிரிய – மாணவர்களிடையிலான தொடர்பாடலை இலகுவாக்குவதாக, திருப்திப்படுத்துவதாக அமைவுறுதல் அவசியம்.



இவையாவும் குறிப்பிடத்தக்களவில் சாத்தியமாக்கப்படும்போதுதான் கல்வி உரியமுறையில் தன் கடமையைச் செய்கின்றது எனக் கொள்ளலாம்.

தனிமனித வளர்ச்சி என்பது நல்ல குடும்ப வளர்ச்சிக்கு வழிகோலுவதாகவும், அதன் வளர்ச்சி ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கவும், நல்ல ச்மூகவளர்ச்சி, நாட்டு அபிவிருத்திக்கு வழிகோலுவதாகவும் அமையும். இவ் அடிப்படை நோக்குகள் முடிந்தளவில் நிறைவு செய்யப்படும்போதுதான் அவசியமான, ஆரோக்கியமான பிள்ளை – குடும்பம் – சமூகம் – நாடு என்ற தொடர் அபிவிருத்தி காணப்பட முடியும். இவை யாவற்றுக்கும் துணை போவது தாய்மொழிக்கல்வியாகத் தான் அமையமுடியும்.

தாய்மொழிக் கல்விபற்றிய ஐ.நா வின் (UNESCO– ஐக்கியநாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பு) சில கருத்துக்கள் இங்கு எடுத்துக் காட்டப்படவேண்டியன.

1996இல் ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பு நிபுணர்கள் சிலரால் குறிப்பிடப்பட்டதாவது;

தாய்மொழியே ஒரு பிள்ளைக்கான கல்வி ஊடகமாக மிகத் தகுதியானது. இது தனியே பிள்ளையின் கல்வி வளர்ச்சியையும், அடைவுகளையும் அடிப்படையாகக் கொண்டதாகவன்றி தேசக் கட்டுமானத்தையும் அபிவிருத்தியையும்கூட அடிப்படையாகக் கொண்டது.

1981 இல் ஐ.நா கல்வி அறிவியல் பண்பாட்டு அமைப்பு அறிக்கையின்படி உலகின் அரைப்பகுதியினர் எழுத்தறிவற்றவர்களாக உள்ளனர்.

குறிப்பிடத்தக்க விகிதாசாரத்திலான குழந்தைகள் தாய்மொழியில் கல்வி கற்கவில்லை. ஒரு பிள்ளை தன்னுடைய தாய்மொழியலன்றி வேறுமொழியில் கற்குமானால் பல பின்னடைவுகள் நோக்கப்படுகின்றன.

இதேபோன்று 1997 இல் இடம் பெற்ற ஐக்கியநாடுகள் சபையின் அறிக்கை, தாய்மொழிக் கல்வியை மேலும் வலியுறுத்துவதாக இடம்பெற்றது. அதன் பிரகாரம் தாய்மொழிக் கல்வி என்பது வெற்றிகரமான கல்வியின் நுழைவுக்கான ஒரு திறவுகோல்.

அது மட்டுமல்ல ஒவ்வொரு சமூகத்தினரதும் கலாசாரப் பேணலுக்கான வழிமுறையுமாகும். இவற்றுக்கு அப்பால் எழுத்தறிவின்மை, அறியாமை, வறுமை இவற்றுக்கான போராட்டத்தின் சிறந்த ஆயுதமுமாகும் என்று குறிப்பிட்டது.

2004இல் ஐ.நா.வின் Director General ஆக இருந்த Kokhiro Matsura யின் வெளிப்பாட்டின்படி தாய்மொழிக் கல்வி என்பது கல்வி அமைப்பில் ஆரம்ப நிலையில் இருந்தே முக்கியத்துவப்படுத்தப்படவேண்டும். இது கல்வியில் பிள்ளைகளின் அடைவுகளைப் பலப்படுத்துவதுடன் தொடக்கக் கல்விக்கான தூண்டுதலையும் அவர்களுக்கு ஊட்டி அபிவிருத்தியையும் உருவாக்கும்.

ஏற்கனவே சுட்டப்பட்டதுபோல் கல்வியை எல்லோருக்கும் வழங்கவும் விருத்திசெய்யவும் ஆழமாக, எளிமையாக எடுத்துச் செல்லவும் உதவும் பிரதான ஊடகம் மொழி.

கல்வியைப் பரப்பும் மொழி கற்போனுக்கு இயல்பானதாக, பழக்கமானதாக இருக்கும்போதுதான் பயன் நிறைந்ததாகின்றது. ஒரு மாணவன் எந்த மொழியோடு வளர்கிறானோ அதுவே அவனது சிந்தனையை தூண்டவும் வெளிப்படுத்தவும் உகந்ததாக அமையும்.

பெரும்பாலானவர்கள் தத்தமது தாய்மொழியிலேயே சிந்திக்கிறார்கள். ஆகவே சரியான சிந்தனை வெளிப்பாடு என்பது தாய்மொழியின் ஊடாகவே இலகுவாக முடியும். தத்தமது சொந்தமொழி தவிர்ந்த வேறுமொழியிலான சிந்தனையின் வெளிப்பாடு

(...[illegible] பக்கம் பார்க்க)

**ஒருவனின் சிறப்பு எல்லாம் அவன் தாயும், தாய்மொழியும்தான்**

# வலம்புரியின் 6வது ஆண்டு நிறைவு
## ஆவணச் சிறப்பிதழ் — 20.12.2005

ஆறாண்டு காலத்தில் அளப்பிலாச் சேவை செய்த வலம்புரி
நாளிதழ் வாழ்க என வாழ்த்துகிறோம்!

**நிறைஞ்சனாஸ்**
**ஹாட்வெயர்ஸ் ஸ்ரோர்ஸ்**

சகல விதமான தரமான கட்டடப் பொருட்களை மலிவாகப்
பெற்றுக்கொள்ள சங்கானையில்

**நிறைஞ்சனாஸ் ஹாட்வெயர்ஸ்**

இல.204, பொன்னாலை வீதி, சங்கானை.

**நாதன்ஸ் திரையரங்கு**
**நிறைஞ்சனாஸ் சினிமா**

---

நாளுக்கு நாள் மாறும்
நாகரீகத்திற்கேற்ற டிசைன்களில்
ஆடைகளைத் தெரிவு செய்வதற்கு
ஏற்ற இடம்

**த.சங்கரப்பிள்ளையும்**
**மைந்தர்களும்**

நவீன சந்தை (வெளிப்புறம்)
பெரியகடை, யாழ்ப்பாணம்.



---

## கல்வியாண்டு 2006ற்கான
## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகினறனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான ஏளையக்களையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.



**கிருஷாந்தஸ் ஜூட், சுண்டிக்குளி**

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் மாணவனாகிய நான் A/L 2004 கணிதப்பிரிவில் பரீட்சைக்குத் தோற்றிப் பல்கலைக்கழக அனுமதி தவற விடப்பட்ட நிலையில் எனது வாழ்க்கைக்கு இந்த IIS நிறுவனம் நம்பிக்கையான ஒரு வழியைக்காட்டியது. தகவல் தொழில்நுட்பக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் மாணவனாக இருப்பதையிட்டு பெருமையடைகிறேன். Edexcel Inter national UK நிறுவனத்தின் HND கற்கைநெறியைப் பயின்றுவரும் நான் இக் கற்கைநெறியின் அங்கீகாரம் தொடர்பாக திருப்தியடைந்துள்ளேன். இவ்வாண்டில் பட்டம் பெற்று வெளியேறிய மாணவர்களுக்கு வெளிநாட்டு உயர்கல்வி, வேலைவாய்ப்பு எனப் பல்வேறு சந்தர்ப்பங்கள் தேடி வருவதையிட்டு எனக்கும் ஓர் ஒளிமயமான எதிர்காலம் உண்டென நானும் எனது பெற்றோரும் நம்பிக்கையுடன் உள்ளோம்.

**IIS CITY CAMPUS**
# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201

**BTEC HND**
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel
INTERNATIONAL
Approved Training Centre

---

வலம்புரியின் சேவை மென் மேலும்
தொடர எங்களது வாழ்த்துக்கள்!

அழகிய தங்க நகைகளின் தரத்தினை தாரக
மந்திரமாகக் கொண்ட நிறுவனம்



**நிருத்திகா**
**ஜுவல்லர்ஸ்**

இல.177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

இதம் தரும் செய்தி தரும் இன் தமிழ் நாளேடு
வலம்புரி நீடுவாழ்க!

# ஆசீர் வணிக நிலையம்

காகிதாதிகள், எழுதுகருவிகள்,
உபகரணங்கள்
மொத்த சில்லறை விற்பனையாளர்கள்



**ஆசீர் வணிக நிலையம்**

No: 202A, K.K.S.Road, JAFFNA.
இல.202A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 2842 FAX : 021 222 2842

# வலம்புரியின் 6 ஆவது ஆண்டு நி



## நல்லை ஆதீன முதல்வரின் ஆசிச்செய்தி

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிவரும் வலம்புரிப் பத்திரிகை தனது சிறப்பான பணியில் ஆறு ஆண்டுகளைப் பூர்த்திசெய்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

வலம்புரி என்பது தெய்வீகத்துடன் இணைந்த சொற்பதம். உலகிற்கு கீதையைத்தந்த கண்ணபரமாத்மா தர்மத்தின் முகிழ்ப்புக்காக வலம்புரிச் சங்கை தனது கரத்தில் தாங்கியுள்ளார். அத்தகைய உயரிய நாமம் கொண்ட வலம்புரி, தர்மத்தின் வழிநின்று எமது மக்களுக்குச் செய்திகளைத் தருவது பராட்டுதற்குரியது.

நாட்டில் சமாதானமும், சுபீட்சமும் நிலவ வலம்புரி தனது பத்திரிகைப் பணியைத் தொடரவேண்டி வலம்புரிக் குடும்பத்திற்கு எமது அருளாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**

நல்லை ஆதீன முதல்வர்



## மனமார்ந்த வாழ்த்துக்களும் - ஆசிகளும்

வலம்புரி நாளிதழ் தனது ஆறாவது அகவையை 20.12.2005 இல் நிறைவுசெய்து ஏழாவது அகவையில் தனது காலடிபதிக்கும் இந்நன்நாளில் வாழ்த்துக்களும் ஆசிகளும் வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அறிவுஉரு ஆராய்ந்த கல்வி இம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு

என்ற குறளின் கருத்திற்கமைவாக தனது சேவையை உண்மையாகவும் நேர்மையாகவும், பக்கசார்பற்றதுமான செய்திகளின் வெளிப்படுத்தலையும், ஆன்மீக வளர்ச்சிகளுக்கான கட்டுரைகளையும் ஆக்கங்களையும் எக் காலகட்டத்திலும் மக்கள் சேவை மகேசன் சேவை என்ற உணர்வுடன் தினமும் எமது கரங்களில் வலம்புரி வந்து சேர்வது மிகவும் போற்றக்கூடியது.

ஆகவே மேலும் இப்பத்திரிகை, உலகளாவிய புகழ்பெற்று நவீன உலகிற்கு ஏற்றவாறு தொழில்நுட்ப வசதிகளுடன் திகழவேண்டும் என்றும் நிறுவனத்தின் ஆசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் யாவரும் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடுழி வாழ்ந்து இச்சேவையைச் செய்யவேண்டும் என்று வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

**கிரியாகலாப முக்தாமணி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக்குருக்கள்**

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி

## இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகளின் ஆசி

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வலம்புரி நாளிதழ் இன்று (20.12.2005) தனது ஆறாவது அகவையை நிறைவுசெய்வதை அறிந்து அப்பத்திரிகையின் ஆசிரியர் குழாம் மற்றும் நிர்வாகத்தினருக்கு எங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகச் செய்திகளை வழங்குவதோடு, மக்களிடையே ஒற்றுமையும், சகோதரத்துவமும் நிலைபெறவும் ஊடகங்கள் சிறப்பான பங்களிப்பை வழங்கமுடியும். இந்தவகையில் வலம்புரியின் சேவை தொடரவேண்டுமென வாழ்த்துகின்றோம்.

இவ்வருடம் வெளியிடப்படுகின்ற வலம்புரி சிறப்பிதழுக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.


**சுவாமி ஆத்மகனானந்தா**

## வளர்மதிபோன்று வளர்க

ஆறு ஆண்டுகளாக அரிய கட்டுரைகளுடன் அவசியமான செய்திகளையும் நடுநின்று கூறி நலம்பல புரிந்த வலம்புரி ஏடே! மேலும் பல்லாண்டு நிலவுக! பரமன் அருளால் நற்செய்திகளுடன் நல்லுணர்வூட்டி வளர்மதி போன்று வளர்க வளர்கவே.

**அ.செல்லத்துரை**

தலைவர், சிவதொண்டன் சபை.



## - வலம்புரி ஓர் பல்கலைக்கழகம் - பேராயரின் ஆசிச் செய்தி

*நாம் வாழும் உலகின் ஒருநாள் வரலாற்றைக் கூறுவது பத்திரிகை; கடந்துபோன சம்பவங்களை விட எமது நினைவுகளில் நடமாடும் நிகழ்வுகளைவிட இன்றைய வரலாறே நமக்கு முக்கியம்.*

*– B.ஹேரார்ன்*

வலம்புரிப் பத்திரிகைக்கு ஆறுவயது பூர்த்தியாகிவிட்டது. யாழ்ப்பாணத்தை நவீனமயப்படுத்துவதற்கு இன்னொரு சாதனம் உறுதியாக அமைந்துவிட்டது என்று குதூகலமடையலாம்.

கடந்த ஆறு வருடங்கள் வலம்புரி சந்தித்த சவால்கள் அனேகம். ஆனால் எல்லா நெருக்கடிகளையும் சமாளித்து ஒரு தரமான பத்திரிகையாக கடந்த ஆறுவருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கிறது. வலம்புரியில் வரும் கட்டுரைகள் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்புச் செய்கின்றன. பத்திரிகைகள்தான் சாதாரண மக்களின் பல்கலைக்கழகங்கள். உலகில் பாதிப்பேர் தினசரிப் பத்திரிகைகளைவிட வேறு எதனையுமே வாசிப்பதில்லை என்றார் ஓர் அறிஞர். வலம்புரி என்ற பல்கலைக்கழகம் தொடர்ந்து நற்பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

**பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்**

முதல்வர் கிறிஸ்தவ இறையியற் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம்.



## யாழ்.அரச அதிபரின் ஆசிச் செய்தி

யாழ்ப்பாணத்தின் யுத்தகாலச் சூழ்நிலையில் ஆரம்பிக்கப்பட்ட வலம்புரி பல்வேறு இடர்களுக்கு மத்தியில் தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் நடுவுநிலைமை தவறா நன்னெறிகாத்துப் பணியாற்றுவது பாராட்டுதற்குரியது.

உலகம் கிராமமாகிக் கொண்டுவரும் இன்றைய காலகட்டத்தில் உலகத் தரத்திற்கு வாசகர்களின் பொதுஅறிவை உயர்த்துவதோடு சிந்திக்கும் ஆற்றல், செயற்படும் திறன் என்பவற்றை வளர்க்கும் பணி பத்திரிகைகளுக்கும் உரியதாகும்.

உலகின் பல்வேறு இடங்களிலும் வாழும் இலங்கைத் தமிழர்களால் மட்டுமன்றி தமிழ்பேசும் அனைத்து மக்களதும் வாசிப்பு ஆர்வத்தை அதிகரிக்கும் வகையிலும், தமிழ் அறிந்த பிறமொழியினரும் தேடி வாசிக்கும் வகையிலும் உலகெங்கும் வாசகர்களை வளர்த்துக்கொள்வதோடு, தனது வாசகர்களை உலகத்தரத்திற்கு இட்டுச் செல்லும் வகையிலு[illegible] வலம்புரி - சங்குநாதம் பன்னெடுங் காலம் பணியாற்றவேண்டும் என[illegible] ஆசி கூறுகின்றேன்.

**க.கணேஷ்**

அரசாங்க அதிபர்

மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.




வலம்பு
மகிழ்ச்சியா
கையின் கு
பத்திரி
பிர[illegible]சத்தி
ளவிற்கு அ
படவும், ஒ
திக் கதை
யத்தன்மை
வலம்
தனக்கும்
பாராட்டத்
கட்டி தீனி
நன்நெறி
யில் தனி
தொடர வா
**பே**

**[illegible]னிதப**

வலம்புரிய
அறிந்து
பலவிதமா
கில் எந்த
படுகின்ற
வலம்புரி
சேவை
பேரவா
கும் உண்
**இறை**
ஸ்ரீ ராம



வலம்பு
முன்னிட்
செய்தி ஒ
உள்நாட்
கப்பட்ட
ளைத் த
வாகக் செ
அதன
நிலையில்
தோடு ஏ
அதி
ரிகைத் த
பத்திரிகை
வேண்டு



## யாழ். ஆயரின் வாழ்த்து

வலம்புரிப் பத்திரிகை 6 ஆண்டுகளை நிறைவு செய்கிறது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். இந்த 6 ஆண்டு நிறைவில் வலம்புரி பத்திரிகையின் குடும்பத்தினருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

பத்திரிகைகள் சமுதாயத்தின் காவல்நாய்கள் என்கின்ற வகையில் ஒரு பிரதேசத்தில் எவ்வளவுக்கு அதிக பத்திரிகைகள் வருகின்றனவோ அவ்வளவிற்கு அதிக நன்மையே ஏற்படுகின்றது. பத்திரிகை தர்மம் பாதுகாக்கப்படவும், ஒழுக்கநெறி இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படவும் வாசகர்கள் செய்திக் கதைகளை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு படித்து, செய்திகளின் துல்லியத்தன்மையையும், உண்மைத் தன்மையையும் உணர வழிவகுக்கின்றது.

வலம்புரிப் பத்திரிகை மற்றைய பத்திரிகைகளோடு போட்டிபோட்டு தனக்கும் ஒரு இடத்தை யாழ்ப்பாண வாசகர்கள் மத்தியில் பெற்றிருப்பது பாராட்டத்தக்க விடயமாகும். ஒரு பத்திரிகையை நடத்துவது யானையைக் கட்டி தீனிபோடுவது போன்றது. தனது கடின உழைப்பால் நடுநிலை தவறா நன்நெறி காக்கும் உங்கள் நாளிதழ் என்ற விருது வாக்குடன் மக்கள் மத்தியில் தனித்துவத்தைப் பெற்றிருக்கும் வலம்புரிப் பத்திரிகையின் பணி தொடர வாழ்த்தி இறையருள் வேண்டுகின்றோம்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**

*ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்*



## பத்திரிகைத் தர்மத்தைப் பேணும் வலம்புரி
## சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்து

எமது மண்ணில் தினசரி இதழாக வெளிவருவது வலம்புரி. நெருக்கடி மிகுந்த காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட மேற்படி இதழ் ஆறு ஆண்டுகளை நிறைவுசெய்தமை மகிழ்ச்சிக்குரியது. இறையருளே எல்லாவற்றையும் முன்னின்று நடத்துவது என்பதில் எமக்கு அசையாத நம்பிக்கை உண்டு. பத்திரிகா தர்மத்தைப்பேணி உண்மையை நிலைநாட்டி வாசிப்போர் மனதை இவ்விதழ் ஒளிபெறச் செய்கிறது.

பயனுள்ள செய்திகளை இவ்விதழ் பரப்பிவருகிறது. இதனால் எமது மண்ணில் வரவேற்கப்படும் வலம்புரி செய்தித்தாளை மனநிறைவுடன் நான் வாழ்த்துகிறேன்.

மேலும் மேலும் பத்திரிகா தர்மம் ஓங்கவேண்டும் என்று திருவருளைப் பிரார்த்திக்கின்றேன். சங்குநாதம் எமது மண்ணைக் குளிரவைக்கட்டும் என்று பிரார்த்திப்பதில் மேலும் பூரிப்படைகிறேன்.

**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

*சமாதான நீதிபதி, தலைவர் துர்க்காதேவி*


*தேவஸ்தானம் தெல்லிப்பழை*

## மனிதநேயத்தை வளர்க்கும் முதல் பத்திரிகை வலம்புரி

வலம்புரியின் ஆறாம் ஆண்டு அகவை நிறைவு 20.12.2005 அன்று என அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தோம். நாம் வாழும் இன்றைய உலகில் பலவிதமான இயற்கையின் அனர்த்தங்கள் ஏற்பட்டுவருகின்றன. உலகில் எந்த நாடும் இதற்கு விதிவிலக்காக இல்லை. மக்கள் பலர் துன்பப்படுகின்றனர். இக்காலகட்டத்தில் மனிதநேயத்தை வளர்த்துவருவதில் வலம்புரி முன்னிடத்தைப் பெற்றுள்ளது. இப்பத்திரிகை தொடர்ந்து தனது சேவையை தமிழ்மக்களுக்கு வழங்கவேண்டும் என்பது அடியேனது பேரவா. எங்கள் நல்வாழ்த்துக்கள் வலம்புரியின் நிறுவனத்தார் யாவருக்கும் உண்டு.

இறைபணியில் **சுவாமி சித்ரூபானந்தா**

*ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை*



## - சமூகவழிப்படுத்தலில் தனித்துவம் -
## முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துரை

வலம்புரி நாளிதழின் ஆறாவது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

யுத்த நெருக்கடி, அச்சுப் பொருட்கள் பெறுவதில் உள்ள சிரமம், மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரம், தொலைத்தொடர்பு வசதிகள் அற்ற காலத்தில் உயர்ந்த இலட்சியமாக நடுநிலை தவறா நன்னெறி காக்கும் நோக்கைக் கொண்டு தொடங்கப்பட்டது வலம்புரி.

இப்பத்திரிகை தொடர்ச்சியாக பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்ட போதும் இலட்சியம், தன்னம்பிக்கை, பணியாளர்களின் அர்ப்பணிப்பு, சிறந்த முகாமைத்துவம் போன்றவற்றால் தடைபல தாண்டி இன்று அகவை 6 நிறைவெய்திய நிலையில் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் பார்க்கின்றது வலம்புரி.

பல துறைகளில் வளரும் என்ற நம்பிக்கையும், வளரவேண்டும் என்ற விருப்பமும் மக்களிடையே காணப்படுகிறது.

இப்பத்திரிகையின் பணி பராட்டுக்குரியது. மக்களுக்கு செய்திகளையும், தகவல்களையும் வழங்கிவருவதுடன், அவர்களின் பல்துறைசார் தேவைகளையும் நிறைவேற்றி வருகிறது. சமூக உணர்வுகளுக்கும், கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பதுடன்- கருத்தேற்றம், கருத்துருவாக்கம் ஆகிய பணிகளில் நின்று சமூகத்தை நல்வழி நடத்தலில் வலம்புரி சிறப்பாகச் செயற்படுகிறது.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் போன்ற வெகுசனத் தொடர்பு சாதனங்கள் ஒன்றுக்கொன்று போட்டியாக இருப்பினும் அவையாவும் தத்தம் வழிகளில் வேகமாக வளரும்போக்கே இன்று காணப்படுகின்றது.

இவ்வகையில் சமூக - பொருளாதார அபிவிருத்திக்கு பிரதேச பத்திரிகைகளின் தேவை முன்னர் என்றுமில்லாத அளவிற்கு இப்போது உணரப்படுகின்றது.

இந்நிலையில் வடபகுதியின் அபிவிருத்திக்கு வலம்புரியின் பணி மிகு முக்கியமானது. இதனை வலம்புரி சிறப்பாகச் செய்ய வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**

*சிரேஷ்ட புவியியல் பேராசிரியர்*

*முன்னாள் துணைவேந்தர்.*



## - நடுநிலைதவறாச் சிறப்பு -
## யாழ். மாநகர ஆணையாளரின் வாழ்த்துச் செய்தி

வலம்புரிப் பத்திரிகை தனது 06 ஆவது வயதைப் பூர்த்திசெய்தமையை முன்னிட்டு பிரத்தியேகமாக வெளியிடப்படும் சிறப்பிதழுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றின்ன வழங்குவதில் அகமிக மகிழ்கின்றேன்.

உள்நாட்டு யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வலம்புரி நாளிதழ் பலவிதமான இடையூறுகள் மற்றும் இடர்களைத் தாண்டி ஏழாவது வயதில் காலடிவைப்பதை ஒரு சாதாரண நிகழ்வாகக் கொள்ளமுடியாது.

அதனை எதிர்நீச்சல் என்றே துணிந்து கூறலாம். பக்கச்சார்பின்றி நடுவுநிலையில் நின்று அனைத்துவிதமான செய்திகளையும் மிகுந்த அடக்கத்தோடு எளியமுறையில் வெளியிட்டுவருவது வலம்புரியின் சிறப்பம்சமாகும்.

அதிக எண்ணிக்கையான வாசகர்களை தன்னகத்தே ஈர்த்து பத்திரிகைத் தர்மத்தின் வழியில் நின்று, எமது மண்ணில் நல்லதொரு தினசரிப் பத்திரிகையென அனைவரும் போற்றிப்புகழ, வலம்புரி வளர்ந்தோங்க வேண்டுமென மனதாரவேண்கின்றேன்.

**சீ.வீ.கே.சிவஞானம்**

*மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.*

# வலம்புரியின் 7வது ஆண்டு நிறைவு
# ஆவணிச் சிறப்பிதழ் – 20.12.2005


அனைத்து வகைப் புடவைகளையும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள கைராசியான ஸ்தாபனம்

சர்வதேச கடன் அட்டைகள் ஏற்கப்படும்

சீமாட்டி புடவைக்கடல்





கிளைகள்: மங்கை சில்க்ஸ்
மொடேர்ன் மாக்கற்
(இல.15, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்).
(இல.122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்).
T.P: 222 2196 Fax: 222 2102

வலம்புரி பத்திரிகை இன்னும் பல ஆண்டுகள்
தொடர்ந்து வெளிவர வாழ்த்துகின்றோம்!
பலசரக்குப் பொருட்கள், மிக்ஷர் தயாரிப்பிற்கான பொருட்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

ஜெகன் களஞ்சியம்

இல.285, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் T.P: 021 222 5035



ஏழாவது ஆண்டில் காலடி வைக்கும் வலம்புரி பத்திரிகையின் சேவை மேலும் தொடர வாழ்த்துகின்றோம்!
நிறப்பூச்சு ( PAINT) சுண்ணாம்பு, கலர்ப்பவுடர்கள், கட்டடப் பொருட்களும் விற்கப்படும்.

வேல் முருகன் வணிக நிலையம்



VALE MURUGAN TRADERS

56/A மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

FedEx Express அனுசரணையுடன் FedEx Express
திருமுருகன் கொம் நெற்றின் பரிசு மழை
05-12-2005 முதல் 15-01-2006 வரை

எமது நிறுவனத்தின் மூலம் நத்தார், புதுவருட, பொங்கல் தினங்களை முன்னிட்டு உங்கள் உறவுகளுக்கு துரித கதியில் கடிதங்கள், உணவு, உடை, V.D.O பிரதி மற்றும் அன்பளிப்புப் பொருட்களை அனுப்புவோரின் பற்றுச்சீட்டு இலக்கங்கள் குலுக்களின் மூலம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

முதலாம் பரிசு – தங்க நாணயம் மற்றும் பெறுமதி வாய்ந்த
10 ஆறுதல் பரிசுகள்

மற்றும் 20%கழிவு

சுவிற்சர்லாந்துக்கான 5Kg பொதி ஒன்றிற்கு 1Kgக்கான கட்டணம் 650/=. லண்டனுக்கான 5Kg பொதி ஒன்றிற்கு 1Kg க்கான கட்டணம் 500/=. ஐரோப்பிய நாடுகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். Tel - 021 222 78
Fax - 021 222 78

46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
Tel - 021 222 7560 Fax - 021 222 7310

36, செல்லப்பிள்ளையார் கட்டடம்
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.
Tel - 021 226 4252
Fax - 021 226 4253

வடிக்கையாளர்களுக்காக தினசரி காலை
7.00 மணிமுதல் இரவு 10.00 மணி
வரை எமது சேவை நடைபெறுகின்றது
யாழ்.நகரில் இவை அனைத்தும்
திருமுருகன் கொம் நெற்றில் மட்டும்.

குகன் தொலைத் தொடர்பகம்
186, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Tel - 021 222 2027 Fax - 021 222 2993

வலம்புரியின் சேவை மென்மேலும்
தொடரவேண்டும் என வாழ்த்துகின்றோம்!

SIVADHARSHEN

மின்சார உபகரணங்களின் முகவர்கள்



எஸ்லோன் பைப் வகைகள், நீர் தாங்கிகள், மின்சார உபகரணங்கள், துவிச்சக்கரவண்டி, துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் என்பவற்றை தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சிவதர்ஷன்

DEALERS IN ELECTRICAL ACCESSORIES, S-LON PIPES & FITTINGS,
AND BICYCLE & BICYCLE SPARE PARTS.
394, Clock Tower Road, Jaffna.
Tel: 222 2417

TILKO HOLIDAYS (PVT) LTD




எம்மிடம்

- ✦ நவீன வசதிகள் கொண்ட குளிரூட்டப்பட்ட விசாலமான அறைகள் ✦ Hot, Cool Water குளியலறைகள்
- ✦ சிறுவர்கள் மகிழ்ச்சியுற Swiming pool வசதி ✦ கீழைத்தேச, மேலைத்தேச சுவைமிக்க உணவுகள், கடல் உணவுகளும் உடனுக்குடன் தயாரித்துப் பரிமாறப்படும்.
- ✦ தங்கியிருப்போர் மனதைக் கவரும் வகையில் அமைந்துள்ள புற்தரைகள், பூந்தோட்டம், வட்டக் குடில்களும்
- ✦ சுற்றுலாப் பயணிகளுக்கான வாகன வசதிகளும்
- ✦ இவற்றுடன் பயிற்றப்பட்ட எமது பணியாளர்களின் கனிவான பராமரிப்பும், இன்முகத்துடன் கூடிய சேவைகளும்.

இவற்றைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

TILKO HOLIDAY'S (PVT) LTD
HOTELS AND GUEST HOUSES
JAFFNA CITY HOTEL.
NO. 70/6, K.K.S. ROAD, JAFFNA.
Tel : 021 222 5969 Fax: 021 222 7291
E-mail: tilkoholidays @ yahoo.com
Web: www.tilkoholidays.com






LONDON OFFICE:
213, HIGH STREET NORTH,
EAST HAM LONDON E6 1jG
Tel: (++44) 020 8472 0029
Fax: (++44) 020 8503 5996
Mobile: (++44) (0)7957400 777.

BRANCHES:
BOUGAIN VILLA GUEST HOUSE
305, Main Street, Jaffna.
PALM VILLA GUEST HOUSE
114, Kandy Road, Jaffna.
MOUNT LA VILLA
65, Sangamitta Avenue, Mt.Lavinia.
Tel: 011 2713803, 011 4216428
SANDIYA VILLA
Lower Road,
Trincomalee.



சீன முறையில் சங்குப்பற்களைக் கட்டிக்கொள்ள
மிதப்புப் பற்களை கிளிப் போட்டு சீரமைத்திட
இலவச கண்பரிசோதனை செய்து கொள்ள
பல் சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற்றிட
தரமான மூக்குக் கண்ணாடிகளை அதி நவீன பிறேம்களில் செய்து கொள்ள
சண் கிளாஸ், கூலிங்கிளாஸ் வகைகள், பிளாஸ்ரிக் போடோகிறே லென்ஸ் வகைகளை மலிவு விலையில் பெற்றிட...





இல.544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3461

துஷா பல்மூக்குக் கண்ணாடியகம்

# எழுதுகோலின் சக்தி

நீர்வைமணி



இந்த உலகினையே ஆட்டிப்படைக்கும் சக்திகளுள் எழுதுகோல் தனிப்பலமும், பெருமையும் சிறப்பும் வாய்ந்ததொன்றாகும். இன்று எழுதுகோல் என்றாலே பலருக்கும் தெரிவதில்லை. பேனா என்றால்தான் எல்லோரும் புரிந்துகொள்வார்கள். இந்தப் பேனாக்களும் ஊற்றுப்பேனா, தடிப்பேனா, பவுண்டன்பேனா, போல்ப் பெயின்ற் பேனா எனப் பலவகையாக இன்று பாவனையில் இருப்பதைக் காணலாம்.

மனித குலமானது தன் மன எண்ணங்களை உணர்ச்சி ஒலியாலும், சைகைகளாலும், ஓவியங்கள் வரைதலாலும் பின் மெல்லமெல்ல ஒலி வடிவங்களாலும் அதிலிருந்து படிப்படியாக வரிவடிவங்களாலும் வளர்ந்துதான் பின் எழுதப்படவும் பின் எழுதுகருவியைப் பயன்படுத்தவும் முன்னேறியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாகரிக வளர்ச்சியும், மனிதமன உணர்வுகளின் எழுச்சியும், இரசனையையும், கலையுணர்வுகளையும் ஏற்படுத்தின. இது தான் உளிகொண்டு கற்களில் கைவண்ணம் காட்டத்தொடங்கியது. இம்முயற்சியால் கல்லும் கதைபேசியது.

கல்வெட்டுக்களும், சிற்பங்களும் தான் மனிதனுடைய கைவண்ணத்தின் எழுதுகோலின் ஆரம்பமுயற்சியாகக் கருதக்கூடியதாக உள்ளது.

உளிகொண்டு எழுத்துக்களையும், உருவங்களையும் பொறித்தவர்கள் பின் எழுத்தாணிகொண்டு எழுத ஆரம்பித்தனர். எழுத்தாணியைப் பயன்படுத்தி மரப்பட்டைகளிலும், ஓலைகளிலும் எழுதினார்கள். எழுத்தாணிகொண்டு எழுதப்பட்ட ஏடுகளாகவே எமது பழைய புராணங்கள், இதிகாசங்கள், மருத்துவ, சோதிட ஆராய்ச்சிகள் யாவும் இருந்தன.

பண்டைப் புலவர்கள், குரு, சிஷ் யர்கள், மாணவர்கள் எல்லோரும் ஏடும், எழுத்தாணியும் கொண்டே எழுதியும், வாசித்தும் வந்தனர். எமது பொக்கிஷங்கள் பலவும் ஏட்டுச் சுவடிகளாகவே இருந்தன. தமிழர்களின் பொற்காலமாக எழுத்தாணியும், ஏடும் பயன்படுத்தப்பட்ட காலத்தைக் குறிப்பிடலாம்.

முதன்முதலில் சீனர்களும், எகிப்தியர்களும்தான் பச்சிலைச் சாறுகளை மையாகவும், ஒருவகைக் குச்சிகளை எழுதுகோலாகவும்கொண்டு எழுத ஆரம்பித்தனர். இதைவிடப் பறவைகளின் இறகுகளையும் எழுதுகோலாகப் பாவித்தனர்.

பண்டைத்தமிழ் மன்னர்களே மயிற்பீலியை எழுதுகோலாகப் பாவித்ததை நாம் பழைய நூல்களின் மூலம் அறியமுடிகின்றது. பழந்தமிழ் நாட்டில் மலைக்குறத்தியர் ஒருவகைப் பச்சிலைச் சாற்றினாலேயே பச்சை குத்தியும், அழகிய கோலங்களும் கீறியமையை நாம் நன்கு அறியலாம்.

விநாயகப்பெருமான் தனது ஒற் றைக் கொம்பை ஒடித்தே எழுதுகோலாகக் கொண்டு மகாபாரதத்தை எழுதியதாக இதிகாசம் சிறப்பாகக் கூறுகின்றது.

இளங்கோவடிகள்– மாதவி கோவலன் பிரிவாற்றாமையைப் பற்றித் தாழைமடலை ஏடாகவும், முல்லை அரும்பை எழுதுகோலாகவும்கொண்டு உருக்கமாக மடல் வரைந்து தன் தோழி வசந்தமாலையிடம் கொடுத்துத் தூது அனுப்பியதாக வரும் காப்பியம் பண்டைய எழுதுகோல் பற்றியும், மையைப் பற்றியும் நாம் நன்கு இரசித்து உணரவைக்கின்றதன்றோ.

கி.பி. 100 ஆம் ஆண்டிலேயே சீனரும், அதைத் தொடர்ந்து அ[illegible]யரும் காகிதம் செய்யும் முறையைக் கண்டுபிடித்தனர். ஆயினும் அதன்பின் மையொற்றவேண்டிய சிரமமும், குச்சிப் பேனாக்களின் சிரமும் தான் ஊற்றுப்பேனாவை கண்டுபிடிக்க உதவின. பல ஆண்டுகளாக இந்த ஊற்றுப் பேனாக்களே கண்ணைக் கவரும் விதத்தில் வண்ணவண்ணமாகவும், தங்கமுலாம் பூசியவையாகவும் பல பல பெயர்களுடன் நீடித்து எழுத்துலகில் இடம்கொண்டிருந்தன.

1888 ஆம் ஆண்டிலேதான் முதன்முதலாக இன்று நாம் பாவனையில் வைத்திருக்கும் எழுதுகோலான் போல் பொயின்ற் பேனா ஜான் ஜெலூடு என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. எழுதுகோல் காலத்துக்குக் காலம் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப பற்பல மாற்றங்களைக் கொண்டு மக்களின் இலக்கியத்தையும், அறிவாற்றலையும் வளர்த்ததுடன், உலகையே ஆட்டிப்படைக்கும் வல்லமைகொண்டதொரு பொருளாக மிக்க சக்தி உடையதாக விளங்குவதை எண்ணும்போது 'பேனாமுனை கூரிய வாளை ஒக்கும்' எனவும், 'பேனா முனையால் புதியதோர் உலகம் படைப்போம்' எனவும், 'ஆக்கவும், அழிக்கவும் வல்லமை கொண்டது பேனாமுனை' எனவும் ஆன்றோர் கூறிய வாக்குகள் என்றும் கவனத்திற்குரியன என்பதை உறுதிப்படுத்துவதாயிற்று.

இன்றைய உலகை ஆட்டிப்படைக்கும் புதினப் பத்திரிகைகள், நூல்கள் மற்றும் எழுத்தாக்கங்களுக்கு எல்லாம் மூல காரணமாக விளங்குவது இந்த எழுதுகோலேயன்றோ.

# தாய்மொழி மூலக்கல்வியும்...

...... பக்கத் தொடர்ச்சி

பலவேளைகளில் வேறுபட்ட அர்த்தத்தினைக் கொடுத்துவிடும் என்பதனை இன்று ஆய்வுகள் பல எடுத்துக்காட்டியுள்ளன. ஆகவே ஏற்கனவே குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணக்களுக்கு ஏற்ப தாய்மொழியே இதனைச் சாத்தியமாக்கும்.

கல்வி என்பது தனியே உயர் கல்வியையும், உயர் தொழில் வாய்ப்புக்களையும், தொழில்நுட்பங்களையும் அறிந்துகொள்வதல்ல. அடிப்படைத் தேவைகளை, விழுமியங்களை ஒரு பிள்ளை புரிந்துகொள்ளச் செய்தல் என்பதே இதில் முக்கியமானது.

மொழியியலாளர்களினதும், நரம்பியலாளர்களினதும் பல்வேறு ஆய்வுகள் மொழிக்கும், கற்றல் செயற்பாட்டிற்கும் இடையிலான தொடர்புகளை வெளிப்படுத்தியுள்ளன.

அவையாவன;

1. கற்பவருக்கு இயல்பாக விளங்குகின்ற மொழியில் பாடங்களை நடத்தும்போது கற்றலில் உச்சப்பயன் கிடைக்கிறது.

2. கற்பவருடைய கற்கை வழிமுறைக்கான மொழித்தேர்ச்சிக்கு அமைவாக கற்றல் பயனுடையதாக அமையும்.

3. ஒரு குறிப்பிட்ட மொழியில் நடத்தப்படும் கற்கையானது கற்கை விடயங்களை தொடர்புபடுத்துவதிலுள்ள சிறப்பின் அளவிற்கே தாக்கம் உடையதாக இருக்கும்.

இங்கு கற்றலுக்கு மையமாக இருப்பவன் மாணவன். ஆகவே இவை யாவும் தாய்மொழியினூடு சாத்தியமாகும்போது கற்றல் நோக்கங்களும்/ கல்வி நோக்கங்களும் சாத்தியமாகின்றன. இங்கு கற்போனுக்கான தெளிவான விளக்கம் இல்லாதுவிட்டால் கற்றல் நீடித்திருக்காது என்ற உண்மையும் புலப்படுத்தப்படுகின்றது.

## அந்நியமொழியின் (Foreign Language) அவசியம்

அந்நியமொழி ஒன்றின் அவசியம் பொதுவாக குடியேற்றங்களாவிருந்து விடுதலைபெற்ற நாடுகளில் வற்புறுத்தப்பட்டு வருவதனை இன்று அவதானிக்கமுடிகிறது.

விசேடமாக ஆங்கிலமொழி இதில் செல்வாக்குப் பெறுகின்றது. இப்போக்கினை இலங்கை, இந்தியா, ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் தெளிவாகக் காணமுடியும்.

நவகாலனித்துவத்தின் செல்வாக்கு கல்விமொழி வடிவில் இடம்பெற இன்று உலகமயமாக்கல் என்ற புதிய சிந்தனை கல்விமொழித் தீர்மானத்தில் செல்வாக்குச் செலுத்துவதனை குறிப்பிடத்தக்களவில் காணமுடிகிறது. உலகமயமாக்கல் என்ற எண்ணக்கரு திறந்த பொருளாதாரத்தை நாடுகளுக்கு இடையிலான சமூக, கலாசார பரிவர்த்தனையை அழுத்தி நிற்கின்றது.

உலகமயமாக்கல் கல்வியின் ஊடாகவே சாத்தியம். ஆங்கிலமொழியே உலக இணைப்பு மொழியாக, வர்த்தக மொழியாக, தொழில்நுட்ப மொழியாக இயங்குநிலையில் ஆங்கிலமொழி மூலக்கல்வியே வரவேற்கத்தக்கது என்றதோர் கருத்து இன்று வலுப்பெற்று வருகின்றது.

ஆயினும் இது எந்தளவில் ஏற்கத்தக்கது? கல்வியின் அடிப்படை நோக்குகள், தேவைகள் எவற்றை நிறைவேற்றவேண்டுமோ, எவற்றை நிறைவேற்றும்போது ஒருபிள்ளை, ஒரு சமூகம், ஒருநாடு ஆரோக்கியமான வளர்ச்சியைக் காணமுடியுமோ அவை முதலில் ஈடுசெய்யப்படவேண்டும்.

ஆகவே அடிப்படைகள் புறக்கணிக்கப்படுதல் என்பது 'அபிவிருத்தி' 'வளர்ச்சி' என்ற வார்த்தைகள் முழுமையானதாக்கப்பட உதவாது.

இன்று வளர்ச்சியடைந்த ஆசிய நாடுகள் (சீனா, யப்பான்) ஐரோப்பிய நாடுகள் (பிரான்ஸ், ஜேர்மன், ரஷ்யா) சிலவற்றை நோக்கினால் தாய்மொழியே கல்விமொழியாக இருக்கிறது.

இந்நாடுகள் உலகமயமாக்கலை எதிர்கொள்ளவில்லையா? தமது தாய்மொழியினை மென்மேலும் வளர்ச்சிபடுத்தி தொழில்நுட்ப விருத்தியை அடையவில்லையா?

ஆங்கிலம்தான் அபிவிருத்திக்கு சாதகமான மொழியென்றால் மேற்கூறப்பட்ட நாடுகளில் அபிவிருத்தி எவ்வாறு ஏற்பட்டது?

இந்நாடுகள் தத்தம் தாய்மொழியில் கற்பதனை, பேசுவதனைப் பெருமையாக நினைக்கும்போது ஒருசில நாடுகள் மட்டும் தாய்மொழி தவிர்ந்த ஆங்கிலத்தை/ ஏதோர் அந்நிய மொழியினூடான தொடர்பாடலுக்கு முதன்மை கொடுப்பதேன்? இவையெல்லாம் ஆங்கிலத்தை, அந்நிய மொழிக் கல்வியை வற்புறுத்துவோர் சிந்தனைக்குரிய விடயங்களாகும்.

இவ்விடத்தில் ஆங்கிலமொழி பற்றி இரவீந்திரநாத் தாகூர் கூறியதை சுட்டிக்காட்டுவது அவசியமானது.

ஆங்கிலமொழிக் கல்வியானது மக்களை உலகார்ந்த பிரஜைகளாக உருவாக்குமே தவிர உயர் அறிவும் பண்பாட்டுப் பேணுதலுமுடைய தரமுள்ள பிரஜைகளை நாட்டுக்கு அளிக்காது இங்கு கல்வியின் அடிப்படை நோக்கங்கள் சிதறடிக்கப்படுவதனை அறிகின்றோம்.

அதேசமயம் அந்நியமொழி ஒன்றின்/ இரண்டாம்மொழி ஒன்றின் (பெருமளவில் ஆங்கிலம்) அவசியத்தினை நாம் முழுமையாக நாம் புறக்கணிப்பதற்கும் இல்லை.

ஓரேமொழி அறிந்தவன் எதுவுமே அறியாதவன் ஆகின்றான் என்பதற்கேற்ப இன்னோர் மொழித் தேர்ச்சி என்பது ஒருபிள்ளை தான் தாய்மொழியினூடு பெற்றவற்றை மேலும் விருத்தி செய்ய உதவும்.

அதாவது மொழி என்பது ஒரு மனிதனின் சிந்தனை வளர்ச்சியடைய அடிப்படைக் கருவி.

சிந்தனை வளர்ச்சியின் ஊடாகவே மனிதன் எல்லாவிதமான வளர்ச்சியையும் காணமுடியும். ஒருமனிதன் தன் சொந்தமொழியின் ஊடான பாவனை, தொடர்பாடல் செயற்பாடுகளின் ஊடாகத்தான் சிந்தனை வளர்ச்சியைக் காணமுடியும். அதனை மேலும் வலுப்படுத்த அந்நியமொழி உதவும்.

ஆகவே ஆங்கிலத்தை/ இன்னோர் அந்நியமொழியை உரிய முறையில் இரண்டாம்மொழியாக்குவதன் ஊடாகப் பொருத்தமான வளர்ச்சியைக் ஒருமாணவன் அடையச் செய்யவேண்டுமேயொழிய ஆங்கிலத்தை கல்வி மொழியாக்குவதன் ஊடாக அல்ல.

இதனால் தாய்மொழியின் பங்கு கல்வியில் சரிவர உணரப்பட்டு கல்வி மொழிக் கொள்கைகள் வகுக்கப்படுவதும், சீராக நடைமுறைப்படுத்துவதும் மனிதன் வளமாக்கப்படுவதற்கான வாய்ப்புக்களை மேலும் அதிகரிக்கச் செய்யும். 'உங்கள் மொழிக்கு சவாலுடன்கூடிய ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுங்கள் அம்மொழி உங்கள் கோரிக்கைகளை, எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றியே தீரும். எப்பொழுதும் அது உங்களை ஏமாற்றாது. அம்மொழி அதன் மூலவளங்களை ஆராயும்'.

தேவையாவற்றை இரவல் வாங்கும் அல்லது தேவைக்கேற்ப புதிய சொற்களை உருவாக்கும். நீங்கள் எதிர்பார்க்கும் புதிய சூழ்நிலைக்கேற்ப தேவைகளுக்கு ஏற்ப செயற்படும் மொழியின் பயன்பாட்டுத் தன்மையே அதன் வளர்ச்சிக்கு அவசியம் என்ற மொழியிலாளர்களின் கருத்து இங்கு புறக்கணிக்கத்தக்கதல்ல.

# சிறுநீரகங்களின் தொழிற்பாடு....

(.!!ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணவு முறைகள் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும்.

பொதுவாக நாம் அதிகளவில் வேலை செய்கிற பொழுதோ உணவின் அளவைக் குறைக்கிற பொழுதோ உடல் மெலிவதை அவதானித்திருப் போம், உடல் நிறை எனும் அளவு கோல் சிறுநீரகம் செயலிழந்து உள்ளவர்களுடைய சக்தி தேவைகளுக்கேற்ப (உணவு) காபோவைதிரேற்று உள்ளெடுக் கப்படுகிறதா இல்லையா என்பதை அறிய உதவாது. ஏனெனில் உடம்பில் நீர்தேங்கி இருப்பின் அதுவும் உடல் நிறை அதிகரிப்பைக் காட்டும்.

***கீழே ஒரு மாதிரி உணவுப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது.***

**காலை உணவு**

பால் 1/2 கப்+ முட்டை 1 (வெள்ளைக்கரு)

இவற்றுடன் கீழே தரப்பட்ட உணவுகளில் ஒரு வகை எடுக்கலாம்.

பாண் ஒரு துண்டு 1/4 றாத்தல்
பணிஸ் :1
கஞ்சி :1கோப்பை
இடியப்பம் : 3
பிட்டு 1அல்லது 2 சில்லு
தோசை 1 அல்லது 2

இட்லி 1 அல்லது 2 (வழமையான அளவுகளில் மாஜரின், மார்மைட், பட்டர், சம்பல், சீனி, சொதி சேர்த்துக் கொள்ளலாம். பருப்பு ஒரு அகப்பை எடுக்கலாம்)

**மதிய உணவு**

சோறு 1/2கோப்பை
காய்கறிகள் வழமையானது
இறைச்சி/ மீன் ஒரு அகப்பை
அல்லது பருப்பு ஒரு அகப்பை

**இரவு உணவு**

காலை ஆகாரம் போலவே எடுத்துக் கொள்ளலாம். மிதமான சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்கள் உணவுகளில் சாதாரண அளவுகளில்உப்பைச்சேர்த்து சமைக் கலாம் .மிகையான சிறுநீரக செயலிழப்பு உள்ளவர்கள் உப்பைத் தவிர்க்க வேண்டும் . நீரிழிவு இல்லையவர்யின் இனிப்புப் பண்டங்களை தங்குதடையின்றி உண்ணலாம். நல்ல உணவூட்டல் முறைகளைப் பின் பற்றி ஆரோக்கியமாக வாழ்வோம்.

***சிறுநீரக செயலிழப்பின் போது பயன்படுத்தப்படும் மருந்துவகைகள்***

உங்களுக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டால் உங்களது சிறுநீரகங்கள் முன்பு தொழிற்பட்டது போல் தொழிற்படாது . எனவே நீங்கள் பயன்படுத்தும் சில மருந்துகள் பற்றி இங்கு விளங்கிக் கொள்வோம்.

**1. எவ்வளவு காலம் நான் இந்த மருந்தை உபயோகிக்க வேண்டும்?**

வைத்தியர் உங்களுக்கு சிகிச்சை முறை தொடங்கியதில்இருந்துதொடர்ந்து மருந்தை உபயோகிக்க வேண்டும். உங்களிற்கு மருந்துகளைப் பாவிக்கும் போது பக்க விளைவுகள் தோன்றுமிடத்து தயவு செய்து வைத்தியரையோ அல்லது மருந்து விநியோகத்தரையோ நாடுங்கள்.

**2.எப்போது நான் இந்த மருந்தை உபயோகிக்க வேண்டும்**

நீங்கள் உங்கள்மருந்தை வைத்தியரின் ஆலோசனைக் கமைய அவர் கூறும் காலத்தில் எடுக்கவேண்டும். உதாரணமாக சில மருந்துகள் உணவு உட்கொண்ட பின்பு அல்லது உணவு உட்கொள்ள முதல் எடுக்க வேண்டும். சில மருந்துவகைகள் காலை வேளைகளில் அல்லது மாலை வேளைகளில்எடுக்கப் படவேண்டும் . உங்களுக்கு சரி யாகப் புரிந்து கொள்ளாதவிடத்து மருந்துகள் உபயோகிக்கும்கால அட்டவணையை மருந்து விநியோகஸ்தரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளை உபயோகிப்பதால் பக்க விளைவுகள் ஏற்படுவதை இயலுமான வரை குறைக்கலாம்.

**3. நான் பல விதமான மருந்தை உபயோகிக்க வேண்டியுள்ளது. நான் அனைத்து வகைகளையும் ஒரே தடவையில் உட்கொள்ள இயலுமா?**

அனைத்து மருந்துகளையும் ஒரே தடவையில் எடுக்க இயலாது. ஏனெனில் சில சமயங்களில் ஒன்றாக உட்கொள்ளும் போது ஆபத்து ஏற்பட வாய்ப்பு உண்டு. எந்தெந்த மருந்துகளை ஒரேநேரத்தில் உபயோகிக் வேண்டும்என்றஆலோசனையை வைத்தியரிடம் அல்லது மருந்து விநியோகஸ்தரிடம் கேட்டுப் பெறவேண்டும்.

**சிறுநீரக செயலிழப்பு ஏற்படும் போது பல்வேறு வகையான மருந்து வகைகள் உபயோகப்படுகின்றன அவையாவன:**

★ **சிறுநீரை வெளியேற்றக்கூடிய மருந்துகள்** (Diuretics)


இந்த மருந்து வகைகள் உடலில் இருந்து மேலதிகமாக உள்ள நீரைவெளியேற்றச் செய்கின்றன. கால்களில் வீக்கம் ஏற்படும் போது , சுவாசிப்பதில் கஸ்டம் ஏற்படும்போது இந்த மருந்துகளைஉபயோக்க வைத்தியரால் ஆலோசனை வழங்கப்படும். இம் மருந்துகள் சில வேளைகளில் கூடிய நீரிழப்பு, இதயத்துடிப்பில் மாற்றம் ஆகிய பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்.

அப்போது வைத்திய ஆலோசனையை பெறவும். இந்த வகுப்பைச் சேர்ந்த மருந்துகள் Lasix, HCT, Aldactone.

★ **என்புகளை உறுதியாக்கும் மருந்துகள்:**

சிறுநீரக செயலிழப்பு ஏற்படும்போது உடலில் கல்சியம் , பொசுபேற்று போன்ற கனியுப்புக்களின் மட்டங்களைப் பேணுவதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை என்பதால் இவற்றை சீர்ப்படுத்த மருந்துகள் உபயோகிக்கப்படுகின்றன. இந்த வகுப்பைச் சேர்ந்த மருந்துகளாவன:

Calcitriol , Rocaltrol, 1-Alfa, Reju calcium, Calcium carbonate.



குருதி சுத்திகரிக்கும் (Dialysis) இயந்திரம்

★ ***குருதியின் கீமோகுளோபின் (HB) அளவைப் பேண உதவும் மருந்துகள்***

சிறுநீரக செயலிழப்பின் போது குருதிச் சோகை ஏற்படுவது இயல்பு. இதற்குக் காரணம் செங்குருதிச் சிறுதுணிக்கைகளை உற்பத்தி செய்யும் Erythropoietin எனும் ஓமோன் சிறுநீரகத்தால் குறைந்தளவு உற்பத்தி செய்யப்படுதலாகும். நீங்கள் இதை நிவர்த்தி செய்யப்பயன்படும் மருந்துவகைகள்

உ+ம்:-Erythropoietin, Iron tablets, Iron injection

★ ***குருதியமுக்கத்தை கட்டுப்படுத்தும் மருந்துகள்***

சிறுநீரக செயலிழப்பின் போது குருதியமுக்கம் அதிகரிக்கின்றது. இதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சிறுநீரகம் பழுதடைவதை தாமதப்படுத்தலாம். எனவே, வைத்திய ஆலோசனையின் படி குருதியமுக்கத்தைக் கட்டுப்படுத்தும் மருந்துகளை பாவிக்க வேண்டும்.சில வேளைகளில் மருந்துகள் உபயோகிக்கும் போது குருதியமுக்கம் கூடுதலாக குறைவதால் தலைச்சுற்று, மயக்கம் ஏற்படலாம். அப்போது வைத்திய ஆலோசனையைப் பெறலாம். வழமையாகப் பயன்படுத்தும் மருந்துகள். Losartan pottasium, Captopril, Enalapil, AIdo met, Aten olol, Hydralazine, HCT, Nife dipine, Verapamil இவற்றை தனியாகவோ அல்லது சேர்த்தோ பயன்படுத்தலாம்.

★ ***விற்றமின்கள்*** (Vitamins)

உங்கள் உடலில் குறைபாடாக உள்ள விற்றமின்களை மருந்துகள் மூலம் மீளச் சரிசெய்வது மிக முக்கியமான விடயம். இதில் விற்றமின் D, Folate என்பன அடங்குகின்றன. உங்கள்வைத்தியர் எந்தெந்த விட்டமின்களை எடுக்கவேண்டும் என்பதற்குரிய ஆலோசனையை வழங்குவார்கள்.



யாழ். வைத்தியசாலையில் தாதி ஒருவர் சிறுநீரக செயலிழப்பால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு குருதி சுத்திகரிப்பில் ஈடுபட்டுள்ளார்.

★ ***Hepatitis B தடுப்பூசி***

உங்களுக்கு சில வேளைகளில் இரத்த மாற்றீடு, மற்றும் குருதிச் சுத்திகரிப்பு செய்ய வேண்டியிருப்பதால் குருதியால் பரவும் Hepatitis B நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இதைத் தடுப்பதற்கு Hepatitis B தடுப்பூசி போட வேண்டும்.வைத்திய ஆலோசனையைப் பெறவும்.

***குறிப்பு:-***

நோயாளிகள் தாங்கள் பாவிக்கும் மருந்துகளை [illegible] குப்பிகளில் போட்டுஎடுக்கும் மருந்தின் பெயர், அளவுஒரு நாளைக்கு எத்தனை தடவை எடுப்பது என்பதைக் குறித்து வைத்தல் நன்று.

**குறிப்பிட்ட அளவு சிறுநீரக செயலிழப்பு (Chronic Renal Failure) மற்றும் இறுதிநிலை சிறுநீரக செயலிழப்பு (End stage Renal Failure) ஏற்படும் போது செய்யக்கூடிய சிகிச்சை வழிகள்.**

**குறிப்பிட்ட அளவு *சிறுநீரக செயலிழப்பு என் றால் என்ன?***

சிறுநீரகங்கள் உடல் சமனிலையைப் பேண முடியாதுபோகும் நிலையாகும். இதன் போது சிறுநீரகங்கள் தொடர்ச்சியான, மீள முடியாத பாதிப்பிற்கு உள்ளாகின்றது .ஒரு நிலையில் அது முற்றாக செயலிழக்கின் றது. இது இறுதிநிலை சிறுநீரக செயலிழப்பு எனப் படும் . (End stage Renal Failure)

***சிறுநீரகம் பழுதடையும் போது செய்யக்கூடிய சிகிச்சை முறை என்ன?***

ஓரளவு சிறுநீரகம் பழுதடைந்திருக்கும் போது இதற்குக் காரணமான காரணியைக் கண்டுபிடித்து அதற்கு சிகிச்சையளித்தல் மற்றும் உணவுக் கட்டுப்பாடு,தேவையான மருந்து வகைகளைப் பயன்படுத்தலாம்.

***சிறுநீரக செயலிழப்பிற்கான சிகிச்சை முறை என்னுடைய சிறுநீரகங்களை பழைய நிலைக்கு கொண்டுவருமா?***

இல்லை, சிகிச்சையானது சிறுநீரகங்களை பழைய நிலைக்குக் கொண்டு வராது. ஆனால் இது சிறுநீரகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களை தாமதமாக்குவதோடு இறுதி நிலை சிறுநீரக செயலிழப்பு ஏற்படுவதையும் தாமதமாக்கலாம்.

இறுதி நிலை சிறுநீரக செயலிழப் பிற்கான சிகிச்சை வழிகள் யாவை? இருவழிகள் உண்டு.

1. சிறுநீரக மாற்றீடு (Kidney Transplantation)
2. குருதி சுத்திகரிப்பு (Dialysis)

★ **. இறுதிநிலை சிறுநீரக செயலிழப்பிற்கான குருதிச்சு த்திகரிப்பு சிகிச்சை முறையானது எனது சிறுநீரகங்களை பழைய நிலைக்கு கொண்டு வருமா?**

இல்லை அவர்கள் உயிர்வாழும் காலம் வரைக்கும் குருதிச் சுத்திகரிப்பு (Dialysis) குறித்த இடைவேளைகளில் செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

★ ***குருதிச் சுத்திகரிப்பு*** (Dialysis) ***என் றால் என்ன?***

குருதியிலிருந்துகழிவுகளையும் மேலதிக நீரையும் வெளியேற்றுவதற்கான சிகிச்சைமுறைஆகும். இது இருவகைப் படும்.

(A) Haemodialysis (HD)
(B) Peritoneal dialysis(PD)

★ ***குருதிச் சுத்திகரிப்பு*** (Haemo dialysis) ***என்றால் என்ன?***

உடலிற்குவெளியாகஉபகரணத்தைப் பயன்படுத்தி குருதியை சுத்திகரிக்கும் முறை ஆகும். இதற்கு 4/5 மணித்தியாலங்கள் தேவைப்படும். ஒரு கிழமையில்2 அல்லது 3 தடவைகள் இதனை மேற்கொள்ளவேண்டும்.

வைத்தியசாலையில் இச்சிகிச்சை முறையானது அளிக்கப்படும். இச் சிகிச்சையானது நீண்ட காலம் தேவைப்படுவதால் வைத்தியசாலையில் மட்டுமில்லாமல் வீடுகளிலோ/dialysis centre களிலோ மேற்கொள்ளப்படலாம்.

★ Peritoneal dialysis (PD) **என்றால் என்ன?**

வயிற்றுக்கு உட்புறமாக இயற்கையாகக் காணப்படும் மென்சவ்வைப் பயன்படுத்தி குருதியை சுத்திகரித்தல், இதை தொடங்குவதற்கு முன்னர் அதற்கான விசேட dialysis குழாயை (tube) வயிற்றினுள் உட்புகுத்தி; (dialysis) ஐ தொடங்கலாம். விசேடமாக தயாரிக்கப்பட்ட திரவத்தை வயிற்றுனுள் இக் குழாய் மூலம்செலுத்த வேண்டும். இத்திரவமானது வயிற்றின் உட்புறம் இருப்பதோடு, இது நாளொன்றுக்கு 4அல்லது 5 தடவைகள் புதுப்பிக்கப்பட வேண்டும் .ஒவ்வொரு நாளும் இது மேற்கொள்ளப்படவேண்டும். இச்சிகிச்சை முறையானது வீடுகளிலோ, வேலை செய்யும் போதும் பயன்படுத்தலாம். நோயாளி அவரதுகுடும்ப அங்கத்தவர்கள் இச்சிகிச்சையை செய்வதற்கான முறையை அறிந் திருத்தல் வேண்டும்.

*மேலதிக விபரங்களுக்கு உங்கள் வைத்தியரையோ அல்லது (Dialysis Unit) தாதி உத்தியோகத்தரையோ நாடவும். யாழ். வைத்தியசாலை.*

# வலம்புரியின் வேது ஆண்டு நிறைவு
# ஆவணச் சிறப்பிதழ் – 20.12.2005




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் நாளிதழே வாழ்க!

அசல் 22 கரட் தங்க நகைகளைக் கைதேர்ந்த நுட்பவல்லுநர்களால்

மனதைக் கவர்ந்த வடிவங்களில் செய்துகொள்ள இன்றே நாடுங்கள்!

**திருவருள் நகைமாடம்**

T.P: 0776181416

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி.



எம்முடன் இணைவோர் உயர்கல்வி பெறுவது நிச்சயம்

**விக்னா** கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். Re. No. 12141

**A/L 2008** கலை, வர்த்தக வகுப்புக்கள் பிரிவு 1

ஆரம்பம் 05.01.2006 8.00 மணி

| | | | |
|---|---|---|---|
| கணக்கீடு | பொருளியல் | வணிகக் கல்வி பிரிவு11 | வணிகக் கல்வி பிரிவு 1 |
| திரு.பாலவாசன் | திரு.உதயன் | திரு.முரளி | திரு.யசோ |
| அளவையியல் | தமிழ் பிரிவு 1 | தமிழ் பிரிவு - 11 | இந்துநாகரிகம் |
| திரு.சயந்தன் | திரு.குழந்தை | திரு.லிங்கம் | திரு.பத்மராஜா |
| புவியியல் | இந்துசமயம் | வரலாறு | அரசியல் |
| திரு.பாபு | திரு.N.T தரன் | திரு.பத்மன் | திரு.ஸ்ரீரங்கநாத் |
| கிறிஸ்தவம் | நாடகமும் அரங்கியலும் | | |
| திரு.வசந்தன் | திரு.மதி | | |

* யாழ் நகரில் கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தலை சிறந்த நிறுவனம்.
* எமது நிறுவனத்தில் சென்ற ஆண்டு கல்வி கற்ற மாணவர் களுக்கு அனுமதிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.



காஸ், காஸ் செற்களையும், மோட்டார் சைக்கிள்களையும்,

உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

**ஹரனி மோட்டோர்ஸ் அன் ஹாட்வெயார்**



HARANI MOTORS & HARDWARES

காஸ், காஸ் செற் விற்பனையாளர்

தொலைபேசி: 021 222 2850 64, ஸ்ரான்லி வீதி,

தொலைநகல்: 021 222 2850 யாழ்ப்பாணம்.





**தயா நகைப் பூங்கா**

தங்க நகை வியாபாரம்

அழகிய கலைநயம்...
எழிலுறு தொழில்வளம்...
உயர் தரமிகு தங்க நகைகளுக்கு....!

22 கரட் தங்க நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

213c, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.




சுத்தமாகவும், சுகாதாரமாகவும், நறுமணங்கமழும் சுவையில் தயாரிக்கப்படும் உணவுகளை உண்டு மகிழ்ந்திட...

**கண்ணன் லொட்ஜ்**

இல.06, சேர் பொன் இராமநாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.



வலம்புரியே! நீ பல்லாண்டு பல்லாண்டு நீடு வாழ்க





# COOL AIR'S

GALANZ AIR CONDITIONERS (SPILT TYPE)

**எமது சேவைகள்**

Galanz

*தொலைத் தொடர்பு நிலையங்கள்
*வர்த்தக நிலையங்கள்
*கணனி நிறுவனங்கள்
*காட்சி அறைகள்
*வீடுகள்

ISO 9001 தரச் சான்றிதழ் பெறப்பட்டது

பொருத்துதல் இலவசம்
மூன்று வருட உத்தரவாதம்
(Compressor 3 years, Body 1 year) விற்பனைக்கு பிந்திய சேவை மூன்று மாதத்திற்கு ஒருமுறை
H.F.C (வாயு பயிற்சி பெற்ற (U.N.E.P), (N.O.U) United Nations Environment programme,
National Ozone Unit
தொழில்நுட்பவியலாளர்களால் குளிரூட்டிகள் பரிசீலனை செய்யப்படும்.

இவைகளுக்கேற்ற குளிரூட்டிகள்

| வகை | விலை |
|---|---|
| 9000 BTU | 43,500/= |
| 12000 BTU | 53,500/= |
| 18000 BTU | 68,500/= |
| 24000 BTU | 88,500/= |

மேலதிக விபரங்களுக்கு: **COOL AIR'S**

இல. 151 1/4, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 07777 38888 , 0713080808

மேற்குறிப்பிட்ட விலை கையிருப்பு உள்ளவரை மட்டுமே





நம்பிக்கை – நாணயம் – உத்தரவாதத்துடன் தரம் மிக்க அசல் 22 கரட் தங்க நகைகளைப்
பெற்றுக்கொள்ள யாழ். நகரில் சிறந்த ஸ்தாபனம்.

**வினோ நகைப் பூங்கா**



185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Phone / fax:- 021- 222 2024

# சிறுவர்களின் பெரிய பிரச்சினை அவர்கள் பெற்றோர்கள்தான்



இன்று நம் யாழ்.மண்ணில் அதிகமாக எல்லோராலும் உச்சரிக்கப்படுகின்ற ஒரு வார்த்தை 'சிறுவர் பாதுகாப்பும் சிறுவர்களுக்கான உரிமையும் தான்'. இந்த இரண்டு வார்த்தைகளைக் கேட்டவுடன் நம் நினைவிற்கு வருவது அரசசார்பற்ற நிறுவனமான சிறுவர் பாதுகாப்பு இலங்கை(Save The Children Srilanka) என்றால் மறுப்பதிற்கில்லை. கொழும்பைத் தலைமைப்பீடமாகக் கொண்டு யாழ்ப்பாணம் கோவில் வீதியில் கிளை அலுவலகத்தின் ஊடாக சிறுவர்களின் முன்னேற்றத்தை முழு மூச்சாகக் கொண்டு இயங்கி வரும் இந்நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளரும், ஏறக்குறைய 15 வருடங்கள் இப் பணியில் ஈடுபட்டுவருபவருமான க.மகேந்திரன் வலம்புரிக்காக வழங்கிய செவ்வி.

***கேள்வி: சிறுவர் பாதுகாப்பு இலங்கையின் ஆரம்பம் பற்றிச் சொல்லுங்கள்.***

*பதில்:* ஐரோப்பாவில் 1919ஆம் ஆண்டில் முதலாம் உலகப் போரைத் தொடர்ந்து சிறுவர் பாதுகாப்பு மையம் ஆரம்பமானது. இதன் தோற்றத்திற்கு வித்திட்டவர்கள் டொறொதி புக்ஸ்டன், இக்லன்ரனி ஜெப் ஆகிய இரண்டு சகோதரிகள்தான். போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவும் நோக்கில் லண்டனில் ஆரம்பிக்கப்பட்ட இதன் பணி உடனடியாக ஜேர்மனி, ஒஸ்ரியா, பிரான்ஸ், ஹங்கேரி, பெல்ஜியம், ரேக்கியில் உள்ள ஆர்மேனியன் அகதிகள் போன்றோருக்கு உதவி புரியும் நோக்கில் விரிவுபடுத்தப்பட்டது.

***கேள்வி: இலங்கையில் இதன் பணி எப்போது ஆரம்பமானது?***

*பதில்:* மட்டக்களப்பில் ஏற்பட்ட பெரும்புயலைத்தொடர்ந்து பாதிக்கப்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு உதவும் நோக்கில்தான் சிறுவர் பாதுகாப்பு மையம் இலங்கையில் கால் பதித்தது. அதன்பின் அதன் கிளைகள் ஒவ்வொரு இடமாகத்திறக்கப்பட்டன.

***கேள்வி: உங்கள் பணி பற்றிச் சொல்லுங்கள்...?***

*பதில்:* பதினெட்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பதே எங்கள் முக்கிய பணி. அவர்களின் வாழுதல், பாதுகாப்பு, பங்களிப்பு, அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளில் உதவியாக இருத்தலும் அவர்களை ஆற்றுப்படுத்தலுமே எங்கள் குறிக்கோள். சிறுவர்களோடு சேர்ந்து அவர்கள் மூலமாக ஒரு நல்ல உலகத்தைக்கட்டியெழுப்பவும் வருங்கால சந்ததியினரை வளப்படுத்தவும் நாங்கள் பாடுபடுகின்றோம்.

***கேள்வி: யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் உங்களது பணி எதனை நோக்கி இருந்தது?***

*பதில்:* 1990 களில்தான் யாழ்ப்பாணத்தில் சிறுவர் பாதுகாப்பு மையம் தன் பணியைத் தொடங்கியது. அந்த நேரத்தில் யுத்தத்தின் பிடியில் மக்கள் இருந்ததால் மீள்குடியிருப்பு, விதவைகள் மறுவாழ்வு போன்றவற்றிற்கு நாங்கள் உதவி செய்தோம். பின்னர் படிப்படியாகப் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி, 18 வயதுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சிறுவர்களையுடைய குடும்பங்களுக்கு உதவி புரிதல் எனச் சிறுவர் பாதுகாப்புமையத்தின் பணி பரந்துபடலாயிற்று.

***கேள்வி: உங்கள் அண்மைக்கால பணிகள் எந்த வகையில் இருக்கின்றது?***

*பதில்:* முக்கியமாக அவற்றை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான உதவி வழங்கும் திட்டம்.
2. சிறுவர்களுக்கான கல்வி வழங்கும் திட்டம்.
3. சமுதாய முன்னேற்றத்திற்கும் சமாதானத்திற்குமான பணிகள்.
4. அவசர உதவி.

***கேள்வி: எந்தவகையில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உதவுகிறீர்கள்?***

*பதில்:* இதனை நாங்கள் பல வழிகளின் ஊடாக செய்து வருகின்றோம். அவற்றுள் பெரும்பாலானவை இங்குள்ள ஏனைய அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்களுடன் இணைந்ததாக அமைந்திருக்கும். போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் கண்டு அவர்களின் தேவைகளையும் தேடல்களையும் பொறுத்து எங்கள் பணி அமைந்திருக்கும்.

***கேள்வி: எப்படி போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் கண்டு கொள்கிறீர்கள்?***

*பதில்:* பெரும்பாலும் எங்கள் பணி கிராமங்களில் உள்ள சிறுவர்களை இலக்குவைத்து அமைந்திருக்கின்றது. எனவே, நாங்கள் ஒரு குழுவாக கிராமங்கள் தோறும் சென்று நேரடியாகப் பார்வையிட்டு அதன் அடிப்படையில்தான் சிறுவர்களைத் தெரிவு செய்கின்றோம். தெரிவு செய்யப்பட்ட, குறிப்பிட்ட சிறுவனுக்கோ சிறுமிக்கோ உடனடியாகத் தேவைப்படுவது என்ன என்பதை கண்டறிந்த பின்னர் எங்கள் பணி தொடரும்.

***கேள்வி: இதனைவிட வேறு எந்த வகையில் உங்கள் பணிக்கான திட்டங்கள் அமைந்திருக்கின்றன?***

*பதில்:* நாங்கள் புதிதாக 'சமுதாய மக்கள் நலன் திட்டம்' ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கின்றோம். இத்திட்டத்திற்கமைய ஒரு கிராமத்திற்கு எங்கள் குழுவினர் சென்று அக்கிராம மக்களின் உதவியோடு சூழ்நிலைப் பகுப்பாய்வு செய்வார்கள். அதில் கிடைக்கும் பெறுபேற்றைக் கொண்டு அக்

**எந்தச் சிறுவனாவது இன்னொரு சிறுவனையோ, சிறுமியையோ துஷ்பிரயோகம் செய்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பெரியவர்கள்தான் அவர்களை துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.**

கிராமத்தில் உள்ள சிறுவர்களின் முக்கியமான பிரச்சினைகள் யாவை என்பதைக் கண்டறிவோம். அதன்பின் அப்பிரச்சினைகளுக்கு விடைகாண முயற்சிப்போம்.

***கேள்வி: இதுவரை நீங்கள் சூழ்நிலைப் பகுப்பாய்வு செய்த கிராமங்களில் மக்களின் ஒத்தழைப்பு எப்படி இருந்தது?***

*பதில்:* சாவகச்சேரி சரசாலை தெற்கிலுள்ள சந்திரபுரம் மற்றும் திருநகர், குருநகர் போன்ற இடங்களில் சூழ்நிலைப் பகுப்பாய்வு செய்தோம். உண்மையில் இதற்கு அங்குள்ள சிறுவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்கள். இன்னும் சொல்லப் போனால் அவர்கள் இச்செயற்பாடுகளில் மிகுந்த ஆர்வத்துடனே பங்குபற்றியதை அவதானிக்கமுடிந்தது.

***கேள்வி: சிறுவர்களுக்கான கழகங்கள் தங்களால் ஆரம்பிக்கப்பட்டது சிறுவர் முன்னேற்றத்திற்கு ஒரு படிக்கல். அவை எப்போது எதற்காக ஆரம்பிக்கப்பட்டன?***

*பதில்:* அது 1997 ஆம் ஆண்டுப்பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் இராணுவ அடக்குமுறை மிகவும் அதிகமாக இருந்த ஒரு காலப் பகுதியில்தான் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது ஐந்து மணிக்கு மேல் வெளியே செல்ல முடியாத ஒரு சூழ்நிலை நிலவியது. அந்த நேரத்தில் 18 வயதிற்குட்பட்டவர்கள் வெளியே நடமாடுவதில் சிக்கல்கள் பல ஏற்பட்டன. அவர்களால் உளரீதியாக ஒரு முன்னேற்றத்தை எதிர்நோக்கக் கூடிய சூழல் இங்கிருக்கவில்லை. இந்த நேரத்தில் சிறுவர்களின் முன்னேற்றத்திற்காகச் செயலாற்ற சிறுவர்களாலேயே எங்கள் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டவை தான் இச்சிறுவர்கழகங்கள்.

கோப்பாய், சண்டிலிப்பாய் முதலான 56 இடங்களில் இவை ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் இப்போது பல கழகங்கள் இல்லை. என்றாலும் இருக்கின்றவை சிறுவர்களை ஒன்றுகூட்டி அவர்களுக்கான கலை, நாடகம், விளையாட்டுப்போட்டிகள் போன்றவற்றை நடத்துவதுடன் அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவுவதுமான பணிகள் பலவற்றைச் செய்து வருகின்றன.

***கேள்வி: இச்சிறுவர்கழகத்திற்கு அங்கத்தவர்களாகும் சிறுவர்களை எப்படித் தெரிவு செய்வீர்கள்?***

*பதில்:* இதுவும் கிராமங்கள் தோறும் சென்று அங்குள்ள சிறுவர்களை ஒன்றுகூடச் செய்து அவர்களின் திறமைகளை கண்டறிந்து அதன் பின்னர் தெரிவு செய்வோம்.

***கேள்வி: இவ்வாறு கிராமங்களிற்கு சென்று அவர்களை ஒன்று கூடச் செய்வது கஷ்டமாக இல்லையா?***

பதில்: அதில் நாங்கள் பல இடர்பாடுகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது. ஆனால் அவை அந்த சிறுவர்களால் இல்லை. அவர்களின் பெற்றோர்களால் என்பதுதான் வருத்தமான விடயம். குறிப்பாக ஒரு கிராமத்தில் பல சமூகத்தைச் சேர்ந்த மக்கள் இருப்பார்கள். ஒரு சமூகத்தைச் சேர்ந்த பகுதிக்குச் சென்று கூட்டங்கள் நடத்தும் போது இன்னொரு சமூகத்தைச் சேர்ந்த சிறுவர்களை அவர்கள் பெற்றோர்கள் அனுப்பமாட்டார்கள். குழந்தைகள் பழகத்தடையாக பெற்றோர்கள் விதிக்கும் சமூக வேறுபாடு அவர்களை ஒன்றிணைய விடாமல் தடுக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் அந்தச் சிறுவர்கள் இது பற்றி எதுவுமே அறிந்திருப்பதில்லை. அவர்கள் எல்லோருமே நாங்கள் வைக்கும் கூட்டங்களுக்கு வரத் தயாராக இருக்கின்றனர். எனவே, சிறுவர்களுக்குப் பிரச்சினையாக இருப்பது மற்ற எல்லாவற்றையும் விட பெரியவர்கள் தான்.

***கேள்வி: இவ்வாறு பெற்றோர்களே பிள்ளைகளுக்குப் பிரச்சினையாக இருப்பதற்குக் காரணம் என்ன?***

*பதில்:* பலரின் அறியாமையும் சமுதாய அமைப்பும்தான் இதற்குக் காரணம். உதாரணத்திற்கு ஒரு குழந்தையை எடுத்துக் கொண்டால் அதன் வளர்ச்சிக்கு முதலாவது படிக்கல்லாகப் பெற்றோர்கள். அதன்பின் சமூகம், பாடசாலை, அரசாங்கம் என்கின்ற வரிசையில் வந்து அதன்பின்னர் கடைசியாகத்தான் உள்ளூர் அமைப்புக்களும் வெளிநாட்டு அமைப்புக்களும் துணை புரியும். ஆனால் நமது சமூக அமைப்பில் இவை எல்லாமே தலைகீழாக நடக்கின்றன. சிறுவர்கள் நலன்பற்றி வெளிநாட்டு நிறுவனங்கள் காட்டும் அக்கறையை மற்றவர்கள் எவருமே காட்டுவதில்லை.

***கேள்வி: நீங்கள் சொன்னது உண்மை தான். ஆனால், இந்த வெளிநாட்டு நிறுவனங்கள் வந்தபின்னர், அண்மைக்காலமாகத்தான் சிறுவர் உரிமை மீறல், சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற செயற்பாடுகள் அதிகரித்து விட்டதாகக் குற்றச்சாட்டுகள் கூறப்படுவது குறித்து என்ன சொல்கிறீர்கள்?***

*பதில்:* அப்படிச் சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்தப் பிரச்சினைகள் பல காலமாக நம் சமூகத்தில் இருந்து வருவன தான். ஆனால் நம் பகுதிகளில் பல காலமாக இருந்த யுத்தத்தின் பீதியும் நிச்சயமற்ற எதிர்காலமும்தான் இவற்றைப் பற்றியெல் லாம் நம்மை சிந்திக்கவிடாமல் தடுத்து விட்டன.

***கேள்வி: சிறுவர்களை வளப்படுத்த வேண்டிய சமூகம் உண்மையில் அவர்களை வளப்படுத்துகின்றதா?***

*பதில:* பெரும்பாலான சமயங்களில் சமுதாயமே பிள்ளைகளின் வளர்ச்சிக்குத் தடைக் கல்லாக இருக்கின்றது. அண்மைக் காலங்களில் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துகின்றனர். 2 மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டதும் புத்தகப்பையைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடும் சிறுவனை இழுத்துப் பிடித்து அதே கட்டடத்துக்குள் அதே



பழைய முகங்களைப் பார்க்க வைக்கும் இந்த வகுப்புக்கள் அச்சிறுவனை எவ்வளவு தூரம் வழிப்படுத்தும் என்று எனக்குத் தெரியவில்லை. இது பாடசாலை சமூகத்தில் மட்டுமல்ல அச் சிறுவனைச் சார்ந்த ஏனைய புறக்காரணிகளும் சிறுவர்களை எவ்வளவு தூரம் வளப்படுத்துகிறது என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இந்தக் கேள்விககு பெரிய்வர்கள்தான் விடை தேட வேண்டும்.

***கேள்வி: நீங்கள் குறிப்பிட்டதுபோல சிறுவர்களின் தற்போதைய கல்வி முறைகூட அவர்களுக்கு ஒரு பிரச்சினையாக இருக்கிறது. இதற்கு மாற்றீடாக என்ன செய்யலாம்?***

*பதில்:* கல்வி முறையில்தான் மாற்றம கொண்டு வருதல் வேண்டும். அதற்குச் சட்டங்களை இயற்றுவதுதான் ஒரே வழி. உதாரணத்திற்கு 'Pre School' என்று சொல்லப்படும் பாடசாலைக்கு முன்பான கல்வி முறையை எல்லாப் பாடசாலைகளிலும் இடம்பெறச் செய்ய வேண்டும். முக்கியமாக அதற்குத் தகுதியான ஆசிரியர்கள்நியமிக்கப்பட வேண்டும்.

இன்று இது போன்ற ஆரம்ப நிலைக்கு முன்னதான கல்வியை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் சாியான தரமில்லாதவர்களாக இருக்கின்றனர். இதைத் தடுப்பதற்கு சட்டத்தின் மூலம்தான் முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் சிறுவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு நல்ல அத்திபாரம் ஒன்றைப் போடமுடியும்.

**செவ்வி:- கிருத்திகா தருமராஜா**

***கேள்வி: சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவயதில் வேலைக்கு செல்லுதல் போன்ற விடயங்களை நீங்கள் எப்படிக்கையாளுகின்றீர்கள்?***

*பதில்:* இதுபோன்ற சம்பவங்கள் பற்றி எங்களுக்கு முறைப்பாடுகள் வருகின்றன. அவ்வாறு வரும் முறைப்பாடுகளை நாங்கள் கேட்டுவிட்டு அவர்களை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு மையத்திற்கு அனுப்பி விடுவோம். அவர்கள் அவற்றைக் கையாளுவார்கள்.

***கேள்வி: இறுதியாக பெரியோர்களுக்கும், பெற்றோர்களுக்கும் நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?***

*பதில்:* சிறுவர்களை வளர விடுங்கள். அவர்களுக்கு பிரச்சினையாக இல்லாமல் தட்டிக்கொடுத்துத் தோள் கொடுங்கள். இன்று சொல்லப்படும் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவயதில் தொழில் செய்யும் நிர்ப்பந்தம் எல்லாம் பெரியவர்கள் குழந்தைகளுக்கு ஏற்படுத்தி வைத்ததுதான். எந்தச் சிறுவனாவது இன்னொரு சிறுவனையோ, சிறுமியையோ துஷ்பிரயோகம் செய்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பெரியவர்கள்தான் அவர்களை துஷ்பிரயோகம் செய்கிறார்கள்.

எனவே, முன்மாதிரியான பெரியவர்களாக இருந்து அவர்களை சரியான பாதையில், சரியான நேரத்தில் கைகொடுத்து வழி நடத்துங்கள். இது ஒவ்வொரு பெரியோர்களினதும் பெற்றோர்களினதும் தலையாயகடமை. □

## சிறுவர்கள் தான் நாட்டின் எதிர்கால சிற்பிகள்

# அறிவின் அரசியல்




அரசியலின் ஆதிக்கம் படராத இடமில்லை. அதன் அதிகார விளையாட்டில் அறிவும் அரசியலாகும். அரசியல் ஆக மாறும் கடந்த காலத்து அரசியல் தலையீடுகளை அறிவியலில் அதிகாரம் என்ற தலைப்பில் இன்றைய ஆய்வுமுறையியல் வெளிப்படுத்தும் (Babbie, 1975) தலையீடு என்பதற்கும் அப்பால் அரசியல் இலக்குகளுக்கு இசைவாக சூழ்ச்சித்திறத்துடன் அறிவைக் கையாளுதல் இன்று அதிகரிக்கும். இதன் விளைவாக அறிவின் அரசியல் (Politics of kno wledge) என்பதே இன்று தனித்ததோர் அறிவுப்புலமாகும். அறிவு தொடர்பான சமூக வியல் ஆர்வம் அறிவுக்கும் அதன் இருப்புக்குமிடையிலான உறவு தொடர்பானது. (Stark, 1958) சமூக விசைகளுக்கும் கருத்தியல் உருவாக்கத்திற்குமிடையிலான உறவினை விளங்குதலே அறிவின் சமூகவியலின் (Sociology of knowledge) இலக்காகும். இந்தவகையில் அறிவின் அரசியல் தொடர்பான ஒரு சமூகவியல் பகுப்பாய்வாக இந்தக் கட்டுரை அமைகின்றது.

அறிவின் அரசியல் தொடர்பான இப் பகுப்பாய்வின் மூலங்களாக கடந்தகால சமூக மானுடவியல் சார் ஆய்வு அனுபவங்களே பெரிதும் பயன்படுத்தப் படுகின்றன.

அறிவின் அரசியல் என்ற எண்ணக் கருவின் தோற்றத்துக்கும், விழிப்புக்கும் தொடக்ககால மானுடவியல் ஆய்வுகள் பலவும் காரணமானவை இங்கு கவனத்திற்குரிய தாகும். குடியேற்ற அரசுகளை அமைத்த ஐரோப்பியர்களும் பிற வணிக நிறுவனத்தினரும் அந்தந்தப் பகுதிகளில் வாழ்ந்த திணைக் குடியினரை (Native people) கட்டியாள்வதில் பல சிக்கல்களை எதிர்நோக்கினர். அதனால் அந்தந்த நிலப் பகுதிகளில் வாழ்ந்த திணைக் குடியினரை அறியவேண்டியவர்களாய் இருந்தனர். கட்டாயத்தின் பேரில் திணைக் குடியினர் பற்றிய இனக் குழுவியல் செய்திகளைச் சேகரிப்பதற்கு ஊக்கமளித்தனர். அவ்வகைச் செய்திகள் மூலம் அம்மக்களின் அரசியல் பொருளாதார முறைகளை நன்கு அறிய முடிந்தது. அதனால் அப்பகுதிகளில் உறுதியுடன் நிலை பெற முடிந்தது. (பக்தவத்சலபாரதி 1990) இத்தகு உள் நோக்கங்களையும் தாண்டி மானுடவியல் தனித்ததோர் அறிவுத் துறையாய் வளர்ச்சிகண்டமை இன்று வரலாறாகும். மானுடவியல் போன்றே அதன் சகோதரத் துறையான சமூகவி யலின் வளர்ச்சியும் அமையும். கால ஓட் டத்தில் அதன் கிளை விரிவுகளாய் புதிய அறிவுத்துறைகளும் எங்களைச் சேரும். எனினும் புதிய விரிவாக்கங்களிடை மறைகரமாய் அரசியலின் ஊடுருவலும் நிலை பெறுகின்றமை இன்றைய அறிவுலக அனுபவமாகும்.

குடியேற்ற நாட்டாதிக்கம் முடிந்த பின்னரும் அதிகாரப் பரம்பரைகளுக்கு அரசியல் செய்யும் ஆசை விட்டதில்லை. ஆயினும் நேரடியாக ஆதிக்கம் செலுத்துவதற்குப் பதிலாக அறிவின் வழியாக அலுவல்கள் திட்டமிடப்படுகின்றன. புதிய பல அறிவுத்துறைகளின் பரம்பல் தொடர்பான நுண் ஆய்வுகளிடையில் அறிவின் அரசியல் கரங்களை தெளிவாகவே காணமுடியும் (Garan 1987).

ஒரு சமூகப் புலத்தை பரந்த நோக்கில் அறியும் தேடலை பெரும்பாக சமூகவியல்



பேராசிரியர்
என். சண்முகலிங்கன்

சமூகவியல் பேராசிரியர்,
தலைவர், அரசறிவியல் -சமூகவியல்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

(Sociology) என்போம்: அவ்வாறே குறிப்பாக ஆழ ஒரு பகுதியை நோக்கும் ஆய்வை நுண்பக சமூகவியல் (Micro Sociology) என்போம். இந்த இரண்டுமே அறிவியல் முழுமைக்கு இன்றியமையாதன. இயல்பாய் அறிவியல் தேவையின் வழி வளர்க்கப்படுவது, ஆனால் இந்தத் தேவையென்பது திட்டமிட்ட முறையில் அதிகாரத்துக்கும் அரசுக்கும் சேவகம் செய்யும் விதமாய் கையாளப்படுமிடத்து அது அறிவியல் என்ற வரையறை கடந்து அறிவின் அரசியலாகிவிடக் காணலாம்.

உலகமயமாக்கல் (Globalization) என்பது இன்றையதாரக மந்திரங்களில் ஒன்றாக்கப்பட்டிருக்கிறது. இது வெறுமனே ஒரு வணிகக் கொள்கையாகவன்றி உலக அரசியல் ஒருமை தொடர்பியல் வழியான உலக ஒருமை, உலகமயமாக்கப்படும் அறிஞர்களின் ஒருமை எனும் பன்முகங்களைக் கொண்டது. திட்டமிட்ட முறையில் உலகின் போக்கையே மாற்ற முனைவது. இயல்பில் அறிவின் உருவாக்கம் என்பது சுதந்திரமான அறிவியல் தொழிற்பாடாக அமைய வேண்டியது. ஆனால் அறிவின் அரசியல் செல்வாக்கினை அறிவின் உருவாக்கமும் முன் நிர்ணயம் செய்யப்பட்ட இலக்குகளை நோக்கியே கருத் தேற்றங்களாகும் ஆபத்து நிலைமைகளை இன்று பெருமளவில் சந்திக்க முடிகிறது.

ஆய்வு நிலையங்களுக்கு நிதி வழங்குதல் ஆய்வுக்கதிரைகளுக்கு அறக் கட்டளைகள் தரல், ஆய்வுத்திட்டங்களுக்கு ஆலோசனைகளும் மாதிரியங்களும் அன்பளிப்புச் செய்தல் என பல வழிகளிலும் இந்த அரசியற்கரம் நீளலாம். ஆய்வாளர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கியும் தமக்கு இதமான ஆய்வு ஏடுகளை பிரசுரம் செய்தும் அங்கீகாரம் வழங்கலாம். இந்நடவடிக்கை எல்லாம் வெகு லாவகமாகவே நிகழும். வாங்கப் படும் அறிஞர் உணராமலே இழக்கப்படுதலும் சாதாரணமாகும்.

உலக அரங்கில் மிக மலிவாக வாங்கப்படக் கூடியவர்களாக அறிவு ஜீவிகள் உள்ளனர் என்ற பேராசிரியர் ஒருவரின் அண்மைக் கூற்று இங்கு எம் கவனத்திற்குரியதாகும். (சிவசேகரம் 1999) இன்று அறிவென்பதே ஒரு சந்தைப்பொருளாகி நுகர்வுக் கலாசாரத்தின் முக்கிய பகுதியாகும். அறிவு அரசியல் மயப்படுத்தப்படுவதுடன் பண்டமுமாக்கப்படும். உண்மைபோல செய்திகளும் நோக்கங்களும் தொடர்புவழி சேர வேண்டிய இடங்களைச் சென்றடையும்.

தனியே அரசியல் ஆதிக்கம் மட்டு மன்றி அதனோடிணைந்து பொருளாதார பண்பாட்டு ஆதிக்கங்களும் அறிவுப் போர்வையில் ஊடுருவக்காணலாம். மேம்பாடு (Development) நவீனமயமாக்கம் (Modernization) என்கின்ற பதங்கள் சமூக மாற்றம் தொடர்பான இன்றைய எழுத்துக்களில் பெரிதும் செல்வாக்குச் செலுத்துவன. தேசிய அரசுகளினதும் சர்வதேச முகவர்களினதும் திட்டமிடல்களில் புறவய மாக அமையவேண்டிய இந்தப் பதங்கள் அரசியல் சார் வலைப்பின்னலுக்குள் அமிழ்ந்து போவதைக் காணமுடியும். குறை விருத்தி நாடுகள், பின் தங்கிய நாடு கள், வளர்ந்து வரும் நாடுகள், புதியதாய் மேலெழும் நாடுகள், புதிய சனநாயகங் கள் என்றெல்லாம் சுட்டப்படும் அபிவிருத்தி / மேம்பாடு தொடர்பான விவரணங்கள் தர்க்கரீதியான உண்மை நிலைமைகளை பிரதிபலிப்பனவா என்ற கேள்வியும் எழுப்பப்படும். அபிவிருத்தி என்ற பதப்பிர யோகமே மாக்ஸிய அரசியல் நோக்கில் பாரிய விமர்சனங்களுக்குள்ளாகக் காண லாம். லத்தீன் அமெரிக்க புலத்து அபி விருத்தி/ மேம்பாடு என்பது குடியேற்ற நாட்டாதிக்கம், சுரண்டல், தங்கி நிற்றல் என்கின்ற பொருள்களிலேயே விளக்கப் படக் காணலாம் (Frank - 1972)

நவீனமயமாக்கம் என்ற பதமும் இதே நிலையில் தான் இன்று பல விமர்சனங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. குடியேற்ற நாட்டாதிக்க காலத்து ஐரோப்பிய மயமாக்கம் ஆங்கில மய மாக்கம் அல்லது அமெரிக்க மயமாக்கம் என்ற பொருள்களிலேயே நவீனமயமாக்கம் என்ற எண்ணங்களின் அரசியல் வெளிப்பட காணலாம். பண்பாட்டு நிலையிலும் நவீன விழுமியங்கள் என்பன மத்தியதர வகுப்பு அமெரிக்க விழுமியங்களாகவே விளங்கப்படுகின்றமை பற்றிய மக்கிலிலாண்ட் (Mc Clelland 1966). கருத்து இங்கு கவனத்திற்குரியதாகும். மரபு - நவீனத்துவம் என்ற பிரிப்புக்கள் வெறுமனே சந்தையை மையமாகக் கொண்ட சங்கதியாகக் கருதப்படுவதையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். இதன்வழி மேம்பட்ட மனிதனை, நவீன மனிதனைத் தேடும் ஆராய்ச்சி, வெறும் சந்தை ஆராய்ச்சியாக சந்தையைமையமாகக் கொண்ட நுகர்வோரைத் தேடும் முயற்சியாகவே முடிந்து போனது (சண்முகலிங்கன் 1997).

இவ்வாறே அபிவிருத்தி யென்பது தொழில் நுட்ப விருத்தி யென்ற பொருளுடன் மட்டுப்படுத்தப்பட்டது. விளைவாகச் சமூகப் பிரச்சினைகளை தொழில்நுட்பப் பிரச்சினைகளாககுறுக நோக்கும் நிலைமையே மிஞ்சியது. கூடவே ஆராய்ச்சிகளுக்கும் தொழில் நுட்பத்துக்குமிடையிலான பரஸ்பர சார்பு நிலை அதிகரித்துள்ளமையும் விமர்சன கோட்பாட்டாளரின் எழுத் துக்களிடை துல்லியமாகவே வெளிப்படும் (David Held, 1980) இதன் வழி அறிவாராய்ச்சியும் ஒரு முதன்மை உற்பத்திச் சக்தியாகும். அறிவானது குறுகிய பயன்பாட்டு நோக்கிலான உற்பத்தியாதலுக்கு உலக இராணுவ மயமாக்கம் தொடர்பான ஆய்வு அனுபவங்கள் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

சமூக ஏற்றத்தாழ்வுகளை நியாயப்படுத்துவதுடன், அநியாயமான வழிகளில் அவற்றினைத் தீர்ப்பதற்கான மார்க்கங்களும் அறிவின் பெயரால் முன்வைக்கப்படுவதுண்டு. நிலமானிய அமைப்பில் அரசர்களின் வல்லமை ஆண்டவன் தந்தது என தரப்பட்ட நியாயங்கள் பின்னாளில் போட்டியும் பேராசையும் மனித இயல்பில் உள்ளவை என்றவாறு அடம் சிமித் (Adam Smith) போன் றோரால் நியாயப் படுத்தப்பட்டமை இங்கு கவனத்திற்குரியதாகும். முழு தளாவிய பார்வையும் பல்துறை நெறிகளின் ஒன்றிணைந்த ஆய்வு முறைமையுமே இத்தகு நிலைமைகளில் எமக்கு கைகொடுக்க வல்லது. போலி ஆய்வுகளிலிருந்து (Pseudo - Research) உண்மை ஆய்வுகளைப் பிரித்து நோக்கிட சமூகவியலின் பெயர் சுட்டு அணுகுறையும் (Lebelling perspective) பெரிதும் துணையாகும் எனலாம். ஆய்வின் நோக்கை, ஆய்வாளனை, ஆய்வுச் சூழலை, ஆய்வு பதங்களின் பொருண்மையை கேள்விக்குள்ளாக்குதலின் வழி அறிவின் பின்னணியை தெளிந்திட முடியும்.

தென்னாசிய ஆய்வுகள் (South Asian Studies) போர்க்கால ஆய்வுகள், சமாதான ஆய்வுகள் எனப் பற்பல பெயர்களில் நிகழ்த்தப்படும் ஆய்வுகள் தொடர்பாக ஏற்கனவே கேள்விகள் எழுப்பப்படும். (Mannheim. 1952, Mahan, 1991 Chaube, 1993) இலங்கை பற்றிய இன்றைய ஆய்வுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. திரிபுபடுத்தப் பட்ட வரலாற்று ஆய்வுகளி லிருந்து "உனக்கல்ல ஊருக்கடி" என்றவித மான சர்வதேச - உள்ளூர் மனித உரிமை ஆய்வு கள் வரை அறிவின் அரசியல் விழிப்புடன் கேள்விக் குள்ளாக்கப்பட வேண்டும். நிதி உபயகாரர்களுக்கு ஏற்ற விதமாக அறிக்கை எழுதுதல் போன்ற மரியாதைகளுக்கு அப்பால் அறிவுலக நேர்மைகாக்கப்பட வேண்டும். மெய்ப்பொருள் காணும் அறிவுக் கலாசாரம் வளர்க்கப்பட வேண்டும்.

# வலம்புரியின் 6வது ஆண்டு நிறைவு
# ஆவணச் சிறப்பிதழ் – 20.12.2005



## "வையத்துள் வாழ்வாங்கு வாழ்க வலம்புரி!"

# ரி.சி.ரி. பல்பொருள் விற்பனை நிலையம்

# T.C.T. MULTI TRADE CENTRE

527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

ஆரம்பம்: 24.01.2005 தொ.பேசி: 222 8025



***தியாகி அறக்கொடை நிறுவனத்தின் சமூகப் பணிக்கான நிதி பெறும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஒரேயொரு பல்பொருள் விற்பனை நிலையம்***



இலாப நோக்கமின்றி சேவை நோக்குடன் தரமான பொருட்களை நியாயமானமுறையில் விற்பனை செய்யும் இடம்




எமது சேவைகள்:

- கல்வி
- சுகாதாரம்
- பொருளாதாரம்
- சிறுவர் இல்லம்
- தொழிற்பயிற்சி (தையல்)

- வேலையற்ற, நலிந்த குடும்பத்தைச்சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பையும் பெற்றுக்கொடுக்கிறது.
- வாடிக்கையாளர்கள் எம்மிடம் பொருட்களைக் கொள்வனவு செய்வதன் மூலம் சமூகப் பணிகளுக்கும் மறை முகமாகத் தங்கள் பங்களிப்பை வழங்குகிறார்கள்.
- விற்பனை நிலையத்துடன் இணைந்து இயங்கும் சிற்றுண்டிச்சாலையில் சுவை மிக்க பல்வகைச் சிற்றுண்டிகளையும் PIZZA (பிட்ஸா) உணவையும் பெற்றுக் கொள்ளலாம்.




**ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை விளங்கும்.**



527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

# வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005



# சமுதாய மருத்துவத்தின் இன்றைய தேவை

விஞ்ஞானம் வளர்ந்து வருகின்றது. வசதிகள் பெருகுகின்றன. சமுதாயக் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஆயினும் நகரங்களிலும் கிராமங்களிலும் வாழும் மக்களின் மருத்துவ அடிப்படைத் தேவைகள் முற்றாக பூர்த்தி செய்யப்படவில்லை. நகரங்களில் விரும்பியோ, விரும்பாமலோ இயல்பாகவே சேரி வாழ்க்கை உருவாகி வருகின்றது. இவற்றிற்கு மேலாக வடக்கு கிழக்கில் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு கிராமப்புறங்களிலும் சேரி வாழ்க்கையினை உருவாக்கியுள்ளது. கடல்கோள் அழிவும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. முன்பு குற்றமிழைத்தவர் மட்டுமே மரங்களிற்கு கீழ் தற்காலிக குடில் கள் அமைத்து வாழ்ந்ததை 30 வருடங்களுக்கு முன் பார்த்தோம். ஆனால் இன்று நாம் எல்லோரும் அத்தகைய சூழலை சந்திக்க நேர்ந்துள்ளது.

உதாரணமாக சில்லாலையினை அடுத்துள்ள ஒரு கிராமத்தில் நடமாடும் வைத்திய சேவை யினை நடத்திய போது இரண்டுமணித்தியாலத்தினுள் 75 பேர் நோய் அறிகுறிகளுடன் வந்தனர். அவர்களில் ஒரு வயதிற்கும் குறைந்தவர்கள் 30 பேர். பெரும்பாலும் இவ்வாறான பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு நோய் வரும் போது உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதில்லை. வைத்தியசாலை தூரத்தில் இருத்தல், வைத்திய சாலைக்கு கொண்டு செல்ல உதவியின்மை, வீட்டை விட்டு வெளியே வருவதற்கு சிறந்த ஆடைகள் இன்மை, நோயின் ஆபத்தின் தன்மை, தெரியாமை என்பனவே அவற்றில் சிலவாகும்.

இது ஒரு புறமிருக்க பின்தங்கிய பிரதேசங்களில் நிரந்தரமாக தங்கி நின்று சேவை செய்ய மருத்துவர்களும் தயங்குகின்றனர். போதிய வசதிகள் இன்மை, தொடர்பாடல் இன்மை, நிர்வாகப் பிரச்சினைகள் என்பன அதற்குரிய சில காரணங்களாகும்.

எனவே, சமூக மட்டத்தில்காணப்படும் இந்த இடைவெளி சமுதாய மருத்துவத்தில் பாரிய பின்னடைவினை ஏற்படுத்தி உள்ளது என்றால் மிகை இல்லை. இதனாலேயே பல மரணங்கள் ஏற்படுவதுடன் வைத்தியசாலைகளில் சிக்கல் மிகு நோய் நிலையில் பலர் அனுமதிக் கப்படுகின்றனர்.

சமுதாய மருத்துவம் வெறுமனே புள்ளி விபரங்களை ஆராய்வதனை விடுத்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதுடன் நின்றுவிடாது புதிய நோக்கினைக் கொண்டதாக மாற்றியமைக்கப்படல் வேண்டும். அதற்குரிய கருத்துருவாக்கமே நடமாடும் அல்லது வலம்புரி வைத்தியசாலைகள் அமைத்தல் ஆகும். (Mobile Hospital) இது நடமாடும் வங்கிச்சேவை, நடமாடும் நூலகம் போன்றன போல் இயங்கும். இதற்குரிய ஆளணி வசதி போதனா வைத்தியசாலையில் இருந்து பெறலாம்.



நடமாடும் வைத்தியசாலை வடிவமைப்பில் எம்மிடம் உள்ள வாகனங்களை மாற்றி அமைக்கலாம். யுத்தகாலத்தில் இலங்கை அரசிற்கு அமெரிக்க அரசாங்கம் நடமாடும் சத்திரசிகிச்சை நிலையத்தினையே அன்பளிப்பாக கொடுத்தது. ஆனால் யுத்தத்தினால் அழிந்த எமது சமூகத்தில், ஒதுக்குப் புறங்களில் வாழும் மக்களின் சுகாதாரத்தினை மேம்படுத்த (சுகாதாரத் தேவைகள் என்று கூறமுடியாது. ஏனெனில் அவர்கள் தாமாக வைத்தியசாலையை நாடமாட்டார்கள்) வலம்புரி வைத்திய சாலைகள் அமைத்தல் எமது கடமையாகும்.



மேலும், தொடர்ச்சியான யுத்தத்தினால் இடப்பெயர்வுகளையும், அகதிமுகாம் வாழ்வினையும், பொருளாதார வறுமையினையும், கல்வி இடைநிறுத்தத்தினையும் உடைய சமூகத்தில் வைத்தியசாலைகள் அழிக்கப்பட்ட சூழலிலும், வைத்தியசாலைக்கு சுதந்திரமாக செல்ல முடியாத நிலைமையிலும் (உதாரணமாக தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை) புற வைத்தியசாலைகளில் வைத்தியர் வசதி குறைவாக உள்ள நிலையிலும் நடமாடும் வைத்தியசாலைகள் இயங்குதல் இன்றியமையாதது ஆகும்.

அன்றாடம் பத்திரிகைகளில் வெவ்வேறு பிரதேசங்களில் பல்வேறு சமூக அமைப்புக்கள் இலவச மருத்துவ சேவையினை செய்ததாக விளம்பரப்படுத்தப்படுகின்றது. இதன் அவதானிப்புகள் யாவை யெனில் முதலாவது, எமது மக்களுக்கு சில பிரதேசங்களில் சுகாதார சேவை தேவைப்படுகின்றது. இரண்டாவது அப் பிரதேசங்களில் நடமாடும் வைத்தியசாலை இல்லாமை பெரும் குறைபாடாக உள்ளது. சமூக அமைப்புக்கள் மக்களின் அவலத்தினூடாக தங்களை நிலைநிறுத்த முனைகின்றன.

எனவே, சமுதாய மருத்துவத்தினை உயிரோட்டமாக செயற்படுத்த நடமாடும் வைத்தியசாலைகளை இயக்குதல் இன்றையமையாததாகும். வன்னியிலே தியாகி திலீபன் நடமாடும் வைத்திய சேவைகள் இதனடிப்படையிலேயே இயங்குகின்றன. அதேபோல் யாழ். குடாநாட்டிலும் வலம்புரி வைத்தியசாலைகளை இயக்கினால் யாழ். போதனா வைத்தியசாலைக்குவரும்நோயாளிகளின் எண்ணிக்கை பெருமளவு குறைக்கப்படுவதுடன் மருத்துவச்செலவும் குறையும்.

**சி. யமுனாநந்தா**
**வைத்திய கலாநிதி**

இன்று மருத்துவ சிகிச்சை முறைகள் அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டே நடைமுறைப் படுத்தப்படுகின்றது. அந்த வகையில் சமுதாய மருத்துவமும் மாற்றமடைவதற்கு உரிய விழிப்புணர்ச்சியினை நாம் ஏற்படுத்தவேண்டும். ★ ★

## சமர்ப்பணம்

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் மருத்துவ உலகிலும், இலக்கிய உலகிலும் தனக்கென ஒரு
இடத்தை அமைத்து பல்லாயிரக்கணக்கானோருக்கு வழிகாட்டியாக அமைந்தார். சமுதாய மருத்துவத்துறையில்
பேராசிரியராக இருந்து நோய்த்தடுப்பிலும் தாய், சேய் நலனிலும் முக்கிய பங்காற்றினார்.
ஒவ்வொரு மருத்துவ பீட மாணவனினதும் ஆராய்ச்சியில் மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்து வழிகாட்டுவார்.
மாணவர்களுக்கு மருத்துவப் புள்ளிவிபரவியலினை சிறப்புறக் கற்பித்த போராசிரியர் அவர்கள் "ஆராய்ச்சிசெய்யக் கற்றுக்
கொள்ளல்" என்ற ஆங்கில நூலை எமக்கு விட்டுச் சென்றுள்ளார்.
பேராசிரியர் அவர்களால் சிறந்த பொறுப்புணர்வுடன் நிர்வகிக்கப்பட்ட சமுதாய மருத்துவத்துறையே 1995 ஆம் ஆண்டு
இடப்பெயர்வின் போது நலன்புரி நிலையங்களில் ஆரம்ப சுகாதாரத்தினை ஏற்படுத்தி சேவை புரிந்தது. மேலும் சமுதாய
மருத்துவ சிந்தனையிலேயே நிலக்கண்ணி பற்றிய விழிப்புணர்வு, யுத்த அனர்த்தங்களில் இருந்து காத்தல் போன்ற
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
ஒரு மனிதர் தன் வாழ் நாளில் தனது குடும்பத்திற்கு 25 வீத பங்களிப்பையும், தனது சமூகத்திற்கு 25 வீத பங்களிப்பையும்,
தனது தாய்மொழிக்கு 25 வீத பங்களிப்பையும், தனது சமயத்திற்கு 25 வீத பங்களிப்பையும் செலுத்துவாராயின் அவர் உல
கில் அவதரித்ததற்கு 100வீத பலன் உள்ளது. அவ்வாறு அவதரித்த பேராசிரிசியர் நந்தி அவர்கள் எம்மை விட்டுச் சென்
றாலும் எம்மிடம் என்றும் வாழ்ந்துகொண்டிருக்கின்றார். அத்தகைய பெரியாருக்கு இக் கட்டுரை சமர்ப்பணம்.

## தலைமைப் பதவியில் தமிழர்கள்

1. முப்படைத் தளபதியாக இருந்த தமிழர்—அன்ரன் முத்துக்குமார்
2. கடற்படைத் தளபதியாக இருந்த தமிழர் —கொமடோர் கதிர்காமர்
3. பொலிஸ்மா அதிபர்களாக இருந்த தமிழர்கள்
   1. உருத்திரா இராஜ சிங்கம்
   2. ஆனந்தராஜா
4. எலிஸபெத் மகாராணியை வரவேற்ற தமிழர் —கொழும்பு மேயராக இருந்த உருத்திரா
5. எலிஸபெத் மகாராணியின் ஆசிர்வராக இருந்தவரும் மகாராணியின் முடிசூட்டு விழாவுக்கு அழைக்கப்பட்டவருமான ஒரேயொரு தமிழர் —சி.சுந்தரலிங்கம்.

தொகுப்பு:-
தி.மாணிக்கவாசகர்

## நல்ல மருத்துவன் மிகச்சிறந்த ஆசிரியன்

# வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005

## அறிவியலும் அறவியலும்...

(௨... ஆம் பக்க தொடர்ச்சி

பொதுமக்கள் பக்தர்கள் என்று இவ்வாறு ஊர்கூடிச் சேவையாற்றும் ஒற்றுமையின் கூட்டுப்பொறுப்பின் சமூக ஒருமைப்பாட்டின் செயற்பாடாகவே இவ்வயத்தினையும் உள்வாங்கி அதன் உள் பொருளாக அடங்கியிருக்கின்றன என்ற உண்மை மறைந்து வருகின்றது.

ஆலயங்களில் இறைவனை வழிபட வருவோர் தொகையை விட வேடிக்கை விளையாட்டுக்கள் ஆடம்பர அழகுசாதன விளம்பரகாரர்களாக வருவோர் களே அதிகம் எனக்குறைப்படுவோர்பலர். இறைவனை அலங்கார அழகுத் தெய்வமாகத் தரிசிக்கும் மக்கள் தம்மை அழகு படுத்துவதில் தவறில்லை. அந்த அழகிலே அலங்காரத்திலே அகங்காரம் இருக்கக் கூடாது. மமதை, காழ்ப்புணர்ச்சி, அழுக்காறு, அவா, இன்னாச்சொல் இவைகலந்திருந்தால் அழகும் அலங்கோலமாகி விடும். இவை யாவும் இன்று ஆலயத்தில் அகத்தூய்மையை வளர்ப்பதற்குப் பதில் ஆடம்பரத்தையே வளர்த்து விடுவதாக சில சமயம் அமைந்து விடுகின்றன. எமது வழிபாடு நெறிகள் கிரியைகள் யாவும் இன்று இறைவனுடன் பேரம் பேசுவதுபோன்றும் பல ஆலயங்கள் வியாபார நிலையங்களாகவும் மாறி வருவது விசனத்திற்குரியது. இறைவனை வணங்கினால் அவன் நமக்கு தேவையானவற்றையெல்லாம் தருகிறான் என்று நம்புகிறோம். வழிபாடு, கிரியை, நைவேத்தியம், அபிஷேகங்கள் யாவும் நமக்கு அனைத்தும் வழங்கும் இறைவனைத் திருப்திப்படுத்துவதற்கான உபாயங்களேயாகும். இன்றோ இவையனைத்தும் பெயருக்கும் புகழுக்கும் விளம்பரத்திற்கும் செய்யும் வழிபாடுகளாக மாறி வருவது வேதனைக்குரியது.

அதுமட்டுமன்றி எந்தவழிபாடு கிரியைகளை நாம் ஆற்றினாலும் அதனைச் செய்பவரின் மனத் தூய்மையை அறிவுத் தூய்மையையே தெய்வம் பெரிதும் நேசிக்கின்றது. தூய்மையான அறிவும் அன்புமே தெய்வீகமாகும். "பொக்கமிக்கவர் சொரியும்பூவும்நீரும்கண்டுநக்கு நிற்பர் நாயகர் அவர் தமை நாணி யே" என்கிறார் நாவுக்கரசர் பெருமான் பொய்யும்வழுவும் வஞ்சனையும் நிறைந்த மனதையுடையவர் ஆற்றும் பூசைகளைப் பார்த்து இறைவன் அப்பூவும் நீரும் தம்மேல் விழாது நகர்ந்து நின்று அப்பொய்யான பூசைக்காக தனக்குள் வெட்கப்படுவாராம் என்பது இத்தேவாரத்தின் உட்பொருளாகும். மனத் தூய்மையுடையவரது பூசைகள் கிரியைகளே தெய்வத் தால் ஏற்கப்படுவன என்பது இதிலிருந்து புலப்படும். "மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம். மனமது செம் மையானால் வாசியை நிறுத்த வேண்டாம். மனமது செம்மையானால் மந்திரம் செம் மையாமே" என்பது சித்தர் வாக்காகும்.

கண்ணப்பரது பூசை இதற்கு நல்ல உதாரணமாகும். கண்ணப்பர் தனது வரியனால் நீர்மொண்டுவந்து கையிலே இறைச்சியுணவும் தலையிலே பூவையும் சொருகி வருவார். வாயினால் நீரை சிவலிங்கத்தில் உழிழ்வார். அது அவரது அபிஷேகம். கரத்தில் உள்ள அசைவ உண வைப் படைப்பர். அது நைவேத்தியம். தலையிலுள்ள பூக்களை எடுத்து இறைவனுக்கு சாத்துவார். அது அலங்காரம். அதனைப் பார்த்து மகிழ்ந்து இறைவனை உண்பித்து ஆனந்த மடைந்து ஆடுவார் பாடுவார்.

அலமந்து வீழ்ந்து வணங்குவார். சிவ கோசரிச்சாரியாரே இப் பக்தியைக் கண்டு மலைத்து நின்றார். "கண்ணப்ப ஒப்பதோர் அன்பின்மை கண்டும் என்னப்பன் எனையாண்டு கொண்டான்" என மணிவாசகரும் கண்ணப்பரது ஒப்பற்ற அன்பினை வியந்து போற்றுவர். ஆனால் இன்றைய தலைமுறையினர் சிலர் கண்ணப்பர் இறைச்சி கொடுக்கலாம். நான் கொடுக்கக் கூடாதா? என ஏளனம் செய்வதுமுண்டு. கண்ணப்பர் இறைச்சியை மட்டுமா கொடுத்தார். கண்களையும் கொடுத்தார். தன்னையும் கொடுத்தார். இந்துப் பண்பாட்டின் ஆரம்ப சமய விஞ்ஞானிகளில் கண்ணப்பர் ஒருவர் என்பதனை பலர் அறிவதில்லை "The first Eye Doner|" முதல் கண்தானம் செய்த மகான் மட்டுமல்ல ஊனுக்கு ஊனே மருந்து எனக் கண்டு அறிமுகப் படுத்தியவராகவும் அவரைக் காண்கிறோம். இன்றைய விஞ்ஞானத்தின் Plastic Surgery முறைமைகள் வளர்வ



தற்கு முன்னோடியாக அமைந்த மருத்துவமாண்பினை கண்ணப்பரது அன்பிலே காண்கிறோம்.

இன்றைய உலகில் நமது சகோதரர்கள், உறவினர், நண்பர்கள், ஆதரவற்றோர் எனப் பலரும் நோயினால் வருந்துமிடத்து ஒரு பைந்து இரத்தம் எடுப்பதற்கு எவ் வளவு பாடுபடுகிறார்கள். அப்படி ஒரு இரத்ததானம் செய்யக்கூட நம்மில் எத்தனை பேர் தயாராக இருக்கிறோம்.! இப்படிப்பட்டவர்களுடைய பெருமைகளைக் கண்டும் கேட்டும் படித்தும் உணர்ந்தும் மெய்சிலிர்த்து கண்ணீர் மல்கி இறைவனைப் பாடித் துதிப்பதுதான் நாம் செய்யும் பிரதி உபகாரம். திருவிழாக்களைப் பெரியளவில் செய்வதுதான் இறைவனுக் காற்றும் பூசையல்ல இறைவனது படைப்பிலுள்ள உயிர்கள் அனைத்துக்கும் செய்யும் "சேவையும்" இறைவனுக்கு நாம் செய்யும் பூசைகட்கு சமமானவையே. "கடமையைச் செய்வதே மிகப் பெரிய வழிபாடு" என் றார் கிருஷ்ண பகவான். "யாவருக்குமாம் இறைவன் கொடு பச்சிலை-யாவர்க்குமாம் பசுவிற்கொருவாயுறை -யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைபிடி யாவர்க்குமாம் பிறருக்கு இன்னுரை தானே என்கிறது" திருமந்திரம். பசுவிற்கும் உண விட்டு வாருங்காள் ஆதரவற்றவர்கட்கு ஒரு பிடி உணவு. பார்வையற்றவருக்கு ஒரு பத்திரிகை படித்துக்காட்டல். நோயா ளிகளிடமிருந்து ஒரு தரம் நலம்கேட்டல். எதற்கும் இயலவில்லை என்றாலும் இனி மையான அன்பான ஆதரவான ஒருவார்த்தையாவது பிறரிடம் பேசுங்கள். இவையே பூசைக்குச் சமனான உன்னதமான சேவைப் பணியாகும். பிற உயிர்களிடத்து அன்பு காட்டுவதும் பரிவுடன் பழகுவதும் மிகப் பெரிய வழிபாடு என்பதே இந்து அறிவியலில் அதி உயர்ந்த போதனையாகும். அன்பு தான் இன்ப ஜோதி. அன்பு உலக மகா சக்தி என்றார் புத்தபெருமான். எல்லா ஜீவராசிகளையும் கருணையுடன் அன்புடன் நடத்துங்கள் என்றார் சாயிப கவான். அன்புடன் நடத்துவது என்றால் எப்படி பிற உயிர்களை இம்சைப்படுத்தாது இருப் பதும் அதற்கு ஒரு வழியாகும். பூச் சியைக் கண்டால் பிடித்து நசுக்குவது, நாயைக் கண்டால் கல்லால் எறிவது, இப்படி சிறு சிறு விடயங்களில் தவிர்த்துக்கொண்டாலே போதும் அவ்வுயிர்கள் தாமாகவே வந்து எம்முடன் அன்பு பாராட்டும். மனித நேய மானது இவ்வாறு மலர்ந்து விட்டால் ஒரு வரது வாழ்வு நிச்சயம் ஆன்ம நேயத்தில் நிலைபெறும்.

எனவே, அன்பு நெறியை உண்மைச் சமயம், உண்மை ஒழுக்கம், அன்பும் சிவமும் ஒன்றென்பர் அறிவுடையார் என்பதே இந்து தர்மத்தின் உயர்ந்த இலட்சியமாகும். இத்தகைய உயர் நெறியினைக் கடைப் பிடித்து வாழ்ந்தால் அதுவே அனைத்துச் சமயங்களும் காட்டும் நடைமுறை வாழ்வியலாகப் பரிமாணித்து விடுகின்றது. இவற்றின் அடிப்படைகள் தற்கால விஞ்ஞான ஆய்வுகளிலும் பெரிதும் ஒத்துப் போவதைக் காண முடியும்.

### புனிதத் தமிழிதழே வாழ்க

நல்ல நல்ல செய்திகளை நாளுந்தருகின்ற
வல்லதொரு நாளிதழாம் வலம்புரியே என்று உயர்
கல்வியிலே வல்லவர்கள் காமுறுதல் கண்ணுற்றேன்
எல்லையில்லாப் புகழோடு இதழ்வாழ வாழ்த்துகின்றேன்

நேர் வழியில் நின்று நிறைவுடனே செய்திகளை
ஆர்வமுடன் தருகின்ற அரிய இதழ் வலம்புரியே
சீர்பெருகு செந்தமிழைச் சிறப்புடனே வாழவைக்கப்
பாரினிலே வாழ்கவெனப் பல்லாண்டு கூறுகின்றேன்

கற்றவர்களேத்தும் கன்னித் தமிழ் நாளிதழே
நற்றவத்தோர் கூட நாடுகின்றார் உன் புகழை
இற்றைவரை வாழ்ந்திருந்த இறுமாப்புடன் நாளும்
பொற்புடனே வாழ்க புனிதத் தமிழிதழே!

மதிவாணர் செ.மதுசூதனன்

### தீரனே வாழ்க திசையெலாம் வென்றே

தசாப்தங்கள் கூடி சகாப்தங்கள் மேவ
சான்றாண்மை யோடு சால நடப்பாய்
இன்றொருதகவல் இனித்தமாய் தருவாய்
என்றும் ஏற்றமாய் விளங்கிடுவாயே

ஆறு ஆண்டுகள் தேறிய நிலையில்
பேறாய் எம் கரம் தவழுகின்றாயே
நாதம் முழங்க நகர்ந்த நல் ஏடே
வாதம் வம்புகள் விரவிய போதும்

வீரம் செறிந்து விறலொடு திகழ்ந்தாய்
பேரம் பேச ஒண்ணா நடுநிலை
காரம் சேர கருத்துகள் உரைப்பாய்
தீரனே வாழ்க திசையெலாம் வென்றே

தேறா மனத்தொடு தெவ்வர்கள் உலவ
ஆறாம் வயதில் அடி வைக்கின்றாய்
ஐங்கரன் துணையால் அறுமுகன் ஆசியால்
இங்கித ஏடே எங்கரம் தவழ்வாய்

வெற்றி உன்பக்கம் வாழ்வும் உனதே
நற்றமிழ் மேவ விஜயம் செய்குவை
சுந்தர நாளிதழ் சுபீட்சமடைந்தே
மந்தர மாலென வாழ்க பல்லாண்டே

கார்த்திகேயன்

### வாழ்க பல்லாண்டு

ஆறு வயதினை அடைந்த மகவுவே -உன்
அயராத உழைப்பினை -நம்
அண்டம் இது நன்கறியும் -உன்
பேனா முனையால் எமை ஈர்த்தாய் -நல்ல
ஊற்றம் மிகுதியால் நிலைத்துவிட்டாய்
உண்மைகள் அனைத்தையுமே -நீ
உலகிற்கு எடுத்துச் சொன்னாய் -உன்
சேவைதனை நீ ஆற்ற இந்த
உலகமே ஒத்துழைக்கும்
வானுலாவ வலம்புரியே -நீ
வளர்ந்துவிட வேண்டுமென
வையகத்து வாழ் தெய்வங்களை
வணங்கிடுவோம் எந்நாளும்
சத்தியத்தின் உறைவிடமே-நீ
சளைக்காமல் செய் உன் சேவையை
ஆறு ஆண்டுகள் அல்ல-வலம்புரியே நீ
அறுநூறு ஆண்டுகள் காண -அந்த
ஆண்டவன் அருள்புரிவான்.

S.தர்சிகா

தலையையே கிரீடமாக்குபவர்களுக்கு தலைக்கனம் வருவதில்லை

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005




# வைரக்கண்டு

ந.வினோதரன்

செத்த நாயை யாரோ சாக்கினால் மூடிவிட்டிருந்தார்கள். வீதியைக் கடக்கும் எல்லாரும் மூக்கைப் பொத்திக் கொண்டு கடந்தார்களே தவிர யாரும் அதை அப்புறப்படுத்த முன்வரவில்லை. அது செத்து குறைந்தது மூன்று நாட்களாகியிருக்கும்.

''உவன் வைரக்கண்டுதான் சாக்காலை மூடியிருப்பான்''

வைரக்கண்டு கொத்திய விறகை தள்ளிக் கொண்டு போய் வீடுகளுக்கோ, கடைகளுக்கோ பறித்து விட்டு நூறோ, இருநூறோ வாங்கிக்கொள்வான். அவன் உடம்பிலை சேட் போட்டதை நான் ஒரு நாளும் கண்டதில்லை. முதுகிலும் நெஞ்சிலும் கரிய உரோமம் வளர்ந்திருந்தது. ஒழுங்காகப் பராமரிக் கப்படாத பரட்டைத் தலை. இரண்டு பக்க கடைவாய்களிலும் எந்தநேரமும் வெற்றிலை சிவந்திருக் கும்.

உடம்பு மிகவும கறுத்திருந்தாலும் அக்குள் பகுதியில் அவனின் சொந்த சிவலை நிறம் அவனைப்போலவே அங்கீகரிக்கப் படாமல் தெரிந்தது.

நான் கைக்குழந்தையாக இருக்கும் போது இந்தியன் ஆமி எங்கடை வீட்டை எரிச்சவங்களாம். அம்மாவின்ரை கதறலைக் கேட்டு.., வைரக்கண்டுதான் அம்மாவையும் என்னையும் பாய்ஞ்சு காப்பாற்றினதாம். அதன் அடையாளமாகவலது முழங்காலுக்குக் கீழே பெரிய எரிகாயத் தழும்பு இருக்குது.

''மனிசி செத்தாப்பிறகு வைரக்கண்டுவுக்கு ஒரு மாதிரித்தான்.''


வைரக்கண்டுவுக்கு என்ன பெயரென்று அவனைப் பெத்ததுகளுக்குத் தான் தெரியும். அவர்கள் யாருமே இப்போது உயிரோடு இல்லாததால் அவனது பெயர் வைரக்கண்டுவாகவே இருக் கட்டும். தன் பெயர் சின்னையாஎன்று எப்போதோ சொன்னதையும் ஊர்ஜிதப்படுத்தமுடியவில்லை.

அந்தச்சைக்கிள் ஒருநடமாடும்வீடுதான். கைப்பிடியில் கொழுவப்பட்ட பையில் கத்தி, தண்ணீர்ப் போத்தல், வெற்றிலைச்சரை, பழையசாரம் போன்றவை இருக்கும். தற்செயலாக யாராவது சாப்பாடு கொடுத்தால் அந்தப் பார்சலும் தலைநீட்டும்.

மூண்டு வரிசத்திற்கு முதல் போராளிகள் ஊருக்குள் தங்கியிருப்பதை அறிந்த இராணுவம் இரவோடு இரவாகச் சுற்றிவளைத்த போது வைரக்கண்டுதான் பதுங்கிப் பதுங்கிப் போய் பிள்ளையார் கோயில் மணியை அடித்ததால் அவர்கள் பாதுகாப்பாக வெளியேறிய தாகவும் ஊருக்குள்ள பேசிக்கொண்டவை.

இப்ப தாய்மாருக்குக் குழந்தைப் பிள்ளைகளை வெருட்டிவைக்கத்தான் வைரக் கண்டு உதவுகிறான். அவனின் கோலம் அப்படி. ''ம் மாண்டிவருகுது...'' என்பதற்குப்பதிலாக ''வைரக் கண்டு வந்திடும் இந்த ஒரு வாயையும் பிடி... வைரக்கண்டு வைக் கூப்பிடவோ''

என்றால் சித்தியின்மிதுனாகூட முழுசி முழுசி சாப்பிட்டு விட்டு... அடம்பிடிக்காமல் தானே படுக்கைக் கும் போகிறாள். மிதுனாவிற்குத் தம்பி பிறந்த போது கற்கண்டு வாங்கிக்கொடுக்க தவறுத லாக வைரக்கண்டு என்று கேட்ட தால் கற்கண்டைக் கையில் வைத்துக் கொண்டு பரிதாபமாக அழுத தும் ஞாபகத்தில் இருக்கிறது.



கடைக்குப் பின்னால் களவாகச் சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தபோது வைரக் கண்டுவும் வந்துவிட்டான்.

''நீ தான் ஊருக் குள்ள கொஞ்சம் நல்ல பெடியன் எண்டு பாத்தால் நீயும் உந்தக் கேடு கெட்ட பழக்கம் பழகீட்டியோ?'' என்று ஏளனமாகக் கேட்டு விட்டுப் போய் விட்டான்.

''உப்பிடிச்செய்யுமெண்டு தெரிஞ்சிருந்தால் உதுகளைக் காப்பாற்றாமல் விட்டிருப்பன்'' என்று கடைக் காரனிடம் முணுமுணுத்தவனாம்.

ஆச்சீன்ரை திவசத்திற்கு வைரக் கண்டுவையும் கூப்பிடு சாப்பிட்டுப் போவான் எண்டு அம்மா கூறியதற்கிணங்க அவனைக்கேட்ட போது முதலில் மறுத்து விட்டான். தன்னை வேறு யாரோ சாப்பிடக்கேட்டதாகவும் சொன்னான்.

எங்கடை சத்தியக்கான்ரை சாப்பாட்டை வேண்டாமென்றுசொன்னால்கடவுளேபொறுக்கமாட்டான். சரிநான்வாறன்'' ஒப்புக்கொண்டான்.

திவசச்சாப்பாடு முடிந்துவிட்டது. பின்னேரம் என்னுடைய கை மணிக்கூட்டையும் காணவில்லை. வைரக்கண்டுவின் கைப்பையை எனது சந்தேகம் குடைந்தது. நேரடியாகக் கேட்கப் பயமாக இருந்தது. சிலவேளை சிகரெட் புகைத்ததை வீட்டுக்காரருக்குப் போட்டுக்கொடுத்திட்டால் கதைகந்தல்!

நிழல் மரவள்ளியிலை சைக்கிளைச் சாத்திப்போட்டு கடைக்காரனுக்குத் தண்ணியள் எப்போற நேரத்தில் காரியத்தை முடித்து விட வேண்டியது தான்.

கைப்பையைத் திறந்து பார்த்தபோது வழமையான பொருட்களோடு இரண்டு பனம் பழங்களுமே காணப்பட்டன. என்னை ஏமாற்றமே கௌவியது.

''கள்ளன். ஆருக்கோ வித்துப்போட்டான்.'' இனிமேல் உவனை எக்காரணம் கொண்டும் வீட்டிலை அண்டக்கூடாது.

மூடியிருந்த சாக்கையும் தளர்த்தி காகங்கள் துப்பரவுப் பணியைத் தொடங்கின. வைரக்கண்டுவின் விறகுகளுக்குமேலாக கட்டை மண் வெட்டி ஒன்றும் தெரிந்தது.

★ ★ ★

சத்தியக்கா! சத்தியக்கா!! யன்னலால் எட்டிப் பார்த்தேன் வைரக் கண்டுதான்.

''ரு சிப் பட்டுட்டது பிறகும் வந்திட்டான்'' பொருமிக் கொண்டேன்.

''இஞ்சை சத்தியக்கா இல்லை''

பதிலுக்குக் காத்திராமல் என் வேலைகளைக் கவனித்தேன்.

கொஞ்சநேரம் கேற்றடியில் நின்றதற்கு அறிகுறியாக வெத்திலைத் துப்பலால் கோலம் போட்டிருந்தான்.

சந்தையடியில் மலிந்த மீனுக்காக 'சொப்பின்' பையுடன் சுற்றிக்கொண்டிருந்தேன். நான் வழமையாக வாங்குகிற நாகர் கோயில் சின்னத்தங்கக் கிழவியைக் காணவில்லை. கிழவி அறுத்தும் தந்துவிடும்.

''ம்... மீன் மலியும் போலத் தெரியவில்லை.''

''இஞ்சை உன்ரை சைக்கிளை ஒருக்காத் தாறியே'' வைரக்கண்டுதான்.

எனக்குப் பொல்லாத கோபம் வந்தது.

ஆருக்கோ விசம் கடிச்சுப் போட்டுதாம். தன்ரை சைக்கிளிலை 'டபிள்' போக ஏலாதாம். அதுக்குத்தான் என்ரை சைக் கிள் மறு பேச்சின்றிக் கொடுத்து விட்டேன். அரை மணித்தியாலத்திலை திருப்பிக் கொண்டு வந்திட்டான்.

''உன்ரை சைக்கிளிற்கு 'பிறேக்' காணாது இரண்டு புதுக்கட்டை போட்டிருக்கு...''

''என்ரை மணிக்கூடு வித்த காசாக்கும்'' -மனதுள் கறுவிக்கொண்டேன்.

'சீற்றைக்' கொஞ்சம் பதிச்சுவிடு ஓட இதமாயிருக்கும். ஆலோசனையை இலவசமாகத் தந்துவிட்டு போனான்.

எங்கடை வீட்டிலை மணிக்கூடு களவு போனகதை ஊருக்குள்ள பரவினதாலை வைரக்கண்டுவைக் கண்டவுடனேயே எல்லாக் கதவுகளும் சாத்திக்கொள்ளும். இப்ப தன்ரை விறகுகளைத் தூரத்திலை- உள்ள கடையொன்றுக்குத்தான் கொடுக்கிறவனாம்.

'உவனுக்கு இதுவும்வேணும்இன்னும் வேணும்' பிறகுமொருநாள் வைரக்கண்டு கூப் பிட்டுப் பார்த்தான். கதவு திறக்கவேயில்லை. ஆத்திரமேலீட்டால்... 'நான் அந்த நேரம் வீடு எரியேக்கை காப்பாத்தாட்டா இதுகள் செத்த அந்த இடத்திலே புல்லே முளைச்சிருக்கும்.' ஆவேசமாகக் கத்தினான்.

'நாங்கள்கல்வீடுகட்டத்தொடங்கேக்கை வைரக்கண்டு இரவு பகலாத் தலையிலை கல் லும் மண்ணும் சுமந்ததாலை தான் இந்த வீட்டை ஈடேற்றினம்'.

ஆச்சி உயிரோடை இருக்கேக்கை சொன்னது ஞாபகத்தில் உறைத்தது.

'இந்தக் காலத்துப் பெடியள் ஒண்டிலையும் கவனமில்லை. இந்த மணிக்கூடு ஒரு மாதமாய் குளிக்கிற தொட்டி யடியிலை கிடக்குது. ஒருதரும் கவனிப்பாரில்லை'.

தாத்தா புறுபுறுத்துக்கொண்டு வந்தார்.

வைரக்கண்டுவைப் போல மணிக்கூடும் ஒரு மாதம் பிரிந்திருந்தாலும் சரியாகத் தான் ஓடிக்கொண்டிருந்தது. மனச்சாட்சிக் கரங்கள் என்னை அழுத்த நாயைப் புதைத்துக்கொண்டிருந்த இடத்திற்கு ஓடினேன். கிடங்குவெட்டி நாயை அவனே புதைத்து விட்டான். வைரக்கண்டு! வைரக் கண்டு!! அவன் என்னை ஒரு பொருட்டாகவே பார்க்கவில்லை. வைரக்கண்டுவாகவே நடந்து கொண்டிருக்கிறான் நிதானமாக... மிகவும் நிதானமாக...

(யாவும் கற்பனை)

# யாத்திரை ...

(..8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவளின்ரை படிப்பு... கலியாணம்... எல்லாம் இருக்கு! ஒரு நாள் தங்கம்மா மகளிடம் கூறினாள் ''ஏனம்மா நான் உங்களுக்கு தரக்கூடாதா...? இது ஒருவரிடமும் களவெடுத்த காசில்லையே அம்மா!

இது நான் கஷ்டப்பட்டு உழைத்த காசு... !'' ''அதற்காகத்தான் நான் சொல்லுகிறேன் இனி எங்களுக்கு காசு தேவையில்லை. இனி உன்னட்டை நாங்கள் காசு வேண்டினால் அதைப் போல பாவம் வேறில்லை''

பார்வதியம்மா, பார்வதியம்மா என ஒரு சிப்பாய் ஓங்கிய குரலில் கட்டியம் கூறினான். பார்வதி உசாரானாள்.

ஓமோம்... நான் நிக்கிறன் என்று கையைக் காட்டி பதிலுரைத்தாள். இஞ்சை வா...! குரலில் கையைக் காட்டி அழைத்தான். ஏதோ விமோசனம் கிடைத்து விட்ட மாதிரி பார்வதி அம்மாவின் உணர்வுகள் விழித்துக்கொண்டது.

தனது கைப்பையை இறுக்கிப்பிடித்தபடி விரைவாக அவனது இடத்தை நோக்கி நடந்தாள்.

''உள்ளுக்குள் போ...!'' சிப்பாயின் கட்டளை உயர்ந்தது. பார்வதி விரைவாக உள்ளுக்குச் சென்றாள். உள்ளுக்குள் எல்லாருமே சிப்பாய்கள் தான்! முன் அறைக்குள் ஒரு பெண் சிப்பாய் அழைத் துச் சென்றாள். உள்ளுக்குள் ஒரே யொரு அதிகாரிதான்.

இராணுவத்துக்கே உரிய மிடுக்குடன் அமர்ந்திருந்தான்.

''உட்கார்!'' மிரட்டும் தோரணையில் அப்பெண் சிப்பாய் அந்த அதிகாரிக்கு முன் போடப்பட்டிருந்த கதிரையை சுட்டிக்காட்டி னாள். ஒரு தாமதமும் இல்லாமல் பார்வதியம்மா அமர்ந்துகொண்டாள்.

உன்ரை பெயர் என்ன...? அதிகாரியின் குரல் சிம்மக்குரல் என ஒலித்தது. பார்வதியம்மா...! பார்வதியம்மாவின் குரல் பயந்தபடி ஒலித்தது.

ஐடன்டி கார்ட் காட்டு பார்க்கலாம்! மறுபடி அதிகாரி குரல் ஒலித்தது. தனது கைப்பையில் இருந்து தன்து அடையாள அட்டையை எடுத்து பார்வதியம்மா காட்டினாள்.

அதை வேண்டி மேலும் கீழுமாய் பிரட்டிப் பார்த்து அதிகாரி பார்வையிட்டார். பார்வதியம்மா...! வாய் முணு முணுத்தது எங்கே போறது ... பார்வதியம்மாவின் முகத்தைப் பார்த்தபடி கேட்டார். ''முதலில் கொழும்புக்குப் போய் அங்கிருந்து இந்தியாவுக்கும் பேந்து கனடாவுக்கும் போகப்போறன் ஐயா...! என்ரை மகள் கனடாவில் தான் இருக்கிறாள் ஐயா...!

''பாஸ்போட், வைச்சிருக்கிறாயா... எடுபார்க்கலாம்''

''நான் கொழும்புக்குப் போய்த் தான் ஐயா எடுக்கவேண்டும்''

''ஓ! அப்படியா... அதிகாரியின் தலைக்கு மேல் இருந்த சுவர்க்கடிகாரம் ஒலித்தது. பார்வதியம்மாவின் பார்வை மேலே பார்த்தது.

ஓ! பதினொரு மணியாய்ப்போச்சு... தனக்குள் சொல்லிக்கொண்டார். இருந்தால்போல் அதிகாரி தன் முன்னாள் வைக்கப்பட்டிருந்த அழைப்பு மணியை ஓங்க அடித்தார்.

அறை முழுவதும் அந்த மணி ஓசை வியாபித்து ஒலித்தது. ஒரு சிறுவயதிலான சிப்பாய் ஓடோடி வந்து விறைப் பாக ஒரு சலூட் அடித்தான்.

புத்தே மட்ட தே எக்க கெ யன்ன...! மறுபடியும் விறைத்த சலூட் ஒன்றை அடித்து அச் சிறு சிப்பாய் அறையை விட்டுவெளியேறினான். இருந்தாற்போல் ஒரு சிறு கடுதாசியை எடுத்து தன் பேனாவால் ஏதோ கிறுக்கினார் அதிகாரி.

''சரி அங்கை இதைக்கொண்டு போ... !'' அதிகாரி பார்வதியம்மாவைப் பார்த்து சிம்மக் குரலில் கூறினார். பார்வதியம்மா அதைப் பவ்வியமாக இரு கைகளாலும் வேண்டினாள். தனது அடையாள அட்டையை தனது கைப்பை யினுள் வைத்துக் கொண்டே கதிரையைவிட்டு எழும்பினாள். எழும்பி திரும்பினாள் அவளுக்கு தலையைச் சுற்றியது. பார்வதியம்மா கதிரையைப் பிடித்துக்கொண்டாள். அவளுக்கு நிக்க முடியவில்லை. தலையை வேகமாய் சுற்றியது.

அவளின் பார்வை மங்கியது, மேசையை பலமாகப் பிடித்துக்கொண்டார். ஆனாலும் அவளால் நிற்க முடியவில்லை. கால் தடு மாறியது. கண்பார்வை முற்றாக மறைந் தது. அவளை அறியாமல் உடல் தளர்ந் தது. நிலை தடுமாறி கீழே சரிந்தாள். அவளது கைப்பை தூரப்போய் விழுந்தது. முற்றாக கீழே சரிந்து தலை நிலத் தில் அடி பட தன்னை அறியாமல் கீழே விழுந் தாள்.


''மொக்கத! மொக்கத!'' அதி காரி திடுக்கிட்டபடி கத்தியபடியே தன் இருக்கையை விட்டு சடார் என எழுந்தார். மணியை பலமாக அடித்தார். மணியை அடித்த வேகத்தால் திடுக்கிட்டபடி 3 சிப்பாய்கள் உள்ளுக்குள் ஓடிவந்தனர்.

இவற்றையெல்லாம் உணரவோ பார்க்கவோ பார்வதியம்மாவால் முடியவில்லை. அவளின் முகத்தில் உணர்வில்லை. மகள் சொர்ணத்தின் நினைவும் பேத்தியின் நினைவும் தான். நினைவு முழுவதும் தேக்கிவைத்திட பார்வதியம்மாவின் முகத்தில் சலனம் ஒன்றுமே இல்லை. அவளுடைய ஆத்மா தனது யாத்திரையை ஆரம்பித்துவிட்டது. (முற்றும்)

மனச்சாட்சிதான் ஆத்மாவுடைய குரல்

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005

# இந்தப் பேப்பரில ஒன்றும் இல்ல என்டு ஏன் வாசகர்கள் தூக்கியெறிகிறார்கள்?



காலை எழுந்தவுடன் பத்திரிகையைப் படிப்பது பலருக்கு இன்று பழக்கமான ஒரு செயற்பாடாகிப் போய்விட்டது. பத்திரிகையைப் படிக்கவில்லையென்றால் பலருக்கு பொழுதே விடிவதில்லை.

ஒரு செய்திப் பத்திரிகையை வாங்கி மேலோட்டமாகப் பார்த்துவிட்டு இந்தப் பேப்பரில ஒன்றும் இல்ல என்று தூக்கியெறிந்து விடுகின்ற வாசகர்கள் பலர் இருக்கிறார்கள்.

ஒரு செய்திப் பத்திரிகையை செய்திகளால் மட்டும் நிரப்ப முடியுமா என்பது இந்த நிலையல் மேற்கிளம்புகின்ற ஒரு கேள்வியாகும். இக் கேள்விக்கான பதில் செய்திக் கொள்கை என்றால் என்ன? What is the Theory of News என்ற கேள்விக்கான பதிலில் அடக்கம் பெறும். ஒரு கட்டுக்கோப்பான செய்தியானது இரண்டு கேள்விகளுக்கு பதில் கொடுக்கவேண்டும்.

1. செய்தி என்றால் என்ன?
2. அதனை செய்தியாக்கும் அடிப் - படை நிகழ்வு என்ன?

ஒரு செய்தித் தாளை முழுவதும் செய்திகளால் நிரப்ப முடியாது. ஒரு பத்திரிகையின் முதுகெலும்பான விளம்பரங்கள் அங்கு முதலிடம் பெறவேண்டும். கலாசார நிகழ்ச்சிகள், இரங்கல் செய்திகள், நிகழ்ச்சிகளின் தொகுப்பு, ஆசிரியத் தலையங்கம் என்பன கூட மேற்குறிப்பிடப்பட்ட செய்திக் கொள்கையின் அடிப்படையில் செய்திகளாகக் கருதப்பட முடியாதவை.

செய்திக் கொள்கையின் அடிப்படையில் ஒரு செய்தி என்பது 3 விடயங்களை தன்னுள் கொண்டிருக்க வேண்டும்.

1. அது ஒரு நிகழ்வைப் பற்றியதாக இருக்க வேண்டும் (News is about events)
2. அது தற்கால நிகழ்வாக இருக்க வேண்டும (News is aimed at current events)
3. அது நிகழ்வை அறிவிப்பதாய் இருக்க வேண்டும் (An event becomes news only when reported)

எமது நடைமுறை வாழ்வில் மாற்றங்கள் நிகழ்கின்றன. இந்த மாற்றங்களே நிகழ்வுகளாகின்றன. இந்த நிகழ்வுகளே செய்திகள் ஆகின்றன. இதையே செய்திகள் நிகழ்வுகள் பற்றியன என்று செய்திக் கொள்கை விளங்கப்படுத்துகின்றது.

ஒரு குறிப்பிடப்பட்ட இடத்தில் மனித புதைகுழி ஒன்று கண்டுபிடிக்கப்படுகின்றது என வைத்துக்கொள்வோம். இரண்டு தசாப்த கால போரும் அதன் அனுபவங்களும் இதுபோன்ற மனிதப் புதைகுழிகள் பலவற்றை தந்துள்ளது. மனிதப் புதைகுழி இருப்பது இங்கு செய்தியல்ல மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டதே இங்கு செய்தியாகும்.

இன்று விபத்துக்களிற்கு குறைவேயில்லை. அன்றாடம் விபத்துக்களைச் சந்தித்து காயப்படுவோரும் இறப்போரும் இருந்துகொண்டே இருக்கிறார்கள். விபத்து என்பது இங்கு செய்தியல்ல விபத்து நடைபெற்றதே இங்கு செய்தியாகும். நான்கு வெவ்வேறு இடங்களில் நடந்த விபத்துக்களில் ஆறுபேர் மரணமானார்கள் என்ற செய்தியைக் காட்டிலும் ஒரு வாகனத் தில் சென்ற ஒரே குடும்பத்தைச் சார்ந்த மூவர் மரணமானார்கள் என்ற செய்தி முக்கியதன்மை கொண்டது, அதிக தாக்கத்தை ஏற்படுத்துவது. நான்கு வெவ்வேறு இடங்களில் ஆறுபேர் இறந்தார்கள் என்பதைக் காட்டிலும் ஒரு சம்பவத்தில் மூவர் இறந்தனர் என்பது விபத்து என்பதால் அல்ல அதில் நடந்த நிகழ்வால் அதிக செய்தித் தன்மை கொண்டது.

ஆறிய கஞ்சி பழம் கஞ்சி என்பது போல் பழைய செய்திகள் செய்தித் தன்மையை இழந்து விடுகின்றன. இன்றைய செய்திகளும் நிகழ்வுகளுமே செய்திகளாகின்றன. மக்களை அதிகம் பாதிக்கின்றன.

செய்திகள் வேகமாக பழமையடைகின்றன ஏனென்றால் ஒரு நிகழ்வு நிமிடத்திற்கு நிமிடம் புது வடிவம் பெறுகின்றது. ஒரு நிகழ்வின் புதுவடிவத்தை மிகவிரைவில் இன்னுமொரு வடிவம் வந்து பழையதாக்கிவிடுகின்றது. இதனால் செய்திகள மிக விரைவாக பழையதாய் போய்விடுகின்றன.

அண்மையில் அனைவரையும் உலுக்கிய சுனாமி இயற்கை அனர்த்தப் பேரலை பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியது. இன்றும் அது பற்றிய செய்திகள் வந்துகொண்டிருந்தாலும் சுனாமி நடந்த போது ஏற்பட்ட தாக்கத்தை அது ஒரு போதும் திரும்ப கொண்டுவரப் போவதில்லை. இன்று அந்த சுனாமி பற்றி சொல்லப்படுகின்ற செய்திகள் அனைத்தும் நடைபெற்ற அந்த சுனாமி நிகழ்வின் அறிக்கைகளாகும். அந்த வகையில் இனி அறிக்கையிடப்படப்போகின்ற அந்த சுனாமி பற்றிய எந்த அறிக்கையும் அதே போன்றதொரு தாக்கத்தை இன்று ஏற்படுத்தப்போவதேயில்லை.

எந்த ஒரு நிகழ்வின் புதிய வடிவத்தையே செய்தியாக பத்திரிகைகள் எப்போதும் பிரசுரிக்க வேண்டும்.

எநத ஒரு நிகழ்வும் அறிக்கையிடப்படும் போதே செய்தியாகலாம். ஆனால் அந்த நிகழ்வு தானாகவே செய்தியாக முடியாது. அது அறிக்கையிடப்படவேண்டும். பத்திரிகைகள் இந்த நிகழ்வுகளைத் தேடி அறிக்கையிடுகின்ற பணியைச் செய்கின்றன. இதனாலேயே அவை செய்திகளாகின்றன.

சாட்டியில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட தாழி பற்றிய செய்தி அறிக்கையிடப்பட்டது. இதே போல வடமராட்சிப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட கிணறு பற்றிய செய்தி அறிக்கையிடப்பட்டது. இவை கண்டுபிடிக்கப்பட்டு அறிக் கையிடப்பட்டதால் தான் செய்தி வடிவம் பெற்றன.

உண்மையில் பத்திரிகைகள் தமது அன்றாடப் பணிகளில் செய்தி என்றால் என்ன? அதனை செய்தியாக்கும் அடிப்படை நிகழ்வு என்ன? என்ற கேள்விக்கான பதிலைத் தரும் பணியையே செயகின்றன. அவ்வாறான பணியில் செய்திகள் மட்டுமல்ல செய்திகளோடு வேறுபல நிகழ்வுகளும் அறிக்கையிடப்படுகின்றன.



ஒரு நிகழ்வு செய்திப்பெறுமானம் பெற அது ஒரு நிகழ்வைப் பற்றியதாக இருக்க வேண்டும், அது தற்கால நிகழ்வாக இருக்க வேண்டும், அது நிகழ்வை அறிவிப்பதாய் இருக்க வேண்டும் என்ற மூன்று செயற் பாடுகளும் பத்திரிகையில் நடைபெறுகின்றன.

இவற்றை விட ஒரு நிகழ்வின் உண்மைத தன்மை, சமநிலை, தெளிவு, நம்பகத் தன்மை, அது இடம்பெற்ற காலம், இடம், நிகழ்வின் முக்கியம், மனித உணர்வுகள் அங்கு தொடப்படும் விதம் என்பன எல்லாம் கூட ஒரு நிகழ்வை வாசகர்களுக்கு செய்திப்பெறுமானம் மிக்கதாக மாற்றுகிறது. இவற்றில் எல்லாமே எல்லாருக்கும் செய்திப் பெறுமானத்தைத் தருவதில்லை. இந்த வகையில்தான் தங்களுக்கு செய்திப்பெறுமானம் தராத செய்திகள் வருகின்றபோது வாசகர்கள் இன்று பேப்பரில் ஒன்றும் இல்லை என்று தூக்கியெறிகிறார்கள்.

அருள் திரு
ரூபன் மரியாம்பிள்ளை

இனிவரும் காலங்களில் இவற்றை உணர்ந்தவாசகர்கள் பேப்பரில் ஒன்றும் இல்லை என்று தூக்கியெறியமாட்டார்கள் என்று நம்பலாமா? பத்திரிகைத் தயாரிப்பாளர்களும் விடியவிடிய பணி செய்து பெரிய ஒரு பிரசவ வேதனையின் பின்னர் பேப்பரில் ஒன்றும் இல்லை என்ற வாசகர்கள் தூக்கியெறியும் நிலையை நன்கு புரிந்துகொள்வார்களா?

# சித்த மருத்துவ நோக்கில்...

(...7 ஆம்பக்க தொடர்ச்சி

கண்டு மழை பெய்வதை காணாமலேயே மழை பெய்யப்போகின்றதுஎனஅறிதல்.

மேற்கூறிய மூன்று பிரிவுகளாகிய கருதல் அளவையைக் கூட்டாக சித்த மருத்துவ நோக்கில் பார்க்கும் போது சித்த மருத் துவத்தில் கூறப்படும் நீர் குறி நெய் குறியை எடுத்துக் கொள்ளலாம். சிறுநீரில் விடப்படும் எண்ணெய்த்துளி அரவம் போல் (பாம்புபோல்) காணப்படின் வாதநோய்என் றும் ஆழி(மோதிரம்)போல் இருப்பின்பித்த நோய் என்றும் முத்துப் போல் இருப்பின் கபநோய்என்றும்கணித்தல் கருதல் அள வைக்குள் அடக்கலாம்.

*03)உரை/மேற்கோள் (AUTHORITY)*

சித்தர்கள் தங்கள் யோக வல்லமை யால் கண்ட உண்மைகளைத் தந்திரக்கலை, மந்திரக்கலை, உபதேசக் கலை என மூன்று பிரிவுகளில் அடக்கியுள்ளனர். இந்த அறிவை உரை அளவைக்குள் அடக்கலாம். வ்சியத்தின் மூலம் உள நோயை நீக்குவதும் உளவியல் மருத்துவத்தில் அறிதுயில்முறையில் காரணங்களை அறிதலுக்குத் தந்திரக்கலை உபயோகமாகின்றது.

மந்திர உச்சாடணங்களைச் செய்ய தியானத்தின்மூலம் மனஅமைதிபெறல் மந்திரக் கலையில் அடங்கும்.

பல வித நோய்களுக்கான காரணங்கள், நோய்களின் குறிகுணங்கள் மருந்து கள் ஆக்குவதற்கான விதிகள் போன்ற கருத் துக்களை உள்ளடக்கியது உபதேசக் கலை எனலாம்.

04. ஒப்புதல்/ஒப்புமை (COMPARISON)

தமக்கு தெரிந்த ஒரு பொருளைக் கூறி அதன் மூலம் விளக்க வேண்டிய கருத் தினை ஒப்பிட்டுத் தெளிவுபடுத்துவதாகும். சித்த மருத்துவத்தில் நாடி சாஸ்திரம் ஓர் சிறப்பு அம்சமாக அமைகிறது. நாடி நடையைச் சீவ செந்துகளின் நடைக்கு ஒப்பிட்டு விளக்கியுள்ளனர். மருந்து களின் அளவுகளைக் கூறும் போது அரிசி எடை, தூதுவளம் பழம் அளவு, கொட்டைப் பாக்களவு, உழுந்தளவு எனக் கூறி யுள்ளனர். சில நோய்களை விளக்குகையில் நரித்தலைவாதம் எனக் குறிப்பிட்டுள்ளனர். இவை யாவும் ஒப்பு அளவையில் அடங்கும்.

05. அவாய்நிலை/ அருத்தாபத்தி (IMPLICATION)

நாம் உணருவதற்கான ஒன்றைக் கூறி அதன் மூலம் குறிப்பிடவேண்டியகருத்தினை, உணரவைப்பது அவாய் நிலையாகும். உதாரணமாக பகலில் தூங்காதவன் விவேகியாக இருப்பான் என்று கூறும் போதுபகலில்



தூங்குபவன் மந்த புத்தியடைவன் என்பது கூறாமலே விளங்கக் கூடிய கருத்தாகும். இதேபோல் மது அருந்தாதவனுக்கு கல்லீரல் வீக்கம் (Cirrhosis) வராது என்றால் மது அருந்துபவனுக்கு ஏற்படும் விளைவை என்னவென்று உணரவைப்பதாகும். அதே போல் புகைக்காதவனுக்கு நுரையீரல் புற்று வராது என்றால்புகைப்பவனுக்குநுரையீரல் புற்று வரும் என்பதை உணர வைப்பதாகும். இவை யாவும் அருத்தா பத்தி அளவையில் அடங்கும்.

06. இயல்பு (PROPRIETY)

இது தெளிவற்ற ஒரு பொருளைப் பற்றிய ஐயம் அற்ற அறிவைத் தரும் அளவை. யானை மீதமர்ந்த ஒருவன் பொருள் கொடு என்று கேட்டால் அது அங்குசத்தையே குறிக்கும். வன்னிக் காட்டில் இருப்பவன் தனக்குக் காய்ச்சல்என்றால் அதுமலேரியாவையே குறிக்கும் .இதே போல் மருத நிலநீர் நோய்களைத் தீர்க்கும் என்று கூறுவது இவைகள் அனைத்தும் இயல்பு அளவைச் சாரும் என லாம்.

07. ஐதீகம்/உலகுறை (TRADITION)

சித்தர்கள் மேற்கொண்ட வழி முறைகளை அவற்றின் உட்பொருளை அறிந்தோ அறியாமலோ வழிவழியாகக் கடைப்பிடித்தல் ஐதீகம் எனப்படும். பண்டைக் காலத்தில் பொக்குளிப்பான் (Chicken Pox) போன்ற தொற்று நோய்கள் ஏற்படின் நோயாளியைத் தனிமைப் படுத்தலும் பிறர் நோயாளியை நெருங்காமல் அறிவிப் பாக வேப்பிலையை செருகுதலும் போன்ற செயல்கள் மூலம் அவ் நோய் பரவாது தடுக்க எடுக்கும் வழி முறைகளை ஐதீகத்தில் அடக்கலாம்.

08. அபாவம் (IMPOSSIBILITY)

ஒரு குண இயல்பு இருத்தற்கான சாத்தியம் இல்லை எனத்தெரிந்து அது இல்லை என்று முடிவு செய்வது அபாவம் ஆகும். எனவே பொருளின் இன்மையை உணர்த்துவது அபாவம் எனலாம். உதாரணமாக முயல்கொம்பு என்று குறிப்பிடுவதும் சிறுநீர் சாதாரண அளவிலிருந்து (Amount- தொகை) அதிகரிக்காவிட்டால் மதுமேக நோய் இல்லையெனக் கூறுதல் அபாவம் ஆகும்.

09. ஒழிபு/மீட்சி (EXCEPTION)

நாம் காணும் பொருளைப் பற்றிய கருத்துக்களில் ஐயத்திற்கிடமானவற்றைத் தவிர்த்து மீதியைக் கொண்டு சரியான முடிவுக்கு வருவதே ஒழிபு எனலாம். போரிட்ட இருவரில் ஒருவர் வெற்றியடைந்தார் என்றால் மற்றவர் தோல்வியுற்றார் என்பது ஒழிபு அளவை எனலாம்.

உதாரணமாக ஒரு நோயாளியின் மார் புப் பகுதியைப் பரிசோதிக்கும் போது ஒரு உராய்வுச் சத்தம் கேட்பதாக வைத்துக் கொள்வோம். இத்தகைய உராய்வுச்சத்தம் சுவாசாசய கவசம் இருதயக்கவசம் ஆகியவற்றின் உராய்வு விசையினால் ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். (Pleural Rub, Pericardial Rup) இவையிரண்டையும் பேதப்படுத்துவதற்கு ஒரு வழிமுறையைப் பின்பற்ற வேண்டியுள்ளது. அதாவது சொற்ப நேரம் சுவாசத்தை நிறுத்திப்பார்க்கும் போது பரிசோதனையில் சத்தம் கேட்காவிடின் அச் சத்தம் சுவாசக் கவசத்தில் ஏற்படுவதாக நாம் நிதானிக்கலாம். இதனை ஒழிபு முறை அளவை எனலாம்.

10. தொடர்பியல்பு/உண்மை (Association)

இதனை என்றும் எவராலும் மறுக்க முடியாத உண்மை எனலாம். எமது உடம்பில் வாதநோய்கள் இருப்பின் வாத நாடி மிகுந்து காணப்படும் என்று கூறுவது உண்மைஅளவைக்குள் அடக்கலாம். இதேபோல் இரத்தப்பெருக்கு ஏற்படும் பொழுது (Haemorrhage) அங்கு இரத்தக் குழாய்கள் சேதமடைந்துள்ளது என்பது ஒருவராலும் மறுக்க முடியாத உண்மையாகும். அளவைகள் பத்துப் பிரிவுகளாகக் கூறப்பட்டாலும் காட்சியில் - அபாவம், இயல்பு, உபமானம்( ஒப்பு) ஆகியனவும் அனுமானத்தில் -அருத்தாபத்தி, உண்மை, ஒழிபு முதலியனவையும் உரையில்- ஐதீகமும் அடங்கும் எனலாம். நோய் நாடலை, பிரமேயத்தைசரியாக உணர்ந்தாலன்றி சிறப்பு அடைய முடியாது. ஆகையால் அளவை என்னும் பிரமாணம் பற்றிய தெளிவான அறிவு இருந்தாலே பிரமேயத்தை சரியாக உணரலாம். எனவே சித்த மருத்துவத் துறையில் சிறப்பாக முன்னேற்றம் காண்பதற்கு அளவைகளைப் பற்றிய அறிவும் ஆற்றலும் இன்றியமையாதவையாகும். ★

பேனாதான் மனதின் நாக்காக இருக்கிறது

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005



# இயற்கையும் இளைய கன்னியும்

பெண் பார்க்கும் படலம்
அச்சத்தில் படபடத்த கால்கள்
வெட்கத்தில்
அந்திவானமான முகம்
சிறுமாரியாய் கொட்டிய
வியர்வைத் துளிகள்
மின்னலென வெட்டிய
விழிகளின் படபடப்பு
பாலையின் வரட்சி
நாக்கை நனைக்க
இனந்தெரியாத இடிமுழக்கம்
இதயத்துள் துடிக்க
எதிர்பார்ப்புக்களுடன் வந்த
ஏழு லட்சம் சீதனம் எதிர்வீட்டு அக்காவை
ஏமாற்றத்தில் தள்ளியதில்
சூழ்ந்தது சூறாவளி
அவள் கண்ணில்
துளிர்கின்றது நீர்த்துளி.

அ.யசீகரன்

# இலட்சியம் காக்க வாழ்த்துக்கள்

மொழி நடை அழகினில் வலம்புரி
நிலம் சுமக்க வாழ்த்துக்கள்
ஒளிவளர் எழுத்தினில் வலம்புரி
பலம் சுமக்க வாழ்த்துக்கள்
தமிழ் மொழி இனிமையில் வலம்புரி
தாகம் தீர்க்க வாழ்த்துக்கள்
தாய் மொழி இளமையில் வலம்புரி
தரம் பேணிட வாழ்த்துக்கள்
சூரியன் விழித்ததும் ஒலித்திடும் வலம்புரி
தோகை மயிலாக வாழ்த்துக்கள்
இருளைக்கலைக்க எழுதிடும் வலம்புரி
இலட்சியம் காக்க வாழ்த்துக்கள்

இருபாலை புலேந்திரராசா முதலியார்

## வடபிராந்திய போக்குவரத்துச் சபை பொதுமுகாமையாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ். மாவட்டத்தில் தினசரி நாளி தழாக வெளி வந்து வாசகர் நெஞ்சைக் கொள்ளை கொண்டு விற் பனை யாகிக் கொண் டி ருக்கும் 'வலம்புரி' இன்று 20.12.2005 அகவை ஆறைப் பூர்த்தி செய்வதையிட்டு வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன்.

குடாநாட்டு மக்களுக்குச் சுடச்சுட செய்திகளை வழங்குவதோடு மருத் துவம், ஆன்மீகம் , கல்வி, விளை யாட்டு போன்ற பயனுள்ள கட்டுரை களை வழங்கி வரும் 'வலம்புரி' காலத்தின் தேவையறிந்து வரலாற்று ஆவணச் சிறப்பிதழ் ஒன்றை இன்று வெளியிடுவதும் எம் மக்களுக்கு வரப்பிரசாதமே. இதன் பணி மேலும் தொடர மனதார வாழ்த் துகிறேன்.

க.கணேசபிள்ளை
பொதுமுகாமையாளர்
இலங்கை போக்குவரத்துச் சபை
கோண்டாவில்.

# முன்னோடி

பெரியம்மா வளவு
இரண்டுஒழுங்கைகளைஇணைக்கும்
நீட்டுக் காணி
மாமா வீட்டில் இருந்து
மச்சாள் வீட்டுக்குப் போக
எனக்குக் குறுக்குவழி
பெரியம்மா வளவு தான்
பத்துப் பன்னிரண்டு வயதில்
இவ்வழியே நான் போகும்
பொழுதெல்லாம்
பெரிய வீட்டில் எனக்கென
நல்லதுநறியதுகள்காத்திருக்கும்
தேநீர்
பாற்பிட்டு
பனங்கிழங்குத் துவையல்
நாளைக்கொன்று
வேளைக்கொன்று
பள்ளிவிடுமுறைக்கு காலத்தில்
எனக்குப் பல பணிகள்
முக்கியமானது
சுருட்டுக் கொட்டிலில்
பத்திரிகை வாசித்தல்
அல்லது
'கேளும் ஜெனமேஜெய மகாராசனே
என சைவம்பாயனர் சொல்லத்
தொடங்கினார்'
என
அனுமார் வால்போல் நீளும்
வசனத்தில்
பாரதக் கதை படிப்பது
என்வாசிப்பைக் கேட்கும்
தொழிலாளர்களுள்
மூத்தவர் பெரியப்பு
ஆளை 'உச்ச' ஏலாது
மனிசனுக்குத்தான்கதை
முழுதும்தெரியுமே
பிற்பகலிலை
பெரியப்பவுக்கு ஒரு சோட்டை வரும்
'மோனை ஒரு வாய்வெத்திலை
இடிச்சுக் கொண்டுவா'
இந்த 'விடுதலை'க்காக
காத்திருந்தவன்போல
அம்புருவிக் கொண்டு போவன்
பெரியம்மா கண்ணயரும் நேரம்
தட்டத்திலிருந்து
வெற்றிலை, சீவல், சுண்ணாம்பு-
எல்லாம்
கணக்காக எடுத்து
பக்குவமாய் இடித்து
பூவரசம் இலையில் இறக்கி



மடித்து
விண்கூவிக் கொண்டு போய்
பெரியப்பூட்டைக் குடுத்திட்டு
கிட்டி அடிக்கப் போயிடுவன்
எட, இவ்வளவு பக்குவமா
இடிச்சுக் குடுத்தும்
'நல்லா இருக்கு' எண்டு
பெரியப்பு சொல்லேல்லை எண்டு



எனக்குத் தீராதகவலை...
என்னடா செய்வமெண்டு யோசிச்சன்
அன்றைக்கு வெள்ளிக்கிழமை
பெரியம்மா கோயிலுக்குப்
போயிட்டா
வழமையான வெத்திலை ஓடர்
வந்தது.
நான் கற்பனை செய்திருந்த மாதிரி
இடித்துக்கொண்டுபோய்க்
கொடுத்தன்
எட்ட நிண்டு ஓரக்கண்ணாலை
பார்க்கிறன்
பெரியப்பு முகத்தில்
நவரசங்கள்
மாறி மாறி வந்து போயின
வேறொன்றுமில்லை
ஒரு கறண்டி சீனியும் சேர்த்திருந்தன்
நான்
பன்னிரண்டு வயதில் செய்த
பரிசோதனையே
பிற்காலத்தில் பீடாவாக வந்தது
என்று
உரிமைகோர முடியுமா என்ன?

சோ.பத்மநாதன்

# பாடசாலைத் தலைமைத்துவம்...

05ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆசிரியர்களையும், பின்பற்று வோர் களான மாணவர்களையும் தூண்டுதல் பாடசாலைத் தலைமைத்துவத்தின் கட மையாகும். பெரும்பாலும் தேவைகளை இனம்காண்பதும் திருப்திகளை வழங்கு வதும் (Need and Satisfaction) தூண்டு தலின் அடிப்படைகளாக அமையும். எனவே தான ஆசிரியர்களதும் மாணவர்களதும் தேவைகளைக் கண்டறிவதில் பாட சாலைத தலைமைத்துவம் அக்கறை கொள் வதுடன் அவற்றுக்கான திருப்திகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத் தல் வேண்டும். பாடசாலை ஆசிரியர் கள் தொழில் ரீதியாக முன்னேறுவதற் குரிய (Career Development) வாய்ப்புக கள், தேவைப்படும் சுற்றுநிருபங்கள், விளம் பரங்கள், வெகுசன ஊடகத் தகவல் கள் போன்றவற்றை சரியான சமயத் தில் வழங்குவதுடன் அவை தொடர் பான கலந்துரையாடல்களையும், ஆலோ சனைகளையும் வழங்குவது பாடசா லைத் தலைமைத்துவத்தின் பணியே யாகும். இதன் மூலம் பாடசாலையின் கற்றல்-கற்பித்தல் நடவடிக்கையில் மட்டுமல்லாது இணைச்செயற்பாடுக ளிலும் ஆசிரியர்களையும் மாணவர் களையும் பங்குகொள்ள வைப்பதும் பாடசாலைத் தலைமைத்துவத்தின் ஊக்குதல் பணியாகும்.

★பாடசாலைகளில் நேர முகா மைத் துவத்தை சிறப்பாக பின்பற்றுவது பாடசாலைத் தலைமைத்துவத்தின் கடமையாகும். நேரம் ஒரு அருமையான வளம் என்பதனாலும் பாடசாலைகள் வருடத் தில் இருநூறு நாட்கள் மட்டுமே செயற்படு வதனாலும் இந்த நேரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு பாடசாலைத் தலை மைத்துவமே நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கற்றல் கற்பித்தலுக்கு நேர அட்டவணை ஒதுக்குவது போன்றே இணைச் செயற்பாடுகளுக்கும் நேரத்தை ஒதுக்கு வது பாடசாலைத் தலைமைத்துவத் தின் பொறுப்பாக இருப்பதுடன் ஒதுக் கிய நேரத்தில் குறித்த கருமம் நிறைவேறு வதனை உறுதிப்படுத்துவதும் அவசிய மாகின்றது. ஆசிரியர்களிடையே நேர முகாமைத்துவம் தொடர்பாக ஏற்படக் கூடிய முரண்பாடுகளைச் சமன் செய்ய நெகிழ்ச்சியுள்ள நேரமுகாமைத் துவத் தைக் கடைப்பிடிப்பதும் பாடசாலைத் தலை மைதுவத்தின் கடமையாகும். இந்த நேர முகாமைத்துவத்தில் சுய அபிவிருத்தி (Self Development) என்பதற்கு நேரத்தை ஒதுககி ஆசிரியர்களின் முன்னேற்றத் திற்கு உதவுவது பாடசாலைத் தலைமைத்துவ மேயாகும்.

★பாடசாலையில் தோன்றுகின்ற முரண் பாடுகளை முகாமை செய்வது பாடசாலைத தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். தனிப்பட்ட முரண்பாடுகள், குழுக்களுக் கிடையிலான முரண்பாடுகள், நிறுவன முரண்பாடுகள் எனப் பல்வகைப்பட்ட முரண் பாடுகள் தோன்றலாம் என்பதனால் அவற்றை இனம் காண்பதும் முரண்பாடுகளை தீர்த்து வைப்பதும் பாடசாலைத் தலைமைத்து வத்தின் பொறுப்பாகும். பழைய காலத் தில் முரண்பாடுகள் தோன்றுவது கெடுதியா னது என்றும் அவற்றை எக்காரணமும் கொண்டும் உருவாக விடக்கூடாது என்பதுமான கருத்து நிலவி வந்தது. ஆனால் அண்மைக் காலத்தில் முரண்பாடுகள் தோன்ற வேண் டும் என்றும் ஆனால் அவை உத்தம அளவில் (Optimum Level) காணப்படுவதை உறுதிப் படுத்த வேண்டும் என்பதுமான கொள்ளை வலியுறுத்தப்பட்டுள்ளது. உத்தம அளவி லான முரண்பாடுகள் ஊழியர்களின் செயற் திறனை (Performance) உயர் அளவில் வைத்துக்கொள்ள உதவும் என்பதனால் முரண்பாடுகள் தோன்றுவதற்கு அனுமதிப் பதும் ஆனால் அவற்றை உத்தம அளவில வைததிருக்க நடவடிக்கை எடுப்பதும் பாட சாலை முகாமைத்துவத்தின் கடமையா கும். இங்கு ஆகக்கூடுதலான முரண்பாடு களையும், ஆகக் குறைவான முரண்பாடு களை யும இல்லாமல் செய்து உத்தம அளவான முரண்பாடுகளை பாடசாலைத் தலைமைத்துவம் பராமரித்து வருவது பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவுவதாக அமையும்.

எந்தவொரு பாடசாலையின் வளர்ச்சி யும் தலைமைத்துவத்திலேயே தங்கியுள் ளது என்பதனை எவரும் மறுக்கவோ அன்றி மறைக்கவோ முடியாது. இதன் காரண மாகவே மிகச்சிறிய பாடசாலையி லிருந்து மிகப் பெரிய கல்லூரி வரை இத்தலை மைத்துவத்திற்கான நல்ல அதிபரைத் தேடி அலைகினறன. உண்மையிலேயே தலைவர்கள் பிறப்பதில் லை. அவர்கள் உருவாக்கப் படுகின்றார்கள என்ற புதிய கோட்பாட்டின் படி பாடசாலை களின தலைமைத்துவத்தை ஏற்றுக்கொணட அதிபர்கள் தமது தலைமைத்துவத்துக் கான ஆளுமையை வளர்த்துக் கொள் வார்களாயின் அவர்களால் பாடசாலைக ளுக்கான நல்ல தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இத்தகைய அதிபரகளால் பாடசாலையுடன் தொடர்புடைய ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் என் போரை பாடசாலையின் இலக்கு நோக் கிய பயணத்தை சிறப்பாக மேற்கொள்ள முடியும். இது பாடசாலைச் சமூகத்தினரி டையே உச்ச திருப்தியைப் பெற்றுக் கொடுப் பதுடன் பாடசாலையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தி மாவட்ட, மாகாண மட்டத் திலும் தேசிய மட்டத்திலும் பாடசாலை யின் மதிப்பை உயர்த்தி பெரும் எண் ணிக்கை கொண்ட மாணவர்களைக் கவரும் நிலையை உருவாக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ★

'படைத்தல் என்பதே நினைவுகள்'

# வலம்புரியின் 6வது ஆண்டு நிறைவு

## ஆவணச் சிறப்பிதழ் – 20.12.2005


6ஆவது அகவையை நிறைவு செய்யும் வலம்புரி நிறுவனத்தின்
சேவை தொடர நியூரோயல் அக்கடமி வாழ்த்துகிறது!

A/L கலை, வர்த்தகம் – 2006, 2007

தமிழ்: திரு.சிவமுகுந்தன்
இந்துநாகரிகம்: திருமதி.ந.சுதமதி
வரலாறு: திரு.சி.சுஜீகரன்
புவியியல்: திரு.க.கிரிதரன்

* A/L 2008 கலை, வர்த்தக வகுப்புகள் ஜனவரி மாதம் ஆரம்பமாகும்.

நிர்வாகி
நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை, சாவகச்சேரி.
(C/030)

7ஆவது ஆண்டில் காலடி வைக்கும் வலம்புரி நிறுவனத்தின்
சேவை தொடர வாழ்த்துகிறோம்!

முற்றிலும் இயந்திரமயமாக்கப்பட்ட வெதுப்பகம்

விசேட வைபங்களுக்கு ஏற்ற குரோசான்ற், புளூட்பேஸ்ரி, ரெனிஸ்பேஸ்ரி, திருமண வைபவங்களுக்கு ஏற்ற பட்டர்கேக், சைவ புறூட் கேக் மற்றும் வெதுப்பக தயாரிப்புகளான ஸ்பெஷல் பாண், சன்விச் பாண், ஸ்பெஷல் பணிஸ், பட்டர் பாண் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்கு



பைந்தமிழ் வெதுப்பகம்
232, கண்டி வீதி,
சாவகச்சேரி.
T.P.No: 0712347462 Mobile: 0777 110530
(C/022)

வலம்புரியின் பணி மென்மேலும் தொடர வாழ்த்துகிறோம்!
சகலவிதமான கட்டடப் பொருட்களையும், பெயின்ற் வகைகளையும், PVC பைப் வகைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

முத்துக்குமரன் ஹாட்வெயர்ஸ்
கண்டிவீதி, சாவகச்சேரி.
மற்றும் ஒரு சேவை
முத்துக்குமரன் அரிவு ஆலை
சகலவிதமான மர அரிவு தேவைகளையும் தேவையான அளவுகளில் அரிந்து பெற்றிடவும், பலகை வகைகள், தீராந்தி வகைகள், றீப்பை வகைகளை சகாய விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
(C/024)

6ஆவது அகவையை நிறைவு செய்து
7வதுஆண்டில் காலடி எடுத்து
வைக்கும் வலம்புரியை வாழ்த்துகிறோம்!
*போட்டோ பிரதி
*மென்காப்பிடுகை [லமினேற்றிங்]
*தமிழ், ஆங்கில வீடியோ, CD பிரதிகள்
அனைத்தையும் பெற்றுக் கொள்ள

மிட்லண்ட்
இல:12, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
(C/028)

வலம்புரி பணி மென்மேலும் தொடர
வாழ்த்துக்கள்
அனைத்து வகையான மின்சார உபகரணங்களையும் PVC பைப் வகைகளையும் ஒரே இடத்தில் பெற்று கொள்ள சிறந்த நிறுவனம்

தேவன்சன்
இல:119, கண்டி வீதி, சாவகச்சேரி.
(C/028)

வலம்புரி 7வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதில் மனமகிழ்ச்சியடைகின்றோம்.
அனைத்து வகையான மருந்து வகைகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கும், நோய் நொடிகளெல்லாம் நொடிப்பொழுதினில் அகன்று சுகவாழ்வு வாழ்வதற்கும் நாடவேண்டிய தன்னிகரில்லா மருந்தகம்

அம்பிகா மருந்தகம்
கண்டி வீதி, சாவகச்சேரி.
(C/026)

6ஆவது அகவையை நிறைவு செய்யும் வலம்புரி தமிழ் இல்லங்களில் வலம்புரிய வாழ்த்துகிறோம்!



உங்களுக்கு வேண்டிய அழகிய அசல் தங்க நகைகளை விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் வடிவமைத்துத் தருபவர்கள், ஓடர் நகைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து கொடுப்பவர்கள்

இந்திரன் ஜுவல்லரீஸ்

தலைமை கிளை:
இந்திரன் ஜுவல்லர்ஸ்
இல: 10, நவீன சந்தை,
சாவகச்சேரி.
H.P: 077 6153817

கிளை:
இந்திரன் ஜுவல்லர்ஸ்
இல: 213- A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
H.P: 0777-310293
(C/036)

வலம்புரியின் 6ஆவது அகவை நிறைவை வாழ்த்துகிறோம்!
தென்மராட்சியின் தனித்துவமான
ஐங்கரன் கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையம்
சகல விதமான கட்டடப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாய விலையில் பெற்றிட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
இல: 16, கண்டி வீதி, சாவகச்சேரி.
(C/018)

6ஆவது அகவையை நிறைவு செய்யும் எமது வலம்புரியின்
சேவை தொடர வாழ்த்துகிறோம்!
தென்மராட்சியில் அன்று தொட்டு இன்று வரை!
சரஸ்வதி அரைக்கும் ஆலையில்
நெல்குற்றியும், அரிசி, மிளகாய், ஈரஅரிசி என்பவற்றை அரைத்துக் கொள்ளவும் நீங்கள் நாட வேண்டிய இடம்

சரஸ்வதி அரைக்கும் ஆலை
உரிமையாளர்:
சி.திருஞானசம்பந்தர்
T.P.–0776701214
இல:55, கண்டி வீதி,
சாவகச்சேரி.
(C/029)

வலம்புரிப் பத்திரிகையின் பணி தொடர வாழ்த்துகிறோம்!
தினசரி தமிழ், ஆங்கில, சிங்கள பத்திரிகைகள், வாராந்த பத்திரிகைகள், இந்திய சஞ்சிகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

மணியம்ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி.
(C/025)

வலம்புரியே! நீ பல்லாண்டுகள் மென்மேலும் வாழ்கவென வாழ்த்துகிறோம்.
சகலவிதமான தையல் இயந்திரங்களின் திருத்த வேலைகளையும், அவற்றுக்கான உதிரிப்பாகங்களையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள சிங்கம்ஸ்ஸை நாடுங்கள்!

சிங்கம்ஸ்
டச்சு வீதி,
சாவகச்சேரி.
T.P: 0776686775
(C/023)

6ஆவது அகவையை நிறைவு செய்யும் வலம்புரி நிறுவனத்தின்
மக்கள் சேவை தொடர வாழ்த்துகிறோம்!
தென்மராட்சி வாழ் மக்களுக்கு தேவையான சகலவிதமான வர்த்தகப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

சேகர் அன் பிறதேர்ஸ்
13A, கண்டிவீதி, சாவகச்சேரி.
(C/031)

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005

# பாடசாலைகளின் வரலாற்று ரீதியான மரபுரிமைப் பேறுகள் - ஒரு கண்ணோட்டம்

பாலசுப்பிரமணியம் தனபாலன்
உபபீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி



நவீன உலகம் தழுவிய கல்விமயமாக்குதல் (Educationalisation) செயலாற்றுகைகளின் தூண்டல்களில் பாடசாலைகளின் வரலாறு தொடர்பான மரபுரிமை பேறுகள் மிகுந்த முக்கியத்துவத்தை பெறுகின்றன. இம் மரபுரிமைப்பேறுகளை குறித்த வரலாற்றுக்கால களத்திலேயே சந்திப்பது ஒரு செழுமை மிக்க கற்றல் அனுபவத்தை தரும் பாடசாலைகளைத் தோற்றுவித்த நிறுவனங்கள் தமது எதிர்கால தீர்க்க தரிசனங்களை யதார்த்தமாக்குவதில் வெற்றி கண்ட வேளை நிறைந்த கடுமையான போராட்டங்கள், சுய நம்பிக்கை, விடாமுயற்சிகள், தோல்விகளைக்கண்டு தளராத உறுதிப்பாடுகள் என்பவையெல்லாம் கல்வி மயமாகுதல் செயல் முறையின் உயிர்பெறு பேறுகளாக கருதப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்ட 19ஆம் நூற்றாண்டில் தமிழர் கல்விப் பாரம்பரியம் ஈழம் முழுவதற்கும் பொதுவானதாகவும் யாழ்ப்பாணத்திற்கு சிறப்பானதாகவும் அமைந்திருந்தது. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் இருந்து நிலவி வந்த மரபு வழிக்கல்வியைத் தொடர்ந்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்கள், நிறுவன ரீதியான கல்வியை பாடசாலைகள் மூலம் பல்வேறு காரணங்களுக்காக வழங்கினர்.

சமய மறுமலர்ச்சியை அடுத்து இந்து, பௌத்த, இஸ்லாம், மத நிறுவனங்கள் தாம் சார்ந்த நிறுவனங்களின் ஊடாக பாடசாலைகளை உருவாக்கினர். இது ஒரு தேசிய விடுதலை நோக்கிய எழுச்சியாக உருப்பெறலாயிற்று.

இவ் எழுச்சிக்கும் சட்ட நிர்வாக சபைகள் விரிவாக்கப்படவும் கல்விக்கும் கூடிய மானியங்கள் வழங்கப்படவும் யாப்பு அடிப்படையில் இலங்கை தேசிய காங்கிரஸ் அமைக்கப்படவும் வேண்டும். அது பகலில் முகிலாகவும், இரவில் நெருப்பாகவும் நின்று பொது மக்களுக்கு அரசியல் விடுதலை, சம உரிமை, மற்றும் சுதந்திரத்திற்கு வழிகாட்ட வேண்டுமென C.W.W கன்னங்கரா அன்று தெரிவித்தார்.

ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில் கல்வி தொடர்பாக பல விமர்சனங்கள் எழுந்தன. இது தொடர்பாக கன்னங்கரா பின்வருமாறு எடுத்துரைத்தார். இலங்கையின் முழுக்கல்வி முறை பற்றியும் தேசிய கல்வி முறைமை அமைப்பது பற்றியும் எதுவித கவனமும் மேற்கொள்ளப்படவில்லை. கல்வியானது தேசிய விழிப்புணர்ச்சிக்கு அடிப்படையானது. அடிமை நிலை நச்சு வட்டத்திலிருந்து தப்பிக்க கல்விதான் ஒரே ஒரு வழியாகும்.

கல்வி இல்லாவிடின் தேசிய விழிப்புணர்ச்சி இருக்காது. தேசிய விழிப்புணர்ச்சி இல்லாவிட்டால் தேசிய கல்வி முறையும் கிடையாது. எனவே இது தொடர்பாக போராட வேண்டியவர்கள் தேசியத் தலைவர்களே. இதனை எமது தலைவர்கள் செய்யவில்லை அல்லது செய்வதிலிருந்து தடுக்கப்பட்டனர்.

உயர் அரசியல் குழாம் என்ற வகையில் இலங்கையின் தேசியத் தலைவர்கள் தீர்க்கதரிசனமற்று சில நலன்களுக்காக செயற்பட்டமை இங்கு புலனாகின்றது. வரலாறு தொடர்பான தவறுகள் பல இலங்கையின் அன்றைய தலைவர்களால் மேற்கொள்ளப்பட்டமை இன்றைய மிக மோசமான நிலைக்கு வழிகளை ஏற்படுத்தி விட்டன. இன்று மரபுரிமைகள் சிதைந்து நாகரிகமும் பண்பாடும் கேள்விக் குறிகளாகி பாதக நிலையில் உள்ளன.

## மரபுரிமைகளான நாகரிகமும் பண்பாடும்

வரலாற்றின் ஊடாகவே மனித நாகரிகமும், பண்பாடும் (Civilsation and Culture) மரபுரிமைகளாக உருப்பெறுகின்றன. வரலாறு என்பது கடந்த கால அரசியல், அரசியல் என்பது தற்போதைய வரலாறு (History is past politics and politics present History) என அறிஞர் ஃபிரீமேன் (Freeman) எடுத்துரைக்கின்றார். மேலும் சீலி என்ற அறிஞர் அரசியலின் வேர் வரலாறு வரலாற்றின் கனிந்த கனியே அரசியல் என்கிறார் இவை இரண்டின் ஊடாகவே நாகரிகமான பண்பாட்டுக்கல்வி பரிணமிக்கின்றது.

நாகரிகம் என்பது இயற்கையை வென்று புற உலகத்தையே மனிதன் ஏற்படுத்திக் கொள்ளும் சௌகரியங்களை குறிக்கின்றது. பண்பாடு என்பது மனிதன் தன் மனதில் எழுகின்ற கோபம், பொறாமை, காழ்ப்பு ஆகிய குற்றங்கள் நீக்கி அன்பு ,ஒற்றுமை, சமாதானம் ஆகிய குணங்களை வளர்ப்பதாகும். புற உலகை வெல்வது நாகரிகம். அகவுலகை வெல்வது பண்பாடாகும். இவை இரண்டின் ஒருமைப்படுத்தல் செயற்கை கல்விமயமாகுதல் மரபுரிமை பேறுகளாக மிளிர்கின்றன. இவ்வாறான மிளர்ச்சிக்கும் பாடசாலைகளே மையக்களங்களாகவுள்ளன. நாட்டின் எதிர்காலப் பிரசைகளை உருவாக்கும் இப்பாடசாலைகள் தம் வரலாற்றின் ஊடாக கையளிக்கும் மரபுரிமைகள் நாட்டின் பண்பாடாகவே பேணப்படுகின்றன. இதற்கு பாடசாலை அதனோடு இணைந்த சமூகங்களுடன் நல்ல உறவுகளைக் கொண்டிருக்க வேண்டும். கற்றல்- கற்பித்தல் விருத்திக்கு இது பயன்படுகின்றது. பாடசாலையினதும் சமூகத்தினதும் உறவு பாடசாலையின் வினைத்திறனான அபிவிருத்திக்கு உதவுகின்றது. ஒவ்வொரு பாடசாலைகளின் வரலாறுகளை எடுத்து ஆராயப்படுகின்ற போதும் அவற்றின் தோற்றத்திற்கு சமூகங்களே அடிப்படைகளாக இருந்தமை புலனாகின்றது.

வரலாறு கடந்த காலப்பதிவேடு (History as record of the past) என்ற வகையில் அதனை ஒரு விஞ்ஞானம் (History as a science) சார்ந்ததாக நீபர் (Niebhur), ராங்கே (Ranke) ஆகிய அறிஞர்கள் தெரிவிக்கின்றார்கள். கடந்த காலத்தில் நிகழ்ந்த உண்மைகளை உள்ள படி விருப்பு வெறுப்பின்றி எடுத்துக்கூற முயல்வது வரலாறு. உற்று நோக்கல் ,பாகுபடுத்தல், உள் நிகழ்ச்சிகளை ஆராய்தல், பொது விதிகளை காணல் , ஆய்வுகள் மூலம் உண்மையை அறிதல் ஆகிய விஞ்ஞான அணுகுமுறைகள் வரலாற்றியலில் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதால் இதனை ஒருவகை விஞ்ஞானம் என அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வரலாற்றின் சிறப்புக் கூறுகளாக காலம் (Time), இடம் (Place), தொடர்ச்சி (Continuity),மாற்றம் -முன்னேற்றம்- வளர்ச்சி (Change-progress development) நிலம் (Land), நீர் (Water), காலநிலை (Climate), தொடர்பாடல் (Communications), தாவரங்களும் பிராணிகளும் (Flora and Faunal) என்பவையாகவுள்ளன.

**School particulars- Jaffna peninsula-2004**

| Zones | Not function | Function | Total |
|---|---|---|---|
| 1. Jaffna | 13 | 102 | 115 |
| 2. Valigamam | 22 | 129 | 151 |
| 3. Vadamarachchy | 03 | 79 | 82 |
| 4. Thenmarachchy | 06 | 74 | 80 |
| 5. Island | 35 | 46 | 81 |
| Total | 74 | 430 | 504 |

Source- Statistical Hand Book-2004 Government Agent -Jaffna

இவ்வாறான சிறப்புக்களைப் பெற்ற வரலாற்றைக் கற்று கல்வி மயமாக்குதலின் பயன்களாவன,

1. மனித வாழ்க்கையில் நாகரிகம், பண்பாடு , கலாசாரம் ஆகியவற்றின் வளர்ச்சியில் தொடர்ச்சி காணுதல்.
2. திருத்தமான சிந்தனையினூடாக விஞ்ஞான -அறிவியல் ரீதியான மனப்பான்மையை வளர்த்தல் .
3. தனது தேசம், தனது இனம், தனது கலாசாரம் ,தனது மரபுரிமைகளை அறிந்து பேணிக் காத்தல் .
4. வரலாற்று உண்மைகளை விளக்கி கண்டு பிடித்து தேசிய சர்வதேசிய மனப்பான்மைகளை பெறுதல்.
5. மனிதத்துவத்தை வளர்த்தல், சூழல் மாசுபடுதலைத் தவிர்த்தல், சமூக சேவை- தொண்டுகள் செய்தல்.
6. அறநெறி, மத விழுமியங்களை கைக்கொள்ளுதல்.

இவற்றை ஒட்டுமொத்தமாக நோக்குகின்ற போது வரலாற்று பார்வையானது மனிதத்துவக் கல்வி அபிவிருத்தி செயல் முறைகளுக்கு ஆதாரமாகவுள்ளமை புலப்படுகின்றது. இவை ஒரு நாட்டின் மரபுரிமை ரீதியான சுதேச உணர்வை எழுச்சியடையச்செய்யும் .

## யாழ்ப்பாணத்தில் கல்வி மரபுரிமைகள்

பாரம்பரியமாக கல்விக்குத் தெய்வ உருவம் கொடுத்து கல்வியைத் தெய்வமாகவே போற்றுகின்ற மரபுரிமையைக்கொண்ட யாழ்ப்பாண மண் இலங்கையின் கல்வி மயமாகுதல் செயல் முறைக்குக் கனிசமான மரபுரிமைகளையும் பங்களிப்புக்களையும் வழங்கியுள்ளது. பாரம்பரியமான கல்வி முறை ஐரோப்பியர் ஆட்சியினூடு முகிழ்ந்த கல்வி பரம்பல் கிறிஸ்தவ மிசனரிமாருடைய சேவைகளால் விழுந்த கல்வி உயர்வு சைவப்பாடசாலைகளின் எழுச்சிகளால் பிரகாசித்த கல்வி எழுச்சியாக யாழ்ப்பாணக் கல்வி மரபுகள் உயர்வான நிலையில் இருந்தன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் காலத்தில் யாழ்ப்பாணத்து சைவர்கள் இழிநிலையில் இருந்தமைக்கு சைவ மரபிலான கல்வி அழிக்கப்படாமையே என நாவலர் உணர்ந்தார். கல்வியைச் சுட்டி சைவர்களை கிறிஸ்தவத்திற்கு கவர்ந்திழுத்த பாதிரிமாரின் உத்திகளை முறியடிப்பதற்கு சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளர்க்கும் நோக்குடன் பாடசாலைகளை ஆரம்பிக்கும் பணி நாவலரால் ஆரம்பிக்கப்பட்டது.

1848இல் வண்ணார் பண்ணையில் நிறுவப்பட்ட சைவப்பிரகாச வித்தியாலயத்தைத் தொடர்ந்து யாழ். குடாநாட்டின் பல பகுதி களிலும் சைவக்கல்வியை பரப்புவதற்கு பல பாடசாலைகள் நிறுவப்பட்டன. நாவலர் தமிழ் மொழி, சைவச்சூழல் பாடசாலைகளை நிறுவியதுடன் அவற்றில் ஆங்கில மொழிக்கு இடம் கொடுத்தார். 1872இல் அவர் வண்ணார் பண்ணையில் சைவ ஆங்கில பாடசாலையையும் தொடக்கினார்.

நாவலரின் வழிகாட்டலில் சைவ பரிபாலன சபை சேர்.பொன் இராமநாதன், சைவ வித்தியா விருத்திச் சங்கம் இந்து போட் இராசரத்தினம், புத்தூர் மளவராஜர், கந்தரோடை கந்தையா உபாத்தியாயர், வட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர், தெல்லிப்பழை பாவலர், துரையப்பாபிள்ளை ஆகியோரும் இன்னும் பலரும் சைவச்சூழலில் பாடசாலைகளை ஆரம்பித்து யாழ்ப்பாணத்தவர்களின் கல்வி மரபுரிமைகளை நிலை நாட்டினர். 1888இல் சைவ பரிபாலன சபையும் 1923 இல் சைவ வித்தியா விருத்திச்சங்கமும் சிறப்பாக தமது பணிகளைச் செய்தன.

சைவ பரிபாலன சபையின் செயற்பாடுகளுடன் இணைந்ததாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிகாரசபையும் செயற்பட்டது. இது 1902ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு யாழ். இந்துக்கல்லூரியின் அபிவிருத்தியை முன்னெடுப்பதுடன் கொக்குவில் , உரும்பிராய், வட்டுக்கோட்டை , காரைநகர், சாவகச்சேரி , தொண்டமனாறு ஆகிய இடங்களில் இந்து ஆங்கில பாடசாலைகள் அமைக்கப்பட்டன.

இவ்வாறாக எழுச்சி பெற்ற சைவக்கல்வி பாரம்பரியம் ஒவ்வொரு கிராமத்திலுமே யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள் உருவாக அடிப்படையானது. இவற்றுடன் கிறிஸ்தவ பாடசாலைகளும் கல்விப்பணியை ஆற்றின. இவற்றின் மொத்தமான செயலாற்றுகை யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரிய மரபுகளை கல்வி மயமாக்குதல் செயன் முறைகளுடன் இணைந்தன. இலங்கையை விட்டு ஆங்கிலேயர் வெளியேறியதும் தமிழர் -சிங்களவரிடையே முரண்பாடுகள் தொடர்ச்சியாக அதிகரித்தது. தமிழர்கள் பல முறை சிங்களவரால் இனக்குழப்பங்களின் ஊடாக அழிக்கப்பட்டனர். தமிழர் ஆயுதப் போராட்டம் 1970 களைத் தொடர்ந்து அதிகரித்தது. இலங்கையிலேயே கல்வித்தரத்தில் மிக உயர்ந்த நிலையில் இருந்த எமது மண் இன்று கடைசி நிலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதை கல்வி வரலாற்று ஆய்வுகள் இன்று மெய்ப்பித்துள்ளன. கலாசார சீரழிவு, போதைப் பொருள் , போசாக்கின்மை, அபிவிருத்தி யின்மை, யுத்தத்தின் கொடிய பின் விளைவுகளால் எமது தேசத்தின் கல்வியும் அபிவிருத்தியும் மரபுரிமைகளும் இன்று சிதைந்து கிடைந்தன.

## வரலாறு காணாத போர்க்கால அழிவுகள்

1973இல் தமிழ் மாணவர்களின் உயர் கல்வி வெட்டுப்புள்ளியால் நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழின வன்முறைகளும், தொடர்ச்சியான போர் ஒன்றும் வட கிழக்குப்பகுதியில் நடைபெற்று வருகின்றது.

இவ் அட்டவணைப்படி யாழ்ப்பாணமாவட்டத்தில் 74 பாடசாலைகள், இயங்காமல் யுத்தத்தால் அழிக்கப்பட்டுள்ளன. மேலும் வட கிழக்கில் 8 மாவட்டங்களிலும் 161 பாடசாலை கள் மூடப்பட்டுக்கிடக்கின்றன. பாடசாலை நடை பெற்றுக்கொண்டிருக்கும் போதே நாகர் கோவில் மகாவித்தியாலயத்தில் விமான குண்டு வீசப் பட்டு எம் மாணவச் செல்வங்கள் வகை தொகை யாக அழிந்தனர். இவ்வாறு பல சம்பவங் கள்



பாலசுப்பிரமணியம் தனபாலன்

யுத்த அழிவுகளால் பாடசாலைகளின் பௌதீக நிலைகள், கருவி, உபகரணங் கள், கட்டடங்கள் சிதைந்துள்ளன. மனித வளம், ஆசிரியர், அதிபர், கல்வியியலாளர் பற்றாக்குறை நிலவுகின் றது. யுத்தத்தால் உறவுகளை, உடமைகளை இழந்த மாணவர்களும் சமூகமும் உளவியல் ரீதியாக பெரும் தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளனர். 90% மாணவர் உளப்பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் அரசியல், கல்விக்கொள்கை-நடைமுறைகள், இனப்பிரச்சினை-பாகுபாடுகள் , போர்ச்சூழல் ஒன்றுடன் ஒன்று இணைந்த மோசமான பிரச்சினைகளாகின. இக்கால வரலாற்று சூழமைவை (Historical Context) நோக் குகின்ற போது வரலாறு காணாத போர்க் கால அழிவுகள், இடப் பெயர்வு , அகதி வாழ்க்கை என்பவற்றின் தாக் கங்களால் யாழ். மாவட்ட பாடசாலைகளின் கல்வி பெருமளவு வீழ்ச்சியைக் கண்டுள்ளது.

ஆக்கபூர்வமான வகுப்பறையற்ற தன்மைகள் , வளப்பற்றாக்குறைகள், ஆசிரியர் பற்றாக்குறைகள், நவீன ஆசிரியர் தேர்ச்சி இல்லாத ஆசிரியர் செயலாற்றுகை, மாணவர் இடை விலகல், முகாமைத்துவ குறைபாடுகள், மொழித்தேர்ச்சி, தொழிற் தேர்ச்சி, வாழ்க்கைத்தேர்ச்சியற்ற கல்வி நடைமுறைகள் , தொழிற்கல்லூரிகள் , பல்கலைக் கழகங்களின் திருப்தியற்ற செயலாற்றுகைகள் காரணமாக மிக மோசமாக எமது கல்வித் துறை பாதிப்படைந்துள்ளது.

## அகில சமூகத்திற்கான பூரண கல்வியும் எதிர்காலவியலும்

தனி நபர்கள், குடும்பம், கிராமம், நகரம், நாடு, உலகம் ஒன்றிணைந்து அகில கலாசாரத்தை மதிக்கின்ற பூரண மனிதர் ஒருவரை உருவாக்குகின்ற கல்வி அகில உலக சமூகத்திற்கான கல்வியாகின்றது. அகில உலகத்தின் எங்காயினும் வெற்றிகரமாக வாழ்வதற்கு முடியுமான அகில மனிதன் ஒருவனை கல்வியினால் உருவாக்குதல் தொடர்பான பல் பரிமாணச் செயல்முறைகளை யுனெஸ்கோ ( Unesco) நிறுவனம் உலகளாவிய ரீதியில் மேற்கொண்டு வருகின்றது. இதற்கு எதிர்காலவியல் பற்றிய நோக்கங்களும் கற்பதற்கு கற்றல் தொடர்பான தேர்ச்சிகளும் வழிகாட்டி நிற்கின்றன.

கற்றல் தேர்ச் சியூடான செயன் முறைக்கான களங்களாக பாடசாலைகளே உள்ளன. இவற்றின் ஊடாக எமது மண்ணில் எதிர்காலவியல் (Futurology) நோக்கில் கல்விமயமாக்குதல் விழிப்புணர்வுகளை விரைவாக ஏற்படுத்த வேண்டியுள்ளது. கடந்த கால மரபுரிமைகளும் வரலாற்று பாடங்களும் எதிர்காலம் பற்றிய விழிப் புணர்வும் கல்விமயமாதல் செயல்முறைக்கு அடிப்படைகளாகவுள்ளன.

நாளைய வாழ்க்கைக்கு எந்தவித வளர்ச்சிகள் தேவை என்பதனையும் இன் றைய பொறுப்பற்ற செயற்பாடுகள் எதிர்கால வாழ்வை எவ்வாறு பாதிக்கும் என்பதையும் எதிர்காலவியல் கொண்டிருக்கும். இன்றைய சமூகநிலையில் மாற்றத்திற்கான திறவு கோல்களாக அபிவிருத்தியின் அச்சாணிகளாக பாடசாலைகளே உள்ளன. அவற் றின் மரபுரிமைகள் கொள்கையாக்கங்கள், செயல் முறைகள், வரலாற்றியல் சாதனைகள் வினைத்திறனான முகாமை எமது தேசத்தைக் கட் டியெழுப்ப வழிகாட்டும் .

எனவே கல்வி சார்ந்த தமிழர் தம் மர புரிமைகளை பாடசாலை வலையமைப்பு மூலம் உறுதிப்படுத்த கல்வி சார்ந்த அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டிய காலமாக இன்றைய காலம் உள்ளதை உணர்ந்து செயற்படுவோமாக. ★

வெற்றியின் இரகசியம் நோக்கத்தை கைவிடாமல் இருப்பது

வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005




# சில செய்திகளும் சில மனிதர்களும்

இயற்கைக்கு எழிலூட்டும் வகையில் பல வகை மரங்களின் மத்தியிலே அந்த வயோதிபர் இல்லம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கே நூற்றுக்கு மேற்பட்ட முதியவர்கள் தங்கியிருந்தார்கள். அவர்களிற் சிலரின் காலைநேரப் பொழுதுபோக்கு அங்கேயுள்ள மரமொன்றின்கீழிருந்து பத்திரிகை வாசித்தலும் அதில் வரும் செய்திகளை அலசி ஆராய்வதுமே யாகும்.

வழக்கம் போல அன்றைய தினமும் பத்திரிகையொன்றுடன் காணப்பட்டார் பரமசிவம். இவரொரு பத்திரிகை நிருபராக இருந்தவர். இதனால் வாசிப்புத்திறனும் செய்திகளை விரிவாக விபரிக்கும் ஆற்றலுமுடையவராக விளங்கினார். இதனால் இவரே அந்த வயோதிபரில்லத்திலுள்ள கண்பார்வை குறைந்தோர், கை நடுக்கமுள்ளோர், வாசிப்புத்திறனற்றோர் யாவருக்கும் அன்றாட செய்திகளைத் தெரிவிப்பவராக இருந்தார். இந்த வகையில் அங்கிருந்தோர் யாவரும் இவரை 'தலைவர்' என்றே அழைக்கலாயினர். இவர் முதலில் எல்லாச் செய்திகளையும் வாசிப்பார். பின் ஒவ்வொன்றாக அதை ஏனையோருக்குத் தெரிவிக்க அவர்களிற் சிலர் அதுபற்றிய கருத்துக்களை எடுத்துரைப்பார்கள்.

இக் கருத்துரைப்பவர்களில் ஒரு காலில்லாத 'கையிலை'. கண் பார்வையற்ற 'மயிலு', 'சுந்தரம்', 'பழனி' ஆகியோர் முதன்மையாளராக விளங்கினர். இவர்களே நெடுநேர பிரசங்கத்திற்கு ஆயத்தம் செய்யும் வித்துவான்களைப் போல அன்றும் தலைவர் முன் அமர்ந்திருந்தார்கள். இவர்களின் பின் செய்திகளை அறியும் தாகத்துடன் இருபதுக்கு மேற்பட்டோர் இருந்தனர். மேலோட்டமாக செய்திகளை வாசித்த தலைவர் பத்திரிகையை ஒருகையிற் பிடித்தபடி ஆழ்ந்த பெருமூச்சொன்றை விட்டார். அப்போது அங்கிருந்தோர் அவரின் முகத்தை நோக்கினர். அவர் மிகுந்த சோகத்துடன் 'எந்தச் செய்திகளைப் பார்த்தாலும் பயங்கரமாய்த் தானிருக்கு' என்றார்.

என்ன வரப்போகுது...? புயலோ...? பூகம்பமோ...? யுத்தமோ...? அவசரப்பட்டுக் கேட்டார் சுந்தரம். 'எல்லாம் தான்' என்ற தலைவர் மேலும் தொடர்ந்தார். ஆழிப்பேரலையால் ஏற்பட்ட துன்பங்கள்ள எவருமே மறக்கவில்லை. அதன் பின் அமெரிக்காவிலை புயல் ... பாகிஸ்தானிலை பூகம்பம்- இந்தியாவிலை வெள்ளப்பெருக்கு என்று பல்லாயிரக்கணக்கான உயிர்களையும், பொருளாதார வளங்களையும் அள்ளிக்கொண்டு போட்டுது. இதையெல்லாம் பார்த்தால் இயற்கையின் சீற்றம் மனிதயினத்திற்கு விரோதமாக வுள்ளதாக பத்திரிகை ஆசிரியரின் கருத்துரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

இதைக் கேட்ட பரமு தன் கருத்தைச் சொல்லத்தொடங்கினார். உது இயற்கையின் சீற்றல்ல இறைவனின் சீற்றம் என்றே சொல்லலாம். இன்றைய உலக நாட்டு மக்கள் எல்லாம் மனிதத்தன்மையை மறந்து விட்டார்கள். பெரும்பாலானோர் இறைவனொருவன் இல்லையென்ற மாதிரியே நடக்கிறார்கள். இதையெல்லாம் இறைவன் பொறுத்துக் கொள்வாரா? சீற்றமடைந்த நிலையில் இயற்கையை ஏவிக்கொண்டிருக்கிறார். இதனால் எத்தனை ஆயிரம் உயிர்கள் அவச் சாவடைகிறார்கள். மனித யினம் பிறருக்கு துன்பம் செய்வதை எப்போது தவிர்க்கின்றதோ அன்று தான் இயற்கையும் அமைதியடையும் என்று பரமு சொல்ல ஏனையோருக்கும் அது சரியாகவே தெரிந்தது போல தலையாட்டினார்கள்.

அப்போது எங்கிருந்தோ வந்த காற்றும் தலைவரின் கையில் இருந்த பத்திரிகையின் பக்கங்களை புரட்டிக் கொண்டிருக்க அதன் நடுப்பக்கத்திலிருந்த ஒரு அழகிய இளம் பெண்ணின் படம் முன் வரிசையில் இருந்த மயிலுவின் கண்ணிற் பட்டது. அதைக் கவனித்துப் பார்த்ததினால் அவரின் சிந்



தனை எங்கெங்கோ சென்று மனம் நெகிழ்ந்ததினால் கண்ணீர் கசியத் தொடங்கியது.

இதைக் கண்ட தலைவர் 'மயிலு ஏன் கலங்குகிறீர்...? இங்கேயும் இயற்கை அனர்த்தம் வந்திடும் என்ற பயமோ?' என்று கேட்டுவாய் மூட முன் அப்படி ஒரு பயமுமில்லை. எனது கடந்த கால ஞாபகம் ஒன்று வந்தது. அதுதான் கவலையாய்ப் போச்சு. உந்தப் பேப்பரின் நடுப்பக்கத்திலை ஒரு வடிவான இளம் பெண்ணின்ரை பெரிய படமொன்று இருக்குதெல்லே... அவவைப் பார்த்தால் என்ரை மகளைப் போலத் தான் இருக்கு அவ வெளிநாடொன்றிலை இருப்பதாக அறிஞ்சனான். 'இப்ப இங்கை வந்திருக்கிறாவோ?' என்று என்ரை மனம் நினைக்குது. அதையொருக்கால் பாருங்கோ. கெஞ்சுவதுபோலவே மயிலு கேட்க தலைவர் அப் படத்தை எல்லோருக்கும் காண்பிச்சு அதுபற்றிய விளக்கத்தையும் சொன்னார். இது பத்தாண்டுகளுக்கு முன் எமது பகுதியில் நடந்த யுத்தத்தில் விமான மூலம் குண்டு வீசியதால் இறந்த ஒரு பாடசாலை உயர்தர வகுப்பு மாணவி. அவவின் நினைவு தினம் இன்றுதான் என்றார்.

ஆண்டவரே!... இது என்ன கொடுமை...? உந்தப்பிள்ளை என்ன குற்றம் செய்தது...? உதையேன் கொலை செய்தார்கள்? அந்தப் பிள்ளை படிக்கிற காலத்தில் எத்தனையோ இனிமையான நினைவுகளுடன் இருந்திருக்கும். நானொரு பட்டதாரியாக வந்து எமது சமுதாயத்தினருக்கு பல சேவைகள் செய்ய வேண்டுமென்று திட்டம் போட்டிருக்கும். அதெல்லாம் ஒரு நொடியிற் போச்சுதே. உது மட்டுமா...? உப்பிடி எத்தனை ஆயிரம் பேரைப் பலி எடுத்தாச்சு. இப்பவும் என்ன...? ஒவ்வொரு நாளும் குத்து வெட்டாலும் துப்பாக்கிச் சூட்டாலும் பல மரணங்கள் நிகழ்ந்தபடியே தானிருக்கு. இதனால் ஏற்படும் நன்மைகள் என்ன...? 'விரோதம் தான் இரு பக்கமும் அதிகரிக்கின்றது' என்று கையிலை கவலையுடன் சொல்ல மற்றையோரும் வருத்தத்துடன் அவர் கூற்றை ஆமோதித்தனர்.

தலைவர் அதுபற்றி விரிவாகச் சொல்ல முன் பழனி இடையே குறுக்கிட்டார். நம் நாட்டுப் பெரும்பான்மையினர் சமாதானத்திற்கான யுத்தமென்று சொல்லி பல வருடங்களாக எமது பிரதேசத்தின் பொருளாதார வளங்களையும் மக்களின் சொத்துக்களையும் அழித்ததுடன் இருதரப்பிலும் மரணத்தைத் தழுவியவர்கள் தான் எத்தனை ஆயிரங்கள்...? இதனாற்கிடைத்த பயன் என்ன...? இனவாதம் மேலும் இறுக்கமடைந்ததைத்தவிர வேறு எதைச் சாதித்தது? எம்மினத்தவர்கள் தாங்கமுடியாத துன்ப துயரங்களைச் சுமந்தனர். இப்போதும் சுமக்கின்றனர். அவ்வளவுதான் நாம் கண்ட பலன் என்று சொன்னவர் தன் மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்து கொண்டு மேலும் தொடர்ந்தார்.

இதன் பின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணலாமென்று சொல்லி வெளிநாடுகளிலெல்லாம் பறந்து திரிந்து பேச்சு நடத்திச்சினம் முடிவு...? அதுவும் விழலுக்கிறைத்த நீர் போலத் தானாயிற்று. இப்ப மீண்டும் யுத்தம் வந்தால் என்ன நடக்குமென்று நினைக்கிறீர்கள்? நாம் எவருமே நினைத்துப் பார்க்காத வீணான அழிவுகள் தான் ஏற்படுமென்று பழனி சொன்னபோது என்ரை கதையையும் கேளுங்கோ என்றார் கையிலை.

அப்போது எல்லோரும் கையிலையைப் பார்க்க அவரும் தன் கதையைச் சொன்னார். நான் எனது கிராமத்திற்கு விதானையாராயிருந்த காலத்திலை ஒரு பெண்ணுடன் வல்லுறவு கொள்ள முற்பட்ட ஒருவனுக்கு காலாலை அடித்தேன். அந்தக் கால் சிலநாட்கள் செல்ல பெரும் வேதனையைத் தந்தது. பத்து வருஷமாய் பல இடங்களிலும் வைத்தியம் செய்தேன். கொஞ்சமேனும் சுகம் கிடைக்கவில்லை. கடைசியாக என்னைப் பார்த்த அரச வைத்திய நிபுணர் இந்தக் கால் செயலிழந்து வருகின்றது இதனால் உயிருக்குக்கூட ஆபத்து வரலாம். இந்தக் காலை உமது உடம்பிலிருந்து பிரித்து விட்டால் நீர் நல்ல சுகமாக வாழலாமென்றார். நானும் உயிர் போறதிலும் பார்க்க கால் போகட்டுமென எண்ணி ஒப்புக் கொண்டேன். அடுத்த நாள் எனது உடம்பிலிருந்து கால் பிரிக்கப்பட்டது. அடுத்த மாதம் செயற்கைக் கால் இணைக்கப்பட்டது. அதன்பின் எனக்கு எவ்வித வேதனையுமேயில்லை.

இவ்வேளையில் அங்கிருந்த சுந்தரம் திடீரென எழுந்து பின்பக்கம் நோக்கி வேகமாக நடக்க, ஏனையோர் வியப்புடன் நோக்கினர். சற்று நேரத்தில் மீண்டும் வந்தவர் 'சலரோகமென்றால் இப்படித் தான்' அடிக்கடி போக வேண்டுமென்றார்.

இதைக்கேட்டதும் 'இங்கே பாரும் உதுக்கான வைத்திய முறையும் இந்தப் பத்திரிகையிலையிருக்கு. சிறு குறிஞ்சா இலைகள் சிலவற்றை தினமும் சாப்பிட்டுவந்தால் சலரோகம் குணமடையுமாம். நாட்டுவைத்தியரொருவர் ஆலோசனை கூறியிருக்கிறார் என்றார் தலைவர்.

வைத்திய முறைகளும் பத்திரிகையிலை இருக்கோ...? ஆச்சரியமாகக் கேட்டார் சுந்தரம். இது உமக்கு இவ்வளவு நாளாக தெரியேல்லையோ? வைத்தியம் மட்டுமா...? மாணவர்களுக்கான கல்வி, வருங்காலமறியச் சோதிடம், ஆண்டவரை அறியும் ஆன்மீக வழிகள், இதைவிட கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எனப் பலவகையான ஆக்கங்களும் தினமும் பத்திரிகையிலை வந்து கொண்டேயிருக்கும். யாவரும் விரும்பியபடி வாசிக்கலாம். தினமும் பத்திரிகை வாசிப்பவன் தான் எல்லாம் தெரிந்த மனிதனாக இருப்பான் என்று தலைவர் சொன்னபோது சுந்தரத்திற்கு இன்றைய விஞ்ஞான யுகத்தில் பத்திரிகைத் துறையின் வளர்ச்சி பற்றித் தெரியவில்லை. அவர் இப்பவும் எழுத்தாணியாலை எழுதின காலத்திலை தான் நிற்கிறார். உலகம் இன்டர்நெட்டில பேப்பர் வாசிக்கிற அளவிற்கு போயிட்டுது என்று பழனி கேலிபண்ண எல்லோரும் சிரித்துக்கொண்டனர்.

சிரிப்பொலி ஓய்ந்ததும் வேறையென்ன செய்திகளிருக்கு...? தலைவரிடம் கேட்டார் கையிலை.

ஒரு முக்கியமான செய்தியொன்று சொல்லுறன் நீங்கள் எவராயினும் பயந்து போகாதையுங்கோ.

விரைவில் யுத்தம் வரும் அபாயமாம்.

எழுதுமட்டுவாளூர்
எஸ்.எஸ்.காசிப்பிள்ளை

இதே போலத்தான் இனப்பிரச்சினையும் தீர்க்க முடியாதென்றால் எம்மினத்தைப் பிரித்துவிட்டால் சமாதானம் வந்தது மாதிரியேயிருக்கும். இதன் பின் யுத்தம் ஏன்? யுத்தமில்லையென்றால் குண்டுகள் வெடிக்காது. எறிகணைகளும் ஏவப்படாது. இராணுவமும் எம் மண்ணிலிருக்காது. வீணான மரணங்களும் நிகழாது என்று கையிலை அட்டகாசமாகச் சொல்ல ஏனையோரும் கைதட்டி ஆரவாரம் செய்தனர். இதைக் கண்ட இயற்கையும் அவ் வயோதிபரில்லப் பகுதியில் சுழல் காற்றுடன் சில மழைத்துளிகளையும் எறிந்து மரங்களையும் உலுப்பிக் குதூகலித்தது.

# வலம்புரியின் ஆறாம் ஆண்டு நிறைவு சிறப்பிதழ் 20.12.2005


ஏழாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்
வலம்புரியை வாழ்த்துகின்றோம்

**பிரகாஸ் போக்குவரத்து சேவை**

**கொழும்பு – கிளிநொச்சி – யாழ்ப்பாணம்**

கொழும்பிலிருந்து பொருட்களை வடபகுதிக்கும் அங்கிருந்து விவசாய உற்பத்திப் பொருட்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் கொழும்பிற்கும் பரிமாற்றம் செய்யவும்

கோழி மற்றும் விலங்கினங்களின் தரம் வாய்ந்த உணவுகளின் வட மாகாண ஏக விநியோகஸ்தர்கள்

பிரகாஸ் போக்குவரத்து சேவை

இல. 455, 457 கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்
T.P. No: 222 2145
Fax: 222 2958

இல: 221, டாம் வீதி,
கொழும்பு - 12
T.P. No: 0112543310
0112543309

ஏழாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்
வலம்புரியை வாழ்த்துகின்றோம்

பக்ஸ்
தொலைபேசி
இன்ரநெற் வசதி
போட்டோக் கொப்பி

**RAINBOW LINKS**

- வீடியோ ஓடியோ பாடல் பதிவுகள்.
- சீடிக்களை பிரதி செய்து அல்லது புதிதாக பதிவுசெய்து பெற்றுக்கொள்ளவும்.
- வீடியோ கசற்றுக்களில் பதிவு செய்யப்பட்ட உங்கள் வீட்டு வைபவங்களை சீடிக்களில் பதிவுசெய்து பெற்றுக் கொள்ளலாம்.
- வீடியோ கசற்றுக்களில் பழுதடைந்த பகுதிகளை நீக்கி புதிதாக பாடல்களை பதிவுசெய்து மெருகூட்டி பெற்றுக்கொள்ளவும்

தொடர்பு கொள்ளுங்கள்

**ரெயின்போ லிங்ஸ்**

208, முதலாம் குறுக்குத் தெரு,
ஆஸ்பத்திரி வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 3170

ஏழாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் வலம்புரியை வாழ்த்துகின்றோம்

**100 கிராம் ஜீவாகாரத்தில் 16.5 கி. புரதமும் 400 கி. கலோரி சக்தியுமுள்ளது.**

**ஜீவாகாரம்**

போஷாக்குக் குறைவு வளரும் குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மாருக்கும் சிறந்த போஷாக்குமிக்க உணவு ஜீவாகாரம்.

மேலும் உங்கள் சமையலை இலகுவாக்கி விரைவாக உணவு தயாரிக்க அண்ணாவின் தயாரிப்புக்கள்.

தோசை மா, ஆட்டா மா , சரக்குத் தூள், உழுந்து மா, குரக்கன் மா,
துண்டு மிளகாய், வறுத்த உழுந்து மா, கடலை மா, மஞ்சள் தூள், சிவப்பு அரிசி மா,
கறி மிளகாய்த் தூள், மிளகுத் தூள், வெள்ளை அரிசி மா, தனி மிளகாய்த் தூள், சீரகத்தூள்

உங்கள் பற்களின் வெண்மைக்கும் உறுதிக்கும்
பற்களை பளபளக்க வைக்கும்
**அண்ணா பற்பொடி**

அகத்தின் அழகு முகத்திலல்ல.
உங்கள் கன்னத்தில் பார்க்க இன்றே வாங்குங்கள்.
**புளும் ரெல்கம் பவுடர்**

**அண்ணா தயாரிப்பு**

நாவெல்லாம் புத்துணர்ச்சியுடன் இருக்க அருந்துங்கள்.

**அண்ணா கோப்பி**

உங்கள் ஆலயங்களிலும்
இல்லங்களிலும் நறுமணம் கமழ
அண்ணாவின் ஊதுபத்திகள் ரோஸ் பத்தி,
மதுரங்கா பத்தி, சுகந்தவல்லி பத்தி, துர்க்கா
பத்தி இவை அனைத்தையும் சுலபமாக
இன்றே பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

ANNA INDUSTRY
INUVIL
Manufactured & Marketed by
T.P. 0212223565


# நடுநிலை தவறாத நற்பணிக்கு வாழ்த்துகிறோம்!

## கரித்தாஸ் – கியூடெக்
## இயக்குநரும் ஊழியர்களும்

CARITAS

HUDEC



### இயக்குநரின் வாழ்த்துச் செய்தி

மக்கள் சேவையின் ஏழாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் வலம்புரி பத்திரிகைக்கு எமது மனமுவந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரி விப்பதில் நாம் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

மிகவும் இக்கட்டான ஒரு கால கட்டத்தில் ஆரம்பிக்கப் பட்டு பல சவால்களுக்கு மத்தியில் எதிர்நீச்சல்போட்டு மிக வெற்றிகரமாக ஏழாவது ஆண்டில் பிரவேசிக் கும் வலம்புரிக்கு எமது மனமார்ந்த பாராட்டுக்கள் உரித்தாகட்டும்.

"ஜனநாயகத்தின் காவல் நாய்" என்று வர் ணிக்கப்படுபவை பத்திரிகைகளாகும். இந்தப் பணியை நடுநிலை தவறாது சீரும் சிறப்புமாக செயலாற்றிவரும் வலம்புரிக்கு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

மக்கள் சேவை மகேசன் சேவைக்கு ஒப்பாகும். கருத்துச் சுதந்திரம், தெரிந்துகொள்ளும் உரிமை என்பவற்றை நிலைநிறுத்துவதில் அயராது உழைக்கும் வலம்புரி குடும்பத்துக்கு எமது பாராட்டுக்கள் உரித்தா கட்டும்.

வட பகுதி மக்களின் இயல்பு வாழ்வு, தமிழ் மக்களின் உரிமை வாழ்வு என்பவற்றிற்காக பணியாற்றிவரும் கரித்தாஸ் – கியூடெக் நிறுவனமும் அதன் ஊழியர்களும் இதே பணியை மிகச் சிறப்பாக ஆற்றிவரும் வலம்புரி குடும்பத்தை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

மிகவும் சிக்கலும் சவால்களும் நிறைந்த ஒரு அரசியல் சூழலுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கு தெளிவும் வழிகாட்டலும் வழங்கும் மிக மேன்மையான பணியை வலம்புரி எதிர்வரும் காலங்களிலும் சிறப்புறச் செய்யவேண்டும் என்று எதிர்பார்த்து அதற்கான வலுவையும் திறனையும் எல்லாம் வல்ல இறைவன் வலம்புரி நிறுவனத்திற்கும் அதன் ஊழியர்களுக்கும் வழங்கி ஆசீர்வதிக்கவேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

வண.பிதா கி. ஜோ. ஜெயக்குமார்
(இயக்குநர் கரித்தாஸ் – கியூடெக்)

- ✓ கரித்தாஸ் – கியூடெக் சமாதானப் பிரிவு
- ✓ கரித்தாஸ் – கியூடெக் சுனாமிப் பிரிவு
- ✓ கரித்தாஸ் – கியூடெக் ஊக்குவிப்புப் பிரிவு
- ✓ கரித்தாஸ் – கியூடெக் மகளிர் பிரிவு
- ✓ கரித்தாஸ் – கியூடெக் மனித உரிமைப் பிரிவு
- ✓ கரித்தாஸ் – கியூடெக் கட்டடப் பொருட்கள் பிரிவு
- ✓ கரித்தாஸ் – கியூடெக் கல்விப் பிரிவு
- ✓ கரித்தாஸ் – கியூடெக் சுயவீடமைப்புப் பிரிவு

வியாபாரத்தின் தேவை விளம்பர சேவை



புதிய இடத்தில் இறைவழிபாடு



முதலாம் ஆண்டு நிறைவில்



சிறுகதைப் போட்டியில்...



கவிதைக் குடும்பம்



நான்காம் ஆண்டு நிறைவில்



முன்னாள் அமைச்சர்கள் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார், அஷ்ரப் ஆகியோர் வலம்புரியின் அச்சுக்கோப்புப் பிரிவைப் பார்வையிடும்போது



வாசுதேவ நாணயக்கார வலம்புரிக்கு விஜயம்செய்தபோது

இப்பத்திரிகை வலம்புரி அச். கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண்றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2005இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது